# ஒரு கூர்வாளின் நிழலில்

- தமிழினி



## “புலிகளின் மகளிரணித் தலைவியின் வரலாறு.. (பாகம்-1)

தமிழினி (23.04.1972-18.10.2015) தமிழினி (சிவகாமி ஜெயக்குமரன்) இலங்கையின் வடக்கே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரந்தனில் பிறந்தவர்.

தாய் சின்னம்மா. தந்தை சுப்பிரமணியம். பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் படித்துக்கொண்டிருந்த (1991) வேளையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து, போராளியானார்.

இளவயதிலேயே பல போர்க்களங்களில் சமராடிய அனுபவங்களோடு, பின்னாளில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளராகச் செயல்பட்டவர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம் உட்படப் புலிகள்

இயக்கத்தின் உயர்மட்டத் தலைவர்களிடத்திலும் மக்களிடத் திலும் அபிமானம்பெற்ற தலைவராக விளங்கினார்.

அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற பல்வேறு உயர்மட்டச் சந்திப்பு களிலும் நிகழ்வுகளிலும் பங்கேற்றவர்.

சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தலைவர்களிடமும் பிரதிநிதிகளிடமும் நன்கு பல்லாயிரக்கணக்கான போராளிகளுடன் இலங்கை அரசின் சிறைச்சாலைகளிலும் புனர்வாழ்வு முகாமிலும் நான்காண்டுகள் சிறையிலடைக்கப் பட்டார்.

2013இல் புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் திருமணம் செய்து பொதுவாழ்வில் ஈடுபட்டார் தமிழினி. 2014இல் புற்றுநோய்க்குள்ளாகி மரணமடைந்தார்.

போராளியாக இருந்த காலத்திலேயே எழுத்திலும் வாசிப்பிலும் அதிக ஈடுபாட்டோடு இருந்த தமிழினியின் பல கட்டுரை களும் கதைகளும் கவிதைகளும் விடுதலைப் புலிகளின் ஊடகங்களான சுதந்திரப் பறவைகள், வெளிச்சம், நாற்று, ஈழநாதம் ஆகியவற்றில் பிரசுரமாகியுள்ளன.

சிறையிலும் சிறை மீண்ட பின்னரும் அவர் எழுதியவை தனி நூல்களாக வெளிவரவுள்ளன. புலிகளின் வீழ்ச்சியிலிருந்து கற்றுக்கொண்ட போராட்ட அனுபவங்களையும் புதிய சிந்தனையையும் தன் சாட்சியமாக இந்த நூலின் வழியாகத் தமிழினி தந்திருக்கிறார்.



**என்னுரை (தமிழி தன்னுரையில்)**

எனது போராட்டப் பயணத்தின் நினைவுகளை யும் அது எனக்குப் பெற்றுத் தந்த அனுபவங்களையும் இந்த நூலில் பதிவு செய்திருக்கிறேன்.

இது முழுமை யான வரலாறு எனக் கூற முடியாது. எனக்கு நினைவு தெளிந்த காலத்திலிருந்து கரைபுரண்டோடிய காட்டு வெள்ளமாகப் போருக்கூடாக அடித்துச் செல்லப்பட்ட வாழ்வின் கணங்களை அச்சொட்டாகப் பதிவு செய்தல் அப்படி இலகுவான காரியமாக எனக்குத் தென்பட வில்லை.

இருப்பினும் நினைவழியாத் தடங்களாக நெஞ்சுக்குள் கனன்றுகொண்டிருந்த நெருப்பைக் கொஞ்சமாக வெளியேற்றியுள்ளேன். அவ்வளவுதான்.

எதற்காக இதனை எழுத வேண்டும் என என்னிடமே பல தடவை கேட்டுக்கொண்டேன். ஒரே பதில்தான் என்னை உந்தியது. நான் உயிராக நேசிக்கும் மக்களிடம் சில உண்மைகளைச் சொல்ல வேண்டும்.

ஓர் இனத்தின் அரசியல் அபிலாசைகளை மீட்டெடுப்பதற்காகக் உலகமே அதிர்ந்துபோன கேள்வி இது.

போராட்டத்தை முழுவதுமாகத் தன்னகப்படுத்திக் கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நானும் ஓர் உறுப்பினராக இருந்துள்ளேன்.

போராட்டத்தின் இறுதி இருபது வருடங்கள் நானும் ஒரு சாட்சியாகப் போருக்குள் வாழ்ந்திருக்கிறேன்.



**நாங்கள் எமது மக்களைக் காப்பாற்றத் தவறிவிட்டோம். ஆயுதங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அரசியல் இலட்சியத்தைத் தோற்கடித்துவிட்டோம்.**

இன்று எமது மக்களின் வாழ்வு இருநூறு வருடங்கள் பின்னோக்கிப் போயிருக்கிறது.

எதையுமே நம்பாதவர் களாக, எல்லாவற்றுக்கும் பயப்படுகிறவர்களாக, தமக்குள்ளேயே சிறுத்துப்போகிறவர்களாக, யதார்த்த உலகத்தை வெற்றிகொள்ள முடியாதவர்களாகப் பின்னடித்துப் போகிறார்கள்.

முப்பத்தைந்து வருடங்களுக்கும் மேலாக நீண்ட யுத்தத்தின் வடுக்களை இன்னமும் எமது சந்ததி தமது மனங்களில் சுமக்கிறது.

எந்த ஓர் உயிரினமும் போராடினால்தான் வாழ்க்கை.

இது இயற்கையின் நியதி. அந்தவகையில் எமது மக்கள் தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால் இனியும் ஆயுதப் போராட்டம் என்ற வழிமுறையில் எமது அடுத்த சந்ததி சிந்திக்கக் கூடாது என்பதை எனது ஆத்மாவிலிருந்து கூறுகிறேன்.

**இந்த நாட்டில் இனியும் இரத்த ஆறு பாயக் கூடாது. எந்த அன்னையர்களும் தனது பிள்ளையைப் பெற்றெடுத்த**

**வயிற்றிலும், பிள்ளையைச் சுமக்கும் பிரேதப் பெட்டியிலும் அடித்துக்கொண்டு அழக் கூடாது.**

எமது எதிர்காலச் சந்ததி தமது அறிவாற்றலால் உலகத்தை வென்றெடுக்க வேண்டும். மனங்கள் ஒன்றுபட்ட நவீன உலகத்தின் தரிசனங்களை அவர்கள் நேரடியாக அனுபவிக்க வேண்டும்.



போர்க்களங்களில் உயிரைக் கொடுத்த வீரர்கள் ஒவ்வொருவரும் இந்த யுத்தம் எங்களோடு முடிந்துபோக

வேண்டும் என்றுதான் எண்ணினார்களே தவிர அடுத்த சந்ததிக்கும் அது தொடர வேண்டும் என அவர்கள் நினைத்திருக்கவில்லை.

கடந்த காலத்தின் பாடங்கள் எமது சந்ததியை ஆரோக்கிய மான, வெற்றிகரமான பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

இந்த நாட்டின் மக்களுக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் நான் சொல்ல நினைக்கின்ற செய்திகளை எந்தளவுக்குச் சரியாகச் சொல்லியிருக்கிறேன் எனத் தெரியவில்லை.

ஆனால் அதற்காகப் பெரிதும் முயன்றிருக்கிறேன். எனது மாணவப் பருவத்தில் நான் சார்ந்த சமூகத்திற்கு ஏதாவது நன்மையான காரியத்தை ஆற்ற வேண்டும் என்ற பெருவிருப்போடுதான் போராளியாக மாறினேன்.

எனது வாழ்வு இறுதிவரை போராளியாகவே இருக்கும். ஆயுதம் ஏந்துவதன் மூலம், பழிவாங்குதலின் மூலம் எனது சமூகத்திற்கும் நாட்டிற்கும் உலகத்திற்கும் எந்த நன்மைகளையும் செய்துவிட முடியாது என்பதை அனுபவப் பாடங்கள் கற்றுத்தந்தன.

அமைதியும் சமாதானமுமே எந்தவொரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் இயல்பான சாத்தியத்தை உருவாக்கும்.

அந்த வகையில் எனது இறுதிக் காலம்வரை எனது எனது போராட்டம் தொடரும். போருக்கான பாதையைவிடக் கடினமானது உண்மையான சமாதானத்தின் வழி என்பதையும் நானறிவேன்.

எத்தனை தடைகளைத் தாண்டி முன்னேற வேண்டும் என்பதற்கான முன்முயற்சியை இந்தப் புத்தகம் உணர்த்தும். மானுட நேயமும் உண்மையான சமூகப் பற்றும் கொண்ட ஆயிரமாயிரம் சமாதானப் போராளிகள் என்னுடன் கைகோத்து நிற்பார்கள் என்ற நம்பிக்கையுடன் என் கைகளை உயர்த்துகிறேன்.

## “யுத்த நிறுத்தம் – பாதை திறந்தது”: ஓமந்தைப் காவலரணில் தமிழினி!!

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் பெப்ரவரி மாதம். மழைக்காலம் முடிந்து பனித்தூறல் குறைந்து வசந்தகாலம் அரும்பத் தொடங்கியிருந்தது.

வன்னிப் பெருநிலப் பரப்புக் காடுகளின் செழுமை மீண்டும் துளிர்க்க ஆரம்பித்திருந்தது.

பெருமரங் களைத் தழுவிப் படர்ந்திருந்த கொடிகளில் பூத்துக் குலுங்கிய வண்ண மலர்களின் வாசனை காற்றிலே கலந்து எங்கும் பரவியிருந்தது.

உளுவிந்தம் மரக் கொப்புகளில் தொங்குமான்கள் அச்சமின்றி ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன. உடும்புக் குட்டிகள் தமது வளைகளை விட்டு வெளியேறி உலவப் போய்க்கொண்டிருந்தன, புற்படுக்கைகளில் தெறித்துக்

கிடக்கும் பனித்துளிகளில் தாகம் தீர்த்துக்கொண்டிருந்தன காட்டு முயல்கள்.

காலை இளவெயிலில் தமது தோகையை விரித்துச் சிலுப்பிச் சிலுப்பிக் காயவைத்துக்கொண்டிருந்த கான மயில்களும் இரை தேடிப் புறப்பட்டிருந்த கானாங் கோழிகளும் புளுனிக் க கிடைத்த பேரமைதியின் சூழலில் உல்லாசமாகத் திளைத்துக் கிடந்தது வன்னிக்காடு.



**2002ஆம் ஆண்டு இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் யுத்த நிறுத்தம் என்ற இணக்கத் திற்கு வந்திருந்ததன்.**

முதற்கட்டமாக ஏ9 நெடுஞ்சாலையை மக்கள் பாவனைக்குத் திறந்துவிடுவது என்ற உடன்பாட்டுக்கு வந்திருந்தனர். இலங்கையின் மத்திய மலைநாட்டிலுள்ள கண்டி நகரத்தையும் வடக்கு முனையாகிய யாழப்பாண நகரத்தையும் இணைக்கின்ற இந்த வீதியானது முன்னூற்று இருபத்தைந்து கிலோ மீற்றர் நீளமானது.

ஆசியாவின் பிரதான வீதிகளில் ஒன்றாகத் தர நிர்ணயம் செய்யப்பட்டிருந்த இவ்வீதி இலங்கையின் பல நகரங்களை ஊடறுத்துச் செல்கின்றது.

இலங்கை அரச படைகளுக்கு எதிராகத் தமிழ் விடுதலை இயக்கங்கள் ஆயுதமேந்திப் போராடத் தொடங்கிய கால கட்டத்தில் **1984 தொடக்கம் 2006** வரை பல தடவைகள் இந்த வீதி மக்கள் போக்குவரத்து செய்ய முடியாதவாறு மூடப்பட்டு வந்திருந்தது.

2002 பெப்ரவரி பதினைந்தாம் திகதி திறக்கப்படவிருந்த இந்த வீதியின் இருபது சதவீதமான பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில், ஏ9 நெடுஞ்சாலை திறப்பு நிகழ்வானது சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்திருந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறை மகளிர் சார்பாக நானும் சில பெண் போராளிகளுடன் ஓமந்தைப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தேன்.

அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சுதா (தங்கன்) புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோருடன் வேறு பல போராளிகளும் நிகழ்வில் பங்கு பெற்றிருந்தனர்.

இலங்கை இராணுவத்தினரின் காவலரண்களும் விடுதலைப் புலிகளின் காவலரண்களும் எதிரும் புதிருமாக அமைந்திருந்தன.



அவற்றின் குறுக்காக ஏ9 வீதி மண் அரண்களாலும் மறைப்புகளாலும் மூடப்பட்டிருந்தது. சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய அமைப்புகளின் உயர்மட்டப் பிரதிநிதிகள் முன்னிலையில் அந்த வீதி பொதுமக்களது பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டது.

ஆயிரக்கணக்கான உயிர்களின் குருதியில் நனைந்திருந்த அவ்வீதியின் மறுகரையில் இராணுவத்தினரும் எம்மைப் போலவே கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர்.

அவர்களும் நாங்களும் பரஸ்பரம் கைகளை அசைத்துப் புன்னகைத்தபடி சமாதானத்தைத் தெரிவித்துக்கொண்டாலும் எமது மறு கரங்கள் ஆயுதங்களை இறுகப் பற்றியபடியே இருந்தன.

காரணமாகவே.. இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு இறங்கி வந்திருக்கிறது என்கிற வெற்றி மயக்கமும், அவை எமக்குச் சர்வதேச அங்கீகாரத்தை ஈட்டித் தந்துவிட்டன என்ற கருத்து நிலையும் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உட்பட எங்கள் அனைவரையும் ஆட்கொண்டிருந்தது.

ஊடகவியலாளர்கள் பெரும் கூட்டமாக ஏ9 வீதியில் திரண்டு வந்திருந்தனர். யுத்தம் நடந்துகொண்டிருந்த காலகட்டத்தில் வன்னிப் போர் வலயத்திற்குள் ஊடகத்தினர் நுழைவதற்கான அனுமதி புலிகளாலும், இராணுவத்தினராலும் முற்றாக மறுக்கப் பட்டிருந்தது.

அங்கு வந்திருந்த உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களைக் கண்டபோது உலகத்தின் கண்கள் எம்மை நோக்கித் திரும்பியிருப்பது போன்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது.

பளிச் பளிச் என மின்னலடிக்கும் புகைப்படக் கருவிகளும் வீடியோ கருவிகளும் நீண்டிருந்த ஒலிவாங்கிகளும் ஒலிப்பதிவுக் கருவிகளுமாக, ஊடகப்படையொன்றினால், வரிச்சீருடை தரித்து ஆயுதங்களுடன் நின்றிருந்த புலிகளாகிய நாங்கள் முற்றுகையிடப்பட்டிருந்தோம்.

அங்கு வந்திருந்த ஊடகவியலாளர்கள் தமது கேள்விகளால் எம்மைத் துளைத்தெடுக்கத் தொடங்கினர். ஆனாலும் எல்லாக் கேள்விகளுமே ஒரே அடிப்படையைக் கொண்டதாகவே இருந்தது.

தாங்கள் ஏற்கனவே தீர்மானித்திருந்த பதில்களைப் போராளி களின் வாய் மொழியூடாகப் பெற்றுக்கொள்வதற்காகவே அவர்கள் பெரிதும் முயற்சி செய்வது போலிருந்தது.



“ஆயதமேந்திப் போராடிய நீங்கள் ஏன் சமாதான வழிமுறைக்கு வந்திருக்கிறீர்கள்? தமிழீழத்தைக் கைவிட்டுவிட்டீர்களா?

உங்களுடைய சக போராளிகள் ஆயிரக்கணக்காக மரணித்துப் போயிருக்கிற நிலையில் உங்களது தலைவர் தமிழீழத்தைக் கைவிட்டால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

மீண்டும் யுத்தம் வருமா? உங்களுக்குச் சமாதானத்தில் நம்பிக்கை இருக்கிறதா? நீங்கள் மீண்டும் யுத்தத்தில் ஈடுபடுவீர்களா? வீட்டுக்குப் போக விருப்பமில்லையா? காதலிப்பீர்களா? கலியாணம் செய்வீர்களா? இயக்கம் இவற்றுக்கான அனுமதியைத் தருமா? ஏன் கூந்தலை இப்படி வளைத்துக் கட்டியிருக்கிறீர்கள்?

ஏன் இடுப்புப் பட்டி கட்டியிருக்கிறீர்கள்? உங்களுக்கும் சமூகப் பெண்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? மீண்டும் சமூகம் உங்களை ஏற்றுக்கொள்ளும் என நினைக்கிறீர்களா?"

இப்படி நூற்றுக்கணக்கான கேள்விகள் அங்கிருந்த போராளிகளை நோக்கி வீசப்பட்டன. இயக்கத்தின் தலைமைச் செயலகத்தால் விடுக்கப்படும் உத்தியோகப்பூர்வ அறிக்கைகள், செய்திகள் என்பவற்றுக்கு அப்பால் சாதாரண போராளிகளினதும், இடைநிலைப் பொறுப்பாளர்களினதும் சராசரி மனநிலையைத் துருவிப் பார்ப்பதே ஊடகங்களின் தந்திரமாக இருந்தது.

இயக்கத்தில் ஊடகங்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் அனுமதி குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே இருந்தது.

ஆகையால் இப்படியான சந்தர்ப்பங்கள் அமையும்போது பல போராளிகள் புன்னகையுடன் அந்த இடத்தைவிட்டு நழுவிப் போய்விடுவார்கள்.

நிகழ்வில் கலந்துகொண்ட ஊடகங்களின் கேள்விகளுக்கு நானும் மற்றும் தங்கன், புலித்தேவன் ஆகியோரும் பதிலளிக்க அனுமதிக்கப்பட்டிருந்தோம்.

நீண்ட காலத்திற்குப் பின்பு மக்களுக்குக் கிடைத்திருந்த அமைதியும், பாதை திறப்பு மற்றும் பொருளாதாரத் தடைநீக்கம் என்பனவும் பொது மக்களுடைய முகத்தில் புதிய ஒளியைத் தோற்றுவித்திருந்தது.

ஆனாலும் இந்தச் சமாதான சூழ்நிலையை நீடிக்கச் செய்து ஒரு நிரந்தரமான தீர்வை நோக்கிப் புலிகள் முன்னேறிச் செல்வார்கள் என்ற நம்பிக்கையை மக்களது வார்த்தைகளில் காண முடியவில்லை.

மாறாக எப்போது இந்தச் சமாதானம் முறிவடையுமோ என்கிற குழப்பமான மனநிலையுடன் கிடைக்கிற காலத்திற்குள் தமது வாழ்க்கையைச் சிறிதளவேனும்

கட்டியெழுப்பிக்கொள்ள வேண்டும் என்ற பதற்றத்துடன் செயல்படத் தொடங்கியிருந்தனர்.




தமிழர் பிரதேசங்களுக்கூடாகச் செல்லும் ஏ9 நெடுஞ்சாலையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் இராணுவ, அரசியல் ரீதியான நலன்களை முன்னிறுத்தி இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் தமது செயற்திட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இதன் காரணமாக அந்த வீதியை அண்மித்து நடைபெற்றிருந்த கொடூர யுத்தங்களினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் பல ஆயிரங் களையும் கடந்திருந்தன.

1995 தொடக்கம் 2002 வரையான காலப் பகுதியில் நான் நேரடியாகத் தொடர்புபட்டிருந்த சம்பவங் களின் அடிப்படையில் இந்த வரலாற்றை விரித்துச் செல்வது பயனுள்ளது என நினைக்கிறேன்.

**1995 டிசம்பர் மாதம் யாழ்ப்பாண மாவட்டத்தை இலங்கை இராணுவத்தினர் முழுமையாகக் கைப்பற்றியதன் பின்னர்.** விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னிப் பெருநிலப்பரப்பைத் தமது பிரதான தளமாகக் கொண்டு செயற்படத் தொடங்கியிருந்தது.

அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் இழப்பு, புலிகளுக்கு ஈடுசெய்துகொள்ள முடியாததாகவே இருந்தது.

இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தேவையான ஆளணி மற்றும் பொருளாதாரத்தை உவந்தளிக்கும் வளப் பிரதேசமாக

யாழ்ப்பாணம் இருந்ததுடன், 1990 தொடக்கம் புலிகளின் நிர்வாகத் தலைநகரமாகவும் யாழ்ப்பாணமே விளங்கியது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோர் யாழ்ப்பாணம் இழக்கப்பட்டதன் தாக்கம் பற்றிப் போராளிகள் மத்தியில் உணர்வு ரீதியாகப் பல தடவைகள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டுள்ளனர்.

மீண்டும் யாழ்ப்பாணத்தை விரைவாகக் கைப்பற்ற வேண்டும் என்ற வைராக்கியத்துடன் புலிகள் செயற்படத் தொடங்கினார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதேசங்களை நன்கு அறிந்திருந்த ஆண் பெண் போராளிகள் தெரிவு செய்யப்பட்டு யாழ் செல்லும் படையணி உருவாக்கப்பட்டிருந்தது.




லெப்.கேணல் மகேந்தி மற்றும் லெப். கேணல் தணிகைச்செல்வி ஆகியோர் அந்த அணிகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

பூநகரியைப் நடவடிக்கைகளைப் புலிகள் மேற்கொள்ளத் தொடங்கியிருந்தனர். அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனே இந்த நடவடிக்கையின் தளபதியாகவும் செயற்பட்டார்.

## ‘ஓயாத அலைகள்-1’ நடவடிக்கை மூலமாக முல்லைப் படைத்தளம் புலிகளால் கைப்பற்றப்பட்டது

பூநகரியைப் நடவடிக்கைகளைப் புலிகள் மேற்கொள்ளத் தொடங்கியிருந்தனர். அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனே இந்த நடவடிக்கையின் தளபதியாகவும் செயற்பட்டார்.

இவர் இந்தியப் படைகளுடனான புலிகளின் போரில் தென்மராட்சிப் பகுதியில் தன்னுடனிருந்த சிறிய அணியுடன் சிறப்பாகச் செயற்பட்டு, தலைவரின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

இதன் பின்னர் 1993இல் அரசியல் பொறுப்பாளராக நியமிக்கப்படும்வரை யாழ்ப்பாண மாவட்டத்தின் இராணுவத் தளபதியாக தினேஷ் என்ற பெயருடன் செயற்பட்டிருந்தார்.


**தமிழேந்தி**

இயக்கத்தின் நிதிப் பொறுப்பாளரான தமிழேந்தி யாழ்ப்பாணம் இழக்கப்பட்டதன் காரணமாக உணர்வு ரீதியாக மிகவும் பாதிப்படைந்திருந்தார்.

போராளிகள் மற்றும் தளபதிகள் மத்தியில் நடந்த ஒரு ஒன்றுகூடலில் அவர் உரையாற்றியபோது, இயக்கத்தின் நிதிநெருக்கடி பற்றி விளக்கமளித்தார். போராளி களுக்கான நாளாந்த உணவுத் தேவைகள், உடைகள், பாவனைப் பொருட்கள், மருத்துவச் செலவு என்பவற்றை நிறைவு செய்வதற்கு மாதாந்தம் பல கோடி ரூபாய்கள் தேவைப்படுவதாகக் கூறினார்.

“நாளாந்தம் சண்டையில் உயிரைக் குடுக்கிற போராளிகளுக்கு ஒழுங்கான சாப்பாடுகூட இயக்கத்தால குடுக்க முடியுதில்லை” எனக் கூறிக் கண்ணீர் வடித்தார்.

அங்கிருந்தவர்களின் மனதை அவரது வார்த்தைகள் கலங்கடித்தன. பின்னரான காலப் பகுதிகளில் வன்னியில் பல பாரிய விவசாயப் பண்ணைகளை அமைப்பதற்கான அத்திவாரத்தை அவரே இட்டிருந்ததுடன் புலிகள் அமைப்பின் மீது சாதாரண மக்களுக்கு வெறுப்பேற்படு வதற்கான காரணங்களில் முக்கியமானதான வரிவிதிப்பு முறையையும் அவரே ஆரம்பித்து வைத்தார்.



**அப்போது நான் அரசியல்துறையின் கல்விப் பிரிவு மகளிர் பொறுப்பாளராகச் செயற்பட்டுக்கொண்டிருந்தேன்.**

பொலிகண்டியில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் அடிப்படைப் பயிற்சி முகாமில் முப்பத்து மூன்றாம் அணியில் பயிற்சி பெற்ற இருபது பெண் போராளிகள் எனது பொறுப்பில் விடப் பட்டிருந்தனர்.

தென்மராட்சியில் உள்ள கனகம்புளியடிச் சந்தியில் இருந்த எமது முகாம் வட்டக்கச்சி விவசாயப் பண்ணை வளாகத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

அரசியல்துறையின் பயிற்சிக் கல்லூரியும் அவ்வளாகத்திலேயே செயற்பட்டுவந்தது. கல்விக் குழுவால் போராளிகளுக்கும், அரசியல் வேலைகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்த காயமடைந்த போராளிகளுக்கும் வகுப்புகள் நடாத்தப்பட்டன.

அரசியல்துறைப் போராளிகளின் ஒன்றுகூடல்களும் அங்கே இடம்பெறுவது வழக்கம். அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன் உட்பட அரசியல் ஆய்வாளர்கள் சிலரும் அங்கே வகுப்புகள் நடாத்தினார்கள்.

'பெண்களும் சமூகமும்' என்ற தலைப்பில் நானும் அங்கு வகுப்புகள் எடுத்திருக்கிறேன். எமது கல்விக் குழுவின் பணியானது போர்க்களமுனைகள், அடிப்படைப் பயிற்சி முகாம்கள் ஆகியவற்றிற்குச் சென்று போராளிகளைச் சந்தித்து முன்பு மகளிர் படையணி ஒரே நிர்வாக அலகாகவே இயங்கி வந்தது.

மகளிர் படையணியின் சிறப்புத் தளபதியே பெண்கள் அனைவருக்குமான முழுமையான அதிகாரமுள்ள அதிகாரியாக இருந்தார்.

அதன் பின்னரான காலப் பகுதியிலேயே மகளிர் படையணியானது மாலதி படையணியாகவும் அரசியல்துறை, நிதித்துறை, புலனாய்வுத்துறை, கடற்புலிகள் எனப் பல்வேறு அலகுகளாகவும் பிரிந்து செயற்படத் தொடங்கியது.

பெண் போராளிகள் செயற் படும் களமுனைகளுக்கு அடிக்கடி செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் எனக்கிருந்ததால் போராளிகளுடைய பல பிரச்சனைகளையும் என்னால் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

கடற்புலி மகளிர் பயிற்சி முகாம் அமைந்திருந்த வடமராட்சி கற்கோவளம் கடற்கரைப் பகுதிகளுக்கும் சென்று அரசியல் வகுப்புகளை நடத்தினேன்.

1996 ஜூலை 17ஆம் திகதி அன்று புலிகள் தமது முழுப் பலத்தையும் திரட்டி முல்லைத்தீவு இராணுவத் தளம் மீது பாரிய தாக்குதலைத் தொடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை அண்மித்திருந்த பகுதியில் மருத்துவப் பின்தளத்தில் நானும் என்னுடனிருந்த கல்விக் குழுப் போராளிகளும் நிறுத்தப்பட்டிருந்தோம்.

காயமடைந்து வரும் போராளிகளின் குருதி வெளியேற்றத்தைத் தடுத்து, அவர்களைப் பின்னணியில் இயங்கும் சத்திர சிகிச்சை நிலையங்களுக்கு வேகமாக அனுப்பிவைக்கும் பணியை மேற்கொண்டிருந்தோம்.



**‘ஓயாத அலைகள்-1’** எனப் பெயரிடப்பட்டிருந்த நடவடிக்கை மூலமாக முல்லைப் படைத்தளம் முழுமையாகப் புலிகளால் கைப்பற்றப்பட்டிருந்தது.

அந்தச் சமரில் புலிகளும் படையினருமாக ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருந்தனர். 1996இல் வன்னிப் போர்க்களத்தின் முதலாவது பிரம்மாண்டமான வெற்றியைப் புலிகள் நந்திக் கடலோரத்தில்தான் பெற்றிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த முகாமுக்கு நானும் ஏனைய போராளி களும் போயிருந்தோம்.

அகன்று விரிந்துகிடந்த வங்கக்கடலின் பேரலைகள் முல்லைத்தீவுக் கரையில் மோதி எமது போராளிகளின் தீரத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

வடமராட்சியின் ஆழக் கடற்பரப்பை இழந்து போயிருந்த புலிகள் '**கடலை ஆள்பவனே தரையையும் ஆளுவான்**' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் முல்லைத்தீவுக் கடலைத் தமது பிரதான தளமாகக்கொண்டு, கடற்புலிகளின் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தத் தொடங்கியிருந்தனர்.

இலங்கைத் தீவின் பெரும் பகுதிக் கடல் ஆளுமை தம் வசமே இருக்கவேண்டும் என்பதில் இயக்கம் முனைப்பாக இருந்தது.

வங்கக் கடலின் சர்வதேச கப்பல் பாதையின் அனுகூலங்களையும் புலிகள் பெற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்தமையால் கனரக ஆயுதங்களையும் பீரங்கிகளை யும் வெடிபொருட்களையும் தமக்குச்

சொந்தமான கப்பல்கள் மூலம் நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. இருந்தது.

கடற்புலிகளின் படையணியில் பெண் போராளிகள் ஆண்களுக்கு நிகராகக் களமுனைச் செயற்பாடுகளை முன்னின்று நடாத்தினர்.

முல்லைத்தீவு முகாம் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஒருசில நாட்களிலேயே கிளிநொச்சி நகரத்தைக் கைப்பற்றும் நோக்குடன்'**சத்ஜெய**1,2,3' ஆகிய தொடர் இராணுவ நடவடிக்கையை இலங்கைப் படையினர் முன்னெடுக்கத் தொடங்கினர்.
வட்டக்கச்சியில் அமைந்திருந்த எமது கல்விக் குழுப் போராளிகளை வேறு பாதுகாப்பான இடத்திற்கு உடனடி யாக நகர்த்த வேண்டியிருந்தது. அதே வளாகத்தில் புதிய போராளிகளின் முகாமும் அமைந்திருந்தது.

அதன் பொறுப்பாளர் எனது இடத்திற்கு வந்திருந்தபோது அவருடன் நூறு புதிய போராளிகளும் அங்கிருந்தனர். போராளிகளை நகர்த்துவது பற்றி எதுவும் அதுவரையிலும்

தனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்காத நிலையில் என்ன செய்வது எனப் புரியாமல் அவர் குழம்பிக் கொண்டிருந்தார்.

பயங்கரமான எறிகணை வீச்சுகளுடன் பரந்தன் பகுதி அதிர்ந்துகொண்டிருந்தத ◌ு. தற்பாதுகாப்புக்காக நிலையெடுப்பது என்பதுகூடத் தெரியாத புதிய போராளிகளை இனியும் அங்கு வைத்துக்கொண்டிருப்பது சரியானதாக எனக்குப் படவில்லை.

அந்தக் கணத்தில் அவசரமான முடிவொன்றினைப் பொறுப்பாளர்களின் அனுமதியின்றி நானே எடுக்க வேண்டியதாக இருந்தது.

அப்புதிய போராளிகளின் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் நான் எடுத்த முடிவுக்கான தண்டனையை நான் தலைமையிடமிருந்து பெற்றுக்கொள்ள நேரிடும் என்பது எனக்குத் தெரிந்திருந்தாலும் நான் அப்போராளிகளின் உயிரைக் காப்பாற்றும் நோக்குடனேயே அந்த முடிவைத் தன்னிச்சையாக மேற்கொண்டேன்.

**அடிப்படைப் பயிற்சி முகாம் நிர்வாகத்தினர் இன்னும் பொறுப்பெடுத்திருக்காத காரணத்தால் பயிற்சிச் சீருடைகள் கூட அப்போராளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. வீட்டி லிருந்து வந்த கோலமாகவே அவர்கள் நின்றிருந்தனர்.**

அது மாலைப் பொழுதாக இருந்த காரணத்தால் அவர்களை அவ்வாறான தோற்றத்துடன் வீதியில் அழைத்துச் செல்வது பெரிய பிரச்சனையாக இருக்காது என எண்ணினேன்.

எனவே என்னுடனிருந்த இருபது போராளிகளையும் அவர்களுடன் கலந்து சிறு அணிகளாகப் பிரித்தேன். இந்த நெருக்கடி நேரத்தில் வாகனங்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்க முடியாது.

எனவே வீதியில் கால்நடையாகவே அழைத்துச் செல்வது என்ற முடிவுடன் வட்டக்கச்சி மகாவித்தியாலய முன்வீதியில் அவர்களைச் சிறு அணிகளாக நகர்த்தி இரணைமடுவின் குளக்கட்டு அமைந்திருக்கும் பகுதியின் கீழ் வீதியைக் கடந்து இரணைமடுச் சந்தியை அடைந்தோம்.

ஏ9 பிரதான வீதியூடாக முறிகண்டியை நோக்கி மீண்டும் எமது நடைப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

முறிகண்டியை அடைந்துவிட்டோமானால் ஏ9 பாதையிலிருந்து விலகிக் காட்டுப் பாதையூடாக எறிகணை வீச்சின் தாக்குதல் பகுதியை அடைந்துவிடலாம் என்ற நோக்குடன் நடந்தோம்.

புதிய போராளிகள் ஓடியோடி நடந்து வந்ததினால் களைத்துப் போய் வியர்வையில் தோய்ந்திருந்தார்கள். எறிகணைகள் மிக அண்மையாக விழுந்து வெடித்துக்கொண்டிருந்ததால் அவர்களில் பலர் பயத்தில் உறைந்திருந்தார்கள்.

முறிகண்டி சந்தியிலிருந்து அக்கராயன் செல்லும் வீதிக்கு இறங்கி நடந்து சென்றபோது, யூனியன் குளத்தை அண்மித்த பகுதியில் அரசியல்துறைப் பெண் போராளிகள் தெருவோரமாக ஒரு கொட்டகை அமைத்துத் தங்கியிருந்ததை எதேச்சையாகக் கண்டோம்.

எனக்கு நன்கு அறிமுகமான வினோ என்ற பெண் போராளி அம்முகாமுக்குப் பொறுப்பாக இருந்தார். அவருடைய உதவியுடன் சற்றுப் பாதுகாப்பான காட்டுப் பகுதியில் அந்தப் புதிய போராளிகளை இரவு தங்க வைத்தோம்.

அண்மித்த பகுதிகளில் குடியிருந்த மக்களின் உதவியுடன் வினோ எமக்கான இரவு உணவைச் சமைத்துத் தந்தார். மறுநாள் காலை எமது அரசியல்துறை மகளிர் பொறுப்பாள ரான லெப்.கேணல் தாரணி அங்கு வந்து சேர்ந்தார்.

புதிய போராளிகளை அடிப்படைப் பயிற்சி முகாமுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்ததுடன் எமது கல்விப் பிரிவினருக்கான ஒரு பாதுகாப்பான முகாமையும் அமைக்கும்படித் தெரிவித்தார்.



அன்றிரவு நடந்திருந்த யுத்தத்தில் இராணுவத்தினர் பரந்தன் பகுதியில் சில குறிப்பிட்ட இடங்களைக் கைப்பற்றிவிட்டதாகவும் கூறினார்.

இதற்குப் பின்னர் வட்டக்கச்சிப் பண்ணைப் பகுதிக்கு மீண்டும் செல்ல முடியவில்லை; அது சூனியப் பிரதேசமாக மாறியிருந்தது.

வன்னியில் ஒரு வதிவிடத்தை அமைப்பதற்கு இடத்தைத் தெரிவு செய்யவேண்டுமாயின் அந்தப் பிரதேசத்தின்

புவியியல் அமைப்பு பற்றிய முழுமையான அறிவு இருந்தேயாக வேண்டும்.

ஏனெனில் சில இடங்களில் நீர்வளம் போதிய அளவு இருக்கும், சில இடங்களில் அப்படி இருக்காது. எவ்வளவு ஆழமாகக் கிணறு தோண்டினாலும் தண்ணீரையே காண முடியாது.

அதுமட்டுமல்லாமல் கோடைகாலத்தில் காய்ந்து வறண்டு போயிருக்கும் பகுதிகள் மாரிக் காலத்தில் வெள்ளநீர் தேங்கியிருக்கும் குளமாகக் காட்சி தரும்.

நானும் கல்விக் குழுவின் ஆண்கள் பொறுப்பாளரும் சேர்ந்து கொல்லர் புளியங்குளம் என்ற கிராமத்தில் ஒரு இடத்தைத் தெரிவு செய்திருந்தோம்.

அது ஒரு காட்டுப் பகுதியாக இருந்தபோதிலும் அடர்ந்த பெருங்காடாக இருக்கவில்லை. மாறாக ஆங்காங்கு பெரு மரங்களையும் கீழ் வளரிகளையும் கொண்ட பற்றைக் காடாக இருந்தது.

இடையிடையே கட்டுக் கிணறுகள் அமைக்கப்பட்டிருந்தன. அப்படியான கட்டுக் கிணறுகளுக்கு அருகில் எமது முகாம்களை அமைத்துக்கொண்டோம். சுற்றிவர மக்கள் குடியிருப்புக்கள் எதுவும் இருக்கவில்லை.

அருகிலிருந்த சிறிய கோயிலில் பூஜை செய்பவரது குடும்பம் மட்டுமே அவ்விடத்தில் வாழ்ந்து வந்தது. அவருக்குப் பெரிய காய்கறித் தோட்டமும் நிறைய மாடுகளும் இருந்தன.

அவர் அந்தப் பிரதேசத்தைப் பற்றிய விஷயங்களை நன்கு வந்து போய்க்கொண் டிருப்பார்கள். முன்னைய காலங்களில் வெளியிடங்களிலிருந்து வந்த மக்கள் அந்தப் பிரதேசத்தில் பல்வேறு விதமான பயிர் செய்கைகளில் ஈடுபட்டிருந்ததாகக் கூறினார்.

ஒருநாள் அதிகாலை எமது முகாமுக்கு அண்மையில் இருந்த சிறுவெளியில் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்த போது எமக்கு அண்மையாகப் பத்துப் பதினைந்து மான்கள் சாவகாசமாக உலாவிக்கொண்டிருந்தன.

பல கிளைகளாகப் பிரிந்திருந்த கொம்புகளுடன் அழகும் சாந்தமும் நிறைந்த அந்தப் புள்ளிமான்களின் அழகில் நாம் அனைவரும் மயங்கிப் போயிருந்தோம்.

அவற்றிற்கு இடையூறு ஏற்படுத்தாதபடி எமது பயிற்சிகளைச் சற்று நிறுத்திவிட்டு அவற்றை இரசிக்கத் தொடங்கியிருந்தனர் போராளிகள். அந்தநேரம் இந்த உலகையே மறக்கும்படியான மகிழ்ச்சியில் திளைத்திருந்தோம்.

இச்சம்பவத்தை எமது ஆண் போராளிகளிடம் சொன்னபோது "அருமையான சந்தர்ப்பம்; ஒரு மானையாவது சுட்டிருந்தால் நல்ல இறைச்சி கிடைச்சிருக்கும்" எனக் கூறினார்கள்.

"உங்களுக்கு எப்பவும் சாப்பாட்டு நினைப்புத்தான்" என எமது பெண் போராளிகள் அவர்களுடன் வாய்த் தர்க்கத்தில் இறங்கினார்கள். 1997ம் ஆண்டு முழுவதும் கிளிநொச்சிப் பகுதியில் '**சத்ஜெய' சமர் தொடர்ந்து கொண்டேயிருந்தது.**

**‘ஜெயசிக்குறு’ படை நடவடிக்கை எதிராக ‘செய் அல்லது செத்துமடி’ என்ற கோஷத்துடன் இரண்டரை வருடம் போராடினோம்!**

1997ம் ஆண்டு முழுவதும் கிளிநொச்சிப் பகுதியில் ‘சத்ஜெய’ சமர் தொடர்ந்து கொண்டேயிருந்தது. அரசியல்துறைப் பெண் போராளிகளின் அணியும் தாக்குதலுக்காகத் தயார்படுத்தப்பட்டது.

எமது கல்விக் குழு அணி தாக்குதல் அணியுடன் இணைக்கப் பட்டிருந்தது. முப்பது போராளிகளைக் கொண்ட ஒரு அணிக்கு நான் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தேன்.

உருத்திரபுரம் இந்துக் கல்லூரியை அண்டிய பகுதியில் எமது அணிகளுக்கான தாக்குதல் பயிற்சிகள் தரப்பட்டன. அப்பாடசாலையின் சூழல் எனது பள்ளிப் பருவத்தின் பல நினைவுகளைக் கிளறச் செய்தது.

பல போட்டி நிகழ்வுகளுக்காக எனது பாடசாலையிலிருந்து இந்துக் கல்லூரிக்குப் போயிருக்கிறேன். அந்த விளையாட்டு

மைதானத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொண்டிருக்கிறேன்.

பெரிய மண்டபத்துடன் கூடிய அந்த மேடையில் பட்டிமன்றங்கள், பேச்சுப் போட்டிகள், மேடைநாடக நிகழ்வுகள் எனக் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றிருக்கிறேன்.

1990 அல்லது 1991 ஆக இருக்க வேண்டும். உயர்தர மாணவன் ஒருவன் அந்தப் பாடசாலையின் பின்புற மைதானத்தில் நடத்தப்பட்டிருந்த விமானக் குண்டு வீச்சில் சிக்கித் தனது உயிரை இழந்திருந்தான்.

சத்தியசீலன் என்ற அம்மாணவன் மாலை நேரக் கல்வி நிலையத்தில் என்னுடன் ஒரே வகுப்பில் படித்தவன்.

அன்றிருந்த சூழ்நிலையில் அவனுடைய மரணம் பெரும் உணர்ச்சிப் பெருக்கினை மாணவர்களாகிய எமக்குள்ளே ஏற்படுத்தியிருந்தது.

1997இல் எனது பிறந்த ஊரான பரந்தன் பயங்கர யுத்தப் பிரதேசமாக மாறியிருந்தது. 1997இல் எனது பிறந்த ஊரான பரந்தன் பயங்கர யுத்தப் பிரதேசமாக மாறியிருந்தது.

**எனது குடும்பத்தவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைக்கூட என்னால் அறிய முடியாதிருந்தது**.
ஸ்கந்தபுரத்திற்கோ தருமபுரத்திற்கோ போயிருக்கலாம் என நினைத்துக்கொண்டேன்.

விவசாயத்தையே நம்பி வாழ்ந்த எனது குடும்பம்இடம்பெயர்ந்து சென்று உணவுக்குக்கூட வழியில்லாது மிகவும் கஷ்டப்படுவார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவே மிகவும் வேதனையாயிருந்தது.

மாணவர்களில்லாத பாடசாலைகளும் மனித நடமாட்டங்களற்ற வீதிகளும், புற்பற்றைகள் அடர்ந்திருந்த வயல்வெளிகளும் விரக்தியான மனநிலையை எனக்குள் ஏற்படுத்தின.

மக்கள் மீண்டும் இந்த இடங்களுக்கு வந்து நிம்மதியாக வாழவேண்டுமானால் நாங்கள் யுத்தம் செய்தே ஆகவேண்டும் என உறுதியாக நம்பினேன்.

**எனது பிறந்த ஊரிலே போராடி மரணிக்கும் சந்தர்ப்பம் அமைந்தால் அதுவே பெரும்பேறு என அத்தருணத்தில் நினைத்துக்கொண்டேன்.**

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் இரண்டாம் கட்டையடி எனக் குறிக்கப்படும் இடத்தில் எமது அணிக்கான நிலைகள் அமைக்கப்பட்டிருந்தன.

மறைப்புகளற்ற வெட்டவெளியான வயல் பிரதேசமாக இருந்த காரணத்தால் எமது சிறு அசைவுகளையும் இராணுவத்தினரால் அவதானிக்க முடியுமாயிருந்தது.

அடிக்கடி வந்துவிழும் குறுந்தூர மோட்டார் எறிகணைகளின் தாக்குதலில் நாளாந்தம் பல போராளிகள் காயப்படுவதும் உயிரிழப்பதுமாக நிலைமை மாறியிருந்தது.

இதனால் நீளமான நகர்வு அகழிகளை அமைக்கும்படி எமக்குப் பணிக்கப்பட்டிருந்தது. இரவு நேரங்களில் காவல் கடமையும் பகல்பொழுதுகளில் யுத்தத்திற் கான பயிற்சிகளும், வயல்வெளிகளில் தொடர் காப்பகழிகளை அமைப்பதுமாகக் கடினமான வேலைகளில் ஈடுபட்டிருந்தோம்.



இராணுவத்தினரின் யுத்த டாங்கிகள் எந்த நேரத்திலும் உரத்த சத்தமெழுப்பியபடி அச்சுறுத்திக் கொண்டிருந்தன.

வயல்வெளி களையும் மண்பாதைகளையும் கடந்து யுத்த டாங்கிகள் முன்னே வர அதன் பின்னால் படையினர் நகர்ந்து

வரும் தாக்குதல் உத்திகளையே இராணுவத்தினர் 'சத்ஜெய' சமரில் கையாண்டிருந் தனர்.

இராணுவத்தினரின் டாங்கிகள்மீது தாக்குதல் நடத்தி அவற்றின் நகர்வுகளைத் தடுத்து நிறுத்துவதற்காக ஆர்.பி.ஜீ கனரக ஆயுதப் பிரிவு பெண் போராளிகளும் எமது பகுதியில் நிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இரவு நேரங்களில் எமது முன்னணி காவரலண்களையும் கடந்து ஒரு சிறிய அணியாக முன்னேறிச் சென்று இராணுவத் தினரின் காவலரண்களுக்கு அண்மையாக நிலையெடுத்து இராணுவத்தினருடைய இரவு நகர்வுகளை அவதானிக்க வேண்டும்.

இரவு நேரத்தில் இராணுவத்தினர் முன்னேறி வருவதை அவதானிக்க முடிந்தால் உடனடியாகவே எதிர்த் தாக்குதலை ஆரம்பிக்க வேண்டும்.

எமது முன்னணிக் காவலரண்கள் துரிதமாகத் தயாராகி இராணுவத்தினரின் மீதான முறியடிப்புத் தாக்குதலை ஆரம்பிப்பார்கள்.

இதற்கிடையில் அந்தச் சிறிய அணியினர் வேகமாக ஓடிவந்து எமது நிலைகளுடன் இணைந்து கொள்ள வேண்டும். இதில் ஏதாவது த தாக்குதல் எல்லைக்குள் அகப்பட்டு உயிரிழக்க வேண்டியும் நேரிடலாம்.

இந்த அவதானிப்புப் பணிக்காக எனது அணியும் அடிக்கடி அனுப்பப்பட்டது.



ஒருநாள் நள்ளிரவு நேரம். முரசுமோட்டை வீதியில் அமைந்துள்ள வை.எம்.சீ.ஏ கட்டடத்தை அண்மித்த சிறிய மண் ஒழுங்கையில் பூவரசு மரங்களால் அமைந்த வேலியின் மறைப்பில் எனது சிறிய அணி நிலையெடுத்திருந்தோம்.

இராணுவத்தினரின் பரா விளக்கு வெளிச்சங்கள் பகலைப் போல ஒளி சிந்திக்கொண்டிருந்தன. எமது தலையைத் தூக்க முடியாதபடி நிலத்தோடு அழுந்திக் கிடந்தோம்.

எம்மைச் சுற்றிலும் பற்றைகள், செடி கொடிகள் கோடை வெப்பத்தில் காய்ந்து போய்க் கிடந்தன. திடீரென இராணுவத்தினர் வீசிய எறிகுண்டுகளால் அப்பற்றைகள் சடசடவென்ற சத்தத்துடன் மூண்டெரியத் தொடங்கின.

என்ன செய்வது எனப் புரியாத நிலையில் ஒரு பூவரசு மரத்தினை அண்டியிருந்தபடி அதன் பசுமையான இலைக் கொப்புகளைப் பிடுங்கியெடுத்தோம்.

சற்றுக் குறைவாக நெருப்புப் பற்றி எரிந்துகொண்டிருந்த பகுதிக்கூடாக நகர்ந்து அந்த நெருப்பு வலையத்திற்குள்ளிருந்து வெளியேறி ஓடத் தொடங்கினோம்.

இராணுவத்தினருக்கு வித்தியாசமான சத்தங்கள் கேட்டிருக்க வேண்டும். சற்றுநேரம் ஒரு கனரக ஆயுதம் சரமாரியாகச் சூடுகளை வழங்கியதுடன் இரண்டு மூன்று மோட்டார் எறிகணைகளையும் செலுத்தி ஓய்ந்தனர்.

என்னுடன் வந்திருந்த ஒரு போராளிக்குக் கையில் மாத்திரம் நெருப்புக் காயம் ஏற்பட்டிருந்தது. எமது காவலரணில்

நின்றிருந்த போராளிகள் முன்னணியில் ஜெகஜோதியாக மூண்டெரிந்த நெருப்பைக் கண்டு நாம் இனி உயிருடன் திரும்ப மாட்டோம் என்ற முடிவுக்கே வந்துவிட்டதாகப் பின்னர் கூறினார்கள்.

இன்னொரு நாள் நன்றாக இருள் கவிழ்ந்த பின்னர் எமது அணிகளைச் சற்று நகர்த்தி நிலைப்படுத்துமாறு அவசரமாக அறிவிக்கப்பட்டது.

மறுநாள் அதிகாலையில் இராணுவத்தினரின் முன்னேற்றம் நடைபெறலாம் என்ற எதிர்பார்ப்புடன் '**தயார் நிலை**' அறிவிக்கப்பட்டிருந்தது.
எமது அணிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையேயான தூரம் மிகவும் குறுகியதாக இருந்தது.

ஒரு மின்மினிப் பூச்சியின் வெளிச்சம் தென்பட்டாலே உடனடியாக அந்த இடத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அந்தக் கும்மிருட்டுக்குள் ஒருவரையொருவர் தொட்டுக்கொண்டவாறு நகர்ந்து

குறிப்பிடப்பட்ட அடையாளத்தைக் கண்டுபிடித்து எமது அணிகளை நிலைப்படுத்தினோம்.

ஒரு சிறிய வாய்க்கால் பகுதியில் எனது நிலை அமைந்திருந்தது. காவல் நிலைகளை ஒழுங்குபடுத்திவிட்டு ஒரு உரப் பையினை விரித்துச் சற்று நேரம் உறங்குவதற்கு முனைந்தேன்.

படுத்த உடனேயே முதுகுப் பகுதியில் ஏதோ நொளுக் மொளுக்கென நெளிவதை உணர்ந்தேன். சலசலப்பை ஏற்படுத்தாதபடி எனது அருகில் படுத்திருந்த அறச்செல்வி என்ற ஒரு போராளியை மெதுவாகச் சுரண்டினேன்.

“நான் மெதுவாக எழும்புறன். நீ எவ்வளவு முடியுமோ அவ்வளவு பதிச்சு துணியால மூடிக்கொண்டு ‘டோச்லைட்’டை எனது முதுக்கு கீழே நிலத்திலடிச்சு என்ன கிடக்குது எண்டுபார்” எனக்கூறிவிட்டு மெதுவாக எழும்பினேன்.

**பளபளவென வெள்ளியாக மினுங்கியபடி சுருண்டு கிடந்தபடி பெரிய பாம்பு ஒன்று நெளிந்துகொண்டிருந்தது. ‘பாம்பென்றால் படையே நடுங்கும்’ என்பார்கள்.**

இதில் நான் எம்மாத்திரம்? எனது மயிர்க்கால்கள் சிலிர்த்துத் தலை சுற்றுவது போலிருந்தது. உடனே சுதாகரித்துக்கொண்டு என்ன செய்வது என யோசித்தோம் இப்போது இந்தப் பாம்பை அடித்துக் கொல்ல முடியாது.

அது அனைவருக்கும் ஆபத்தாக முடியும். எனவே அங்கிருந்த பதுங்குக்குழி ஒன்றினுள் அதனைத் தள்ளி வெளியேற முடியாதபடி பாதுகாப்பாக மூடி வைத்துவிட்டுக் காலையில் அதனை விடுவித்தோம்.




களமுனைச் செயற்பாடுகளுடன் மும்முரமாக ஈடுபட்டிருந்த என்னைப் பின்னணிக்கு வரும்படி அறிவித்தல் வந்திருப்பதாகவும், இயக்கம் சொல்கிற நேரத்தில் சொல்கிற வேலையை நாம் செய்ய வேண்டுமெனவும் கூறிய எமது தாக்குதலணிக்குப் பொறுப்பாக இருந்த **லெப். கேணல் தணிகைச்செல்வி** என்னைப் பின்னணிக்கு அனுப்பி வைத்தார்.

இயக்கத்தின் எதிர்காலத் தேவைகளைக் கருத்தில்கொண்டு அரசியல் பிரிவிற்குப் பெண் போராளிகளையும் இணைக்க வேண்டியுள்ளதாகவும் அப்பணியைப் பொறுப்பேற்று வழி நடத்தும்படியும் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் என்னிடம் தெரிவித்தார்.

அதற்கமைவாக அடிப்படை ஆங்கில அறிவுள்ள பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மேலதிக ஆங்கிலவகுப்புகளும் அரசியல் வகுப்புகளும் கணினி வகுப்புகளும் ஒழுங்குபடுத்தப் பட்டன.

கல்விக் குழு வேலைகளுடன் சேர்த்து அவர்களுக்கான நிர்வாக வேலைகளையும் கவனிக்கும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டிருந்தது.



1997-98 காலப் பகுதிகளில் ஒவ்வொரு பிரதேசத்திலும் பணியாற்றிய அரசியல்துறைப் பொறுப்பாளர்களால், மக்கள் மத்தியில் மக்கள் கட்டமைப்புக்கள் பல உருவாக்கப்பட்டன.

'**போரெழுச்சிக்குழு**' என்ற அமைப்பு மூலமாக இயக்கத்தின் பல பணிகள் மக்களின் உற்சாகமான பங்களிப்பின் மூலம் செயற்படுத்தப்பட்டன.

இயக்கத்தின் கூட்டங்களுக்கான அறிவித்தல்களைக் கொடுத்து மக்களை அணி திரட்டுதல், போராளிகளின் வீரச்சாவு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல் எனப் படிப்படியாக மக்கள் கட்டமைப்புக்கள் போரின் நெருங்கிய செயற்பாடுகளுடன் இணைக்கப்படத் தொடங்கின.

இதேவேளை அரசியல்துறையின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரால் இயக்கத்திற்கான ஆளணி திரட்டும் வேலைகளும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன.

கிராமிய, பிரதேச மட்டங்களில் 'சமகால அரசியல்' கருத்தரங்குகள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டன. வீதி நாடகங்கள், இசை நிகழ்வுகள் என்பவற்றின் மூலம்

அனைவரும் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும் என்ற கருத்துருவாக்கம் மிகவும் உணர்வுபூர்வமான முறையில் முன்னெடுக்கப்பட்டன.

இளைஞர் யுவதிகள் ஒன்றுகூடும் இடங்களில் தீவிர பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன. அரசியல் துறையின் பேச்சாளர் பட்டியலில் எனது பெயரும் சேர்க்கப்பட்டிருந்ததால் தினசரி பல கூட்டங்களிலில் உரையாற்ற வேண்டியிருந்தது. ஆதேவேளை களமுனைப் போராளிகளுக்கும், அடிப்படை பயிற்சி முகாம் போராளிகளுக்கும், வகுப்புகள் எடுப்பதற்காகவும் சகல இடங்களுக்கும் செல்ல வேண்டியிருந்தது.

மண்ணெண்ணெயிலும் இயங்கக்கூடிய எம்.டி.90 மோட்டார் சைக்கிள் எனது பாவனைக்காகத் தரப்பட்டிருந்தது.

முன்னர் யாழ் மாவட்டத்திலும் பின்னர் வன்னிப் பெருநிலப்பரப்பு வீதிகளிலும் ஓடித் திரிவதிலேயே எனது போராட்ட வாழ்வின் பெரும் பகுதி கழிந்திருந்தது.

**1997 மே 13ஆம் திகதி வன்னிப் பெருநிலப்பரப்பை முழுமையாகக் கைப்பற்றும் நோக்கத்துடன் இலங்கை இராணுவத்தின ரால் 'ஜெயசிக்குறு' படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது**.

மணலாற்றுப் பகுதியிலிருந்து நெடுங்கேணி ஊடாகவும், வவுனியா ஏ9 பகுதியிலிருந்து ஓமந்தை ஊடாகவும் இருமுனைகளில் இந்தப் படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விடுதலைப் புலிகள் இயக்கம் தனது போராடும் முழு வல்லமையையும் திரட்டி, '**செய் அல்லது செத்துமடி**' என்ற கோஷத்துடன் இந்த நடவடிக்கையை எதிர்கொண்டு நின்றது. இரண்டரை வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்த இச்சமரில் மகளிர் படையணிகளும் முக்கியப் பங்கெடுத்தன.

போர்க் களங்களில் மிகுந்த அனுபவம்கொண்ட பெண் போராளிகளைக் கொண்டதான '**மாலதி படையணி**' ஜெயசிக்குறு சமரின் களமுனைகளில் ஒப்பற்ற தீரத்துடன் செயற்பட்டுக்கொண்டிருந்தது.

வன்னியின் அம்பகாமம் காட்டுப் பகுதியில்அமைந்திருந்த மகளிர் அடிப்படைப் பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்ற போராளிகளை இணைத்து மேஜர் சோதியாவின் பெயர் கொண்ட புதிய மகளிர் படையணி, தலைவரால் உருவாக்கப் பட்டது.

## தலைவரால் "சோதியா" படையணி உருவாக்கப்பட்டது




**வன்னிப் போர்க்களத்தில் கிழக்கு மாகாணப் போராளிகளின் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் இல்லாதிருந்திருந்தால் விடுதலைப் புலிகள் இயக்கம்**

**பாரிய வெற்றிகளைப் பெற்றிருக்கவே முடியாது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.** ஜெயசிக்குறு சமரின் காலம் ‘கஞ்சிக் காலம்’ எனப் போராளிகளால் அழைக்கப்பட்டது. சொற்பமான அரிசியும் நிறையத் தண்ணீரும் உப்பும் சேர்த்துச் சமைக்கப்பட்ட கஞ்சி பிளாஸ்டிக் பைகளில் முன்னணிக் களமுனைகளுக்குத் தினசரி காலை உணவாகக் கொண்டு வரப்படும். மதியத்தில் சோறும் மாட்டிறைச்சி அல்லது கத்தரிக்காய்த் தண்ணிக்கறியும் இரவு புட்டும் தக்காளி தண்ணிக் குழம்பும் என்பதான உணவுகள், கடுமையான களப்பணிகளில் ஈடுபட்டிருந்த போராளிகளின் பசிவயிற்றை நிரப்பியதே தவிர போதிய போசாக்கினை அளிக்கவில்லை. ஏனெனில் கணத்துக்குக் கணம் அதிர்ந்து கொண்டிருந்த களமுனைகளில் போராளிகள் அதிக அளவில் உயிரிழந்து கொண்டும், படுகாயமடைந்து கொண்டும் இருந்தனர்.




**'ஜெயசிக்குறு'** முறியடிப்புச் சமரில் கிழக்கு மாகாணப் போராளிகளின் பங்களிப்பு அளப்பரியது. ஜெயந்தன், அன்பரசி படையணிகள் கிழக்கு மாகாணத்திலிருந்து காடுகளுக்கூடாகப் பல நூறு மைல்களைக் கால்நடையாகவே நடந்து வந்து யுத்தத்தில் பங்கெடுத்திருந்தார்கள்.

முள்ளியவளை புதன்வயல் பகுதியில் அமைந்திருந்த அன்பரசி படையணி முகாமுக்கு அரசியல் வகுப்புகளை நடத்துவதற்காகப் பல தடவைகள் போயிருக்கிறேன்.

**தொடர்ந்து .....................**

- ஜெயசிக்குறு சமரின் காலம் 'கஞ்சிக் காலம்' எனப் போராளிகளால் அழைக்கப்பட்டது.

- கிழக்கு மாகாணப் போராளிகளின் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் இல்லாதிருந்திருந்தால் விடுதலைப் புலிகள் இயக்கம் பாரிய வெற்றிகளைப் பெற்றிருக்கவே முடியாது!
- பத்துத் தடவைகளாகக் காயமடைந்த ஒரு போராளி மீண்டும் பதினோராவது தடவையாக யுத்த களத்துக்கு அனுப்பப்பட்டுப் போராடிய சம்பவங்களும் இருந்தன.
- 'இது புளியங்குளம் அல்ல, புரட்சிக்குளம்' நித்தியா எனும் போராளி தமிழினிக்கு எழுதிய கடிதம்

பயிற்சி பெற்ற போராளிகளை இணைத்து மேஜர் சோதியாவின் பெயர் கொண்ட புதிய மகளிர் படையணி, தலைவரால் உருவாக்கப் பட்டது.



**Maj-Sothiga**

சோதியா யாழ்ப்பாணத்தில் உள்ள கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

தமிழ்நாட்டில் தனது ஆயுதப் பயிற்சியைப் பெற்றிருந்த இவர் மிகுந்த போர்ச் செயற்பாட்டுத் திறனும், விரைந்து செயற்படும் நிர்வாகத் திறனும் கொண்ட போராளியாக உருவாகியிருந்தார்.

மருத்துவப் போராளியாக ஆரம்பத்தில் செயற்பட்டுப் பின்னர் மகளிர் படையணியின் முதலாவது சிறப்புத் தளபதியாகத் தலைவரால் நியமிக்கப்பட்டவர்.

இவருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவால் 11.01.1990 மணலாற்றுக் காட்டுப் பகுதியில் மரணமடைந்திருந்தார்.

இவரது உடல் யாழ்ப்பாணத்தில் கிளாலி மகளிர் பயிற்சி முகாமில் அடக்கம் செய்யப்பட்டதுடன் அந்த முகாம் **'மேஜர் சோதியா பயிற்சிப் பாசறை**' என்ற பெயருடன் அழைக்கப்பட்டது.
அப்பாசறையி லேயே நானும் எனது ஆயுதப் பயிற்சியை 1992இல் மகளிர் படையணியின் இருபத்தோராவது அணியில் பெற்றிருந்தேன்.

இந்தப் பயிற்சி முகாம் 1987இல் விடுதலைப் புலிகளால் வடக்கில் அமைக்கப்பட்டிருந்த பெண்களுக்கான முதலாவது ஆயுதப் பயிற்சி முகாமாகும்.

சோதியா படையணியின் சிறப்புத் தளபதியாக துர்க்கா நியமிக்கப்பட்டிருந்தார். அடிப்படையில் இவரும் ஒரு மருத்துவப் போராளியாக இருந்து தாக்குதல் தளபதியாகத் தரமுயர்த்தப் பட்டிருந்தார்.

மேஜர் சோதியா படையணியானது ஒரு **'காட்டுப் படையணி'** (Jungle இந்தப் படையணிப் போராளிகள் கணிசமாக ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

**'ஜெயசிக்குறு'** முறியடிப்புச் சமரில் கிழக்கு மாகாணப் போராளிகளின் பங்களிப்பு அளப்பரியது.

ஜெயந்தன், அன்பரசி படையணிகள் கிழக்கு மாகாணத்திலிருந்து காடுகளுக்கூடாகப் பல நூறு மைல்களைக் கால்நடையாகவே நடந்து வந்து யுத்தத்தில் பங்கெடுத்திருந்தார்கள்.

முள்ளியவளை புதன்வயல் பகுதியில் அமைந்திருந்த அன்பரசி படையணி முகாமுக்கு அரசியல் வகுப்புகளை நடத்துவதற்காகப் பல தடவைகள் போயிருக்கிறேன்.

முள்ளியவளை ரங்கன் முகாமில் அடிக்கடி கலை நிகழ்வுகளும் இசைக்குழு நிகழ்வுகளும் நடாத்தப்படும்.

மீன்பாடும் தேன்நாட்டின் வாரிசுகளான கிழக்கு மாகாணப் போராளிகள் அற்புதமான கலையாற்றல் உள்ளவர்களாக இருந்தனர்.

அவர்களுக்கே உரிய பாணியில் லாவகமான நகைச்சுவை ததும்ப அவர்கள் தமிழ்ப்பேசும் அழகே அழகு.

எனது மனங்கவர்ந்த பல தோழிகள் அம்முகாம்களில் இருந்தனர்.




**சோதியா படையணி**

**வன்னிப் போர்க்களத்தில் கிழக்கு மாகாணப் போராளிகளின் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் இல்லாதிருந்திருந்தால் விடுதலைப் புலிகள் இயக்கம் பாரிய வெற்றிகளைப் பெற்றிருக்கவே முடியாது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.**

ஜெயசிக்குறு சமரின் காலம் 'கஞ்சிக் காலம்' எனப் போராளிகளால் அழைக்கப்பட்டது.

சொற்பமான அரிசியும் நிறையத் தண்ணீரும் உப்பும் சேர்த்துச் சமைக்கப்பட்ட கஞ்சி பிளாஸ்டிக் பைகளில் முன்னணிக் களமுனைகளுக்குத் தினசரி காலை உணவாகக் கொண்டு வரப்படும்.

மதியத்தில் சோறும் மாட்டிறைச்சி அல்லது கத்தரிக்காய்த் தண்ணிக்கறியும் இரவு புட்டும் தக்காளி தண்ணிக் குழம்பும் என்பதான உணவுகள், கடுமையான களப்பணிகளில் ஈடுபட்டிருந்த போராளிகளின் பசிவயிற்றை நிரப்பியதே தவிர போதிய போசாக்கினை அளிக்கவில்லை.

ஏனெனில் கணத்துக்குக் கணம் அதிர்ந்து கொண்டிருந்த களமுனைகளில் போராளிகள் அதிக அளவில் உயிரிழந்து கொண்டும், படுகாயமடைந்து கொண்டும் இருந்தனர்.

இதேவேளை காயமடைந்த போராளிகள், அவர்களது காயங்கள் முற்றாகக் குணமடைவதற்கு முன்னரே மீண்டும் களமுனைக்கு அனுப்பப்பட்டனர்.

பத்துத் தடவைகளாகக் காயமடைந்த ஒரு போராளி மீண்டும் பதினோராவது தடவையாக யுத்த களத்துக்கு அனுப்பப்பட்டுப் போராடிய சம்பவங்களும் இருந்தன.

அதேவேளை அதிக குருதி இழப்புக்குட்பட்டவர்களுக்குப் போஷாக்கின்மை காரணமாகக் காயங்கள் குணமடைவது தாமதமாவதாக மருத்துவர்கள் கவலையடைந்தனர்.

நானறிய இரண்டு போராளிகள்வரை குருதிச்சோகை காரணமாக உயிரிழந் திருந்தனர். இத்துப்போன வெளிறிய உடைகளுடன் பெண் போராளிகள் களமுனைகளில் நின்று போரிட்டனர்.

எனது பயிற்சி முகாம் தோழியான ஆந்திரா எனும் போராளி நான் பின்புறத்தில் அவளது ஜீன்ஸ் தேய்ந்து பிய்ந்துபோயிருந்தது.

**"நீ அடுத்த முறை வரும்போது எப்படியாவது எனக்கொரு சோடி உடுப்பு கொண்டு வாடியப்பா"** என உரிமையுடன் கேட்டிருந்தாள். அரசியல் வேலை செய்பவர்களுக்கும் அதே நிலைமைதான் இருந்தது.
முதுகுப்புறம் வெளிறிப்போன சேட்டைப் பிரித்து உட்புறத் துணியை வெளிப்புறமாக வைத்துத் தைத்து அயன் பண்ணி அழகாக உடுத்திக்கொண்டு, மேடைகளில் ஏறிப் பேசியிருக்கிறேன்.

ஆந்திராவுக்காக ஒரு சோடி உடுப்பைத் தயார் பண்ணியிருந்தேன். அதனைக் கொண்டுபோய்க் கொடுப்பதற்கு முன்பதாகவே அவளது வீரமரண அறிவித்தலைப் புலிகளின் குரல் வானொலி அறிவித்துக்கொண்டிருந்தது.

இத்தனை கடினமான சூழ்நிலையிலும் ஜெயசிக்குறு முறியடிப்புச் சமர் போராளிகளிடையே உணர்வு ரீதியானவொரு யுத்தமாக மாறியிருந்தது.




என்னுடன் கல்விப் பிரிவில் செயற்பட்டுக்கொண்டிருந்த போராளிகளில் சிலரும் இந்தச் சமரில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் நித்தியா எனும் போராளி இறுதியாக எனக்கு எழுதியிருந்த கடிதமொன்றில் **'இது புளியங்குளம் அல்ல, புரட்சிக்குளம்'** என எழுதியிருந்தாள்.

நான் அடிக்கடி ஜெயசிக்குறு களமுனைகளுக்குச் சென்று பெண் போராளிகளுடன் தங்கியிருப்பதுண்டு. வெளிச் செய்திகளை அறிந்துகொள்வதில் அடர்ந்த காடுகளுக்குள்

வருடக்கணக்காகக் களம் அமைத்துப் போரிட்டுக்கொண்டிருந்த போராளிகள் மிகுந்த ஆவலாயிருப்பார்கள்.

தமது குடும்பத்தவர்கள் எங்கே யிருக்கிறார்கள், எப்படியிருக்கிறார்கள் என்பதுகூடத் தெரியாத நிலைமையில் பல போராளிகள் இருந்தனர்.

“நாங்கள் இந்தக் காட்டு மரங்களையே பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

வெளியிலை சனங்களின்ர நிலைமை என்ன மாதிரியிருக்குது எண்டு சொல்லு, இந்தக் காட்டுக்குள்ள நடக்கிற சண்டையில நாங்கள் செத்துப்போனால் எங்கட உடம்புகூட அம்மா, அப்பாவிடம் போகுமோ தெரியாது.

மழை, பனி, வெயில் இப்பிடி எல்லாக் காலங்களும் இந்தக் காடுகளுக்குள்ளேயே கழிந்து போகுது” இப்படியாக ஆயிரமாயிரம் கதைகள், ஏக்கப் பெருமூச்சுக்கள்.

வருடக்கணக்காக நடந்த யுத்தத்தில் அந்தக் காடுகளுக்குள்ளேயே வாழ்ந்து காட்டு மரங்களில் தமக்குப் பிடித்தமானவர்களின் பெயரெழுதிப் பார்த்து, கண்களுக்குள் கனிந்த அன்பை மௌனக் காதலாகத் தமது நெஞ்சுக்குள்ளேயே புதைத்துக்கொண்டு, வன்னிக்காட்டு மரங்களின் வேர்களுக்குள் வாழ்க்கை முடிந்துபோனவர்களின், கதைகளும் கனவுகளும் எனது நினைவடுக்குகளில் ஆழப் புதையுண்டுபோய்க் கிடக்கின்றன.

**இக்காலப்பகுதியில் தமிழ் மக்களின் நிலைமை எம்மை விடவும் மோசமாக இருந்தது.**

சாதாரண மருந்துப் பொருட்கள், எரிபொருள் முதலான அத்தியாவசியத் தேவைகளைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியாத வகையில் அரசாங்கத்தால் விதிக்கப் பட்ட பொருளாதாரத் உணவுப் பங்கீட்டு அட்டைமூலம் வழங்கப்படும் சொற்பமான பொருட்களையும், ஓரிரு அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட பாவனைப் பொருட்களையும் ஜீவாதாரமாகக் கொண்டு உயிரைத் தக்கவைத்துக் கொண்டிருந்தனர்.

தாய் சேய் போஷாக்கின்மை, மாணவர்கள் பள்ளிப் படிப்பை விட்டு விலகுதல், போதிய மருத்துவ வசதியின்மை என நாளாந்த வாழ்க்கைப் போராட்டமே அவர்களைப் பெருஞ்சுமையாக அழுத்தியது.

இருபதாம் நூற்றாண்டில் உலகம் உச்ச நவீனத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது, புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த மக்கள் கட்டை வண்டிக் காலத்திற்குப் பின்னோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தனர்.

ஆனாலும் நாங்கள் எப்படியாவது எமது தாய்நாட்டை விடுவித்துவிட்டோமானால் வெளிநாடுகளில் இருக்கிற எமது புத்திஜீவி மக்கள் இங்கு வந்து எமது தேசத்தையும் ஒரு சிங்கப்பூராகக் கட்டியெழுப்பிவிடுவார்கள் என்கிற கனவு எங்களுக்குள்ளே ஆழமாக இருந்தது.

அக்கனவே எமது மக்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கான எமது சமாதானமாகவும் அமைந்தது.

## மாவோவின் செஞ்சேனை போன்றதொரு மக்கள் படையாக 'எல்லைப்படை' உருவாக்கம்!

தாய்நாட்டை விடுவித்து விட்டோமானால் வெளிநாடுகளில் இருக்கிற எமது புத்திஜீவி மக்கள் இங்கு வந்து எமது தேசத்தையும் ஒரு சிங்கப்பூராகக் கட்டியெழுப்பிவிடுவார்கள் என்கிற கனவு எங்களுக்குள்ளே ஆழமாக இருந்தது.

அக்கனவே எமது மக்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கான எமது சமாதானமாகவும் அமைந்தது. அரசியல்துறையினால் மக்கள் மத்தியில் பல வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

அரசியல்துறையின் ஒரு பிரிவாகச் செயற்பட்டு வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பெயரை பயன்படுத்தி தாய், சேய் போசாஷாக்கு நிலையங்களும் மாணவர் விடுதிகளும் முன்பள்ளிகளும் குழந்தைகளுக்கான பகல் பராமரிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டன.

இவற்றை விடவும் இடம்பெயர்ந்த மக்களுக்கான குடியிருப்புகளும் ஏற்படுத்தப் பட்டன.

வன்னியில் செயற்பட்டுக்கொண்டிருந்த ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே ஒரு வழிகாட்டும் அமைப்பாகச் செயற்படவேண்டும் என்பதில் அரசியல்துறை உறுதியாக இருந்தது.

இதனைவிட மகளிர் அமைப்பு, மாணவர் அமைப்பு, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் எனப் பல பிரிவுகள் மக்கள் மத்தியில் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தாலும் போதிய அளவு நிதி வசதி இல்லாத காரணத்தால் எந்த வேலைகளையும் முழுமையாகச் செய்ய முடியாதிருந்தது.

இதனால் இயக்கத்திற்கு ஆளணி சேர்ப்பது மட்டுமே அரசியல்துறையின் பிரதான வேலைத் திட்டமாக அமைந்தது.

மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருந்த ‘**போரெழுச்சிக் குழு**’ கட்டமைப்பின் மூலமாக மக்களுக்குத் தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.



**கிராமிய மக்கள், வர்த்தகர்கள், பெண்கள், மாணவர்கள் என அனைவருக்கும் பயிற்சி வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.**

இதே தருணத்தில் ‘**எல்லைப்படை**’ என்கிற ஆயுதப் பயிற்சி பெற்ற மக்கள் படையும் உருவாக்கப்பட்டது.

வன்னியில் முதன் முதலாகத் ‘துணைப்படை’ என்கிற மக்கள் இராணுவக் கட்டமைப்பை உருவாக்கியவர் லெப். கேணல் அன்பு ஆவார்.

இவர் 1990-93 காலப் பகுதிகளில் மணலாறு போராளிகள் மத்தியிலும், முள்ளியவளை, குமுழமுனை, அலம்பில், கொக்குளாய், கொக்குத் தொடுவாய், நாயாறு பகுதி மக்களிடமும் மிகுந்த அன்பையும் அபிமானத்தையும் பெற்றிருந்தார்.

மணலாற்றுப் பெருங்காட்டுப் பகுதியின் உட்பாதைகள் பற்றிய அறிவைத் தனது விரல் நுனியில் வைத்திருந்த அன்பு, தேர்ந்தெடுத்த சில மக்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்து..,

மணலாறு காட்டுப் பகுதிகளில், தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போராளிகளுக்குத் துணைப் படையினராகவும் பாதை காட்டிகளாகவும் பயன்படுத்தியதுடன் சில இடங்களில் அவர்களுடைய அணிகளைப் பாதுகாப்புப் பணியிலும் நிறுத்தியிருந்தார்.



இப்படிச் செயற்பட்ட மக்களில் பலர் தாக்குதல் நடவடிக்கைகளில் தமது உயிர்களையும் இழந்திருந்தனர். அவர்களுக்குக் களத்தில் வீரச் சாவடையும் போராளிகளுக்கான மரியாதையை வழங்கியதுடன், அவர்களுடைய குடும்பங்களுக்கும் ஒரு சிறிய உதவித் தொகை வழங்குமாறு தலைமையிடம் வற்புறுத்தினார்.

இயக்கத்தின் வரலாற்றிலேயே முதன்முதலாக மக்கள் படையணியை எவ்வித வற்புறுத்தலும் இல்லாமல் அவர்களின் மனமுவந்த பங்களிப்புடன் கட்டியெழுப்பிய வீரத்

தளபதியான லெப்.கேணல் அன்பு 1993 பூநகரிச் சமரில் உயிரிழந்தார்.

தமிழ்- சிங்கள எல்லைப்புறக் கிராமங்களில் இருந்த தமிழ் மக்களின் உயிர்கள் பெருமளவில் பாதுகாக்கப்படுவதிலும், இராணுவத்தின் துணையுடனான சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நைப்படுத்தி, நிறுத்துவதிலும் அவர் ஆற்றிய பங்கு தமிழ் மக்களின் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

மீண்டும் ஜயசிக்குறு காலத்தில் வன்னிப் போர்க்களத்தில் அப்படியான ஒரு மக்கள் இராணுவக் கட்டமைப்பை உருவாக்கு வதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அது '**எல்லைப்படை**' என்ற பெயருடன் அரசியல்துறையின் கீழ் தனி நிர்வாகப் பிரிவாக இயங்கியது. எல்லைப் படையில் பங்கு கொண்டோருக்கான பயிற்சி முகாம்களும் அமைக்கப்பட்டன.

இதன் ஆரம்ப நிகழ்வு புதுக் குடியிருப்பு மாலதி மைதானத்தில் ஒரு சிறப்பு நிகழ்வாகப் புலிக் கொடியேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டது. அந்நிகழ்ச்சியில் நானும் கலந்துகொண்டிருந்தேன்.

எனது கண்களையே நம்ப முடியாத அளவிற்கு ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் பெருவெள்ளமாக அணிவகுத்து நின்றனர்.




அப்போதைய '**ஜெயசிக்குறு**' களமுனையின் முன்னணித் தளபதியாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த கருணா அம்மான்

புலிக் கொடியேற்றி அந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந் தார்.

அரசியல்துறையின் வேலைத் திட்டத்தின்படி புரட்சியாளர் ‘**மாவோவின் செஞ்சேனை**’ போன்றதொரு மக்கள் இராணுவத்தைத் தலைவர் பிரபாகரனது இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இருக்கும்படி கட்டியெழுப்பு வதே நோக்கமாயிருந்தது.

மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கான சகல வழிகளும் அடைக்கப்பட்டிருந்த அன்றைய யுத்த சூழலில் விரும்பியோ விரும்பாமலோ புலிகளின் வார்த்தைகளுக்கு இணங்கி நடப்பதைத் தவிர மக்களுக்கு வேலைத் திட்டங்களில் மும்முரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தேன்.

மிகக் குறைந்த அளவிலான மக்கள் தொகையினரே உண்மையான விருப்பத்துடன் பயிற்சிகளில் ஈடுபட்டு எல்லைப் படையாகக் களமுனைகளுக்குச் செல்லத் தயாராகவிருந்தனர்.

பெரும்பான்மையான மக்கள் தவிர்க்க முடியாத நிலைமையில் விருப்பத்துடன் ஈடுபடுவதாகக் காட்டிக் கொண்டு செயற்பட்டனர்.

இன்னும் சிலர் நேரடியாகவே முரண்பட்டு, விமர்சித்துத் தூற்றினார்கள். ஆனாலும் பல இறுக்கமான கட்டுப்பாடுகளையும் நடைமுறைகளையும் செயற்படுத்தியதன் மூலம் அனைவரும் பயிற்சி எடுத்தேயாக வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

இயக்கத்தின் ஆளணி பற்றாக்குறையான நிலைமையில் புலிகளால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் எல்லைப் படையை நிறுத்தி வைப்பதன் மூலம் அப்பிரதேசங்களைப் பறிகொடுக்காமல் தக்கவைத்துக்கொள்ள முடியும் எனவும்,

அத்துடன் இலங்கை அரசாங்கத்திற்கும் இராணுவத்தினருக்கும் உளவியல் ரீதியான நெருக்கடியைக் கொடுக்கவும் முடியும் எனவும் இயக்கத் தலைமை எதிர்பார்த்தது.

**இதனைவிடச் சர்வதேசத்திற்கு விடுதலைப் புலிகளின் போராட்டமானது ஒரு மக்கள் போராட்டம் என்பதாகக் காண்பிக்கும் நோக்கமும் இச்செயற்திட்டத்தில் உள்ளடங்கியிருந்தது.**

மக்கள் அனைவரும் பயிற்சி மைதானத்திற்கு வந்தேயாக வேண்டும். வயது முதிர்ந்தவர்கள், இருதய நோயாளிகள், அங்கவீனமானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார் ஆகியோருடன் வேறு பாரதூரமான மருத்துவக் காரணங்கள் உள்ளோர் எனக் குறிப்பிட்டவர்களுக்கு மட்டுமே விலக்களிக்கப்பட்டிருந்தது.

ஏனைய அனைவரும் பயிற்சி எடுத்து அதனை உறுதிப்படுத்தும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த அட்டை இல்லாதவர்கள் கிராம அலுவலர்களிடம்கூட எவ்விதமான உதவிகளையும் பெற்றுக்கொள்வது தடுக்கப்பட்டிருந்தது.

வேறு வழியின்றி மக்கள் அனைவரும் பயிற்சிகளில் பங்கெடுக்கத் தொடங்கினர்.


**தமிழினியின் தாய்**

எனது தாயாரும்கூட ஒரு மண்வெட்டிப் பிடியை எடுத்துக்கொண்டு மாலை நேரங்களில் அருகிலிருந்த மைதானத்திற்குப் பயிற்சிக்குச் சென்று வந்தார்.

அவருக்கு இரண்டு முழங்கால்களிலும் வீக்கமும் நோவும் இருந்த காரணத்தால் மைதானத்தைச் சுற்றி நடக்கும்படி தனது பயிற்சியாசிரியர் கூறியதாகச் சொன்னார்.

அன்றிருந்த நிலைமையில் வன்னியின் பல முனைகளிலும் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. வன்னிப் பெருநிலப்பரப்பு யுத்தத்தினால் சுருங்கிப் போயிருந்தது.

மக்கள் யுத்தத்தின் அகோரத்தினுள் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தார்கள்.

ஏ9 வீதிக்கு மேற்காக மல்லாவியைப் பிரதானமாகக்கொண்டு, துணுக்காய், யோகபுரம், கல்விளான், தேறாங்கண்டல், ஜெயபுரம், வெள்ளாங்குளம், முழங்காவில், கிராஞ்சி, பிரமந்தனாறு, உடையார்கட்டு, தேராவில், பேராறு, கற்சிலைமடு, கேப்பாப்பிலவு, குமுழமுனை, அளம்பில் ஆகிய பிரதேசங்களிலும் மிக நெருக்கமாகச் சிறு குடிசைகளின் கீழும், தறப்பாள் விரிப்புகளின் கீழும் வாழ்விடங் களை அமைத்திருந்தனர்.

புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவினரால் நடாத்தப்பட்ட ஓரிரு சர்வதேச தொலைத்தொடர்பு நிலையங்களைத் தவிர மக்களுக்கு வெளியுலகத்துடன் தொடர்பு கொள்வதற்கு வேறு எவ்விதமான வழிகளும் இருக்கவில்லை.




**இள வயதிலுள்ளவர்கள் வன்னியை விட்டு வெளியேறுவது முற்றிலும் தடுக்கப்பட்டிருந்தது.**

உயர் கல்வி கற்பதற்கான பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவர்கள், திருமணம் நிச்சயிக்கப் பட்ட பெண்கள் திருமணக் காரணங்களுக்காகவும் மற்றும் மக்கள் மேலதிக வர்த்தக, மருத்துவக் காரணங்களுக்காகவும் போதிய ஆதாரங்களைக் காட்டிப் புலிகளின் புலனாய்வுத்

துறையினரிடம் அனுமதி பெற்ற பின்னரே வெளியேறக் கூடியதாக இருந்தது.

**ஆனாலும்கூட, பணவசதி படைத்தவர்கள் தமது வீடுகளையும் காணிகளையும் ஏனைய சொத்துக்களையும் இயக்கத்திடம் ஒப்படைத்துவிட்டுக் குடும்பத்துடன் வெளியேறினார்கள்.**

புலிகளின் பயண அனுமதி கொடுக்குமிடங்களில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் பற்றி மக்களிடம் ஏராளமான விமர்சனங்கள் இருந்தன. மக்கள் மத்தியில் வேலைசெய்யும் போராளிகளாகிய நாம் பல சந்தர்ப்பங்களில் மக்கள் கோபத்துடன் எம்மிடம் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திண்டாட வேண்டிய நிலைக்கு உள்ளானோம்.

ஏனெனில் அவர்களுக்குத் தெரிந்திருந்த இயக்க நிர்வாகங்களின் நடைமுறைக் குறைபாடுகள் இயக்க உறுப்பினர்களாகிய எமக்குத் தெரிந்திருக்கவில்லை.

மக்களுடைய கேள்விகளையும் சந்தேகங்களையும் பொறுப்பானவர்களிடம் தெரிவித்து விளக்கம் கேட்டபோது, இயக்கத்தின் இரகசிய வேலைகளுக்காகக் குறிப்பிட்ட சில மக்களைப் புலனாய்வுத்துறையினர் கொழும்புக்கு அனுப்புவதாக எமக்குக் கூறப்பட்டது.

அதில் உண்மைகளும் இருந்தன. ஆனால் அத்தகைய ஏற்பாடுகளைப் பயன்படுத்திக்கொண்டு பல வசதி படைத்தவர்களும் வெளியேறிச் சென்றிருந்தனர்.

இத்தகைய நிர்வாகத் தவறுகள் எம்மைவிட மக்களுக்கு அதிகமாகத் தெரிந்திருந்தது. அதனால் இயக்கத்தின் நிர்வாகக் கட்டமைப்புகளின் மீது மக்களுக்குக் கசப்புணர்வும் கோபமும் ஏற்பட்டது.

**“நாட்டின் விடுதலைக்காக இன்னும் கொஞ்சக் காலத்திற்கு இந்த நெருக்கடிகளைப் பொறுத்துக்கொள்ளுங்கள், நாம் விரைவில் நாட்டை வென்றுவிடுவோம்.**

**நமது தலைவர் உங்களுடைய கஷ்டங்களுக்கு விரைவில் ஒரு முடிவு கட்டுவார்"** என மக்களின் மனக் குமுறல்களுக்கு நாம் தற்காலிக மருந்து தடவி ஆறுதலைக் கூறினாலும் இயக்கத்தின் சில நடவடிக்கைகளும் முடிவுகளும் போராளிகளான எமக்குப் புரியாத புதிராகவும் மனக் குழப்பம் ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தன.



எத்தனையோ இடப்பெயர்வுகளையும் இழப்புக்களையும் சந்தித்த, அன்று வன்னியிலிருந்த சாதாரண ஏழை மக்களே எல்லைப் படைகளாகவும் போராளிகளாகவும் களமுனைகளில் உயிர் இழந்து கொண்டிருந்தனர்.

ஆனாலும் மக்களை நேசிக்கும் தலைவர் பிரபாகரன் அந்த மக்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பார் என்ற எமது திடமான நம்பிக்கையிலிருந்து போராளிகளாகிய நாம் சிறிதும் விலகாதிருந்தோம்.

என்னால் மறக்க முடியாத ஒரு அனுபவம் மல்லாவி பிரதேசத்தில் எனக்கு ஏற்பட்டது. ஆட்சேர்ப்புப் போராளிகளின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு இயக்கத்தில் இணைந்துகொண்ட உயர்தரம் படித்துக்கொண்டிருந்த ஒரு மாணவி பயிற்சிக்கும் அனுப்பப்பட்டுவிட்டார்.

ஒருநாள் எமது முகாமுக்கு அந்தப் பெண்ணின் தந்தை வந்திருந்தார். அவர் ஏனைய பெற்றோர் களைப் போல் போராளிகளை ஏசவோ அல்லது தமது மகளைத் தந்துவிடும்படி எம்மிடம் அழுது மன்றாடவோ இல்லை.

அவரது இரு கால்களும் இயங்காத நிலையில் சக்கர நாற்காலியின் உதவியுடனே வந்திருந்தார். இயக்கத்தின் சார்பில் நான்தான் அவரை எதிர்கொள்ள வேண்டிய நிலை.

அந்தத் தகப்பன் சொன்னார் “தங்கச்சி, நான் பிச்சைக்காரன். நாளாந்தம் கிடைக்கிற வேலைகளைச் செய்து பிச்சைக் காசு மாதிரி சேர்த்துத் தான் என்ர மகளைப் படிப்பிச்சனான், மகள் போராடப் போனது எனக்குக் கவலையில்லை.

போகட்டும், ஊரோட ஒத்ததுதான் எனக்கும்.

ஆனால் நாளைக்கு வெளிநாடுகளில இருந்து டொக்டரா எஞ்சினியரா படித்த பபோகட்டும், ஊரோட ஒத்ததுதான் எனக்கும்.

ஆனால் நாளைக்கு வெளிநாடுகளில இருந்து டொக்டரா எஞ்சினியரா படித்த புத்திசாலிகளாக ஆட்கள் வந்து இறங்கும்போது, நாட்டுக்காகப் போராடின என்ர மகளும் என்ர குடும்பமும் அவையளுக்கு முன்னால படிக்காத பிச்சைக்காரர்களாய்த்தானே நிற்கப் போறம்.

## தமிழினியின் தங்கை 'சந்தியா' கிளிநொச்சியில் நடந்த சண்டையில் உயிரிழப்பு

கொல்லர் புளியங்குளத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது முகாம் புதுக்குடியிருப்புக்கு மாற்றப்பட்டது. இயக்கத்தின் அனைத்துக் கட்டமைப்புகளும் புதுக்குடியிருப்பை மையப் படுத்தியே அமைக்கப்பட்டன.

இலங்கை **இராணுவத்தினர் ஒருபோதும் புதுக்குடியிருப்பை நெருங்க மாட்டார்கள்** என்ற ஒரு காரணமற்ற நம்பிக்கை, தலைவர் பிரபாகரன் உட்பட அனைத்துப் போராளிகளிடமும் இருந்தது.

இயக்கத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தை இயக்கம் அதீத பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கட்டிக் காத்து வந்தது.

1998இன் இறுதிப் பகுதியில் சுதந்திரப் பறவைகள்' பத்திரிகையை வெளியிடும் பொறுப்பு தலைவரால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

முன்னர் பல தடவைகள் இயக்கத்தின் தலைவரைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் பேசிய சந்தர்ப்பம் சுதந்திரப் பறவைகள் தொடர் பான சந்திப்பாகத்தான் அமைந்தது.

பத்திரிகையில் புதிய பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவருக்கு இருந்தது. “பெண்களின் பிரச்சனைகளைப் பெண்களே வெளிக்கொணர வேண்டும்.

பெண்களைவிட ஆண்கள் அதிகம் சிறப்பாகப் பெண் விடுதலை பற்றிப் பேசுவார்கள், ஏன் நான்கூட உங்களை விடவும் நன்றாகப் பெண்ணியம் பேசுவேன்.



ஆனால் உங்களின் பிரச்சனைகளை என்னால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. எந்த ஆண்களாலுமே பெண்களின் அனைத்துப் பிரச்சனைகளையும் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது.

பெண்களின் பிரச்சனைகளைப் பெண்கள்தான் பேச வேண்டும், எழுத வேண்டும். அப்போதுதான் அது உண்மையானதாக இருக்கும். ஆகவே சுதந்திரப் பறவையில் பெண்கள் அதிக அளவில் எழுத வேண்டும்.

எழுத்தாற்றல் உள்ள பெண் போராளிகளை இனங்கண்டு எழுத்துப் பயிற்சிகள், கலந்துரையாடல்கள் நிகழ்த்த வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.

அரசியல்துறையின் பொறுப்பில் ‘**மாலதி பதிப்பகம்**’ என்ற அச்சுக்கூடம் இருந்தது. அங்கேதான் விடுதலைப் புலிகள் பத்திரிகையும் அச்சிடப்பட்டது.

கணினியோ, ‘**ஓப்செட் பிரிண்ட்**’ வசதிகளோ வன்னியில் இல்லாத காலத்தில், ஒவ்வொரு எழுத்தாக அச்சுக் கோத்து, படங்களைப் புளக் செய்து பத்திரிகை வெளியிடுவது பற்றாக்குறைகள் நிறைந்த காலத்தில்பணியாக இருந்தது.

பத்திரிகைகளை அச்சுப் பதிப்பதற்காகப் பாவிக்கப்படும் தாள் தடைசெய்யப்பட்டிருந்த காரணத்தால், அரசியல்துறை மூலமாகவே எமக்குத் தேவையான தாள்களைப் பெற்றுக்கொண்டோம்.

கல்விக் குழு, சுதந்திரப் பறவைகள், அரசியல் விஞ்ஞானப் பிரிவு ஆகிய மூன்று மகளிர் பிரிவுகளின் நிர்வாகப்

பணிகளுடன் பிரதேச பரப்புரை வேலைகளிலும் நான் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தேன்.

கிழக்கு மாகாணப் போராளிகள் ஜெயசிக்குறு களமுனைக்காக அடர்ந்த காடுகளுக்கூடாகப் பல இடர்ப்பாடுகளையும் இராணுவத்துடனான மோதல்களையும் சந்தித்து, பல மாதக் கணக்காக நீண்ட தூரம் நடந்து பயணித்து வன்னிக்கு வந்து சேர்ந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை வன்னியிலிருந்தும் சில தேவைகளுக்காக அணிகள் கிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தன.



1998இன் இறுதி அல்லது 1999 ஆரம்ப காலமாகவோ இருக்க வேண்டும்.

இந்த அணி புறப்பட்டுச் சென்ற ஒரு மாத காலத்தின் பின்னர் ஒரு பயங்கரமான செய்தி வந்திருந்தது.

அந்த அணியினர் சென்றுகொண்டிருந்த பயணத்தின் இடை நடுவில் '**கொலரா**' என்கிற கொடிய வாந்திபேதி நோயினால் அவர்களில் பலர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களில் பலர் நோயின் தாக்கத்தினால் உயிரிழந்து விட்டதாகவும் எஞ்சியவர்கள் அனைவருமே மோசமான பாதிப்பிற்குள்ளாகி இருப்பதாகவும், அவர்களை மீட்டெடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவ தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செய்தி வந்த ஓரிரு நாட்களின் பின் நள்ளிரவுக்குப் பின்னரான பொழுதில் அவசரமாக முல்லைத்தீவுக் கடற்கரைக்கு வரும்படி அழைக்கப்பட்டிருந்தோம்.

நானும் வேறு சில பெண் போராளிகளுமாக அங்குச் சென்றபோது, கடற்புலிகள் உயிரிழந்த நிலையிலும், உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த நிலையிலும் தளபதி

கீரனுடன் மட்டக்களப்புக்குச் சென்ற போராளிகளில் எஞ்சியவர்களைக் கொண்டுவந்து சேர்த்திருந்தனர்.

அவர்களது உடல்களை ஏற்கனவே அங்குத் தயாராகக் காத்திருந்த வாகனங்களில் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

எனக்கு மிகவும் அறிமுகமான **நிரோஜினி என்ற போராளி** கொலராவினால் உயிரிழந்து காட்டுப் பாதையிலேயே புதைக்கப்பட்டுவிட்டதாகக் கேள்விப்பட்டேன். சுதர்சினி என்கிற இன்னுமொரு போராளி கடுமையான பாதிப்படைந்த நிலைமையில் உயிரற்ற சடலம் போலக் கண்மூடிக் கிடந்தார்.

அதே நிலையில்தான் ஏனையவர்களும் இருந்தனர். அதுவரையிலும் உயிர் ஊசலாடிக்கொண் டிருந்த கீரன். முல்லைத்தீவுக் கரையை வந்தடைந்த பின்னர் உயிரிழந்துவிட்டிருந்தார்.

மோசமான நிலைமையிலிருந்தவர் களுக்குச் சிகிச்சையளிப்பதற்காகத் தனியிடம் ஏற்பாடு

செய்யப்பட்டிருந்தது. தீவிர மருத்துவச் சிகிச்சையின் மூலம் அவர்கள் முழுமையாகக் குணமடைவதற்கு ஒரு மாதத்திற்கும் அதிகமான காலம் சென்றது.

ஆனாலும் அவர்கள் முழுமையான சுகதேகிகளாவதற்குப் பல மாதங்கள் சென்றன. அவர்கள் குணமடையத் தொடங்கிய பின்னரே அவர்களுக்குக் கொலரா நோய்த் தாக்கம் ஏற்பட்டதற்கான காரணத்தை ஆராய முனைந்தோம்.

இந்த அணியினர் சென்றுகொண்டிருந்த பாதையில் இராணுவத்தினருடனான தொடர்ந்த மோதல்களி னால் அதிகமான நாட்கள் மறைவிடங்களில் தங்க நேரிட்ட தாகவும், தாங்கள் எடுத்துச் சென்ற உணவுப் பொருட்கள் முடிவடைந்துவிட்ட காரணத்தால்.....,

**ஏற்கனவே அங்குத் தங்கிச்சென்ற அணியினரால் பதப்படுத்தப்பட்ட நிலையில்.....**

**மரங்களிலே மறைத்து வைக்கப்பட்டிருந்த காய்ந்த எருமை இறைச்சி வத்தலைச் சமைக்காமல் உண்ண நேர்ந்ததாகவும், அக் காட்டுப் பகுதியின் குட்டைகளில் தேங்கியிருந்த தண்ணீரையே குடிக்க நேர்ந்ததாகவும், அதன் பின்னரே தமக்குத் தொடர்ந்த வயிற்றோட்டமும் வாந்தியும் ஏற்பட்டதாகவும் உயிர் தப்பிய போராளிகள் தாங்கள் அனுபவித்த பயங்கர அனுபவங்களைக் கூறினார்கள்.**

தம்முடன் இருந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவராக உயிரிழந்து கொண்டிருந்தபோது அவர்களில் சிலரை மட்டுமே புதைக்க முடிந்ததாகவும், அனைவரும் நோய்வாய்ப்பட்டு நலிவடைந்ததன் பின்னர் உயிரிழந்தவர்களின் சடலங்களை அப்படியே காடுகளுக்குள் கைவிட்டு வந்ததாகவும் கூறினார்கள்.

www.ilakkiyainfo.com

பயங்கர அனுபவமாகவே இருந்தது. இதன் பின்னர் சில மாதங்களில் வன்னி மக்களிடமும் கொலரா எனப்படும் வாந்திபேதி ஏற்படத் தொடங்கியது.

ஆங்காங்கு ஒரு சிலரிடம் அந்த நோய்க்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியதுமே மருத்துவர்கள் விழிப்படைந்துவிட்டனர்.

ஒருபுறத்தில் உக்கிரமான போருக்கும், மறுபுறம் வறுமை, போஷாக்கின்மை போன்ற இடர்களுக்கும் இடையே மக்கள் சிக்கித் தவித்துக்கொண்டிருந்த வேளையில் கொலரா எனும் பயங்கரமான உயிர்க் கொல்லித் தொற்றுநோய் பரவத் தொடங்கி னால் எத்தகையதொரு பேரனர்த்தம் ஏற்படும் என்பதைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாதிருந்தது.

www.ilakkiyainfo.com

தலைவரின் பணிப்பின் பேரில் அரசியல்துறையினரும் மருத்துவப் பிரிவினருமாக இணைந்து மிகத் தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கினோம்.

விழிப்புணர்வு வேலைத் திட்டமும், நோய்த் தொற்று ஏற்பட்டவர்களுக்கான சிகிச்சை யளித்தலும் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டன.

அனைத்துப் பிரதேசங்களிலும் பல அணிகளாகப் பிரிந்து ஓய்வொழிச்சல் இன்றிக் கண்ணயராது செயற்படத் தொடங்கினோம்.

‘கொலரா வாந்திபேதிக்கான அறிகுறிகள் பற்றியதும், அதன் பாதிப்புகள் பற்றியதுமான விளக்கம் ஒலி பெருக்கிகள் மூலமாகவும், ஈழநாதம் பத்திரிகை, புலிகளின் குரல் வானொலி என்பவற்றுக்கூடாகவும், விசேட துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் மக்களுக்கு அதிவேகமாக எடுத்துச் சொல்லப்பட்டது.

மக்களும் எமது தடுப்பு நடவடிக்கைகளில் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கினர். கொலரா நோய் அறிகுறிகளுடன் பாதிக்கப்பட்டிருந்த ஒவ்வொருவரையும் கிராமத்தவர்களே முன்வந்து அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மருத்துவ ஏற்பாட்டிடங்களுக்குக் கொண்டு சென்று சேர்த்தனர்.

வன்னியில் தொடர்ச்சியாக மலேரியா காய்ச்சலும் மக்களை மூர்க்கமாகத் தாக்கிக்கொண்டிருந்தது. மக்களும் போராளிகளும் இதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

**"குளொரோ குயீன், பிறீமா குயின், தாரா பிறீம்"** என அதற்கான மாத்திரைகளின் பெயரைக் கேட்டாலே வாந்தி ஏற்படும் உணர்வு ஏற்படும்.
ஆறு மாதத்திற்கொரு தடவை என்னையும் பீடித்த மலேரியா காய்ச்சலால் நானும் மிகுந்த உடல் வேதனைப்பட்டேன்.

இயக்கத் தின் மருத்துவப் பிரிவினர் தொடர்ச்சியாக மலேரியா தடுப்பு மாத்திரைகளை விநியோகித்து வந்த காரணத்தால் சற்றுக் காலத்தின் பின்னர் வன்னியில் மலேரியா நோய்த் தாக்கம் இல்லாமல் போனது.

1998.08.13 அன்றைய தினத்தில் **சுதந்திரப் பறவை** பத்திரிகைக் கான களமுனைக் கட்டுரை ஒன்றுக்காகத் தகவல்களைத் திரட்டுவதற்காகக் கிளிநொச்சிப் பகுதியின் களமுனைத் தளபதி தீபனைச் சந்திப்பதற்காகச் சென்றுகொண்டிருந்தேன்.

யுத்தக் களத்தை அண்மித்திருந்த திருவையாறு பகுதியில் அவருடைய கட்டளை மையம் அமைந்திருந்தது.

முதல் நாளிரவு கோணாவில் பகுதியில் இராணுவத்தினருடன் மோதல் ஒன்று நிகழ்ந்திருந்தது எனக்குத் தெரியும். ஆனால் ஒருத்தி என்னைக் கண்டதும் ஓடிவந்து எனது கையைப் பற்றிக்கொண்டு சொன்ன செய்தி எனக்குள் நெருப்புப் போல இறங்கியது.

**"தமிழினி எங்கட சந்தியா நேற்றிரவு கிளிநொச்சி கோணாவில் பகுதியில் நடந்த சண்டையில் தலையில் காயப்பட்டு உயிரிழந்திட்டாள்" எனக் கூறினாள்.**

தொடர்ந்துகொண்டிருந்த கொடிய யுத்தத்தில் நானோ எனது தங்கையோ அல்லது இருவருமோ உயிரிழந்துவிடுவோம் என்பது நிதர்சனமாயிருந்த போதிலும் என்மீது கொண்டிருந்த அளவற்ற அன்பின் காரணமாக என்னைப் பின்பற்றி இயக்கத்தில் இணைந்துகொண்ட எனது தங்கை எனக்கு முன்னராகவே களத்தில் உயிரிழந்து போனாள் என்கிற செய்தி என் இதயத்தை அறுத்துச் சாய்ப்பது போலிருந்தது.

www.ilakkiyainfo.com

1975.07.09இல் பிறந்தவள் எனது தங்கை நாகேஸ்வரி (கௌரி) சுப்பிரமணியம். நான் படித்த அதே பாடசாலையில் படித்திருந்தாள்.

1992இல் இயக்கத்தில் இணைந்து என்னுடன் ஒரே பயிற்சி முகாமில் ஆயுதப் பயிற்சி எடுத்ததன் பின் சிறுத்தைப் படையணி உள்வாங்கப்பட்டிருந்தாள்.

அவளது சிவந்த மெல்லிய அழகிய தோற்றத்தைப் பார்த்தவர்கள், **"இவ உன்ர தங்கச்சியா"** என ஆச்சரியப்பட்டுக் கேட்பார்கள்.

குடும்பத்தினரில் அளவற்ற பாசமும் குறும்புக் குணங்களும் துணிச்சலும் நிரம்பியவள். அழகான கையெழுத்தில் கவிதைகள் எழுதுவாள், ஓவியங்கள் வரைவாள்.

www.ilakkiyainfo.com

---

1997 காலப் பகுதியில் நானும் தங்கையும் ஒரே சமயத்தில் மூன்று நாள் விடுமுறையில் வீட்டுக்குச் சென்றிருந்தோம்.

சிறு வயதிலிருந்தே அடிக்கடி சண்டை போட்டுக்கொள்ளும் நாங்களிருவரும் அப்போதும் சண்டை போட்டுக்கொண்டோம்.

என்னைப் போல எந்த நேரமும் புத்தகத்துடன் பொழுது போக்காமல் அம்மாவுக்கு உதவியாக வீட்டு வேலைகள்

எல்லாம் செய்வாள். உறவினர்களின் வீடுகளுக்குப் போய் வருவாள்.

“**நான் கெதியிலை, அப்பாவுடன் போயிடுவன். நீ அம்மாவைப் பாத்துக்கொள்**” எனச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

நான் வழக்கம்போல இரண்டு குத்துக் கொடுத்துவிட்டுப் “**பைத்தியம் மாதிரி அலட்டாதே**” எனக் கடிந்துகொண்டேன்.

அப்போது எனது தாயாரும் சகோதரர்களும் விசுவமடு பிரதேசத்தில் இளங்கோபுரம் என்னும் கிராமத்தில் எமக்கிருந்த காணியொன்றில் வசித்துவந்தனர். குடும்பத்தில் கடும் வறுமை நிலவியிருந்தது.

எனது மூன்றாவது தங்கை திருமணம் முடித்திருந் தாள். தம்பி படிப்பை இடையில் நிறுத்திவிட்டுக் கடையொன்றில் வேலைக்குப் போய்க்கொண்டிருந்தான். ஏனைய தங்கைகள் படித்துக்கொண்டிருந்தனர்.

அம்மா வீட்டைச் சுற்றிச் சிறிய தோட்டமொன்றினைப் பயிரிட்டிருந்தார். தங்கையின் இழப்பு குடும்பத்தவர்களைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியிருந்தது.

தொடர்ந்துகொண்டிருந்த போரில் எனக்கும் ஏதாவது நேரிட்டு விடுமென அம்மா அதிகமாகப் பயந்தார்.

தங்கையின் இறுதி நிகழ்வுகள் முடிந்த கையோடு எனது முகாமுக்குச் செல்ல நான் புறப்பட்டபோது என்னை கட்டியணைத்தபடி "இனிக்காணும் இயக்கத்திலிருந்து விலத்தி வந்துவிடம்மா' எனக் கதறியழுதார்.

என்னை நம்பி இயக்கத்தில் பல வேலைகள் தரப்பட்டிருந்தன. அத்துடன் எனது அன்புக்குரிய பல போராளிகள் உயிரிழந்து விட்டிருந்தனர்.

அம்மாவின் முகத்தை நிமிர்ந்து பார்ப்பதற்கான திராணி என் மனதிற்கு அக்கணத்தில் இருக்கவில்லை. மௌனமாகத் தலையைக் குனிந்தபடி அம்மாவின் கைகளை

விலக்கிக்கொண்டு நெஞ்சில் நிறைந்த சுமையோடு எனது முகாமைச் சென்றடைந்தேன்.

1997-98இல் கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்காக இரண்டுக்கும் மேற்பட்ட தடவைகள் புலிகள் இயக்கம் மிகப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டது.

இம்முயற்சிகளில் கரும்புலிகள் உட்பட பல நூற்றுக்கணக்கான போராளிகள் உயிரிழந்திருந்தனர். மூன்றாவது தடவையாக 1998 செப்டெம்பர் மாதம் '**ஓயாத அலைகள்-02**' நடவடிக்கை மூலம் கிளிநொச்சியைப் புலிகள் கைப்பற்றிருந்தனர்.

இந்தச் சண்டை மூன்று நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றது. முதல்நாள் புலிகளின் தாக்குதல் அணிகளால் கைப்பற்றப்பட்டிருந்த இடங்கள் இரண்டாவது நாள் மீண்டும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது.

அப்போது தலைவருடைய பிரதான கட்டளை மையத்தில் நின்றிருந்த தமிழ்ச்செல்வனிடம் ஒரு முக்கியமான பணியைத் தலைவர் கொடுத்திருந்தாராம்.

அது என்னவெனில், தாக்குதலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் தளபதிகளின் மனநிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிந்து வருவதாகும்.

## பிரபாகரனுக்கு ஏற்பட்ட உச்சக்கோபம்: சரமாரியாக இராணுவத்தினருக்கு எதிராகப் பொழியப்பட்ட எறிகணைகள்!

• இலங்கை தேசத்தின் ஏழைத் தாய்மாரின் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் ஏ9 வீதியிலும் வன்னிக் காடுகளிலும் யாருக்கும் நன்மை பயக்காத யுத்தமொன்றில் தமதுயிரை இழந்திருந்தனர்.

• 2000.04.22ஆம் திகதி ஆனையிறவு புலிகளால் கைப்பற்றப்பட்டபோது இயக்கத்தின் பல வருடக் கனவு அன்று நனவாகியது.

• பல்லாயிரக்கணக்கான உயிர்களின் குருதியில் நனைந்த ஏ9 வீதி 2002 திறக்கப்பட்டபோது புலிகள் இயக்கம் இராணுவ

பலத்தின் உச்சத்தில் இருந்தது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

• யாழ்பாணத்தையும் கைப்பற்றிவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் பூநகரி சங்குப்பிட்டிப் பாதையூடாக ஒரு பெரும் நகர்வு மேற்கொள்ளப்பட்டது.

• இயக்கம் எதிர்பார்த்த வகையில் யாழ்ப்பாணத்தை நோக்கித் தொடர்ந்து முன்னேறிச் செல்ல முடியாதிருந்த காரணத்தால் படையணிகள் மீண்டும் வன்னிக்குப் பின் நகர்த்தப்பட்டன......




அப்போது தலைவருடைய பிரதான கட்டளை மையத்தில்

நின்றிருந்த தமிழ்ச்செல்வனிடம் ஒரு முக்கியமான பணியைத் தலைவர் கொடுத்திருந்தாராம்.

அது என்னவெனில், தாக்குதலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் தளபதிகளின் மனநிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிந்து வருவதாகும்.

தலைவரின் அறிவுறுத்தலின்படி தமிழ்ச்செல்வன் சென்று தாக்குதல் தளபதிகளான பால்ராஜ், தீபன், விதுஷா ஆகியோருடன் கதைத்தபோது அவர்கள் தாக்குதலின் வெற்றி குறித்துப் பெருத்த நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை.

அரசியல்துறைப் பொறுப்பாளரான தமிழ்ச்செல்வன் இத்தகவலைத் தலைவரிடம் தெரிவித்தபோது, அவருக்கு உச்சமான கோபம் ஏற்பட்டதுடன் **“இந்த சண்டையை நான் வெண்டு காட்டுறன்” எனக் கூறித் தனது கையை மேசையில் குத்தினாராம்.**

அதன்பின் இயக்கத்திடம் இருந்த புதிய ரக மோட்டார் எறிகணைகள் சரமாரியாக இராணுவத்தினருக்கு எதிராகப்

பொழியப்பட்டதன் காரணமாகக் கிளிநொச்சி புலிகளின் வசமானது.

இந்தச் சம்பவத்தை ஒரு கூட்டத்தில் தமிழ்ச்செல்வன் அவர்களே நேரடியாக எம்மிடம் தெரிவித்திருந்தார்.

இந்நடவடிக்கையில் பெண் போராளிகள் உட்பட ஐநூறுக்கும் மேற்பட்ட போராளிகள் உயிர் இழந்திருந்தனர்.

கிளிநொச்சியிலிருந்து பின்வாங்கிய இராணுவத்தினர் அதிக தூரம் செல்லாமல் பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனம் அமைந்திருந்த இடத்தில் நிலைகொண்டிருந்தனர்.




1999 நடுப்பகுதியில் அரசியல்துறை மகளிர் தாக்குதலணி மன்னார் பிரதேசத்தின் பள்ளமடு சன்னார் பகுதியில் **லெப்.கேணல் தணிகைச்செல்வி** தலைமையில் நிலைகொண்டிருந்தது.

எதிர் பாராதவிதமாக அப்பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினரின் நடவடிக்கையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட போராளிகள் இழந்திருந்தார்.

அவர் யாழ்ப்பாணம் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பகாலச் சுதந்திரப் பறவைகள் அமைப்புடன் சேர்ந்து இயங்கியவர்.

1989இல் மணலாற்றுக் காட்டில் மகளிர்ப் படையணியின் நாலாவது பயிற்சி முகாமில் ஆயுதப் பயிற்சி எடுத்தவர்.

அரசியல்துறையில் வன்னி, யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களில் அரசியல் பணிசெய்து அரசியல்துறை மகளிர் பொறுப்பாளராகச் செயற்பட்டு அதன்பின் யாழ் செல்லும் படையணிப் பொறுப்பாளராகவும், அரசியல் துறை தாக்குதலணியின் பொறுப்பாளராகவும் செயற்பட்டவர்.

இவரது இழப்பின் பின்னர் தாக்குதலணியின் பொறுப்பாளராக லெப்.கேணல் தாரணி நியமிக்கப்பட்டார்.

அதுவரை அவர் செயற்பட்டு வந்த அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பணிக்கு நான் நியமிக்கப்பட்டேன்.

அரசியல்துறையின் கீழ் செயற்பட்டு வந்த பல மகளிர் பிரிவுகளின் நிர்வாகங்களை இணைத்துச் செயற்பட வேண்டி

யிருந்ததுடன் சமூகப் பெண்களுக்கான பல வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டியிருந்தது.

சமூகப் பெண்களின் வாழ்வில் கல்வி, பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தி அவர்களை வாழ்வில் ஒரு உயர்ந்த நிலையை எட்டச் செய்ய வேண்டும் என்கிற கனவு எனக்கு இருந்தது.

ஆனால் நிர்வாகப் பிரச்சனைகளைக் கையாள்வதும் இயக்கத்திற்கு ஆளணியைத் திரட்டுவதுமே நாங்கள் செய்ய வேண்டிய முக்கியப் பணிகளாக இருந்தன.



**தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

இதன் பின்னர் 1999 நவம்பர் 02ஆம் திகதி இயக்கத்தின் பலமான படையணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து '**ஜெயசிக்குறு**'இராணுவத்திற்கெதிரான '**ஓயாதஅலைகள்-03**' என்ற பாரிய எதிர்த் தாக்குதல் நடவடிக்கை புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

முத்தையன்கட்டு, சமளங்குளம், முள்ளிய வளை, தண்ணீரூற்று, கற்பூரப்புல்வெளி, கோடாலிக்கல், இத்திமடு ஆகிய பகுதிகளுக்கூடாகப் புலிகளின் அணிகள் களமிறக்கப்பட்டிருந்தன.

‘**வோட்டசெட்**’ நடவடிக்கை மூலமாக இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டிருந்த ‘**ஒட்டிச்சுட்டான்**’ பகுதியை உடைத்துக்கொண்டு முன்னேறிச் செல்வதே இதன் நோக்கமாயிருந்தது.

அந்தப் பகுதியில் இலங்கை கடற்படையினர் நிலைகொண்டிருந்தனர். இந்த நடவடிக்கையில் ஏற்கனவே கைப்பற்றுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்த பிரதேசங்களைவிடவும் அதிகமான பிரதேசங்களைப் புலிகள் கைப்பற்றியிருந்தனர்.

இதற்குப் பிரதான காரணம் புலிகளிடம் வந்து சேர்ந்திருந்த 122மி.மீ ஆட்லறி பீரங்கிகளின் எறிகணை வீச்சின் பலமாகும்.

1999 நவம்பர் 02ஆம் திகதி ஒட்டுச்சுட்டான் கற்சிலை மடுவில் ஆரம்பமான புலிகளின் தாக்குதலால் 07ஆம் திகதி ஓமந்தை பனிக்க நீராவிப் பகுதி வரையான நிலப்பரப்பு புலிகளால் வெற்றிகரமாகக் கைப்பற்றப்பட்டிருந்தது.

1997 மே மாதம் முதல் 1999 நவம்பர் வரையான காலப் பகுதியில் நடந்து முடிந்திருந்த ‘**ஜெயசிக்குறு**’ இராணுவ

நடவடிக்கையில் மட்டும் புலிகள் தரப்பில் 1500 போராளிகளும் 3000 இராணுவத்தினரும் உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்திருந்தனர்.

அதுவேளை தமது தரப்பில் 1350 பேர் உயிரிழந்ததாகவும் 4000 பேர் காயமடைந்ததாகவும் புலிகள் தரப்பில் 3614 பேர் கொல்லப்பட்டதுடன் 1899 பேர் காயமடைந்ததாகவும் இலங்கை இராணுவத்தினர் அறிவித்திருந்தனர்.

ஆக மொத்தத்தில் இலங்கை தேசத்தின் ஏழைத் தாய்மாரின் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் ஏ9 வீதியிலும் வன்னிக் காடுகளிலும் யாருக்கும் நன்மை பயக்காத யுத்தமொன்றில் தமதுயிரை இழந்திருந்தனர்.

**இக்காலகட்டத்தில் தலைவர் பிரபாகரன் புதிய பல படையணிகளை உருவாக்கியிருந்தார்.**

ஆனாலும் அந்த நேரத்தில் வன்னியிலிருந்த தமிழ் மக்களின் பிள்ளைகள் அதற்குத் தேவையான ஆளணியை ஈடு செய்வதற்குப் போதாமல் இருந்தார்கள்.

ஓயாத அலைகள் சமருக்குப் பின்பு தாக்குதல் படையணிகளுக்குச் சற்று ஓய்வு கொடுக்கப்பட்டது.

மாலதி படையணிப் போராளிகளுக்கும் அலம்பில் கடற்கரையில் மூன்று நாட்கள் விசேட ஓய்வு கொடுக்கப்பட்டது. சிறப்பு உணவு ஏற்பாடு களுடன், கலை நிகழ்வுகள், கடற் குளிப்புகள் எனக் கழிந்த உல்லாசப் பொழுதுகள் அவை.

தலைவர் நாளாந்தம் வருகை தந்து போராளிகளுடன் உரையாடிச் செல்வார். அந்த நாட்களில் தளபதி விதுஷாவுடன் நானும் அங்கு நின்றிருந்தேன்.

கடந்த சமர்களில் சிறப்பாகச் செயற்பட்ட போராளிகளுக்குத் தலைவர் பல பரிசுகளையும் வழங்கியிருந்தார். பரந்தன் சண்டையில் தனது ஆர்.பி.ஜீ ஆயுதத்தால் இராணுவத்தினரின் டாங்கியொன்றைத் தாக்கியழித்த பெண் போராளிக்குத் தனது தூர நோக்குக் கருவியைத் தலைவர் தனிப்பட்ட பரிசாக வழங்கியிருந்தார்.

அடுத்தகட்ட பாரிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றுக்கான தயார்ப்படுத்தலாகவே இந்த ஓய்வு அமைந்திருந்தது என்பது அப்போது எம்மில் எவருக்கும் தெரியாதிருந்தது.

2000 மார்ச் 26ஆம் திகதி குடாரப்பு தரையிறக்கத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆனையிறவை மேவி இத்தாவில் பகுதியில் ஒரு பெட்டி வடிவிலான தாக்குதல் வியூகம் தளபதி பால்ராஜ் தலைமையில் புலிகளால் அமைக்கப்பட்டது.



**இத்தாக்குதலில் மாலதி படையணி ஆனையிறவைப் பார்த்தபடியும், மேஜர் சோதியா படையணி சாவகச் சேரியைப் பார்த்தபடியும், கூடவே சாள்ஸ் அன்ரனி படையணியும் நிலைகளை அமைத்திருந்தனர்.**

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ9 வீதியூடாக ஆனையிறவுக்கு வரும் விநியோகத்தைத் தடைசெய்வதே இதனுடைய நோக்கமாக இருந்தது.

வடமராட்சி கிழக்குத் தாளையடி வீதி கைப்பற்றப் பட்டதன் பின்னர் இத்தாவில் பகுதிக்கு என்னை வரும்படி தளபதி விதுஷா அறிவித்திருந்தார்.

நானும் சில பெண் போராளிகளும் கண்டாவளை கொம்படி வழியாக ஆனையிறவு நீரேரியைக் கடந்துசென்று மீண்டும் தொண்டைமானாறு நீரேரியைக் கடந்துசென்றுகொண்டிருந்தோம்.

இக்கடல் நீரேரிகளைக் கடப்பதற்காகக் கடற்புலிகள் சாதாரண ‘புளுஸ்ரார்’ படகுகளையும் குறைந்த அளவு குதிரைவலுச் சக்திகொண்ட இயந்திரங்களையுமே பயன்படுத்தினர்.

**தொண்டைமானாறு கடல் நீரேரியை உயிருடன் கடப்பதென்பத அதிர்ஷ்டமாகவே கருதப்பட்டது.**

மிகவும் குறுகிய பகுதியில் புலிகளின் நிலைகள் அமைந்திருந்த காரணத்தால் இராணுவத்தினரின் எறிகணைகள் இடைவெளியில்லாது வந்து வீழ்ந்து கொண்டிருந்தன.

எமது படகுக்கு முன்பாக வேறொரு படகில் கனரக ஆயுத அணியொன்று போய்க்கொண்டிருந்தது.

துல்லியமாக விழுந்த எறிகணையில் அந்தப் படகில் சென்ற போராளிகள் எனது கண்களுக்கு முன்பாகவே படகுடன் எரிந்து கடலுக்குள் அமிழ்ந்துபோன அதிர்ச்சி நிறைந்த துயரம் நடந்தேறியது.

ஒருவிதமாகத் தப்பிப் பிழைத்துத் தளபதி விதுஷாவின் நிலையை அடைந்தபோது, தற்காலிகமாக அமைக்கப்பட்ட சாதாரணப் பதுங்குக் குழியின் மீது தடிகளைப் போட்டு மண் மூடைகள் அடுக்கப்பட்டிருந்தன.

உயர் அலைவரிசை கொண்ட தொலைத் தொடர்புக் கருவியில் அவரது குரல் ஒலித்த மறுகணமே அந்த இடம் அதிர்ந்து மண்மூடைகளும் மரக் குற்றிகளும் எழும்பிப் பறந்தன.

கதிரையின் நுனியில் அமர்ந்துகொண்டு பார்க்கும் அதி விறுவிறுப்பூட்டும் ஆங்கிலத் திரைப்படத்தின் திடுக்கிடும் வேகக் காட்சி மாற்றங்களைப்போல இத்தாவில் சமர்க் களம் கொடிய போரின் பயங்கரத் தரிசனமாக இருந்தது.



**2000.04.22ஆம் திகதி ஆனையிறவு புலிகளால் கைப்பற்றப்பட்டபோது இயக்கத்தின் பல வருடக் கனவு அன்று நனவாகியது. அந்த உப்புக் கடல் நீரேரியில் நடந்த சமர் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்திருந்தது.**

ஆனையிறவு கைப்பற்றப்பட்டதன் பின்பு யாழ்ப்பாணத்திற் கான பாதை திறக்கப்பட்டுவிட்டதாகவே இயக்கம் கருதியது.

அடுத்ததாக யாழ்பாணத்தையும் கைப்பற்றிவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் பூநகரி சங்குப்பிட்டிப் பாதையூடாக ஒரு பெரும் நகர்வு மேற்கொள்ளப்பட்டது.

புலிகளின் நீண்டதூர எறிகணை வீச்சுப் பலம் மீண்டும் முழுமையாகப் பிரயோகிக்கப்பட்டது.

பூநகரி கல்முனையில் நிலைப்படுத்தப்பட்ட பீரங்கிகள் தென்மராட்சி இராணுவ நிலைகள் மீது எறிகணை மழை பொழிந்தது. இராணுவத்தினரும் பயங்கரமான எதிர்தாக்குதலைத் தொடுத்தனர்.

புலிகளின் தாக்குதலணிகள் தென்மராட்சி மறவன்புலவு வீதியைக் கைப்பற்றியதுடன் சாவகச் சேரியையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தன.

அரசியல்துறைப் பொறுப்பாளர் எனக்கு அவசரமான வேலை ஒன்றினைப் பணித்திருந்தார்.

உடனடியாகப் போராளிகளைக் கைதடி முதியோர் இல்லத்திற்கு அனுப்பி அங்கிருக்கும் முதியோர்களை மீட்டு வன்னிக்குக் கொண்டு வரும்படி அறிவித்திருந்தார்.

இந்தப் பணியில் ஆண் போராளிகளும் இணைக்கப்பட்டிருந்தனர். நான் போராளிகளைத் தயார்படுத்திச் சங்குப்பிட்டிப் பாதையூடாக அனுப்பிக்கொண்டிருந்தேன்.

வான் படையினரின் தாக்குதல்கள் அகோரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. பூநகரியின் மணல் வீதியில் எனது மோட்டார் சைக்கிளை ஓட்ட முடியாமல் ஒரு காலை ஊன்றியபடி முழுப் பலத்துடன் தள்ளிக் கொண்டிருந்தேன்.

எனக்குப் பின்பாக உழவு இயந்திரம் ஒன்று வேகமாக வரும் சத்தம் கேட்டது. சற்று விலகி இடம் கொடுக்க முயற்சித்தபோது மோட்டார் சைக்கிள் சில்லு உருள மறுத்ததால் வீதிக்கு குறுக்கே மோட்டார் ச மீது எழும்பி நிற்பது தெரிந்தது.

கட்டுப்பாட்டை இழந்திருந்த உழவு இயந்திரத்தின் முன்சக்கரம் எனது இடது தோள் பகுதியில் உதைத்து ஏறி நின்றது.

என்னையும் எனது மோட்டார் சைக்கிளையும் அந்த உழவு இயந்திரத்தில் ஏற்றி வந்து எமது பூநகரி முகாமில் அவர்கள் விட்டுச் சென்றனர்.

அந்த உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்றப்பட்டிருந்த உயிரிழந்திருந்த போராளிகளின் உடல்களின் நடுவே உயிர்க் கொல்லும் வலியுடன் நானும் படுத்திருந்தேன்.

சில வலி நிவாரணி மருந்துகளுடன் பண்டேஜால் கையைக் கட்டிக்கொண்டு சங்குப்பிட்டிப் பாதையூடாகக் கைதடி முதியோர் இல்லத்திற்குச் சென்றேன்.

அங்கு ஏற்கனவே சென்றிருந்த எமது போராளிகள் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கண்கொண்டு பார்க்க முடியாத அவலம் அங்கு நிகழ்ந்தேறியிருந்தது.

சுயமாக இயங்க முடியாத முதியோர்கள் பலர் படுத்த படுக்கையிலும், அந்தக் கட்டடத்தின் பல பகுதிகளிலும் இறந்து கிடந்தனர்.

பலர் காயப்பட்டிருந்தனர்; எஞ்சியிருந்தவர்கள் அச்சத்தால் நடுங்கியவாறு அடுப்புப் புகடுகளுக்குக் கீழும் அறைகளுக்குள்ளும் ஒளிந்திருந்தனர், இருந்த இடத்தில் மலசலம் கழித்திருந்த நிலையில்.

இரத்த வாடையும் உயிரற்றுப்போன சடலங்களிலிருந்து எழுந்த நாற்றமும் ஒன்றாகச் சேர்ந்து முகத்தில் அறைந்தன. இரு தரப்பினருக்கும் மோதல்கள் தொடங்கியவுடன் சாவகச் சேரி, கைதடிப் பகுதி மக்கள் போட்டது போட்டபடிக் கிடக்க வலிகாமப் பகுதியை நோக்கி ஓடிச்சென்றுவிட்டிருந்தனர்.

சாந்தியகத்தின் பராமரிப்பாளர்களும் பாதுகாப்பு தேடிச் சென்றுவிட்ட நிலையில் வயோதிபர்கள் கைவிடப்பட்டிருந்தனர்.

அரசியல் துறையின் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், படகுகளின் மூலமாக இம்முதியவர்களை வன்னிக்குக் கொண்டுவந்து ஆனைவிழுந்தானில் அமைந்திருக்கும் 'மகாதேவ ஆச்சிரமத்தில்' சேர்த்திருந்தனர்.

நாவற்குழி சந்தியைக் கடந்து அரியாலை வீதி பிரியும் இடத்தில் மாலதி படையணியின் நிலைகள் அமைந்திருந்தன.

இந்தத் தாக்குதலின்போது மோதல்களுக்குள் அகப்பட்டு மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தனர். சாவகச் சேரி நகரம் இரு தரப்பினரதும் எறிகணை வீச்சினால் நொறுங்கிப் போயிருந்தது.

கடைகள் உடைந்து தகர்ந்துபோய்ப் பொருட்கள் வீதியில் சிதறிக் கிடந்தன. மக்களுக்கான விடுதலைப் போராட்டம் ஏன் இத்தகைய அழிவுகளை மக்களுக்கு ஏற்படுத்துகிறது என்று இதயத்தில் எழுந்த கேள்வியைச் சிந்தனைக்கு எடுத்துச்செல்ல முடியாதபடி வெற்றி மயக்கம் விடுதலைப் புலிகள் அனைவரையுமே ஆட்கொண் டிருந்தது.

**சாவகச் சேரிச் சமரில் 25க்கு மேற்பட்ட எல்லைப் படை போராளிகள் உயிரிழந்திருந்தனர்.**

ஒரே கிராமத்தைச் சேர்ந்த உறவினர்களான அவர்களுடைய இழப்பானது மக்கள் மத்தியில் மிகுந்த கோபத்தையும் ஆத்திரத்தையும் சம்பவங்களும் நடைபெற்றிருந்தன.

இயக்கம் எதிர்பார்த்த வகையில் யாழ்ப்பாணத்தை நோக்கித் தொடர்ந்து முன்னேறிச் செல்ல முடியாதிருந்த காரணத்தால் படையணிகள் மீண்டும் வன்னிக்குப் பின் நகர்த்தப்பட்டன.

2001க்குப் பின்னர் கிளிநொச்சிநகரம் மீண்டும் செழிப்படையத் தொடங்கியது. விடுதலைப் புலிகளும் தமது அரசியல் மற்றும் நிர்வாக அலகுகளைக் கிளிநொச்சிக்கு நகர்த்தத் தொடங்கினார்கள்.

ஆயினும் புதுக்குடியிருப்புப் பிரதேசப் பாதுகாப்பில் இருந்த உறுதியான அக்கறை கிளிநொச்சியின் பாதுகாப்பில் புலிகளுக்கு ஆரம்பத்தில் இருக்கவில்லை.

இயக்கத்தின் தலைமைச் செயலகம் உட்பட பல இராணுவக் கட்டமைப்புகள் தொடர்ந்து புதுக்குடியிருப்புப் பகுதியிலேயே அமைந்திருந்தன.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் அரசியல் துறையின் பிரதான செயலகம், அரசியல் கல்லூரி என்பன அமைக்கப்பட்டன. அதே வளாகத்தில் அரசியல்துறை மகளிர் பிரிவு நடுவப் பணியகத்தையும் அமைத்துக்கொண்டோம்.

பகிரங்கமாக அறிவிக்கப்படாமலேயே ஒரு மூன்றாந் தரப்பினர் ஊடாக இரகசியமான முறையில் புலிகளுக்கும் அரசாங்கத்தினருக்குமிடையே சமாதான பேச்சுவார்த்தை ஒன்றுக்கான ஆரம்ப கட்ட வேலைத் திட்டங்கள் இயக்கத்தினுள்ளே ஆரம்பிக்கப்பட்டிருப்பதை உணரக்கூடியதாக இருந்தது.

ஆனாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் புலிகளிடம் இருந்த இராணுவத் தாக்குதல் பலத்தைக்கொண்டு யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றிய பின்னர்

பேச்சுவார்த்தைக்குப் போவதையே புலிகளின் தலைமை விரும்பியிருந்தது.

அதேநேரம் மீண்டும் ஆனையிறவைக் கைப்பற்றி யாழ்ப்பாணத்திற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரே சமாதான பேச்சுவார்த்தைக்கு வருவதையே இலங்கையரசும் விரும்பியிருக்க வேண்டும்.

இதனால் யாழ்ப்பாணத்திலுள்ள முகமாலை யுத்தக் களமுனை தொடர்ந்து நெருப்பு முனையாகவே கனன்று கொண்டிருந்தது.

**2001 (ஹீனி கல) இராணுவ நடவடிக்கை ஒன்று இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.** அந்தத் தீச்சுவாலை நடவடிக்கையைப் புலிகள் வெற்றிகரமாக முறியடித் திருந்தனர். இதன் பின்னர் கிளிநொச்சி நகரம் புலிகளின் அரசியல் தலைநகரமாகத் துரிதமாகக் கட்டியெழுப்பப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான உயிர்களின் குருதியில் நனைந்த ஏ9 வீதி 2002 திறக்கப்பட்டபோது புலிகள் இயக்கம் இராணுவ

பலத்தின் உச்சத்தில் இருந்தது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

**அப்பலத்தை அரசியல் மற்றும் ராஜதந்திர ரீதியான பலமாக மாற்றியமைக்கும் தந்திரோபாயத்தில் புலிகளின் தலைமைக்கு ஏற்பட்ட படுதோல்வி**, பின்னொரு நாளில் முள்ளிவாய்க்கால் வீதியை மக்கள் தாமாகவே தள்ளித் திறந்துகொண்டு வெளியேறிச் செல்லக் காரணமாய் அமைந்தது.

## போருக்குள் பிறந்தேன்!

அகன்று விரிந்த வயல்வெளிகளும், அவற்றிடையே நெளிந்தோடும் வாய்க்கால்களும், கிரவல்மண் பாதைகளும், பூவரசு வேலிகளும், நான் பிறந்த ஊரான பரந்தனின் எழில் கொஞ்சும் அழகின் கோலம்.

பிரதான நெடுஞ்சாலையாகிய ஏ9 வீதியில் வந்திணையும் பூநகரி-மன்னார் வீதி, முல்லைத்தீவு வீதி ஆகிய முக்கிய இரு வீதிகளும் சந்திக்கும் அழகிய சிறு கிராமம்தான் பரந்தன்.

1936ஆம் ஆண்டு முதல் விவசாயம் செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மக்களே காலப்போக்கில் நிரந்தரக் குடிகள் ஆகியிருந்தார்கள். எந்தவிதமான படாடோபங்களுமற்ற எளிமையால் நிறைந்திருந்தது அவர்களுடைய வாழ்வு.

பரந்தனிலிருந்து தெற்கே ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் கிளிநொச்சி நகரமும் வடக்கே ஆறு கிலோ மீற்றர் தூரத்தில் ஆனையிறவு உப்புக்கடல் நீரேரியும் அமைந்திருக்கிறது.

முன்னைய காலங்களில் வன்னியிலிருந்து யானைத் தந்தங்கள், காட்டு மரங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கும் நோக்குடன் 1760ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் ஆனையிறவில் ஒரு காவல் நிலையம் அமைக்கப்பட்டதாகவும் பின்னர் 1776இல் ஒல்லாந்தரும்,

தொடர்ந்து பிரித்தானியர்களும், 1952இலிருந்து இலங்கை பொலிசாரும் அங்குச் சோதனைச் சாவடி ஒன்றை அமைத்திருந்தனர்.



ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அமைவிடங்களாலும் இலங்கையில் பேர்பெற்ற ஊராக இருந்தது பரந்தன்.

ஆயுதப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்தே பரந்தன் முக்கியமானதோர் போர் மையமாகவும் மாறத் தொடங்கியிருந்தது. இதனால் அடிக்கடி கூடு கலையும்

குருவிகளைப் போலப் பரந்தன் மக்களின் வாழ்வும் சிதையத் தொடங்கியிருந்தது.

அப்படியானவொரு காலகட்டத்தில் தான் நானும் பிறந்திருந்தேன். எனது தந்தையார் கந்தையா சுப்பிரமணியம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தாயார் சின்னம்மா பரந்தனிலேயே பிறந்து வளர்ந்தவர். தாயாரின் பதினேழாவது வயதில் மூத்த பெண் குழந்தையாக நான் பிறந்தேன்.



**எனது தாய்வழிப் பாட்டனார் சுவாமிநாதன் ஓர் அனுபவம் வாய்ந்த விவசாயி. எனது பாட்டி லட்சுமி தீவிரமான**

**அம்மன் பக்தையாகையால் எனக்கு சிவகாமி எனப் பெயரிட்டதாகப் பெற்றோர்கள் கூறியிருந்தார்கள்.**

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முகிழத் தொடங்கிய காலகட்டத்தில் பிறந்த காரணத்தால் எனது குழந்தைப் பருவமும் அதன் தாக்கங்களுடனேயே கடந்து சென்றது.

எனது தந்தை அமைதியும் அன்பும் நிறைந்த எளிமையான மனிதர். அதிகமான வாசிப்புப் பழக்கம் கொண்டவர். சரித்திரங்கள், புராணக் கதைகள், தொடக்கம் அரசியல் சித்தாந்தங்கள்வரை வாசிப்பார். தான் வாசித்த விடயங்களைக் குழந்தைக் கதைகளாக மாற்றி இரவு நேரங்களில் எனக்குச் சொல்லித் தருவார்.

எனது தாயாருடைய மிக இளம் வயதிலேயே நான் பிறந்துவிட்ட காரணத்தாலும் எனக்கடுத்தடுத்துச் சகோதரர்கள் இருந்த காரணத்தாலும் நான் அதிகமாக எனது பாட்டி வீட்டிலேயே செல்லப் பிள்ளையாக உலா வந்தேன்.

குடும்பத்தில் மூத்த பேரப் பிள்ளையான என்மீது அனைவரும் அன்பைச் சொரிந்தனர். எனது தாயாரின் ஒரே

சகோதரனாகிய எனது மாமா உயர்தரம் வரை படித்திருந்தும் எந்த அரசு வேலைகளையும் தேடிப் போகாமல் வீடும் விவசாயமுமாகவே வாழ்ந்து வந்தார்.

எனது தாத்தாவின் தம்பி சேதுபதி திருமணம் செய்துகொள்ளாமல் தனது அண்ணன் குடும்பத்துடனே வாழ்ந்து வந்தார். கடின உழைப்பாளியும் கண்டிப்பும் நிறைந்தவரான அவரே எமது பெருத்த குடும்பத்தின் நிர்வாகியாகவும் இருந்தார்.

அதிகம் கற்றறிந்திருக்கவில்லையானாலும் அவர்களது பண்பும் ஒழுக்கமும் நிறைந்த வாழ்க்கை முறை இப்போதும் எனக்கு வியப்பானதாகவே இருக்கிறது.

குழந்தைகளான எம்மைத் தமது உயிராகக் கருதி வளர்த்தெடுத்தார்கள். எனது பெற்றோர்களாலும் பெரியவர்களாலும் நான் தண்டிக்கப்பட்டதோ அல்லது அவர்களுடைய வாயிலிருந்து ஒரு கடின வார்த்தையைக் கேட்டதோ என்றுமே கிடையாது.

**‘ஜல் ஜல்’** எனச் சலங்கை ஒலியெழுப்பும் இரட்டை எருதுகள் பிணைக்கப்பட்ட மாட்டு வண்டியில், வைக்கோல் பரவி அதற்குமேல் பாய் விரித்து அமர்ந்துகொண்டு குடும்பமாகக் கரடிப்போக்குச் சந்தியில் இருந்த சினிமா தியேட்டர்களான ஈஸ்வரன் அல்லது பராசக்திக்குப் போய், அம்மம்மாவுக்குப் பிடித்த சிவாஜி அல்லது எம்.ஜி.ஆர் படங்களைப் பாதிவரை பார்த்து மீதியில் பெரியவர்களின் மடிகளில் படுத்துறங்கியபடி வீடு வந்துசேர்ந்த ஞாபகங்கள் வாழ்வின் இனிமையான தருணங்கள்.

அன்பான அவர்களுடைய வழிநடத்தல் சிறிய வயதிலிருந்தே எனக்குள் ஒருவிதச் சுதந்திரமான மனப்பாங்கை வளர்த்திருந்தது.

சாதாரண விவசாயக் குடும்பத்துப் பெண்ணாக இருந்தபோதும் என்னை எதற்காகவும் அவர்கள் கட்டுப்படுத்தித் தமது கருத்துக்களையோ அல்லது பழக்கவழக்கங்களையோ திணித்தது கிடையாது.

மாறாக நான் மிக நன்றாகப் படித்து உயர் நிலையை அடைய வேண்டுமென ஊக்கப்படுத்தினார்கள். அதுவே அவர்களின் கனவாகவும் இருந்தது.

பரந்தன் இந்து மகா வித்தியாலயம்தான் ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரம்வரை நான் படித்த பாடசாலை. நான் சாதாரண தரம் படிக்கும் காலமளவும் புகையிரதப் போக்குவரத்து நடைபெற்று வந்த காரணத்தால் பெருமளவு யாழ்ப்பாண ஆசிரியர்களும் எமது பிரதேச ஆசிரியர்களும் எமது பாடசாலையில் கற்பித்து வந்தனர்.

தமது மாணவர்களைத் தமது சொந்தப் பிள்ளைகளைப் போலக் கவனமெடுத்து வழிநடத்திய சிறந்த பல ஆசிரியர்கள் எனது பாடசாலையில் இருந்தார்கள்.

வாழ்க்கையைப் பற்றிய உயர்ந்த கனவுகளைத் தமது மாணவர்களுக்குள்ளே அவர்கள் வளர்த்தார்கள். நான் படித்துப் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன்.

ஆனால் நாட்டில் கருக்கொண்டிருந்த போர்ச் சூறாவளி எமது நியாயமான கனவுகளை அடித்துச் சென்றுவிடும் என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை.

எனக்கு விபரம் தெரியத் தொடங்கிய பருவத்திலிருந்தே எனது ஊரின் இயல்பு வாழ்க்கை அடிக்கடி குழம்பத் தொடங்கியது. வீதியில் அடிக்கடி துப்பாக்கிச் சத்தங்கள் கேட்பது வழமையான நிகழ்வாக மாறியது.

யாரோ சுட்டதாகவும் யார் யாரோ செத்துவிட்டதாகவும் பெரியவர்கள் இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். சில நாட்களில் பாடசாலை நேரங்களிலும் இப்படியான அசம்பாவிதங்கள் நடைபெறுவதுண்டு. அப்படியான சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் வந்து தமது பிள்ளைகளை இடைநடுவில் வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள்.

பாடசாலை முடிந்துவிட்டதாக அறிவித்துவிட்டு ஆசிரியர்களும் புறப்பட்டுவிடுவார்கள். கடைகள் மூடப்பட்டு, வீதிகள் மனித நடமாட்டமற்று, எந்த நேரம் என்ன நடக்குமோ

என்ற உயிரச்சத்தில் எத்தனையோ நாட்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்திருக்கிறோம்.

ஏன் எதற்காக இப்படியெல்லாம் நடக்கிறது எனப் புரியாத அந்தப் பருவத்திலேயே போர் எமது பிஞ்சு முதுகுகளில் பெருஞ்சுமையாகக் கனக்கத் தொடங்கிவிட்டது.

நான் ஆறாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது மாலை நேர வகுப்பொன்றிற்காக எனது அயல் கிராமமான குமரபுரம் போயிருந்தேன். அங்கேதான் நான் படித்துவந்த பாடசாலையும் இருந்தது.

வகுப்பு தொடங்கிய சற்று நேரத்தில் பரந்தன் சந்திப் பக்கமாகப் பலத்த வெடிச் சத்தங்கள் கேட்டன. உடனே ஆசிரியர் வகுப்பை நிறுத்திவிட்டார். அனைவருக்கும் மிகப் பதற்றமாயிருந்தது. சில மாணவர்கள் அழத் தொடங்கினார்கள்.



தமிழினி சிறுமியாக

வெடிச் சத்தம் சற்று அடங்கியதும் ஆசிரியர் எம்மை வேகமாக வீடுகளுக்கு ஓடிச் செல்லும்படி அனுப்பி வைத்தார். அச்சமும் அழுகையுமாக நான் வீடு வந்து சேர்ந்தபோதுதான் அந்த வெடிச் சத்தம் எனது வீட்டு முற்றத்தில் தீர்க்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

அயலவர்கள் எமது முற்றத்தில் கூடியிருந்து அதிர்ச்சியில் உறைந்துபோயிருந்தனர். ஏ9 வீதிக்கு அருகில்தான் எனது வீடு இருந்தது.

எமது வீட்டு முன் மதில் பகுதியில் ஏதோ ஒரு இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் துண்டுப்

பிரசுரம் ஒட்டிக்கொண்டிருந்தபோது, சிவில் உடையணிந்து வாகனத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் அவர்களை நோக்கிச் சரமாரியாகச் சுடத் தொடங்கவும், அந்த இளைஞர்கள் மதில் பாய்ந்து எமது வீட்டைநோக்கி ஓடிச் சென்றுள்ளார்கள்.

**ஒரு இளைஞனுக்கு எமது வீட்டு முற்றத்தில் வைத்து அவனது தலையில் துப்பாக்கிச்சூடு பட்டிருக்கிறது. அவன் அந்த இடத்திலேயே உயிரிழந்துவிட்ட நிலையில் மற்றைய இளைஞன் எமது வீட்டிற்குப் பின்புறமாக அமைந்திருந்த புகையிரதப் பாதையால் ஓடித் தப்பிவிட்டார்.**

இந்தச் சம்பவங்கள் நடைபெறும்போது வீட்டு விறாந்தையில் எனது அம்மம்மா அரிசி புடைத்துக் கொண்டிருந்திருக்கிறார். எதிர்பாராத இந்த நிகழ்வுகளால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் பிரமை பிடித்தவராகச் சில நாட்கள் எதுவுமே பேசாமல் நிலைகுத்திப் போயிருந்த அவரது பார்வை எமக்கு அச்சமூட்டியது.

தனது கண்களுக்கு முன்பாக அந்த உயிர் துடிதுடித்து இறந்து போனதாகவும், அந்தச் சடலம் இராணுவத்தினரால்இழுத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் கூறினார்.

எனது பாடசாலையில் பெரிய வகுப்பு மாணவர்களுக்கு அடிக்கடி இயக்கப் பிரதிநிதிகள் கூட்டங்களை நடாத்துவது வழக்கம். ஆனால் அந்தக் கூட்டங்களில் எனது வகுப்புப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள்.

நாங்கள் சத்தம் போட்டுக்கொண்டிருப்போம் எனக் காரணம் காட்டி எம்மை ஒரு பொருட்டாகவே கணக்கெடுக்காமல் வெளியே துரத்தி விடுவார்கள்.

ஆனால் அங்கே என்ன நடைபெறுகிறது எனப் பார்ப்பதற்கு எங்களுக்கிருந்த ஆவல் காரணமாக வீட்டுக்கும் போகாமல் பாதிச் சுவரில் தொங்கியபடி எட்டிப் பார்த்துக் கொண்டிருப்போம்.



**ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு புதிய பெயர்களைக் கொண்ட இயக்கத்தின் அண்ணன்மார் வந்து கூட்டம் வைப்பார்கள்.**கோபத்தோடு ஆக்ரோசமாக உரையாற்றுவார்கள். எமது பாடசாலையின் பெரிய வகுப்பு அண்ணன்மார், அக்காமாரும் அவர்களிடம் கேள்விகள் கேட்பார்கள்.

சில நாட்கள் பெரிய சத்தமாக வாதாட்டமும் நடக்கும். இவையெல்லாம் எமக்குப் புரியாவிட்டாலும் அவர்கள் கொண்டுவரும் ஆயுதங்களும் அவர்களுடைய சிந்தனை வயப்பட்ட முகங்களும் மனதின் ஆழத்தில் பதிந்துபோயின.

**அதற்குப் பின்னரான காலப் பகுதிகளில் எமது பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த பல பெரிய வகுப்பு மாணவர்கள் காணாமல் போகத் தொடங்கினார்கள்.**

**'அவர் அந்த இயக்கத்தின் பயிற்சிக்குப் போய்விட்டார், இவர் இந்த இயக்கத்தின் பயிற்சிக்குப் போய்விட்டார்'** என இரகசியமாக வகுப்பறைகளில் மாணவர்கள் பேசிக்கொண்டார்கள்.

ஊருக்குள் அப்படிப் போனவர்களின் வீடுகளில் உறவுக்காரர்கள் கூடியிருந்து செத்தவீடு போல ஒப்பாரி வைத்து அழுத சம்பவங்களும் நடக்கத் தொடங்கியிருந்தன.

எமது பாடசாலையின் உயரமான தண்ணீர் தாங்கியில் இயக்கச் சுவரொட்டிகள் ஒட்டப்படுவது வழக்கம். பல இயக்கங்களாகப் பிரிந்திருந்த மாணவர்களுக்கிடையே போட்டிகள் உருவாகியதன் காரணமாக நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள் கூட முரண்பட்டுப் பிரிந்து நின்றார்கள்.

அவர்களிடையே கலகங்களும் சண்டைகளும் உருவாயின. இயக்கங்களில் இணைந்து கொண்டவர்களில் ஒரு சிலர் பயிற்சிகள் முடித்து ஊருக்கு வந்தபோது அவர்களின் தோற்றங்கள் முற்றிலும் மாறியிருந்தன.

ஊர்ப் பெரியவர்கள்கூட மதித்து நடக்குமளவுக்கு அவர்களுடைய சமூக மதிப்பு கூடியிருந்தது. "நீங்கள் நல்லா படிச்சு முன்னுக்கு வரவேணுமெண்டதுக்காகத்தான் நாங்கள் போராடப் போயிருக்கிறம்.

நல்லாப் படியுங்கோ" எனச் சிறிய வகுப்பு மாணவர்களான எமக்குப் புத்திமதிகள் கூறினார்கள்.



**சினிமாவில் வரும் கதாநாயகர்களைவிட ஆயுதங்களோடு வீதியில் நடமாடித் திரிந்த அந்த இளைஞர்களின் மீதான ஈர்ப்பு இளைஞர் யுவதிகளுக்கு அதிகமாயிருந்தது.**

அவர்களைப் பார்ப்பதும், அவர்களோடு பழகுவதும் மற்றவர்கள் மத்தியில் ஒரு மதிப்பை ஏற்படுத்துவதாக இருந்தது. அவர்களும் வீட்டுப் பிள்ளைகளைப் போலவே மக்களுடன் 'அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சி எனக் கலந்து உறவாடினார்கள். கிளிநொச்சி பொலீஸ் நிலையம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டிருந்தது.

1986ஆம் ஆண்டாக இருக்க வேண்டும். ஒரு நாள் நள்ளிரவில் அந்த முகாம் ஒரு இயக்கத்தால் தாக்கப்பட்டது.

நெருப்பு வெளிச்சம் பகல்போல அந்த நள்ளிரவிலும் பரந்தன் வரைக்கும் விசாலித்து எழும்பியது. கிளிநொச்சி நகரத்தை அண்டியிருந்த ஊர்கள் முழுவதும் உறக்கம் கலைந்து துடித்தெழுந்தன.

உலங்கு வானூர்தி வட்டமடித்தபடி தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தது.

அறுவடை செய்யப்பட்டிருந்த வயல்களின் அடிக்கட்டைகள் எமது கால்களைக் குத்திக் கிழிப்பதையும் பொருட்படுத்தாது, நடுச் சாமத்தில் உயிரைக் காப்பதற்காகக் குடும்பங்களாக நாம் ஓடினோம்.

கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்தும் இராணுவத்தினர் பலமாக நிலைகொள்ளத் தொடங்கினர். அங்கிருந்து வெளியேறிவரும் படையினர் மீது இயக்கப் போராளிகளால் எதிர்த் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தக் காலத்தில் ஏ9 வீதிக்கு அருகாக இருந்த எமது குடும்பம் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தது.

இராணுவத்தினர் வருகிறார்கள் என்ற செய்தி வந்ததுமே போட்டது போட்டபடி கிடக்க வயல் வெளிகளுக்கூடாக ஓடத் தொடங்கிவிடுவோம்.

மாலை நேரமாகி வெடிச் சத்தங்கள் ஓய்ந்த பின்னர்தான் வீடுகளுக்குத் திரும்பி வரமுடியும். அதுவரைக்கும் பிள்ளைகளின் பசியைப் போக்கப் பெரியவர்கள் படாதபாடு படுவார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் நாங்கள் புத்தகப் பைகளோடு ஓடிக்கொண்டிருப்போம்.

எமது சின்னத் தாத்தா, வீட்டிலே இருக்கிற உணவுப் பொருட்களைத் தூக்கிச் சுமந்துகொண்டு வந்துகொண்டிருப்பார். எனக்குக் கொஞ்சம் விபரம் தெரியக்கூடிய வயதாகியிருந்தபடியால் தொடர்ந்தும் இப்படி நிம்மதியின்றி ஓடித் திரிவது வெறுப்பாக இருந்தது.

கிளிநொச்சியிலிருந்து பரந்தனை நோக்கி முதன்முதலாக இராணுவத்தினர் எறிகணைகளை வீசத் தொடங்கியிருந்தார்கள். ஒரு நாள் மதிய நேரம் எமது சின்னத் தாத்தா காலையில் மேய்ச்சலுக்குக் கட்டிய

மாடுகளுக்குத் தண்ணீர் வைப்பதற்காக வயல்பக்கம் போயிருந்தார்.

திடீரென ஓரிரண்டு எறிகணைகள் அவர் நின்ற பக்கமாக வெடிக்கும் சத்தம் கேட்டது. ஒரே புகை மண்டலம். வீட்டின் ஏனையவர்கள் அலறியடித்துக்கொண்டு ஓடிச்சென்றபோது சால்வையினால் வயிற்றை பொத்திப்பிடித்தவாறு தள்ளாடியபடி தாத்தா நடந்து வந்துகொண்டிருந்தார்.

எறிகணையின் ஒரு சிதறல் துண்டு அவருடைய வயிற்றைக் கிழித்துச் சென்றிருந்தது. இதனால் குடல்பகுதி சற்று வெளியே வந்துவிட்டிருந்தது.

எனது மாமாவிடம் சொந்தமாகக் கார் இருந்தும்கூட அவரை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல முடியாதபடி இலங்கை வான்படையினரின் உலங்கு வானூர்தி ஒன்று பரந்தன் பகுதியை வட்டமடித்துத் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தது.



**உண்மையாக அன்றைய நாள் நான் மிகவும் ஆத்திரமும் கோபமுமடைந்து அழுதேன்.** எமது தாத்தாவைக் காப்பாற்ற முடியாமல் போய்விடுமோ எனப் பயந்து துடித்தேன்.

அப்படி ஏதாவது நடந்துவிட்டால் உடனடியாகவே இயக்கத்திற்குப் போய்விடுவது எனத் தீர்மானித்தேன். சற்று நேரத்தில் உலங்கு வானூர்திகள் விலகிச் சென்ற பின்னர் அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று உயிரைக் காப்பாற்ற முடிந்திருந்தது.

எமது தந்தையை விபத்தொன்றில் பறிகொடுத்த பின்னர் எமக்கு மாமாவும், அம்மாவின் பெற்றோருமே எம்மை வளர்த்து வந்தார்கள். அவர்களின் மீது நாங்கள் மிகுந்த அன்பு வைத்திருந்தோம்.

பரந்தன் சந்தியில் இராணுவத்தினருக்கும் இயக்கங்களுக்கும் அடிக்கடி மோதல்கள் நடக்கத் தொடங்கின. அத்துடன் இயக்கங்களும் தமக்குள்ளே ஒருவரோடொருவர் மோதிக்கொண்டனர்.

நாட்டுக்கு விடுதலை பெற இராணுவத்தினருடன் போராட வேண்டும் எனக் கூட்டங்களில் விளக்கமளித்த இயக்க அண்ணன்மார் எதற்காகத் தமக்குள்ளே இப்படிப் போர் செய்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

தினசரி பரந்தன் சந்தியைக் கடந்துதான் பாடசாலைக்குச் சென்றுவர வேண்டிய சூழ்நிலையில் நான் கண்ட காட்சிகள் ஒவ்வொன்றும் எமக்கொரு அமைதியான எதிர்காலம் அமையும் என்கிற நம்பிக்கையை ஒருபோதும் ஏற்படுத்தியதில்லை.

மாறாக வாழ்க்கையின் மீதான பயமும் நம்பிக்கையீனமும் அதிகரித்துச் செல்லவே வழிவகுத்தது. இப்படியான

சந்தர்ப்பத்தில்தான் இந்தியப் படையினரின் வருகை நிகழ்ந்தது.

அப்போது நான் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன்.

**இனி எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஒரு முடிவு வந்துவிடுமெனப் பெரியவர்கள் பேசிக்கொண்டார்கள். எல்லோரையும் போலவே நாங்களும் வீதிக்கரையில் நின்று இந்தியப் படையினரைக் கையசைத்து வரவேற்றோம்.**

## இந்திய படைகளுடன் தொடங்கியது போர்! இளவயதுப் பெண்களுக்கு அதுவொரு பயங்கரமான காலம்!!

• முதன்முதல் புலிகளின் முகாமுக்கு சென்றபோது...ஏற்கனவே அங்கே வந்திருந்த எனது தங்கையைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தேன்.

• இந்திய படையினர் பெண் பிள்ளைகளைக் கண்டதும் “**ஏய் குட்டி ஏய் குட்டி**”, “**கல்யாணம் கட்டுவமா**” இன்னும் ஏதேதோ மொழிகளிலெல்லாம் சொல்லிக் கத்துவார்கள். தலையைத் திருப்பிப் பார்க்கவே முடியாதபடி பயமாக இருக்கும்.

• விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியப் படையினருடனான போரைத் தொடங்கிவிட்டதாக மக்கள் பேச்சு. இதனால் இளவயதுப் பெண்களுக்கு அதுவொரு பயங்கரமான காலமாக உருவெடுத்திருந்தது.

• இந்திய இராணுவத்தினர் மீது தாக்குதலை நடத்திவிட்டு ஓடிச்சென்ற விடுதலைப் புலிகள். தினசரி பாடசாலைக்கும், மாலை வகுப்புகளுக்கும் சென்றுவருவது நெருப்பின் மீது நடப்பதுபோல இருந்தது.

• குடும்பத்தவர்களுக்குத் தெரியாமல் நானும், தங்கையும் செய்யத் துணிந்த காரியம் இருவருக்குமே பிசகிப் போயிருந்தது.

**தொடர்ந்து.......**

இப்படியான சந்தர்ப்பத்தில்தான் இந்தியப் படையினரின் வருகை நிகழ்ந்தது. அப்போது நான் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன்.

இனி எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஒரு முடிவு வந்துவிடுமெனப் பெரியவர்கள் பேசிக்கொண்டார்கள். எல்லோரையும் போலவே நாங்களும் வீதிக்கரையில் நின்று இந்தியப் படையினரைக் கையசைத்து வரவேற்றோம்.

பரந்தன், கரடிப்போக்கு ஆகிய இரு ஊர்களுக்கும் நடுவே வட பிராந்தியத்திற்குரிய நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பிரம்மாண்டமான களஞ்சியக் கட்டடங்கள் மற்றும் ஊழியர்களின் விடுதிக் கட்டடங்களில் இந்திய இராணுவத்தினர் பாரிய முகாமொன்றினை அமைத்திருந்தனர்.

நாங்கள் அதுவரையிலும் கேட்டறியாத பல மொழிகளில் பேசினார்கள். நீண்ட தலைமுடியும் தாடியுமாகப் பஞ்சாபியர்களும், மஞ்சள் நிறமும் குள்ளமான தோற்றமுமாகக் கூர்க்கா படையினரும், பாடப் புத்தகங்களில்

படித்திருந்த இந்தியாவை எமது கண்களுக்கு முன்பாக நிறுத்தியிருந்தார்கள்.

“**சயன்ஸ் சென்ரர்**” எனப்படும் எமது ரியுசன் சென்ரர் கரடிப்போக்கில் அமைந்திருந்தது. குமரபுரம் மற்றும் பரந்தனிலிருந்து மாணவர்கள் கூட்டமாகச் செல்வது வழக்கம்.

பெண் பிள்ளைகளைக் கண்டதும் “**ஏய் குட்டி ஏய் குட்டி**”, “**கல்யாணம் கட்டுவமா**” இன்னும் ஏதேதோ மொழிகளிலெல்லாம் சொல்லிக் கத்துவார்கள்.

தலையைத் திருப்பிப் பார்க்கவே முடியாதபடி பயமாக இருக்கும். இப்படியாகச் சிறிது காலம் இருந்த நிம்மதியான வாழ்வு மீண்டும் குழம்பத் தொடங்கியது.

**விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியப் படையினருடனான போரைத் தொடங்கிவிட்டதாக மக்கள் பேசிக்கொண்டார்கள். இளவயதுப் பெண்களுக்கு அதுவொரு பயங்கரமான காலமாக உருவெடுத்திருந்தது.**

யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் இளம் பெண்கள்மீது இந்தியப் படையினர் பாலியல் பலாத்காரம் செய்ததாக மக்கள் பரவலாகப் பேசிக்கொண்டார்கள்.

கிளிநொச்சியிலும் அப்படியான சம்பவங்கள் நடந்ததா என்பது எனக்குத் தெரியாமலிருந்தது. ஆனால் எமது பெரியம்மாவின் மகளான எமது அக்காவைத் தமது வீட்டிலே வைத்திருப்பது பாதுகாப்பு இல்லையென இரவோடிரவாக அவரைக் கூட்டி வந்த பெரியப்பா எமது வீட்டில் விட்டுச் சென்றிருந்தார்.

பெண் பிள்ளைகளான எம்மைப் பாதுகாப்பதும், பாடசாலைக்கும் ரியுசனுக்கும் அனுப்புவதும் பெரியவர்களுக்குப் பெரும் போராட்டமாக இருந்தது.

அப்போது க.பொ.த. சாதாரண பரீட்சைக்காக நான் தயாராகிக் கொண்டிருந்தேன்.

ஒருநாள் எமது பாடசாலை நேரத்தில் பயங்கரமான சூட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. பரந்தன் பிரதேசமே சுற்றி வளைக்கப்பட்டிருந்தது.

மாணவர்களாகிய நாம் பயத்துடன் மேசைக்குக் கீழே பதுங்கிக்கொண்டு இருந்தோம். சற்று நேரத்தில் எமது பாடசாலை வளாகத்திற்குள் வந்த இந்தியப் படையினர் ஒவ்வொரு வகுப்பறையையும் நிறைத்து நின்றனர்.

எமது பாடசாலை அதிபரிடம் என்னவோ விசாரித்து அவரை அடிக்கத் தொடங்கினார்கள். எம்மால் பெரிதும் மதிக்கப்படும் எமது அதிபர் எங்களுக்கு முன்பாக அடிவாங்கி, உதடுகள் வீங்கி இரத்தக் காயத்துடன் நின்ற கோலத்தைக் கண்டு மாணவர்கள் வாய்விட்டு அழத் தொடங்கினார்கள்.

**சற்று நேரத்தில் ஊர் மக்கள் ஆண்கள் பெண்கள் எல்லோரும் கைகளைத் தூக்கியபடிப் பாடசாலை மைதானத்திற்கு அழைத்துவரப்பட்டதுடன் முழங்காலில் மண்டியிடுமாறு நிறுத்தி வைக்கப்பட்டனர்.**

இந்திய இராணுவத்தினர் மீது தாக்குதலை நடத்திவிட்டு ஓடிச்சென்ற விடுதலைப் புலிகளைத் தேடும் அந்த நடவடிக்கை மாலைவரை நீடித்தது.

தினசரி பாடசாலைக்கும், மாலை வகுப்புகளுக்கும் சென்றுவருவது நெருப்பின் மீது நடப்பதுபோல இருந்தது.

இந்திய இராணுவத்தினருக்கு உதவியாக இருந்த சில தமிழ் இளைஞர்கள் ஊரிலே பல இளைஞர்களைப் பலவந்தமாகப் பிடித்துச் சென்று பயிற்சிகள் கொடுப்பதையும் அறிய முடிந்தது.

அதனால் எமது வகுப்புகளில் படித்த பல ஆண் மாணவர்கள் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு காணமல் போக தொடங்கினார்கள்.

நெற்றியில் சிகப்புத் துணிகளைக் கட்டியிருந்த தமிழ் இளைஞர்களும் இந்தியப் படையினரும் வீதி நீளத்திற்கும் நிற்பார்கள். அவர்களுடைய பார்வைகளையும் கேலிகளையும் காணும்போது மனதிற்குள்ளே ஆத்திரமும் கோபமும் கொப்பளித்துக் கொண்டிருக்கும்.

ஆனாலும் அதைச் சகித்துக்கொள்வதைத் தவிர மாணவர்களாகிய எமக்கு வேறு வழியிருக்கவில்லை.

காடுகளுக்குள்ளே மறைந்திருந்து தாக்குதல் நடத்தும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மீது அளவற்ற மதிப்பும் நம்பிக்கையும் உருவானது.

அவர்களால் மட்டும்தான் இத்தகைய துன்பங்களுக்கெல்லாம் ஒரு விடிவைக் கொண்டுவர முடியும் எனக் கனவு காணத் தொடங்கினோம்.



IPKF Troops during the final withdrawal from the Island

**என்னைப் பொறுத்தவரை பதின்ம வயதுகளின் இனிமைகளை உணர்ந்து அனுபவித்து மகிழ்ந்த நினைவுகள் அதிகம் கிடையாது.**

குமரபுரம் முருகன் கோயில் ஆனி உத்தர திருவிழாவுக்குப் பாவாடை தாவணி போட்டுக்கொண்டு பள்ளித் தோழியருடன் போனதும், நாதஸ்வரம் வாசிப்பவர் “**ராசாத்தி மனசில**” என்ற அந்தக் காலத்து ‘**ஹிட்**‘ பாடல் மெட்டை வாசித்தபோது எம்மைப் பார்த்துத்தான் வாசிப்பதாகக் கற்பனை பண்ணிக்கொண்டு எங்களுக்குள்ளே சிரித்துக்கொண்டதும், பொறிக்கடவை அம்மன் கோவிலுக்கு ‘**சாந்தன்**’ பாட்டுக் கச்சேரி பார்க்கப் போய்விட்டு வந்த மறுநாள், ரியுசன் சென்ரர் கணக்குப் பாடநேரத்தில் வகுப்பே நித்திரை தூங்கியதைப் பார்த்துக் கோபமடைந்த மரியதாஸ் மாஸ்டர் “**சாந்தன் நிலாக் காயுது பாட, விடிய விடிய காஞ்சு போட்டுவந்து இஞ்ச நித்திரையோ தூங்குறியள்**” எனச் சத்தம்போட்டு அத்தனை பேரையும் வகுப்பறைக்கு வெளியே நிறுத்தியதும், தோழிகளுடன் பரிமாறிக்கொண்ட கமலஹாசன், ரஜினிகாந்த் நடித்த சினிமா பட விமர்சனங்களும்தான் இப்போதும் நினைவில் இருப்பவை.

1990ஆம் ஆண்டு பிரேமதாச – புலிகள் சமாதானம் உருவாகியதும், இனி எல்லாப் பிரச்சனைகளும்

முடிந்துவிடுமென மீண்டும் பெரியவர்கள் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் இனியும் பிரச்சனைகள் தொடர்ந்தால் புலிகள் இயக்கத்திற்குப் போவதுதான் சரியான முடிவு என வகுப்பறைகளில் மாணவர்கள் இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அல்லல் படும் எமது மக்களுக்காக ஏதாவது செய்யவேண்டும் என்கிற உணர்வு எனக்குள் நிறையவே ஏற்பட்டிருந்தபோதிலும் இயக்கத்தில் இணைந்துதான் போராட வேண்டும் என்று நான் நினைத்திருக்கவில்லை.

எனது இலட்சியம் பல்கலைக்கழகத்திற்குச் சென்று உயர் கல்வியைத் தொடர்வதாகவே அமைந்திருந்தது. எனது பாடசாலையின் சிரேஷ்ட மாணவர் மன்றத்தின் செயலாளராகவும், பாடசாலையின் மாணவத் தலைவியாகவும் நான் இருந்தேன்.

சிறு வயதிலிருந்தே பாடசாலை மேடைகளில் பேச்சு, கவிதை, பட்டிமன்றம், நாடகம் எனப் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கெடுத்து அதிபர், ஆசிரியர்களின் பாராட்டுக்களையும் அபிமானத்தையும் பெற்றிருந்ததுடன், அயல் பாடசாலைகளிலும் அறியப்பட்ட மாணவியாகவே இருந்தேன்.

உயர்படிப்புப் படித்து நல்ல வேலையில் வேண்டுமென்பதைத் தவிர வேறு சிந்தனைகளுக்கு என் மனதில் இடமிருக்கவில்லை.

தொண்ணூறுகளில் சமாதானம் நிலவிக்கொண்டிருந்த காலத்தில் புலிகள் இயக்கம் நாட்டுக்குள் பிரவேசித்திருந்தது.

என்னுடன் படித்த பல ஆண் மாணவர்கள் இயக்கத்தில் இணைந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். ஒன்றிரண்டாகப் பெண் பிள்ளைகளும் காணாமல் போகத் தொடங்கியிருந்தார்கள்.



**இந்திய படைகளை சுட்டு வீழ்திய புலிகள்**

பெண்கள் ஏற்கனவே இயக்கங்களில் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருப்பது பற்றியும் பரவலாக மக்களிடையே பேசப் பட்டது. யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்து போராடி உயிர் நீத்த திலீபனின் காலத்தில் செயற்படத் தொடங்கிய '**சுதந்திரப் பறவைகள்**' மகளிர் அமைப்பு பற்றியும் நான் அறிந்திருந்தேன்.

ஆனாலும் சீருடை அணிந்து ஆயுதம் தாங்கிய பெண் போராளிகளைத் தொண்ணூறுகளில்தான் முதன்முதலில் நேரடியாகக் காணமுடிந்தது.

ஆரம்ப காலங்களில் இயக்கங்களில் இணைந்த பெண்களைச் சமூகம் மிகவும் அவதூறாகத் திட்டிய சம்பவங்கள் இருந்தபோதிலும், காலப்போக்கில் பெண் போராளி களையும் இயல்பாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்தார்கள்.

பரந்தன் பகுதியிலும் அவர்கள் தங்கியிருந்த வீட்டிற்கு ஊரிலுள்ள பெண் பிள்ளைகள் போய் அவர்களுடன் பழகத் தொடங்கினார்கள். எம்மையொத்த பெண்களாக இருந்தாலும் அவர்களின் வித்தியாசமான கம்பீரமான வாழ்வு என்னையும் ஈர்த்திருந்தது.

அவர்களுடன் நட்பு வைத்துக்கொள்ள நான் பெரிதும் விரும்பினேன். ஒருநாள் நானும் பள்ளித்தோழிகள் சிலரும் அவர்களின் முகாமுக்கு போயிருந்தபோது ஏற்கனவே அங்கே வந்திருந்த எனது தங்கையைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்தேன்.

**குடும்பத்தவர்களுக்குத் தெரியாமல் செய்யத் துணிந்த காரியம் இருவருக்குமே பிசகிப் போயிருந்தது.**

இருவருமே வீட்டிற்கு இதைப் பற்றிச் சொல்வதில்லை என ஆளுக்காள் உடன்படிக்கை செய்துகொண்டோம். எமது பாடசாலையில் புலிகள் இயக்கத்தின் மாணவர் அமைப்பினருடைய கூட்டங்கள் அடிக்கடி நடந்தன.

‘நீங்கள் அனைவரும் இயக்கத்தில் இணைந்துதான் போராடவேண்டும் என்கிற அவசியமில்லை; மாணவர் இயக்கத்தில் இணைவதன் மூலம் உங்களுடைய கல்வியையும் தொடர முடியும், போராட்டத்திற்கான ஆதரவையும் வழங்க முடியும்’ என்ற கருத்துடன் மாணவர்களுக்கான அமைப்பு உருவாக்கப்பட்டது.

எமது பாடசாலை மாணவர் இயக்கத்தின் தலைவியாக நான் தெரிவுசெய்யப்பட்டிருந்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பிரேமதாஸ அரசாங்கத்துடனான புலிகளின் சமாதானம் மீண்டும் குழம்பத் தொடங்கியிருந்தது.

பல மக்கள் எழுச்சி நிகழ்வுகளும் மாணவர் ஊர்வலங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. எனது பாடசாலை மாணவர்களும் ஆக்ரோசமாகக் கலந்துகொண்டு கோஷமிட்டோம்.

**“மாணவர் சக்தி மாபெரும் சக்தி, பேனா ஏந்தும் கைகளைத் துப்பாக்கி ஏந்த வைக்காதே”** என்ற கோசங்கள் எமது உணர்வுகளை முறுக்கேறச் செய்தன.

மாணவர் எழுச்சி நிகழ்வுகளிலும் கலந்துகொண்டோம். 1990களின் இறுதியில் மீண்டும் புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்குமான போர் வெடித்தது.



**இந்திய இராணுவத்தினரின் சுறிறிவளைபில்**

**என்னசெய்வது என்று தெரியாமல் முழிசிக்கொண்டிருக்கும் பிரபாகரன் கொக்காவில், மாங்குளம் இராணுவ முகாம்கள் தகர்க்கப்பட்டதுடன் யாழ்ப்பாணக் கோட்டையில் புலிக்கொடி ஏற்றப்பட்டது எனப் புலிகளின் தாக்குதல் வெற்றிகள் மக்கள் மத்தியில் மாபெரும் ஆதரவு அலையைப் புலிகளுக்கு ஏற்படுத்தியது.**

வெற்றிக் கதாநாயகர்களாக இயக்கப் போராளிகள் போற்றப்பட்டார்கள். அந்தக் காலத்தில் வெளியிடப்பட்ட இயக்கத்தின் புரட்சிப் பாடல்களான '**இந்த மண் எங்களின் சொந்த மண்**', '**எதிரிகளின் பாசறையைத் தேடிப்போகிறோம்**' என்பது போன்ற பாடல்கள் இளைஞர்கள், யுவதிகளின் உணர்வுகளைத் தட்டியெழுப்பியது.

ஆயிரமாயிரமாக இயக்கத்திற்கு இளைஞர்களும் யுவதிகளும் சேர்ந்தார்கள். 1991இல் நடைபெறவிருந்த க.பொ.த உயர்தரப் பரீட்சை நடாத்த முடியாத சூழ்நிலை என்ற காரணத்துடன் பிற்போடப்பட்டது.

அதே ஆண்டு ஏழாம் மாதம் ஆனையிறவு இராணுவ முகாம் மீதான புலிகளின் ஆகாய, கடல் வெளித் தாக்குதலும் தொடங்கப்பட்டிருந்தது.

பரந்தன் பகுதி மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்தபோது எமது குடும்பமும் இடம்பெயர்ந்து, தருமபுரம் சென்றது. மாணவர் அமைப்பு மூலமாகப் பல பின்னணி வேலைகள் புலிகளால் முன்னெடுக்கப்பட்டன. மக்களிடம்

உலர் உணவு சேகரித்தல், காயப்பட்ட போராளிகளைப் பராமரித்தல், பெற்றோரிடம் ஒப்படைக்க முடியாத உயிரிழந்த போராளிகளின் உடல்களுக்கு மலர்மாலை கட்டுதல் எனப் பலவகையான வேலைகள் மாணவர்களுக்குத் தரப்பட்டிருந்தன.

எமது பாடசாலையின் ‘பாண்ட்’ வாத்தியக் குழுவின் தலைவியாக நான் இருந்தேன். எமது பாண்ட் அணி உயிரிழந்த புலிகளின் இறுதி வணக்க நிகழ்வுகளுக்கு மரியாதை இசை வழங்குவதற்காக அழைத்துச் செல்லப்பட்டது.

சாதாரணமாக மயானங்களுக்குத் தமிழ்ப் பெண்கள் போவதில்லை. ஆனால் நாம் போராளிகளின் துயிலும் இல்லங்களுக்குச் சென்றோம்.

யுத்தத்தில் உயிரிழந்த வெளிமாவட்டங்களைச் சேர்ந்த போராளிகளின் உடல்களுக்குச் சக போராளிகளாலேயே தீ மூட்டப்பட்டது. அந்தக் காட்சி எனது மனதை மிகவும் உருக்கியது.

ஆண் பெண் வேறுபாடில்லாமல் தினசரி நூற்றுக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் உயிர்கொடுத்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் வெறும் பார்வையாளராக இருப்பது எனது மனதில் பெரும் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது. தொடர்ந்தும் படிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகுமென நான் நினைக்கவில்லை.



**பலாலியில் வந்திறங்கிய இந்திய படை**

**இரவும்பகலும் நான் கண்ட காட்சிகளே மனதை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தன. ஒரு குடும்பத்தில் ஒருவராவது போராடச் சென்றால் அடுத்த சகோதரர்களாவது நிம்மதியாக வாழ முடியும் என நம்பத் தொடங்கினேன்.**

எனது இளைய சகோதரர்கள் போராடப் போய் இப்படியொரு சாவு அவர்களுக்கு நேர்வதைவிட நானே போவதென தீர்மானித்தேன். இந்த விடயத்தில் மற்றவர்களிடம்

ஆலோசனை பெற வேண்டுமென நான் சிறிதும் நினைக்கவில்லை.

எனது அம்மா, சகோதரர்களை விட்டுப் பிரிவது மிகக் கொடிய வேதனையாக இருந்தது. அவர்களை மறுபடியும் வாழ்க்கையில் சந்திக்க முடியாது என்றே நினைத்தேன்.

மாலை நேர வகுப்புக்குப் போவதாக அம்மாவிடம் பொய் சொல்லிவிட்டு எனது சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்திருந்த பெண் போராளிகளின் முகாமுக்குச் சென்று என்னை இயக்கத்தில் இணைத்துக்கொள்ளும்படிக் கூறினேன்.

அங்கு ஏற்கனவே என்னைப் போல இணைந்துகொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகள் மாமரங்களின் கீழே அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் பயிற்சிக்காகப் பூநகரி சங்குப்பிட்டிப் பாதைக்கூடாக யாழ்ப்பாணம் அனுப்பப்படுவதற்குத் தயாராக இருந்தார்கள்.

நான் அணிந்திருந்த தோடுகளையும் மணிக்கூட்டையும் கழற்றிப் பொறுப்பாளரிடம் கொடுத்தேன்.

அவர்கள் அம்மாவிடம் ஒப்படைப்பதாகக் கூறினார்கள். அம்மாவுக்கு ஒரு சிறிய கடிதமும் எழுதிக்கொடுத்துவிட்டுப் புதிய போராளிகள் அணியுடன் போய் இணைந்துகொண்டேன்.

1991.07.29ஆம் திகதி நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஒரு போராளியாக என்னை இணைத்துக்கொண்டேன். அன்றிருந்த சூழ்நிலையில் அதைத் தவிர எனக்கு வேறு எந்தத் தேர்வுகளும் இருந்ததாகத் தெரியவில்லை.

எனது வாழ்க்கையில் சரியானதொரு தீர்மானத்தை நான் எடுத்துவிட்டதாகவே நம்பினேன்.

எமது மூத்த தலைவர்கள் மேடைகளில் செய்த போர்ப் பிரகடனங்களுக்காக இளைய தலைமுறையின் வாழ்வு, யுத்த வேள்வித் தீயில் ஆகுதியாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆயிரக்கணக்காக இளைய தலைமுறையினர் அந்த நெருப்புக்குள் ஆவேசத்துடன் பயணித்துக்கொண்டிருந்தார்கள்.

## தலைவரை முதன்முதலாக சந்தித்தோம்: "அண்ணா எங்களைப் பயிற்சி எடுப்பதற்கு அனுப்புங்கள்" என ஒருமித்த குரலில் எல்லோரும் பாடினோம்

இயக்கத்தில் சேர்ந்த பிற்பாடு இயக்கத்தின் கட்டுப்பாடுகள்.

"இனிமேல் இயக்கம்தான் உங்கட குடும்பம், இங்க இருப்பவர்கள்தான் உங்கட உறவுகள், அம்மா, அப்பா எல்லாமே. எங்களுக்குத் தலைவர்தான்.

• இயக்கப் போராளிக்கு இருக்க வேண்டிய முதலாவது பண்பு கட்டளைக்குக் கீழ்ப்பணிதல்."

• இயக்கத்தில் சேர்ந்த பின்னர் சொந்தப் பெயருக்குப் பதிலாக இயக்கப் பெயர் சூட்டப்பட்டது.

• இயக்கப் பெயர் சூட்டப்பட்ட கணத்திலிருந்து சொந்தப் பெயர் பாவிக்கக் கூடாது எனவும், மறந்தும் பாவித்தால் தண்டனைக்குள்ளாக வேண்டியிருக்கும்

ஆயுதப் பயிற்சி பெற்ற அரசியல் போராளி எனது மாலைநேர வகுப்பு முடிந்ததும் வழக்கம்போல வீடு திரும்பாமல், நான் இயக்கத்தில் இணைந்துகொண்டதை எப்படியோ அறிந்து கொண்ட எனது மாமா, அம்மா, தாத்தா அனைவரும் கனகபுரம் பெண் போராளிகளின் முகாம் வாசலில் வந்து நிற்பதாக எனக்குச் சொல்லப் பட்டது.

பொறுப்பாளர் அக்கா என்னிடம் "நீங்கள் போய் அவர்களுடன் கதைத்துவிட்டு வாருங்கள்" என அழைத்தார். ஆனால் நான் போகவில்லை.

எனது இலட்சிய வேட்கையைத் தமது பாசத்தால் பலவீனப்படுத்தி என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுவார்களோ என்று நினைத்தபோது அவர்களை எதிர்கொள்ளப் பயமாக இருந்தது.

அவர்களுக்காக நான் எழுதிய கடிதத்தைக் கொடுத்துவிடும்படி பொறுப்பாளர் அக்காவிடம் கூறினேன்.

என்னைத் தோளிலும் மார்பிலும் சுமந்து வளர்த்து ஆளாக்கிய அந்த அன்புத் தெய்வங்களின் முகத்தையோ, அவர்கள் எனக்கு முன்பாகக் கண்ணீர் வடிப்பதையோ காண்கிற துணிச்சல் எனக்கு இருக்கவில்லை.

நான் தனிமையில் சென்று குமுறிக் குமுறி அழுதேன். நான் பிறந்ததிலிருந்து ஒரு நாளேனும் என் குடும்பத்தை பிரிந்திருக்கவில்லை. திடீரென ஒரேயடியாக அவர்களை பிரிந்து செல்வதை எண்ணித் துடித்தேன்.

என்னைப் போலவே அங்கிருந்த அனைவரும் தமது குடும்பத்தினரைப் பிரிந்து நாட்டுக்காக வந்திருக்கிறார்கள் என்ற எண்ணம் எனக்குள் மேலோங்கியதால் எனது துயரத்தை அடக்கி என்னை நானே திடப்படுத்திக்கொண்டேன்.

மறுநாள் இரவு வன்னி மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் எங்களைச் சந்திப்பதற்காக வந்திருந்தார். "இயக்கமெண்டால் கஷ்டம், கஷ்டமெண்டால் இயக்கம்" எனக் கூறியவாறு பேசத் தொடங்கியவர், மிக நீண்ட நேரமாகப் புதிய போராளிகளான எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

"இனிமேல் இயக்கம்தான் உங்கட குடும்பம், இங்க இருப்பவர்கள்தான் உங்கட உறவுகள், அம்மா, அப்பா எல்லாமே. எங்களுக்குத் தலைவர்தான்.

இயக்கப் போராளிக்கு இருக்க வேண்டிய முதலாவது பண்பு கட்டளைக்குக் கீழ்ப்பணிதல்." இவ்வாறாகப் பல முக்கியமான அடிப்படை விஷயங்கள் பற்றியெல்லாம் விளக்கமளித்தார்.

அதன்பின்னர் எமது சொந்தப் பெயருக்குப் பதிலாக இயக்கப் பெயர் சூட்டப்பட்டது. எனக்கு அன்று சூட்டப்பட்ட பெயர் சந்திரிகா.

அந்தக் கணத்திலிருந்து சொந்தப் பெயர் பாவிக்கக் கூடாது எனவும், மறந்தும் பாவித்தால் தண்டனைக்குள்ளாக வேண்டியிருக்கும் எனவும் கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டது.

லெப்.கேணல் சந்திரன் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்து கொக்காவில் பகுதியில் இராணுவத்துடனான சமரில் காயமடைந்து மருத்துவச் சிகிச்சைக்காகத் தமிழ்நாட்டுக்குப் படகு மூலம் கொண்டு செல்லப்பட்டபோது இடைநடுவில் உயிரிழந்துபோனதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அவர் எனது தாய்வழி உறவினராக இருந்த காரணத்தால் எனக்கு சந்திரிகா என்ற பெயரைப் பொறுப்பாளர் சூட்டியதாகக் கூறினார். தாயார் மற்றும் உறவினர்களுடன் இருநூறுக்கும் மேற்பட்ட புதிய போராளிகள் அங்குச் சேர்ந்திருந்தார்கள்.

புதிய போராளிகள் வந்து சேர்ந்துகொண்டேயிருந்தார்கள். ஆகவே உடனடியாக யாழ்ப்பாணத்திலிருக்கும் பயிற்சி

முகாம்களுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன.

ஆனையிறவு பகுதியில் யுத்தம் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருந்ததால், அடிக்கடி உலங்கு வானூர்திகள் வானத்தில் வட்டமிட்டுத் தாக்குதல்களை நடத்திக்கொண்டேயிருந்தன.

கனகபுரம் முகாமின் மாமர தோப்புக்குள் அமைக்கப்பட்டிருந்து 'l' அடைந்து கிடந்தோம்.

அங்கிருந்தவர்களில் பன்னிரண்டு பேர் வேறாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தோம். எம்மைத் தனியாகச் சந்தித்த பொறுப்பாளர் "நீங்கள் அரசியல் வேலைக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறீர்கள்.

இயக்கத்தில நாங்கள் ஒவ்வொருவரும் நினைக்கிற வேலையைச் செய்ய முடியாது. இயக்கம் தீர்மானிக்கிற வேலையைத்தான் நாங்கள் செய்ய வேணும்.

எனவே இந்த அணியுடன் நீங்கள் அனுப்பப்பட மாட்டீர்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நான் பிறகு உங்களுக்குச் சொல்லுவேன்" எனக் கூறினார்.

அதன் பின்பு நாம் தனியாகப் பிரிக்கப்பட்டோம். யாழ்ப்பாணத்திலிருக்கும் பெண் போராளிகளின் பயிற்சி முகாமுக்கு அனைவரையும் ஏற்றிச் செல்வதற்காக மினி பஸ்கள் வந்திருந்தன.

அவர்களுடன் பயிற்சி முகாமுக்கு அனுப்பப்படாதது எனக்கு ஏமாற்றமாக இருந்தாலும் அதனை வெளிக்காட்டிக்கொள்ளாமல் அமைதியாக இருந்தேன்.



மறுநாள் எமக்குப் புதிய சீருடைகள் தரப்பட்டன. முதன் முதலாகச் சீருடையும் சப்பாத்தும் அணிந்துகொண்டபோது, ஒரு கம்பீரமும் மிடுக்கும் எனக்குள்ளே புகுந்துகொண்டதை உணர்ந்தேன்.

ஒரு பிக்கப் வாகனத்தில் அனைவரும் ஏற்றப் பட்டு மாங்குளம் காட்டுப் பகுதியில் அமைந்திருந்த முகாமொன்றுக்குக் கொண்டுசெல்லப்பட்டோம். அங்கு ஒரு

மாதமளவில் தங்க வைக்கப்பட்டுச் சில அடிப்படைப் பயிற்சிகள் தரப்பட்டன.

ஆயுதங்களைக் கழற்றிப் பொருத்துவது, ஓட்டம், உடற்பயிற்சி என்பவற்றுடன் பொதுமக்களுடன் எப்படிப் பழக வேண்டும் என்பதும் இயக்க வரலாறு, மாவீரர்களின் வரலாறு என்பனவும் கற்பிக்கப்பட்டன.

உண்மையில் எனக்கு இப் பயிற்சிகள் எதுவுமே கடினமானதாக இருக்கவில்லை. அதிகாலை நாலு மணிக்கு நித்திரை விட்டெழும்புவதும், இரவு பத்து மணிக்குப் பின்னர் நித்திரைக்குப் போவதும், நள்ளிரவு காவல் கடமையும் ஆரம்பத்தில் கடினமாக இருந்தன.

இதன் பின்னர் வெவ்வேறு பிரதேசங்களிலும் ஏற்கனவே அரசியல்வேலை செய்துகொண்டிருந்த மூத்த உறுப்பினர்களுடன் சேர்த்து அனுப்பப்பட்டோம்.

வவுனியா மாவட்டத்தின் மகிழங்குளம் எனும் கிராமத்திற்கு நான் அனுப்பப்பட்டிருந்தேன். அப்போது அந்தக் கிராமம்

அடர்ந்த காடுகளுடன் சூழ்ந்த மக்கள் வாழ்விடமாக இருந்தது.

வீடுவீடாகச் சென்று மக்களைச் சந்தித்தோம். பெண்கள் குழந்தைகளின் விபரங்களைத் திரட்டினோம். சைக்கிளில் டபுள் ஏற்றி ஓடுவதும், பதிவுகளைக் கொப்பியில் எழுதுவதும்தான் எனது வேலை.

எனக்குப் பொறுப்பாக இருந்த அக்கா, அங்கு ஏற்கனவே அதிகமான மக்களை அறிந்து வைத்திருந்தார். எனக்கு மக்களுடன் பழகுவது மிகவும் மகிழ்ச்சியான விடயமாக இருந்தது.

புதிய கிராமம், புதிய முகங்கள். எம்மை அன்புடன் வரவேற்கும் அந்த எளிமையான மக்களின் முகங்களில் எனது உறவுகளையே கண்டேன்.

நடுத்தர வயதைக் கடந்திருந்த ஒரு தாயார் எமது முகாமில் இருந்தார். அவர் தனது இரண்டு புதல்வர்களைப் போராட்டத்தில் இழந்திருந்தார்.

அங்கிருந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் வேலை செய்துகொண்டிருந்த அவர் போராளிகளுடன் மிகவும் அன்பாகப் பழகினார்.

எந்தக் கடினமான வேலைகளையும் சளைக்காமல் செய்வார். அவருக்கிணையாக எமது போராளிகளால்கூட வேகமாகச் சைக்கிள் ஓட்ட முடியாது.

இரவு நேரத்தில் அனைவரும் படுத்திருக்கும்போது, “அன்ரி ஒரு பாட்டு பாடுங்கோ” என்ற எமது வேண்டுகோளை ஏற்று, “பள்ளி செல்லும் பருவத்திலே படையில் சேர்ந்தவர், அவர் துள்ளித் திரியும் வயதினிலே துவக்கை ஏந்தினார்” எனத் தானே எழுதிய கவிதை வரிகளுக்குத் தானே மெட்டமைத்து அழகாகப் பாடுவார்.

வாழ்வின் எத்தனையோ வலிகளைக் கடந்து வந்திருந்த அந்தத் தாயார் தானும் ஒரு போராளியாகிச் செயற்பட்டார்.

நான் சந்தித்த பல பெண் ஆளுமைகளில் அவரும் என் மனதில் ஒரு தனி இடத்தைப் பிடித்திருந்தார். நாங்கள்

எவ்வளவுதான் சிறப்பாக வேலை செய்தாலும் முறைப்படியான அடிப்படை ஆயுதப் பயிற்சி பெற்றிராத காரணத்தால் நாம் முழுமையான உறுப்பினர்களாகக் கணிக்கப்படவோ மதிக்கப்படவோ இல்லை.

இயக்கத்தில் ஒரு உறுப்பினரை அறிமுகப்படுத்திக்கொள்ளும்போது "நீங்கள் எத்தனையாவது பயிற்சி முகாம்" என்றுதான் முதலில் கேட்பார்கள்.

எங்களிடம் அப்படிக் கேட்கும்போது "இன்னும் பயிற்சி எடுக்கவில்லை" என்று கூற நேரும்போது ஒரு இளக்காரமான பார்வை எம்மீது வந்து விழும்.

அது எமக்கு மிகுந்த மன வேதனையாக இருந்தது. இயக்கம் தானே எம்மைப் பயிற்சிக்கு அனுப்பாமல் வைத்திருக்கிறது என நினைத்துக்கொள்வோம்.

இரவு நேரங்கள்தான் அதிகப் பிரச்சனைக்குரியதாக இருந்தன. ஒவ்வொருவரும் தனித்தனியாகவே காவல்

பார்க்க வேண்டிய நிலையில் எனது காவல் கடமை நேரம் பெரும்பாலும் நள்ளிரவை அண்டியதாகவே இருந்தது.
சரிவர இயக்கப் பழகியிராத ஒரு துப்பாக்கியைச் சுடுவதற்குத் தயாரான நிலையில் ஏந்தியபடி நிற்க வேண்டும். எனக்குச் சிறுவயதிலிருந்தே பேய் பற்றிய பயம் எதுவும் இல்லாதிருந்த போதிலும் பருத்த காட்டு மரங்களும் கும்மிருட்டும் "ஙீ . . . ஙீ" என்ற இரைச்சலும், திடீரெனப் பறவைகள், மிருகங்கள் எழுப்பும் வினோதமான சத்தங்களும் தனிமையும் இனம்புரியாத கலக்கத்தை அடிவயிற்றில் தோற்றுவித்தன.

அம்மம்மா சிறுவயதில் சொல்லியிருந்த பிசாசு, முனிக் கதைகள் வேறு அந்த நேரத்தில் நினைவுக்கு வந்து தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தன. எனக்குத் தெரிந்த தேவாரம், திருவாசகம் எல்லாமே மனதிற்குள் ஓடிக்கொண்டிருக்கும்.

ஆனால் இந்தப் பயத்தையெல்லாம் முகத்திலோ அல்லது எனது நடத்தையிலோ காட்டிக்கொள்வது கிடையாது.

பயத்தை வெளிக்காட்டினால் பயிற்சிக்கு அனுப்பாமல் விட்டுவிடுவார்களோ என்ற சிந்தனையுடன் அது ஒரு தன்மானப் பிரச்சனையாகவும் இருந்தது.

நான் மட்டுமல்ல, அங்கிருந்த போராளிகள் எல்லோருமே அப்படித்தான் இருந்தார்கள். வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் வேலைத்திட்ட அறிக்கைகளைக் கையளிப்பதற்காக வவுனியா மகிழங்குளத்திலிருந்து மாங்குளத்திற்குச் சைக்கிளில் டபிள் ஏற்றிக்கொண்டு செல்லவேண்டும்.

பாதையின் காடுகளுக்கூடாகச் செல்லும்போது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கக்கூடும் என்ற நிலையில், முதுகில் துப்பாக்கியைக் கொழுவியபடி மேடு பள்ளமான மண் பாதைகளைக் கடந்து ஓமந்தைப் பகுதியில் ஏ9 வீதியில் ஏறி மாங்குளம்வரை சென்று மீண்டும் உள்வீதிகளுக்கூடாக எமது முகாம் அமைந்திருந்த இடத்திற்குச் செல்ல வேண்டும்.

இப்படி கிலோமீற்றர் கணக்காகச் சைக்கிள் ஓட்டுவது ஆரம்பத்தில் கடினமானதாக இருந்த போதிலும் காலப்போக்கில் பழகிப்போனது. இப்படியாக மூன்று மாதங்கள் சென்ற பின் நானும் இன்னொரு போராளியும் திண்ண வேலியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி நடுவப் பணியகத்திற்கு அனுப்பப்படுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தோம்.

பொறுப்பாளருக்கு எமது திறமையின் மீது இருந்த நம்பிக்கையோ என்னவோ இடத்தின் முகவரியை மட்டும் தந்து எம்மிருவரையும் தனியாகவே அனுப்பிவைத்தார்.

நான் வீட்டிலிருந்த காலத்தில் பெரியவர்களுடன் யாழ்ப்பாணம் போயிருக்கிறேன். யாழ் பஸ் நிலையமும், நல்லூர் முருகன் கோவிலும், ஐஸ்கிறீம் கடையும் மலாயன் கபேவும் தெரியும்.

இவற்றைத் தவிர வேறு எந்த இடமுமே எனக்குச் சரியாகத் தெரியாது. பூநகரி – சங்குப்பிட்டி வழியாகவே

யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.

ஒருவாறு சங்குப்பிட்டிப் பாதையைக் கடந்து மறவன்புலவு வீதிக்கூடாகச் சாவகச்சேரிச் சந்தியை அடைந்தோம்.

என்னுடன் வந்த போராளி தருமபுரத்தைச் சேர்ந்தவர். அவருடைய தந்தையார் ஒரு பாடசாலை அதிபர். தாயார் ஆசிரியர். யாழ்ப்பாணத்தில் திண்ணைவேலிக்கு எந்தப் பக்கத்தில் போவது என்று தெரியாமல் நின்ற நிலையில், அவ்வழியாய் வந்த வாகனம் ஒன்றினை மனதில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கையசைத்து மறித்தோம்.

அதிர்ஷ்டவசமாக அந்த வாகனத்தில் இயக்கப் போராளிகளே இருந்தனர். மிகுந்த மனச் சாந்தியுடன் “அண்ணா திண்ணவேலி அரசியல் பேஸுு2க்குப் போக வேணும்” எனக் கூறினோம்.

“ஆ . . . நீங்கள் அரசியல் பிள்ளைகளா? வாங்கோ” என ஏற்றிக்கொண்டார்கள். நாம் போய்ச் சேர வேண்டிய அந்த முகாம் வளாகத்திற்குள்ளேயே கொண்டுபோய் எங்களை இறக்கிவிட்டுச் சென்றனர் அந்த ஆண் போராளிகள்.

பரப்பளவில் பெரியதொரு முகாமாக அது இருந்தது. விடுதலைப் புலிகளின் மகளிர் நிர்வாகத்தைச் சேர்ந்த, பெரிய பொறுப்புகளை வகிக்கும் பல உறுப்பினர்கள் அங்கிருந்தனர்.

பலர் சந்திப்புக்களுக்காக வந்து சென்ற வண்ணமிருந்தனர். எந்நேரமும் பரபரப்பாக அவர்கள் இயங்கிக்கொண்டிருந்தார்கள். வன்னியிலிருந்து அனுப்பப்பட்ட புதிய உறுப்பினர்களாகிய எம்மைச் சந்தித்த பொறுப்பாளர், எம்மைப் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்து கொண்டதுடன், சில விளக்கங்களையும் தந்தார்.

என்னுடன் வந்த போராளியை வேறு முகாமொன்றிற்கு அனுப்பிவைத்த பின்னர், தனது அலுவலகத்தில் வேலைத்திட்ட அறிக்கைகளைத் மக்கள் முன்னணிப்

பொறுப்பாளராகவும் இருந்த மாத்தையா அண்ணருக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அறிக்கைப் பொறுப்பாளராக இருந்த சீனியருக்கு உதவியாளரான என் மீது முடிவேயில்லாத பல வேலைகள் சுமத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாத முடிவில் அனுப்பி வைக்கப்படும் அறிக்கைகளைத் தொகுத்து எழுதுவது இலகுவான பணியாக இருக்கவில்லை.

எல்லா அறிக்கைகளையும் கவனமாகப் படித்துப் பொதுவான தலைப்புகளின் கீழ் அங்கு மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் பற்றிய தகவல்களைத் தொகுக்க வேண்டும்.

எனக்குத் தரப்பட்ட இந்த வேலையினால் இயக்கத்தின் அரசியல் பிரிவு பெண் போராளிகள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களையும் அதுசார்ந்த நடைமுறைப் பிரச்சனைகளையும் என்னால் நன்கு கற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாண மாவட்ட அரசியல் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் கூட்டங்களில் பெண் போராளிப் பேச்சாளர்கள் பட்டியலில் என்னையும் எமது மகளிர் பொறுப்பாளர் இணைத்துவிட்டார்.

அவர்கள் எம்மிடம் தரும் பட்டியலின்படி கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்குக் குறித்த நேரத்திற்குச் சென்று கலந்துகொள்ள வேண்டிய பணியும் எனக்கிருந்தது.

இதனால் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் எனப் பல பகுதிகளுக்கும் செல்ல வேண்டியேற்பட்டது. இயக்க நடவடிக்கைகளில் நீண்டகால அனுபவமும் அறிவும் கொண்ட பல பெரிய பொறுப்பாளர்கள், தளபதிகள், மூத்த உறுப்பினர்கள் மத்தியில் அடிப்படைப் பயிற்சிகூடப் பெற்றிராத என்னைப் பல்வேறு தலைப்புக்களில் உரையாற்றுமாறு பணித்தார்கள்.

மிகுந்த பயத்துடனும் நடுக்கத்துடனும் நான் உரையாற்றியபோதிலும், உரையாற்ற வேண்டிய கூட்டங்களுக்கேற்ற விதத்தில் எனது பேச்சைத்

தயார்படுத்திக்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டேன்.

அதற்காகச் சமர்களில் விழுப்புண்ணடைந்த மூத்த உறுப்பினர்களிடம் சென்று அவர்களுடைய அனுபவங்களை ஆர்வத்துடன் கேட்டறிந்தேன்.

புலிகளால் வெளியீடு செய்யப்படும் புத்தகங்கள், பத்திரிகைகளைத் தேடியெடுத்து அனைத்தையும் கவனத்துடன் வாசித்தேன். இத்தகைய ஒரு கூட்டத்தில் எனது பேச்சைக் கேட்ட மாத்தையா அண்ணர் பலத்த ஒலியுடன் கைதட்டி இயக்கப் பேச்சென்றால் இப்படித்தான் இருக்க வேணும் எனப் பாராட்டினார்.

இன்னும் பல மூத்த போராளிகளின் பாராட்டுக்களையும் நான் பெற்றதுடன், மக்களுக்கு ஏற்ற விதமாக அவர்களுக்குப் புரியக்கூடிய முறையில் உரையாற்றுவதற்கு அயராமல் முயற்சித்தேன்.

பிறிதொரு காலத்தில், பல இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வொன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் உரையாற்றும் பெரும் பொறுப்பு, இயக்கத்தின் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

நான் மகளிர் நடுவப் பணியகத்தில் அறிக்கை வேலைகளின் உதவியாளராக இருந்தது, இப்படியான மக்கள் கூட்ட நிகழ்வுகளில் பங்குபெற்று வந்தாலும்கூட, என் மனதில் ஒரு தாழ்வுணர்ச்சி எப்போதும் இருந்துகொண்டே இருந்தது.

ஒரு போராளிக்கு மிக அத்தியாவசியமான ஆயுதப் பயிற்சிக்கு நான் அனுப்பப்படாமல் இருந்ததுதான் அத்தாழ்வுணர்ச்சிக்கான காரணம்.

அரசியல் பிரிவில் என்னையொத்த பயிற்சி பெறாத பல போராளிகள் இருந்தார்கள். நான் இருந்த முகாமில் மட்டும் இருபது பேர் வரை இருந்தோம்.

திடீரென ஒருநாள் எமது முகாம் ஒரு முக்கியமான உறுப்பினரை வரவேற்பதற்குத் தயாராகத் தொடங்கியது. எமக்குப் புதிய வெள்ளை சேட்டும், கறுப்பு நீளக் காற்சட்டையும், புதிய சப்பாத்துக்களும் தரப்பட்டன.

அங்கு நடைபெறவிருந்த கூட்டத்தில் கலந்துகொள்பவர்களுக்குத் தேனீர், சிற்றுண்டி பரிமாறும் வேலை எமக்குத் தரப்பட்டிருந்தது. நாங்கள் அதற்கேற்ற வகையில் தயாராகக் காத்திருந்தோம்.

மேலதிகமான தகவல்கள் எதுவும் எமக்குத் தெரியாது. இயக்கத்தில் எமக்குத் தேவையற்ற தகவல்களைப் பெற முயற்சி செய்தல் பெரும் குற்றமாகவே கருதப்பட்டது.



சற்று நேரத்தில் பஜரோ வாகனம் ஒன்று வந்து நின்றது. தளபதி சொர்ணமும், அவருடன் சிலரும் வந்து இறங்கினர். அவர்கள் கூட்ட ஏற்பாடுகளையும் சுற்றுப்புறங்களையும் ஆராய்ந்ததுடன் முகாமைச் சுற்றி வளைத்துக் காவல் நிற்கத் தொடங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து இன்னொரு வாகனம் வந்து நின்றது. அதிலிருந்து இயக்கத்தின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களும் உதவியாளர்களும் இறங்கினார்கள்.

கம்பீரமாகச் சிரித்த முகத்துடன் அவர் வந்து இறங்கியதைக் கண்டு வாயடைத்துப்போன நிலையில் மறைவாக நின்று பார்த்துக்கொண்டிருந்தோம்.

அதுவரை பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் அவரைப் பற்றி அறிந்திருந்தோம். இயக்கத்தில் இணைந்தபின் மூத்த போராளிகள் அவரைப் பற்றிச் சொன்ன நிறைய கதைகளைக் கேள்விப்பட்டிருந்தோம்.

ஆனால் நேரடியாக இவ்வளவு அருகில் தலைவரைக் காணமுடியும் என நான் கனவுகூடக் கண்டிருக்கவில்லை. ஆனையிறவுப் போரிலேயே முதன்முதலாகப் பெண் போராளிகள் பெருந்தொகையில் பங்கு பெற்றிருந்தார்கள்.

ஒரு மாத காலத்திற்கு மேல் நீடித்த அச்சமரில் பெரும் என்ணிக்கையிலான போராளிகள் உயிரிழந்ததுடன் பலர் பலத்த காயமடைந்தும் அங்கங்களை இழந்துமிருந்தனர்.

அங்கவீனப்பட்ட பெண் போராளிகளைச் சந்திப்பதற்காகவே தலைவர் அங்கு வந்திருந்தார். அவர்கள் அனைவருக்குமான தேநீர் உபசரணைகளை நாம் மேற்கொண்டோம்.

அந்தப் போராளிகள் மிகவும் மகிழ்ச்சியாகத் தலைவருடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். தமது பொறுப்பாளர், தளபதிகளிடம் காணப்படும் பயம் தலைவரிடம் அவர்களுக்கு இல்லாமல் இருந்தது எனக்கு வியப்பாக இருந்தது.

குடும்பத்தில் உரிமையுடன் அம்மா, அப்பாவுடன் பேசுவதுபோல் “அண்ணா அண்ணா” என அழைத்துத் தமது பிரச்சனைகளை அவாகள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அங்கவீனமடைந்துவிட்ட அப்பெண் போராளிகளுக்கு ஏற்ற வேலைத் திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துவதே தலைவரின் அன்றைய சந்திப்பின் நோக்கமாக இருந்தது என்பதை அங்கு நடைபெற்ற உரையாடல்களிலிருந்தும் அதற்குப் பின்னர் நடந்த வேலைத் திட்டங்களிலிருந்தும் உணரக் கூடியதாக இருந்தது.

கூட்டம் முடிந்து தலைவர் புறப்படத் தயாரானபோது, திடீரென எமது பொறுப்பாளரை அழைத்து "மற்றப் பிள்ளைகளையும் கொஞ்சம் கூப்பிடுங்கோ" என்றதும், அதுவரை ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்த நாங்கள் நேரடியாகத் தலைவருக்கு முன்னால் போய் நின்றோம்.

அவருடைய முகத்தில் இருந்த மலர்ச்சியைக் கண்டபோது அமைப்பின் மீதான எமது பற்றுதல் இன்னமும் அதிகமாகியது. ஒவ்வொருவருடைய பெயர்களையும் கேட்டுக்கொண்டார்.

சிலருடைய பெயர்கள் ஆங்கிலப் பெயர்களைப் போல இருந்ததை உணர்ந்து, "அர்த்தமுள்ள தமிழ்ப் பெயர்களை இந்தப் பிள்ளைகளுக்கு வைக்கக்கூடாதா? பாருங்கள் மில்லர், டாம்போ, போர்க் என மாவீரர்களது பெயர்கள் உள்ளன.

ஒரு காலத்தில் இவர்கள் எந்த நாட்டிலிருந்து வந்து போராடினார்கள் என ஆய்வு நடத்தத் தொடங்கிவிடுவார்கள்" என எமது பொறுப்பாளரிடம் கூறினார்.

அடுத்து எமக்குத் தரப்பட்டுள்ள வேலைகளைப் பற்றி விசாரித்தார். “வேறு என்ன சொல்லுங்கள்” என்று அவர் எம்மிடம் கேட்டதுதான் தாமதம்.

“அண்ணா எங்களைப் பயிற்சி எடுப்பதற்கு அனுப்புங்கள்” என ஒருமித்த குரலில் எல்லோரும் பாடினோம். “ஓகோ . . . பயிற்சிக்கு அனுப்பாமலே உங்களைப் பதுக்கி வைத்திருக்கிறார்களா? எனச் சிரித்தபடி, “உங்கள் அனைவரையும் ஒரே அணியில் பயிற்சியெடுக்க அனுப்ப முடியாது.

வேலைகள் பாதிப்படையும். பத்துப் பத்துப் பேராக ஒவ்வொரு பயிற்சி முகாமுக்கும் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்கிறேன்” எனக் கூறி விடை பெற்றுக்கொண்டார்.

நானும் எனது தங்கையும் ஒன்றாக சோதியா முகாமில் பயிற்சி எடுத்தோம்: என்னை இயக்கத்திலிருந்து விலகிச் செல்லும்படி கதறியழுத தங்கை.!!

எமது பொறுப்பாளர் ஒருநாள் என்னை அழைத்து “நான் உங்களை ஒரு கிராம வேலைத் திட்டத்திற்குப் பொறுப்பாக அனுப்பப் போகிறேன். அங்கு உங்களுடன் இன்னொரு உறுப்பினர் மட்டும் இருப்பார் என்று கூறி எனக்கு அந்த வேலையைப் பற்றி விளங்கப்படுத்தினார்.

அன்றைய தினமே எனது உடைமைகளுடன் அந்தக் கிராமத்திற்கு நான் அனுப்பிவைக்கப்பட்டேன்.

குருவியின் தலையில் ஏற்றப்பட்ட பனங்காய் போல இயக்கத்தில் இணைந்து சில மாதங்களுக்குள்ளாகவே எனக்குத் தரப்பட்ட வேலை காரணமாக, எனக்குள் பயமும் கலக்கமும் ஏற்பட்டது.

அதனைச் சரியாகச் செய்து முடிப்பது பற்றிய தீவிர யோசனைகளும் ஏற்பட்டன. கிளாலி கடற்கரையில் மகளிர் முன்னணியால் மாவீரர் சந்திரநாயகியின் பெயருடன் ஒரு தும்புத் தொழிற்சாலை அமைக்கப்பட்டிருந்தது.

**தென்னந்தோட்டங்களில் கிடைக்கும் பொச்சு மட்டையைச் சேகரித்து ஆறு மாதங்கள்வரை கடற்கரை மணலில் புதைத்து வைக்க வேண்டும்.**

அதன்பின் அதனை அடித்துத் தும்பாக்கிய பின் கயிறு, தும்புத்தடி போன்ற பாவனைப் பொருட்களை உருவாக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் நோக்கம் அந்தக் கிராமத்துப் பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தலாகும்.

அத்துடன் அந்தக் கிராமத்திற்குரிய இயக்க வேலைத் திட்டங்களையும் செய்ய வேண்டும்.



இப்படியானதொரு வேலைத் திட்டத்தைச் செயற்படுத்துவது எவ்விதமான முன் அனுபவங்களுமில்லாத எனக்கு ஆரம்பத்தில் மிகவும் கடினமான பணியாகவே தென்பட்டது.

ஆனாலும் அக்கிராமத்தைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த பெரியவர்களின் ஆலோசனையுடன் ஒவ்வொரு பணியாக நிறைவேற்றியபோது எனக்குள் தன்னம்பிக்கையும் ஆர்வமும் மேலிட்டது.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பத்துப் பெண்கள் வரை அத்திட்டத்தில் வேலை செய்தார்கள். மாதத்திற்கு மூவாயிரம் ரூபாவிற்கு உட்பட்டதாகத்தான் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படக் கூடியதாக இருந்தபோதிலும், அன்றைய சூழ்நிலையில் அவர்களுக்குப் பெரும் உதவியாகவே அத்திட்டம் இருந்தது.

அந்தக் கிராமத்தில் மகளிர் அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் நிர்வாகத்தின் கீழ் சிறுவர்களுக்கான ஒரு முன்பள்ளியையும், ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் உருவாக்கினோம்.

அந்தக் கிராமத்தில், ஆண் போராளிகள் எவரினதும் உதவியின்றிப் பொதுமக்களது மனமுவந்த ஆதரவுடன் இரு பெண் போராளிகள் மட்டுமே இவ்வேலைத் திட்டங்களை நிறைவேற்றினோம்.

அதே காலப்பகுதியில் ஆனையிறவு மற்றும் பூநகரி பகுதிகளில் தங்கியிருந்த இராணுவத்தினர் கிளாலி ஊடாக யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறுவதற்கான நகர்வுகளை மேற்கொண்டால் அவற்றை முறியடிப்பதற்கான நோக்குடன் கிளாலி கடற்கரையோரமாக விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள் நிலை கொண்டிருந்தன.

150 பேரைக் கொண்ட அந்த அணிகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் தளபதி விதுஷா. அங்கேதான் அவரை வாழ்வில் முதன்முதலாகச் சந்தித்தேன்.

அடிப்படைப் பயிற்சிகள்கூட இன்னமும் பெற்றுக்கொள்ளாத புதிய போராளிகளான நாம் அந்தக் கிராமத்தில் சிரத்தையுடன் வேலை செய்வதும் மக்களுக்கும் எமக்குமான

உறவில் இருந்த நெருக்கமும் விதுஷாக்காவுக்கு வியப்பாக இருந்திருக்க வேண்டும்.

மாலை நேரங்களில் எம்மை அடிக்கடி கூப்பிட்டுக் கதைத்துக் கொண்டிருப்பார். கடற்கரையில் நடைபெறும் தனது அணியினருக்கான துப்பாக்கிச் சுடும் பயிற்சிகளில் எம்மையும் சேர்த்துக்கொண்டார்.

தனியாக விடப்பட்டிருந்த அரசியல் போராளிகளான எம்மீது அவர் மிகுந்த கரிசனையும் அக்கறையும் கொண்டிருந்தார்.

அந்தக் காலகட்டத்தில் தீவிரமாகப் பரவிக்கொண்டிருந்த மூளை மலேரியா காய்ச்சலில் நானும் பாதிக்கப்பட்டபோது என்னை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்து ஒரு மாதத்திற்கு மேலாக நான் சிகிச்சை பெற்றுக் குணமாகி வரும்வரையிலும் எனது நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர்.

இதன்பின்னர், நான் கிளாலியிலிருந்து மாற்றம் செய்யப்பட்டேன். நீதி நிர்வாகம் படிப்பதற்காகத் தெரிவு

செய்யப்பட்ட போராளிகளில் ஒருவராக என்னையும் தெரிவு செய்திருந்தனர்.

அப்போது மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி எம்மைச் சந்தித்தார். “**அடிப்படைப் பயிற்சி எடுக்காத பிள்ளைகளை அண்ணை கொஞ்சம் கொஞ்சமாக பயிற்சிக்கு அனுப்பச் சொல்லிப்போட்டார்.**
ஆகவே இந்தப் பிள்ளைகளை முதலில் றெயினிங் அனுப்ப வேணும்” எனக் கூறியவர், கிளாலி சோதியா முகாமில் ஆரம்பமாகவிருந்த அணியுடன் பயிற்சி பெறுவதற்கு அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த 52 பெண் போராளிகளை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

சோதியா பயிற்சி முகாமில் 21ஆவது அணியில் பயிற்சி பெறுவதற்காக 1992 ஏப்ரல் மாதமளவில் நான் அனுப்பப்பட்டேன்.

அங்குப் பயிற்சி பெறுவதற்காக எனது தங்கையும் வந்திருந்ததைக் கண்டேன். என்னைப் பிரிந்ததால் எனது

குடும்பத்தவர்கள் அடைந்த வேதனையைக் கதைகதையாகக் கூறினாள்.

எம்மைப் போல எத்தனையாயிரம் பேர் போராளிகளாக இருக்கிறார்கள்? அநியாயமாகச் செத்துப் போவதைவிட மக்களுக்காகப் போராடிச் சாவதுதான் நல்லது என்பதை விளங்கப்படுத்தினேன்.

நானும் அவளும் சகோதரிகள் என்பதைப் பயிற்சி முகாம் பொறுப்பாளர் உட்பட பயிற்சி ஆசிரியர்கள் அனைவரும் அறிந்திருந்தனர். எனவே நாமிருவரும் சேர்ந்து கதைப்பதும், ஒன்றாக இருப்பதும் இயக்கத்தின் நடைமுறைகளுக்குச் சரியானதல்ல என்பதைத் தங்கைக்கு எடுத்துக் கூறினேன்.

எம்மைப் போன்றே உறவுகளைப் பிரிந்திருந்த ஏனைய போராளிகளது உணர்வுகள் எங்களால் புண்படக் கூடாது என்பதை எனது தங்கையும் புரிந்துகொண்டாள்.

அதன் பின்னரான பயிற்சிக் கால நாட்களில் தங்கையுடன் பேசுவதையும், அவளைப் பார்ப்பதையும்கூடத் தவிர்த்துக்கொண்டேன்.

**எனது கண் முன்பாக அவள் கடின பயிற்சியினால் வருந்துவதையோ பயிற்சி ஆசிரியர்களிடம் தண்டனை பெறுவதையோ நான் காணக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன்.**

எனது தங்கை பயிற்சிகளிலும் ஏனைய பண்புகளிலும் சிறப்பாகச் செயற்பட்டுப் பயிற்சியணியின் தலைவியாகவும் முன்னேறியிருந்தாள்.

எமது பயிற்சி முகாமில் இருநூற்று அறுபது பேரளவில் பயிற்சி எடுத்திருந்தோம். அனைத்து மாவட்டத்தைச் சேர்ந்த போராளிகளும் இருந்தார்கள்.

வயது குறைந்தவர்களும் இருந்தனர். எமது பயிற்சி ஆசிரியர்கள் மைதானங்களில் மிகக் கடுமையானவர்களாக நடந்துகொண்டபோதிலும் ஒவ்வொரு போராளிகளினது

தனிப்பட்ட விடயங்களிலும் மிகுந்த கவனமும் அக்கறையும் கொண்டவர்களாக இருந்தார்கள்.

மீண்டும் 10மணி தொடக்கம் 12மணிவரை ஆயுதவகுப்புகள் நடைபெறும். அதன்பின் சரியாக மத்தியானம் பன்னிரண்டு மணிக்குத் தொடங்கி ஒருமணி வரை உச்சி வெயிலில் கொதிக்கும் மணலில் நிலையெடுத்தல் பயிற்சிகள் நடத்தப்படும்.

வியர்வை ஆறாகப் பாய ஆயுதத்துடன் வேகமாக நிலையெடுத்துப் பழக வேண்டும். இந்திய இராணுவத்தினர் பயன்படுத்திய எஸ்.எல்.ஆர். துப்பாக்கி மிகவும் நீளமானது.

அதுதான் எமது பயிற்சி ஆயுதம். இரவு பகல் இடைவிடாத தொடர் பயிற்சிகள் போராளிகளை வாட்டியெடுத்தது.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஓய்வும் இரவில் கலை நிகழ்வுகளும் நடாத்தப்படும். எமக்கு மகளிர் படையணியின் முதலாவது அணியைச் சேர்ந்த ஒரு அக்கா பிரதான பயிற்சியாளராக இருந்தார்.

ஏனைய பயிற்சி முகாம்களைப் போலப் பயிற்சி பெறுவோரை அடித்தல், கடின தண்டனை என்பன எமது முகாமில் அதிகமிருக்கவில்லை.

மாறாக அவர் அதிக நேரம் பயிற்சி பெறுவோருடன் செலவழிப்பார். அவரைக் கண்டாலே பயப்படும்படி நடந்துகொண்டாரே தவிர, அவரது தனிப்பட்ட அணுகுமுறைகள் மூலம் போராளிகளை ஒரு இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

அவரிடம் தனித்துவமான வழிநடத்தும் ஆளுமை இருந்தது. மூன்றுமாதப் பயிற்சிகள் முடிவடைந்தவுடன் பின்னணிக்களமுனைகளுக்கான மேலதிக பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டோம்.

யாழ்ப்பாணம் அரியாலை பகுதிகளில் பெண் போராளிகள் நிலை கொண்டிருந்தனர்.

அந்தப் பகுதிகளுக்கான நீண்ட நகர்வு அகழிகளையும் சாதாரண பதுங்குக் குழிகளையும் அமைப்பதற்காக எனது தலைமையில் 50பேர் கொண்ட அணி அனுப்பப்பட்டிருந்தது.

நாம் அங்கே பணி செய்து கொண்டிருந்த வேளையில் என்ன காரணத்தாலோ எமக்கான உணவு இரண்டு நாட்களாக அனுப்பப்படவில்லை.

கடினமான பதுங்குக்குழி அமைக்கும் வேலைகளைச் செய்த போராளிகள் மிகவும் களைத்துச் சோர்ந்து போயிருந்தார்கள்.

**அது பனம் பழங்கள் பழுத்து விழும் காலமாக இருந்தபடியால் அருகிலிருந்த காணிகளுக்குள் பனம் பழங்களைத் தேடிப் பொறுக்கியெடுத்துச் சூப்பத் தொடங்கினார்கள்.**

இரண்டாம் நாள் மத்தியானம் ஒரு சிறிய வாளியில் உணவு வந்திருந்தது. தாங்க முடியாத பசியிலிருந்தவர்கள் அந்த வாளியின் அளவைப் பார்த்ததும் அழத் தொடங்கிவிட்டனர்.

ஏனென்றால் அந்த உணவின் அளவு பத்துப் பேருக்குக்கூடப் போதாமலிருந்தது. அதனைக் குழையலாக்கி ஒவ்வொருவரும் ஒரு பிடி சோறு மட்டும் உண்டோம்.

முழுவதுமாக ஆறு மாதங்கள் பயிற்சிகள் நிறைவு பெற்ற பின்னர் மீண்டும் நான் அரசியல் பணிக்கே அனுப்பப்பட்டேன்.

**எனது தங்கை சிறுத்தைப் படைப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.**

அதன்பின் எனது தங்கையை மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே நான் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது.

என்னுடன் பயிற்சி பெற்ற தோழிகள் களமுனையில் வீரச்சாவடையும் செய்திகளை அறியும்போது, அவர்களோடு நானும் யுத்தக் களத்திற்குப் போக வேண்டும் என்ற உணர்வு மனதிற்குள் வதைத்துக்கொண்டிருக்கும்.

யாழ்ப்பாணம் நடுவப் பணியகத்திலிருந்து அரசியல் போராளிகள் வேலைகளுக்குப் பிரித்து அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தனர்.

என்னைத் தனியாக அழைத்த பொறுப்பாளர் ஒரு விவசாயப் பண்ணைக்குப் பொறுப்பாகப் போகும்படி பணித்தார்.

புலிகள் இயக்கம் 1991ஆம் ஆண்டு நீதி நிர்வாகப் பிரிவை ஆரம்பித்திருந்தது. ஆனால் நீதி மன்றங்களை ஆரம்பித்திருக்கவில்லை.

காவல்துறையும் தனது பணிகளை விரிவாக்கியிருக்கவில்லை. இக்காலப் பகுதியில், சமூகத்தில் நடைபெறும் குற்றச் செயல்களை அந்தப் பகுதி அரசியல் பொறுப்பாளர்களே விசாரித்துத் தீர்த்து வைத்துக்கொண்டிருந்தனர்.

சில குற்றச் செயல்களில் ஈடுபட்டுத் தண்டனை கொடுக்கப்பட்ட பெண்களைத் தடுத்து வைப்பதற்காகவே இப்பண்ணைகள் உருவாக்கப்பட்டு இருந்தன.

**புன்னாலைக்கட்டுவன் ‘மஸ்கன் பாம்’ நிறுவனத்திற்குரிய பெரிய வளாகம் பெண்களுக்கான நன்னடத்தைப்**

**பண்ணையாக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.**

இந்த இடத்திற்கே நான் பொறுப்பாக அனுப்பிவைக்கப்பட்டேன். நன்னடத்தைப் பண்ணைக்கு நான் பொறுப்பாகச் சென்ற போது அங்குச் சுமார் முப்பது பெண்கள் இருந்தனர்.

அவர்கள் விடுதலைப் புலிகளால் பல்வேறு குற்றங்கள் சாட்டப்பட்டுத் தங்கவைக்கப்பட்டிருந்தனர். புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களால் குற்றவாளிகளாக உறுதிப்படுத்தப்பட்ட அவர்கள் நீதி நிர்வாகப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டு, தண்டனைக் காலம் நிர்ணயிக்கப்பட்டு, கைதிகளாகவே அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

**கசிப்புக் காய்ச்சுதல், களவு, சிசுக் கொலை, பாலியல் தொழில் என அவர்கள் மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன.**

வளமான செம்மண்ணைக் கொண்ட அந்தப் பெரிய தோட்டத்தில் அவர்களுக்கான வேலைகள் கொடுக்கப்பட்டிருந்தன. நான் பொறுப்பெடுத்துச் சென்ற பின்னர் அவர்கள் ஒவ்வொருவருடனும் தனிப்பட்ட முறையில் மனம் விட்டுப் பேசினேன்.

சமூகத்தினால் மூடி மறைக்கப்படும் மனித வக்கிரங்களும் பெண்களை மட்டுமே குற்றவாளியாக்கும் எமது சமூக மனப்பாங்கும் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தின.

சமூகத்தில் பெண்களின் பிரச்சனைகளை நான் ஆழமாகப் புரிந்துகொள்வதற்கு அந்தப் பெண்களின் கண்ணீர்க் கதைகள்தான் ஆரம்பப் பாடங்களாக இருந்தன.

எனது குடும்பம் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டிருந்தபோதும் தோட்டப் பயிர்ச் செய்கை பற்றி எனக்கு அதிகம் தெரிந்திருக்கவில்லை.

இணுவில் பகுதியிலிருந்த அனுபவம் வாய்ந்த ஒரு பெரியவரை அணுகிச் சென்று அவருடைய

ஆலோசனைகளைப் பெறத் தொடங்கினேன். அவர் தனது ஒய்வு நேரங்களை மிகவும் உற்சாகமாக எமது தோட்டத்தில் கழிக்கத் தொடங்கினார்.

என்னென்ன காலத்தில் என்ன பயிர் செய்ய வேண்டும், எப்படி நீர்ப் பாசனப் பாத்திகள் அமைய வேண்டும், எப்படியான உர, மருந்து வகைகளைப் பாவிக்க வேண்டும் என எமது தோட்டம் செழித்து வளர்ந்தது.

அதேவேளை அங்கிருந்த பெண்களும் தோட்டப் பயிர் செய்கைப் பயிற்சியை நல்லமுறையில் பெற்றுக்கொண்டிருந்தனர். அறுவடை செய்யப்பட்ட காய்கறிகளைச் சுன்னாகம் சந்தையில் மொத்தமாக விற்பனை செய்தோம்.

அந்த வருமானத்தைக் கொண்டே அந்தப் பண்ணையில் உள்ளவர்களுக்கான தேவைகளை நிறைவு செய்யவேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. மகளிர் முன்னணியின் நிதிப் பிரிவுக்குக் கணக்குக் காட்ட வேண்டும்.

அந்த வருமானத்தின் மூலமே அங்கிருந்து வெளியேறும் பெண்களுக்கும் உதவிகள் செய்ய வேண்டியிருந்தது.

மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள் என அவர்களுக்கு நிர்ணயிக்கப் பட்டிருந்த தண்டனைக் காலங்கள் முடிந்ததும் வாழ்வாதாரமாக 5,000 ரூபாய் பணமும், அரிசி, மா, சீனி, பருப்பு என எல்லாமுமாக 25 கிலோ பெறுமதியான உணவுப் பொருட்களும் கொடுத்து வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

அப்பெண்கள் நன்னடத்தைப் பண்ணையில் தங்கியிருக்கும் காலத்தில் அவர்களுடைய குடும்பங்களை மாதமொருமுறை சென்று கண்காணித்து மகளிர் முன்னணிப் பொறுப்பாளருக்கு அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அந்தக் குடும்பத்தின் தேவைகளை, குறிப்பாகக் குழந்தைகளுக்கான தேவைகளை அந்தப் பிரதேசப் பொறுப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்து உடனடியாக நிறைவு செய்ய வேண்டும். அதேவேளை அந்தப்பெண்கள் விடுதலையாகி வீடு சென்ற பின்னரும் தெ

தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் அவர்களுடைய வாழ்க்கையின் முன்னேற்ற நிலைமைகளை ஆராய்ந்து தேவைகளை நிறைவு செய்யவேண்டும்.

உண்மையில் இந்தப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட நான்கு உறுப்பினர்களிடமும் ஆளுக்கொரு சைக்கிள் வண்டியைத் தவிர வேறு எந்த வசதிகளும் இருக்கவில்லை.

வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் போகிற வழிகளில் உள்ள வெட்டைகளில் எதிர்காற்றுக்குச் சைக்கிள் ஓட்டிச் செல்வதே பெரும் போராட்டமாக இருந்தது.

## இயக்கத்தின் இரகசியங்கள்: வெளியே சொல்பவருக்கு நூறு கசையடி, கேட்பவருக்கு ஐநூறு கசையடி!!

- மாத்தையா அண்ணர் மீதான துரோகக் குற்றச்சாட்டு வெளிக் கிளம்பியது.

• கேள்விகள் எதுவும் கேட்காது '**வீரமரணம்**' அடையும் வரை இயக்கத்துக்கு விசுவாசமாக போராட வேண்டும் என்பதே இயக்கத்தின் கட்டுப்பாடு!!

• மாத்தையா அண்ணர் தளபதி சொர்ணத்தினால் மானிப்பாயில் அமைந்திருந்த அவரது முகாம் வைத்து சுற்றிவளைக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்

வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் போகிற வழிகளில் உள்ள வெட்டைகளில் எதிர்காற்றுக்குச் சைக்கிள் ஓட்டிச் செல்வதே பெரும் போராட்டமாக இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் மகளிர் படையணியின் இரண்டாம் நிலைத் தளபதியாகக் கேணல் விதுஷா பொறுப்பெடுத்திருந்தார்.

பெண் போராளிகளுடைய தனிப்பட்ட பிரச்சனைகளையும் நிர்வாகப் பொறுப்பு மாற்றங்களையும் தீர்மானிக்கின்ற அதிகாரம் அவருக்கிருந்தது.

புன்னாலைக்கட்டுவன் பெண்கள் நன்னடத்தைப் பண்ணைக்கு வருகை தந்த அவர் மிகுந்த ஆச்சரியத்துடன் அங்கு நாம் மேற்கொண்டிருந்த வேலைகளைப் பார்த்துப் பாராட்டினார்.

1993 ஏப்ரல் யாழ்ப்பாணம் வலிகாமம் கோட்டத்தின் மகளிர் பொறுப்பாளராக நான் நியமிக்கப்பட்டேன். ஊரெழுவில் எமது அரசியல் முகாம் அமைந்திருந்தது.

அங்கு என்னுடன் சேர்த்து இருபது பெண் போராளிகள் இருந்தனர். அவர்கள் அனைவரிலும் நான் இயக்க அனுபவம் குறைந்தவராக இருந்தேன்.

ஆரம்பத்தில் அவர்களை வைத்து எவ்வாறு வேலைகளை நகர்த்தப் போகிறேன் எனக் கலக்கமடைந்தாலும் நாளோட்டத்தில் இயக்கத்தில் பெரியதொரு அலையாக மாத்தையா அண்ணர் மீதான துரோகக் குற்றச்சாட்டு வெளிக் கிளம்பியது.

**மூத்த போராளிகளிடையே அந்த விடயம் மிகுந்த அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. பலர் அழுதார்கள், இன்னும் சிலர் ஆத்திரப்பட்டார்கள்.**

இயக்கத்தின் தலைவர் இந்தியாவில் நிரந்தரமாகத் தங்கியிருந்த 1980 களின் நடுப்பகுதியில், வன்னிப் பிரதேசத்தில் இயக்கத்தைக் கட்டுக் கோப்புடன் வளர்த்ததில் மிக முக்கியப் பங்கு வகித்தவர் மாத்தையா எனப் பல மூத்த பெண் போராளிகள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அத்துடன் வேறு இயக்கத்தில் இணைந்த பெண்களைத் தந்திரமாகப் புலிகள் இயக்கத்தினுள் உள்வாங்கிப் பயிற்சிக்கு அனுப்பியவரும் இவர்தான் எனவும் அப்படி உள்வாங்கப்பட்ட மூத்த பெண் போராளிகள் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் இந்திய இராணுவத்துடனான போரில் புலிகள் ஈடுபடத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் வன்னிப் பகுதியில் பல தாக்குதல்களை வழி நடத்தியவரும், அந்தத் தாக்குதல்களில் ஈடுபட்ட பெண் போராளிகளின் அணிகளை

வழி நடத்தியவரும் மாத்தையா அண்ணர்தான் என எமது பயிற்சி ஆசிரியரும் பல தடவைகள் கூறியிருக்கிறார்.

இயக்கத்தில் அனுபவம் குறைந்த ஆரம்பகட்ட அரசியல் போராளியாக இருந்த எனது தனிப்பட்ட உணர்வுகளில் மாத்தையா விவகாரம் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தா விட்டாலும், இயக்கத்தின் பிரதித் தலைவராக இருந்த ஒருவர் மீது ஏற்பட்டிருந்த இந்தக் களங்கம் அதிர்ச்சியாக இருந்தது.



**நான் மாத்தையா அண்ணரை இரண்டொரு தடவை மாத்திரமே நேரிலே சந்தித்திருந்தேன்.**

வடமராட்சியில் அரசியல் போராளிகளுக்கு நடத்தப்பட்ட ஒரு பேச்சுப் பயிற்சி வகுப்பின்போது, குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் தலைப்புகளில் உடனடியாகப் பேசவேண்டும்.

எனக்குத் தரப்பட்ட தலைப்பில் நான் பேசி முடித்தபோது சிரித்தபடி மாத்தையா அண்ணர் தனது கரங்களைத் தட்டி என்னைப் பாராட்டிய நினைவு மாத்திரமே இருந்தது.

**மானிப்பாயில் அமைந்திருந்த அவரது முகாம், தளபதி சொர்ணத்தினால் சுற்றிவளைக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்ட செய்தியைப் பொதுமக்களும் அறிந்திருந்தனர்.**

அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குள் ஏற்பட்டிருந்த இந்த விடயம் மக்கள் மத்தியில் பெரிய விடயமாகப் பேசப்பட்டது. “**மாத்தையாவுக்கு என்ன நடந்தது**?” என்ற கேள்வி திரும்பும் திசையெல்லாம் மக்களால் கேட்கப்பட்டது.

எங்களைப் போன்ற இளநிலைப் போராளிகளுக்கு எதுவுமே புரியாத குழப்ப நிலையாகவே இருந்தது. ஆனால் அவர் அண்ணைக்குத் (பிரபாகரன்) துரோகம் செய்துவிட்டார்.

இந்தியாவின் ‘றோ’ உளவு நிறுவனத்தின் கையாளாக மாறியதுடன் தலைவரைக் கொலை செய்துவிட்டுத் தானே இயக்கத்தின் தலைவராகச் செயற்படுவதற்கு முயற்சித்தார் என எமது மூத்த போராளிகள் விளக்கம் அப்பாற்பட்ட விடயங்களை ஆராய்வதும் போராளிகள் செய்யத்தகாத காரியங்களாக இருந்தன.

**இயக்கத்தின் இரகசியத்தை வெளியே சொல்பவருக்கு நூறு கசையடிகளும் கேட்பவருக்கு ஐநூறு கசையடிகளும் கொடுக்கப்படும் என்பது பரவலாக இருந்த கருத்தாகும்.**

எனவே போராளிகள் கூடியிருந்து தேவையற்ற கதைகளைப் பேசுவதற்குப் பயந்தனர். புலிகளின் அரசியல் பிரிவை ஒரு அரசியல் கட்சிக்குரிய கட்டமைப்புகளுடன் மாத்தையா ஒழுங்குபடுத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, மகளிர் முன்னணி என்ற பெயர்களுடன் மக்கள் மத்தியில் 'இணக்க சபை', 'பிரஜைகள் குழு' போன்ற அமைப்புகளும் இயங்கிக்கொண்டிருந்தன.

போராளிகளின் முகாம்களில் தலைவரும் மாத்தையாவும் சேர்ந்து நிற்கிற படங்கள் பெரிதாகத் தொங்கிக்கொண்டிருந்த காலம்.

இயக்கத்தில் '**மாத்தையாட ஆக்கள்**' என்று குறிப்பிட்டுக் கதைக்கும் பழக்கமும் இருந்தது. பெண் போராளிகளில்கூட மாத்தையா அண்ணரில் அளவற்ற விசுவாசமுடையவர்கள் இருந்தனர்.

'**மாத்தையா கைது**' நடைபெற்றதன் பின்பு அவரால் ஏற்படுத்தப்பட்டிருந்த அனைத்து அமைப்புகளிலும் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

'**மக்கள் முன்னணி**'யாக இருந்த புலிகளின் அரசியல் பிரிவு '**அரசியல்துறை**' ஆக்கப்பட்டது.

இதன் பொறுப்பாளராக அதுவரை யாழ்ப்பாண மாவட்டச் சிறப்புத் தளபதியாகச் செயற்பட்டு வந்த தினேஸ் (தமிழ்ச்செல்வன்) நியமிக்கப்பட்டார்.

மாத்தையாவின் அரசியல் வேலைகள் அனைத்தும் முழுமையாக வேறு வடிவங்களை எடுத்தன.

அவரால் உருவாக்கப்பட்டிருந்த '**கல்விக் குழு**'வைச் சேர்ந்த போராளிகள் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் வேறு வேலைகளுக்குப் பிரித்து அனுப்பப்பட்டனர்.
இயக்கத்திற்குள் '**மௌனமான குழப்பம்**' அனைவரது மனங்களுக்குள்ளும் அலை மோதிக்கொண்டிருந்த காலமாக அது இருந்தது.
அப்போது நான் வலிகாமக் கோட்டத்தின் மகளிர் பொறுப்பாளராக இருந்தேன். தினசரி மக்கள் சந்திப்புக்களைச் செய்ய வேண்டிய நிலையும், கூட்டங்களில் உரையாற்ற வேண்டிய நிலையும் எனக்கிருந்தது.

வலிகாமக் கோட்டம் எனும் பெரும் பகுதிக்குள் யாழ்ப்பாணத்தின் மையப்பகுதி அடங்கியிருந்தது. வலிகாமம்

கோட்டத்தின் கீழ் ஏழு வட்டச் செயலகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அதன்படி யாழ் வட்டம், நல்லூர் வட்டம், கோப்பாய் வட்டம், உடுவில் வட்டம், சண்டிலிப்பாய் வட்டம், சங்கானை வட்டம், தெல்லிப்பளை வட்டம் என அமைக்கப்பட்டிருந்த பகுதிகளுக்குள் தெல்லிப்பளை வட்டம் இயங்கவில்லை.

அப்பகுதி மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியேறி இடம் பெயர்ந்திருந்தனர். வலிகாமத்தின் ஏனைய பிரதேசங்கள் பலாலி இராணுவ தளத்தின் அச்சுறுத்தல் பிரதேசங்களாக இருந்த காரணத்தால், மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

அதனால் அவை மனித நடமாட்டங்களற்ற சூனியப் பகுதிகளின் பெரும்பகுதி கைப்பற்றப்பட்டதன் காரணமாகப் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் வசித்து வந்தனர்.

அந்த மக்களிடையே தீவக கோட்டத்திற்குரிய அரசியல்பிரிவு உறுப்பினர்கள் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தனர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் அந்த மக்கள் பட்ட துன்பங்களும் அவர்களுடைய கண்ணீர்க் கதைகளும் ஏராளமானவை.

வலிகாமத்தில் எமது பிரதான வேலைத் திட்டங்களாக இருந்தவை மாதந்தோறும் மாவீரர்களுக்கான வீரவணக்க நிகழ்வுகளை நடாத்துதல், கிராம மக்களுடனான சந்திப்புக்களை நடத்துதல், இயக்கத்திற்குப் புதிய போராளிகளை இணைத்தல்,

இயக்கத்தின் சுதந்திரப் பறவைகள், விடுதலைப் புலிகள் ஆகிய பத்திரிகைகளை வீடுவீடாக விற்பனை செய்தல், உயிரிழந்த போராளிகளின் இறுதி நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல், காலத்திற்குக் காலம் இயக்கத்தின் தேவைகளுக்கேற்பப் பணிக்கப்படும் வேலைகளை முன்னெடுத்தல் ஆகியன இந்த வேலைகளில் ஈடுபட்ட காரணத்தால் பல இடங்களையும், பல்வேறுபட்ட குண இயல்புகளைக் கொண்ட மக்களையும் அறிந்துகொள்ளும் அனுபவம் எனக்குக் கிடைத்தது.

உண்மையில், மக்களுடன் பேசிப் பழகி அவர்களது இன்ப துன்பங்களில் பங்கெடுக்கும் சந்தர்ப்பங்கள் எமக்குக் கிடைப்பது எம்மை மேலும் பக்குவப்படுத்தும் என்பதை உணர்ந்துகொண்டேன்.



**இக்காலப் பகுதியில் இயக்கத்தின் காவல்துறைப் போராளிகள் பிரதேசக் காவல் நிலையங்களை அமைத்துச் செயற்படத் தொடங்கினர்.**

அதுவரை மக்களின் பிரச்சனைகளை அரசியல் போராளிகளே தீர்த்து வைத்தனர். அதன் பின்பு அப்படியான பிரச்சனைகள்

எமது முகாம்களுக்கு வரும்போது அவர்களைக் காவல்துறைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி எமக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

கோட்ட மட்டத்திலான வேலைகளில் பெண் போராளிகளுக்கெனச் சில வேலைகள் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருந்தன.

அதை விடுத்து இயக்கத்தால் மக்கள் மத்தியில் பொதுவாக முன்னெடுக்கப்படும் வேலைகளில் பெண் போராளிகளுக்கும் பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகக் குரல் கொடுத்துப் பல ஆண் பொறுப்பாளர்களது எதிர்ப்பையும் முரண்பாடுகளையும் சந்திக்கவேண்டி ஏற்பட்டது.

அரசியல் போராளிகளுக்கான '**அரசறிவியல் பயிற்சிக் கல்லூரி**' ஒன்று இருபாலையில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு அனைத்து உறுப்பினர்களும் ஒன்று சேர்க்கப்பட்டு வகுப்புகள் நடைபெறுவது வழக்கம்.
இயக்கத்தின் மூத்த பயிற்சிகள், விவாத அரங்குகள் என்பனவும் பொதுஅறிவுப் பரீட்சைகளும் நடைபெறும்.

இப்படியான சந்தர்ப்பங்கள் இயக்க உறுப்பினர்களுக்கு அறிவு புகட்டுவதாகவும், அவர்களின் திறமைகளை இனங்காணும் களங்களாகவும் இருந்தன.




புதிதாகக் ‘**கல்விப் பிரிவு**’ ஒன்றை உருவாக்குவதற்காகப் போராளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண் பெண் போராளிகளை உள்ளடக்கிப் பத்துப் பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். கல்விக் குழுப் போராளிகள்

ஒவ்வொருவரும் ஒரு பொறுப்பாளருக்குரிய தகமைகளுடன் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனால் தெரிவு செய்யப்பட்டனர்.

யுத்தக் களங்களில் அணிகளை வழிநடத்திய அனுபவமுள்ளவர்களும், மக்கள் மத்தியில் அரசியல் வேலைகளைச் செய்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அந்த அணிக்கு நானும் தெரிவு செய்யப்பட்டிருந்தேன். இயக்கத்தில் எந்த வேலையைத் தந்தாலும் ஒரு உடுப்புப் பையைத் தூக்கிக்கொண்டு உடனே புறப்படத் தயாராக இருந்தனர் போராளிகள். நானும் அப்படியே செயற்பட்டேன்.

நின்று நிதானிக்காத காட்டாறுபோலக் காலம் ஓடிக்கொண்டிருந்தது. ஒரு இறுக்கமான நிறுவனமாகக் கட்டியெழுப்பப் பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நான் செயற்பட்ட காலம் அதனுடைய உச்ச எழுச்சிக் காலமாகவே இருந்தது.

**இயக்கத்தின் நடவடிக்கைகளிலும் தீர்மானங்களிலும் இருந்த சரி, பிழைகளை இனங்கண்டு கொள்ளவோ அல்லது அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து எமது நிலைப்பாடுகளை மாற்றியமைப்பதோ இயக்கத்திற்குள் கற்பனையிலும் நடக்க முடியாத ஒரு காரியமாக இருந்தது**.

மேலும் களமுனையில் நாளாந்தம் எந்தக் கேள்விகளுமே கேட்காது எமது சக போராளிகள் தமது உயிரை இழந்து கொண்டிருந்தார்கள்.

அந்தத் தியாகங்களுக்கு முன்னால் வேறு எதனாலும் எழுந்து நிற்க முடியாதிருந்தது. 'வீரமரணம்' அடையும் வரை விடுதலை இயக்கத்தின் விசுவாசமிக்கப் போராளியாகக் கடமையாற்ற வேண்டும் என்பதைத் தவிர எனது சிந்தனைகளில் வேறு எதுவுமே தென்படவில்லை.

காலநதி எல்லா மேடு பள்ளங்களையும் நிரப்பியபடி வேகமாகப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது

## இந்திய சிறையிலிருந்து தப்பி வந்தவரான கிருபன் என்பவரை பயன்படுத்தி தலைவரை கொல்ல முயற்சித்த மாத்தையா!!



• தலைவரின் உணவில் நஞ்சு வாகனத்தில் வெடிகுண்டு பொருத்தியமை என்ற சதிகளில் மாத்தையாவின் தூண்டுதலினால் இவர்கள் ஈடுபட்டார்கள் எனவும் கூறப்பட்டது.

• பூநகரி சமரில் வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலுமிருந்து தாக்குதல் பயிற்சி பெற்ற ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளைக் கொண்ட தாக்குதலணிகள் இந்தச் சமரில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

• தாக்குதலை ஆரம்பித்த முதல் மூன்று நாட்களிலும் ஐநூற்றுக்கும் அதிகமான போராளிகள் வீர மரணமடைந்திருந்தனர்.

• இராணுவத்தினரதும் புலிகளினதும் உயிரற்ற உடல்கள் மழைத் தண்ணீரில் ஊறிப்போய் ஆங்காங்கு விறைத்துக் கிடந்தன. மழையில் கரைந்து கரைந்து சிவப்புக் குருதி தண்ணீரோடு கலந்து ஓடிக்கொண்டிருந்தது.

• பூநகரி சமர் மக்கள் மத்தியில் புலிகளைப் பற்றிய பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருந்தது. அதேவேளை மாத்தையாவுடன் சதியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் பல திறமையான மூத்த போராளிகள் கைது செய்யப்பட்டனர்

**தமிழ் மக்களும் ஆயுதப் போராட்டமும்...**



பாரிய இராணுவத் தளமொன்றின் அமைவிடத்தைச் சித்திரிக்கும் மாதிரி அமைப்புக்களுடன் கூடிய பெரிய வரைபடத்தினைச் சுற்றி வளைத்து நின்றுகொண்டிருந்தோம். எமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த மாதிரி உருவைச் சுட்டிக் காட்டினார் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி. “இது எந்த இடமென்று தெரிந்த ஆக்கள் சொல்லுங்கோ பாப்பம்” எனக் கூறியபடி, அங்கு நின்றுகொண்டிருந்த போராளிகளை நோக்கினார்.

கடலும் கடல் சார்ந்த வெட்டைவெளிப் பிரதேசங்களும் கொண்டதான நிலப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ

முகாமின் தோற்றத்தை விவரிப்பதாக அந்த மாதிரி வரைபடம் அமைந்திருந்தது. “ஆனையிறவு”, “முல்லைத் தீவு”, “இல்லையில்லை ஆனையிறவுதான்.”

போராளிகள் தமது பல்வேறு அனுமானங்களையும் ஊகங்களையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். சற்று நேரம் மௌனமாகப் பார்த்த அனைவரையும் அமைதியாக இருக்கும்படி சைகை காட்டினார்.

**“எல்லாரும் வடிவாக் கவனிச்சுக் கொள்ளுங்கோ. இது பூநகரி இராணுவத் தளத்திற்குரிய வரைபடம்.**
நாங்கள் இவ்வளவு நாளும் பயிற்சி எடுத்தது இந்தப் பூநகரி இராணுவ தளத்தைத் தாக்கியழிப்பதற்காகத்தான்.

இது கடலும் தரையும் சேர்ந்த இராணுவத் தளம். ஆகவே ஒரே நேரத்தில கடலாலும் தரையாலும் இந்த முகாமின் மீது தாக்குதல் நடத்துவதற்கான திட்டமொன்றை இயக்கம் வகுத்துள்ளது.”

1993 இறுதிப் பகுதியில் அச்சுவேலிப் பகுதியில் வல்லைவெளியோடு சேர்ந்திருந்த கடல் நீரேரியில் ஒரு மாதிரி இராணுவ தளம் அமைக்கப்பட்டு எமது அணிகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால் அது எந்த இராணுவத் தளத்தின் மாதிரி வடிவம் என்பது இப்போதுதான் எங்களுக்குப் புரிந்தது.

நான் முதன் முதலாகப் பங்கெடுத்த பெரிய தாக்குதல் பூநகரி இராணுவ முகாம் மீதானதாகும். பதினைந்து போராளிகளைக் கொண்ட அணியொன்றுக்குப் பொறுப்பாக நான் நியமிக்கப்பட்டிருந்தேன்.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் இரவு பகல் பாராது கடினமான பயிற்சியில் எமது அணிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. திருகோண மலையைச் சேர்ந்த போராளியான மேஜர் சுமங்கலா 45 பேரைக் கொண்ட எமது அணிக்குப் பொறுப்பாக இருந்தார்.

விடுதலைப் புலிகளின் மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுசாவுடன் இந்த தாக்குதல் நடவடிக்கைக்காக விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு வருடத்திற்கும் மேலான தயார்படுத்தல்களை மேற்கொண்டிருந்தது.

**வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலுமிருந்து தாக்குதல் பயிற்சி பெற்ற ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளைக் கொண்ட தாக்குதலணிகள் இந்தச் சமரில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.**

மகளிர் படையணிப் போராளிகள் மாத்திரம் ஆயிரம் பேர் வரை இப்போருக்காகத் தயாராகியிருந்தனர்.

பூநகரி இராணுவ முகாம் பற்றிய வேவு நடவடிக்கைகளிலும் மகளிர் அணிப் போராளிகள் ஆரம்பத்திலிருந்தே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அது மட்டுமல்லாமல் கடல் தாக்குதல் நடவடிக்கையிலும் கடற்புலி பெண் போராளிகள் அதிக அளவு ஈடுபட்டிருந்தனர்.

மாதக் கணக்காக வழங்கப்பட்டிருந்த விசேடமான கடும் பயிற்சிகளோடு உச்சமான இரகசியப் நுழைவாயிலான ஆனையிறவிலிருந்த இராணுவ முகாமின் பலத்தைக் குன்றச் செய்வதும், வன்னிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான கிளாலி கடல் நீரேரிப் பாதையைப் புலிகளது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும், யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கைப்பற்றும் இலங்கை இராணுவத்தினருடைய திட்டத்தை முறியடிப்பதுமே புலிகளுடைய நோக்கமாக இருந்தது.

புலிகளின் தாக்குதல் வரலாற்றிலேயே முதற் தடவையாக ஒரு இராணுவ – கடற்படைக் கூட்டுப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட ஊடுருடகத் தாக்குதல் இதுவாகும்.

இதனால் இந்நடவடிக்கைக்கு “**ஒப்பரேசன் தவளை**” என இயக்கம் பெயர் சூட்டியிருந்தது.

இயக்கத்தின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளரான பொட்டு அம்மான் அந்த நடவடிக்கையை ஒருங்கிணைக்கும் பிரதான பொறுப்பை வகித்தார்.

நான் பொட்டு அம்மானைப் பல சந்தர்ப்பங்களில் நேருக்கு நேர் கண்டிருந்தாலும் அவரது நேரடியான தாக்குதல் விளக்கத்தைப் பூநகரிப் பயிற்சியின் போதே பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து எமது அணிகள் கிளாலி கடல் நீரேரி மூலமாக வன்னிக்கு நகர்த்தப்பட்டது.

இரவோடிரவாக லொறிகளில் அடைத்து ஏற்றப்பட்டு அம்பகாமம் காட்டுப் பகுதியில் அமைந்திருந்த ஒரு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டோம்.

அங்கு இரண்டு நாட்கள் வரையில் தாக்குதல்களுக்கான இறுதித்தயார்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

அனைவருக்கும் சாக்குத் தொப்பி, துப்பாக்கிகளுக்குத் தேவையான மேலதிக ரவைகள், கைக்குண்டுகள், தொலைதொடர்புக்கான சங்கேதக் குறியீடுகள், தொலைதொடர்புச் சாதனங்களுக்கான மேலதிக பற்றரிகள், உலர் உணவுப் பொதிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டன.

பல போராளிகள் தமது குடும்பத்தவர்களுக்குத் தமது இறுதி மடல்களையும் எழுதிக்கொண்டிருந்தனர்.

எனது நெருங்கிய பல நண்பிகளும் இத்தாக்குதலில் பங்கெடுத்தனர்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கனவுகள், நம்பிக்கைகள், அவநம்பிக்கைகள், உயிர்மீதான உத்தரவாதமின்மை, வெளிப்படுத்த முடியாத விரக்தி என, நிச்சயிக்கப்பட்ட யுத்தமொன்றில் பங்குபெறும் போராளிகளின் இறுதிக் கணங்களில் அவர்களுடைய கண்களில் தேங்கியிருக்கும் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள முடிந்தது.

எவராலும் மீண்டுமொரு யுத்தத்தைப் பற்றிப் பேசவோ அல்லது நினைத்துப் பார்க்கவோ முடியாது.

பூநகரியின் வயல்வெளிகளும், கார்த்திகை மாதத்துத் தொடர் மழையும், 1993இன் செப்டெம்பர் 11இல் ஆரம்பித்த அந்த யுத்தத்தை மிகவும் உக்கிரமானதாக மாற்றியமைத்திருந்தன.

**தாக்குதலை ஆரம்பித்த முதல் மூன்று நாட்களிலும் ஐநூற்றுக்கும் அதிகமான போராளிகள் வீர மரணமடைந்திருந்தனர்.**

இயக்கத்தின் தாக்குதல் வரலாற்றில் முதன்முதலாக இலங்கைப் படையினரின் யுத்த டாங்கி ஒன்று புலிகளால் கைப்பற்றப்பட்டிருந்தது.

அந்த டாங்கியைப் பூநகரியிலிருந்து புலிகளின் பிரதேசத்திற்குள் கொண்டுவரும் பாதைகளில் அமைந்திருந்த பதுங்குக் குழிகளையும் முட்கம்பிச் சுருள்களையும் அகற்றி உடனடியாகப் பாதையைச் செப்பனிடும்படி எனது அணிக்கு உத்தரவிடப் பட்டிருந்தது.

நானும் என்னோடு பல போராளிகளும் இணைந்து துரித கதியில் இயங்கிப் பாதையைச் செப்பனிட்டு முடித்த ஓரிரு நிமிடங்களில் பெரும் உறுமலுடன் யுத்த டாங்கி எம்மைக் கடந்து சென்றது.

புலிக் கொடியை விரித்துப் பிடித்தவாறு ஆண் போராளிகள் பலர் அந்த டாங்கியின்மீது ஏறி நின்று பெரும்

சத்தமிட்டுக்கொண்டு சென்றனர். அக்காட்சியைக் கண்ட எமது மனமும் வெற்றிப் பெருமிதத்தில் குதூகலித்தது.

இறுதியாக நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பின்னர், வாட்டர்லூ போர்க்களத்தைப் பார்வையிட்ட வெலிங்டன் பிரபு கூறியது, “தோல்வியுற்ற ஒரு போர் தரும் துயரத்திற்கு அடுத்ததாகப் பெரும் துயரம் தருவது போரில் ஈட்டிய வெற்றியே” (Next to a battle lost, the saddest thing is a battle won.) எனது வாழ்விலும் முதன்முதலாக இத்துயரத்தை நான் அனுபவித்தேன்.

வீட்டை விட்டு வெளியேறி இயக்கத்தில் இணைந்த பின்னர், என்னுடன் உயிருக்குயிராகப் பழகிய எனது நெருங்கிய நண்பிகளில் பலரை அந்தச் சமரில் எனது கண்ணெதிரிலேயே நான் இழந்துபோனேன்.

அவர்களில் சாம்பவி எனக்கு மிக நெருக்கமான தோழி. யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் திறமை மிக்க மாணவிகளில் ஒருத்தியாக இருந்து, பல

ஆசிரியைகளின் கவலை தோய்ந்த முகங்களையும் தாண்டி, 1991இல் இயக்கத்தில் இணைந்துகொண்டவள்.

மேஜர் சோதியா முகாமில் 23ஆவது அணியில் போராளியாக ஆயுதப் பயிற்சி பெற்றவள். மிகச் சிறந்த தலைமைத்துவப் பண்புகளும், சிறுவயதிலேயே அபாரமான சிந்தனைத் தெளிவும், திறமையும் கொண்ட அவளது பயிற்சி முகாம் அனுபவங்கள் கண்ணீரை வரவழைப்பவை.

குறுகிய மனப்பாங்கும் வக்கிர குணங்களும் கொண்டவர்களின் கரங்களில் ஆயுதங்களும் அதிகாரமும் போய்ச் சேரும்போது எத்தகைய மோசமான அத்துமீறல்கள் நடைபெறும் என்பதற்கு அந்தப் பயிற்சி முகாமின் ஒரு சில ஆசியர்கள் உதாரணமாக இருந்தனர்.

அரசியல் போராளிகளாகப் பணியாற்றிய பின்னர் ஆயுதப் பயிற்சி பெறுவதற்காக வந்தார்கள் என்ற காரணத்திற்காக வயது வித்தியாசமின்றி அங்கே கொடூரமான முறையில் பயிலுநர்கள் நடத்தப்பட்டிருந்தனர்.

**இரத்தக் காயங்கள் ஏற்படுமளவுக்கு அடியுதைகளும், மனதை நோகடிக்கும் குரூரமான வார்த்தைகளும், தனிப்பட்ட பழிவாங்கல்களும் என அந்த மகளிர் பயிற்சி முகாமில் அரங்கேறிய சம்பவங்கள் ஒட்டுமொத்தமான பெண் போராளிகளுக்கும் மிகத் தவறான முன்னுதாரணங்களாகவே இருந்தன**.

வயல்வெளிகளுக்கூடாக நானும் சாம்பவியும் தவழ்ந்தபடி முன்னேறிக் கொண்டிருந்தோம். மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்ததால் வெள்ளம் தேங்கிக்கிடந்தது.

தூரத்தே உயரமான நிலை ஒன்றிலிருந்து தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த இராணுவத்தின் குறிபார்த்துச் சுடுபவனின் இலக்குத் தவறாத ரவைகள் அந்த வயல்வெளியில் பல போராளிகளின் உயிர்களைக் குடித்துக்கொண்டிருந்தன.

சிறிதாகக்கூடத் தலையை நிமிர்த்திப் பார்க்க முடியாத நிலையில் சேற்று வயல்களுக்கூடாக நாம் தவழ்ந்துகொண்டிருந்தோம்.

எனது பக்கவாட்டில் ஊர்ந்துகொண்டிருந்த சாம்பவியிடமிருந்து திடீரென ‘ஹக்’ என வினோதமான சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

அவளது முகம் சேற்றுக்குள் புதைந்துபோய்க் கிடந்தது. நான் அவளது தலையை நிமிர்த்திப் பார்த்தபோது கடைவாயில் இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

ஒரேயொரு ரவை சாம்பவியின் மார்பைத் துளைத்து வெளியேறாமல் அவளது இதயப் பகுதியில் தங்கியிருந்தது.

குளிரத் தொடங்கியிருந்த அவளது உடலில் ஒட்டியிருந்த இறுதி உயிர்ச் சூட்டை எனது கைகளில் கடைசியாக உணர்ந்தேன். இந்தச் சமரில் தனக்கு மரணம் ஏற்படுமெனச் சாம்பவி கொஞ்சமேனும் நினைத்திருக்கவில்லை.

“இந்தச் சண்டை முடிய உன்னுடன் வந்து வன்னியில் இடங்களைச் சுற்றிப்பார்க்க வேண்டும். எமது அனுபவங்களைப் புத்தகமாக எழுதவேணும்” இப்படியான நிறையக் கனவுகளும் விருப்பங்களும் அவளிடம் இருந்தன.

அதே வயல்வெளியில் தலையில் சூடுபட்டு உயிரிழந்து போன இன்னொரு தோழி தாமரை. அதிகமாகப் பேசாமல் அமைதியாகவே இருந்து அனைவரையும் கவர்ந்துவிடும் அவளது கண்களில் இடையறாத சோகம் குடியிருப்பதாக எனக்குப் படுவதுண்டு.

யுத்தம் தொடங்குவதற்கு முதல் நாள் இரவு பூநகரியின் நாலாம்கட்டைப் பகுதியில் எமது அணிகள் இறுதியாகத் தங்கியிருந்த இரவு.

இராணுவ முகாமின் பாரிய தேடொளி (focus) விளக்குகள் வழமைபோலச் சுழன்று சுழன்று அப்பிரதேசத்தையே பகலாக்கிக் கொண்டிருந்தன.

பரா விளக்குகளும் உயரத்தில் எழுந்து பிரகாசித்துக்கொண்டிருந்தன.

எமது சிறிய அணியில் ஒரு போராளி மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தாள். “உங்கள் ஆவி பிரிந்திடும் அக்கணப் பொழுதில் யாரை நினைத்தீரோ” என்ற வரிகளை கடந்து

சென்றபோது எனது மனதில் அம்மாவுடைய முகம் வந்து போனது.

எனது பக்கத்தில் அமர்ந்திருந்த தாமரையிடம் கேட்டேன்; "**நீ யாரை நினைப்பாய் தாமரை?**" வழமையான அவளின் சோக விழிகள் ஒரு தடவை மின்னியது. காய்ந்து போயிருந்த உதடுகளில் மெல்லிய புன்னகை நெளிந்தது. "**நான் விரும்பியிருந்தவரைத்தான் நினைப்பேன்.**

" அவள் சொன்ன பெயர் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் அவளுக்குள் ஆழப் புதைந்து கிடந்த காதலின் இரகசியக் காயத்தை அப்போதுதான் எனக்குத் திறந்து காட்டியிருந்தாள்.

ஏதோ ஒரு யுத்தத்தில் அவளுடைய போராளிக் காதலன் ஏற்கனவே உயிரிழந்திருந்தான். இப்படியாக நீளும் எண்ணுக் கணக்கற்ற கண்ணீர்க் கதைகளோடு பூநகரி யுத்தம் புலிகள் இயக்கத்திற்குப் பாரிய வெற்றியைப் பெற்றுக் கொடுத்திருந்தது.

அதிவேக நீருந்து விசைப் படகுகள் கைப்பற்றப்பட்டதும், பல கனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும் பெரும் வெற்றிகளாகப் புலிகளால் கொண்டாடப்பட்டது.

இலங்கை இராணுவத் தரப்பிலும் அதிக அளவு எனது ஆழ்மனதில் பதிந்துபோன சித்திரமாகி விட்டிருந்தது.

**இராணுவத்தினரதும் புலிகளினதும் உயிரற்ற உடல்கள் மழைத் தண்ணீரில் ஊறிப்போய் ஆங்காங்கு விறைத்துக் கிடந்தன.**

மழையில் கரைந்து கரைந்து சிவப்புக் குருதி தண்ணீரோடு கலந்து ஓடிக்கொண்டிருந்தது.

சற்று நேரத்திற்கு முன்பு வரை தீராப் பகையுணர்ச்சியோடு எதிரும் புதிருமாக நின்று போரிட்டவர்கள் நிலத்தில் சடலங்களாக சிதறிக்கிடந்த காட்சி ஒரு தாயின் மடியில் உறக்கத்தில் புரண்டு கிடக்கும் குழந்தைகளையே நினைவுபடுத்தியது.

எல்லா வேறுபாடுகளும், முரண்பாடுகளும், பகைமைகளும் அர்த்தமிழந்து போகும் இடமும் போர்க்களம்தான் என்பதை முழுமையாக உணரக்கூடிய அறிவு உண்மையாகவே அப்போது எனக்கிருக்கவில்லை.

அரசியல்துறைப் பொறுப்பாளரான தமிழ்ச்செல்வன், தளபதி சொர்ணம் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் காயமடைந்திருந்தனர்.

மூன்று நாட்களின் பின் எமது அணிகள் பூநகரியிலிருந்து பின்வாங்கியிருந்தன. இந்தத் தாக்குதலில் பங்கு பெற்ற அனைத்துப் போராளிகளுக்கும் ஒரு வாரம் விடுமுறை தரப்பட்டிருந்தது.

இயக்கத்தில் இணைந்ததன் பின்பு முதன்முதலாக நான் வீட்டிற்கு விடுமுறையில் சென்றிருந்தேன். சரியாக மூன்று வருடங்களில் குடும்பத்தில் பல மாற்றங்கள் உருவாகியிருந்தாலும் எனது குடும்பத்தினர் என்னை அரவணைத்து அன்பு மழை பொழிந்தார்கள்.

விடுமுறை முடிந்து மீண்டும் முகாமுக்குத் திரும்பியபோது எவருமே என்னுடன் பேசாது கண்ணீருடன் விலகிச் சென்றனர்.

மீண்டும் உறவுகளைப் பிரிந்து செல்வது துன்பமாக இருந்த போதிலும், உயிரைக் கொடுத்த தோழியரின் நினைவுகள் என்னை மீண்டும் போராட்டப் பாதைக்கே இழுத்துச் சென்றன.

கொக்குவில் பகுதியில் மாத்தையாவால் அமைக்கப்பட்டிருந்த மக்கள் முன்னணிக்குரிய ‘லிங்கம்’ முகாம் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் அரசியல்துறைச் செயலகமாக மாற்றப்பட்டிருந்தது.

அதன் வளாகத்திலேயே இன்னொரு பகுதியில் அரசியல் கல்லூரியும் அமைக்கப்பட்டது. ஆண், பெண் போராளிகளுக்கான தனித்தனி வீடுகளும் இருந்தன.

அதன் சுற்றுவட்டாரத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழகமும் அமைந்திருந்த காரணத்தால், கைலாசபதி கலையரங்கில்

நிகழும் பல பெறுமதியான கல்விசார்ப் பொது நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

1993இன் நடுப்பகுதியில் அங்கு நடைபெற்ற இதழியல் பயிற்சிப் பட்டறையிலும் கலந்து கொண்டு ஊடகத்துறை பற்றிய பல பெறுமதியான விடயங்களைக் கற்றுக்கொள்ள முடிந்தது.

இயக்கத்தின் முக்கியஸ்தர்களாலும் இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பேராசிரியர்களாலும் பல புதிய விடயங்கள் கல்விக் குழுப் போராளிகளுக்குக் கற்பிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வரலாறு, உலக விடுதலைப் போராட்டங்களின் வரலாறுகள், சமூகவியல், பொது அறிவு போன்ற பல வ ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டாலும் எதுவுமே தொடர்ச்சியாக அமையவில்லை.

ஏனெனில் இயக்கத்தின் பரப்புரைப் பணிகளில் கல்விக் குழுப் போராளிகள் சிறப்பு அணிகளாகப் பயன்படுத்தப்பட்டனர்.

ஆகவே அடிக்கடி வகுப்புகள் குழம்பிவிடும். 1994 புலிகள் இயக்கம் யாழ் மாவட்டத்தில் பெரிய அளவு பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.



**பூநகரி சமர் மக்கள் மத்தியில் புலிகளைப் பற்றிய பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருந்தது. அதேவேளை மாத்தையாவுடன் சதியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் பல திறமையான மூத்த போராளிகள் கைது செய்யப்பட்டனர்.**

அரசியல் பிரிவிலும் அனேகமான பொறுப்பு மாற்றங்கள் இடம்பெற்றன. இப்படியான சந்தர்ப்பத்தில் இருபாலை அரசியல் கல்லூரியில் இயக்கத்தின் இடைநிலைப் பொறுப்பாளர்களுக்கும், மூத்த பொறுப்பாளர்கள் மற்றும்

தளபதிகளுக்குமான ஒரு கூட்டம் இயக்கத்தின் புலனாய்வுத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அக்கூட்டத்தில் கல்விக் குழுப் போராளிகளும் பங்குபெற்றிருந்தோம். கையில் விலங்கு போடப்பட்டிருந்த நிலையில் வரிசையாகப் பலர் மேடையில் இருத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

எனக்கு அவர்களில் ஒருவரைத் தவிர வேறொருவரையும் தெரிந்திருக்கவில்லை. நான் சிறு வகுப்பு படித்த காலத்தில், எமது ஊரில் சாரத்தோடு சைக்கிளில் உலவித் திரிந்த சுசீலன் அண்ணா என்று அழைக்கப்படும் போராளியை மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தது. சிவந்த நிறமும் உயர்ந்த தோற்றமும் கொண்டவர்.

இவர்தான் பூநகரி சமரில் புலிகள் கைப்பற்றிய யுத்த டாங்கியை எவ்வித முன் அனுபவமும் இன்றித் திறமையுடன் செலுத்திக்கொண்டு வந்தவர் எனப் போராளிகள் மட்டத்தில் பேசிக்கொண்டதைக் கேள்விப்பட்டிருந்தேன்.

அவர் மிகவும் திறமையான ஒரு போராளியென அனைவராலும் அறியப்பட்டிருந்தவர். அவர் அப்படியான ஒரு தவறைச் செய்திருப்பாரென்பதை என்னால் நம்ப முடியாமலிருந்தது.

அந்தக் கூட்டத்தில் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒரு பொறுப்பாளர் அவர்கள் மீதான குற்ற அறிக்கையை வாசிக்கத் தொடங்கினார்.



இயக்கத்தின் பிரதித் தலைவர் நிலையில் இருந்த இந்தியாவின் உளவு அமைப்பான '**றோ**' வின் முகவராக

மாறி, இயக்கத்தின் தலைவருக்கு எதிராகச் செயற்பட்டதாகவும், அந்த நடவடிக்கைக்கு இவர்கள் துணை போனதாகவும் கூறப்பட்டது.

அதாவது **இந்தியாவின் சிறையிலிருந்து தப்பி வந்தவரான கிருபன் என்பவரை 'றோ' தனது திட்டத்திற்குப் பயன்படுத்தியதாகவும்** அவர் இந்தியச் சிறையிலிருந்து தப்பி வந்ததாகக் கூறினாலும் உண்மையாகவே அவர் 'றொ' அமைப்பினால் தலைவரை அழிக்கும் சதித் திட்டத்திற்காக அனுப்பிவைக்கப்பட்ட ஒருவரே எனவும் மீண்டும் இயக்கத்துடன் இணைந்து செயற்படுவதன் ஊடாக இயக்கத்தின் நம்பிக்கையைப் பெற்று அதன் மூலம் தனது திட்டத்தை அவர் நிறைவேற்றிக்கொள்ள இருந்தார் எனவும் கூறப்பட்டது.

தலைவரின் உணவில் நஞ்சு வாகனத்தில் வெடிகுண்டு பொருத்தியமை என்ற சதிகளில் மாத்தையாவின் தூண்டுதலினால் இவர்கள் ஈடுபட்டார்கள் எனவும் கூறப்பட்டது.

ஆனையிறவு போரில் உயிர் நீத்த மாவீரர்களை நினைவு கூருமுகமாகக் கொடிகாமத்தில் அமைக்கப்பட்ட நினைவாலயத்தைத் திறந்து வைப்பதற்காகத் தலைவர் வருகை தரும்போது, அவரை அங்கே கொல்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டிருந்ததாகவும், அதற்காக ஆயுதங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் திடீரென அந்த நிகழ்வுக்குத் தலைவர் சமூகமளிக்காத காரணத்தால் அத்திட்டம் செயற்படுத்தப்படவில்லை எனவும் கூறப்பட்டது.

கொடிகாமம் நினைவாலயம் திறப்பு விழாவுக்கு '**அண்ணை வரப்போறார்**' எனப் போராளிகள் மட்டத்தில் குதூகலமாகப் பேசிக்கொள்ளப்பட்டதும், என்ன காரணத்தாலோ இறுதிக் கணத்தில் பொட்டம்மான் வந்து திறந்து வைத்ததும் எனது நினைவுக்கு வந்தது.

அந்தக் காலகட்டத்தில் மாத்தையா மட்டுமே தனது பிஸ்டலுடன் தலைவருக்கு முன்பாகச் செல்லக் கூடியதான அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

எனவே எதிர்பாராதவொரு தருணத்தில் மாத்தையா தனது கைத்துப்பாக்கியால் தலைவரைச் சுட்டுக்கொல்லுவார் எனவும், ஆத்திரமுற்ற கிருபன் உடனடியாகவே மாத்தையாவைச் சுட்டுக் கொல்லுவார் எனவும், தலைவர் மேலிருந்த பக்தி விசுவாசத்தால் துரோகியான மாத்தையாவைக் கிருபன் அழித்ததாக நம்பும் போராளிகள் கிருபனையே தலைவராக ஏற்றுக்கொண்டு அவரின் கீழ் செயற்படுவதற்கு முன்வருவார்கள் என்பதுதான் 'றோ'வின் உண்மையான திட்டம் எனவும் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை 'றோ'வின் கைப்பொம்மையாக்குவதற்குப் போடப்பட்ட திட்டம் முறியடிக்கப்பட்டுவிட்டதாக அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இயக்கத்தில் போராளிகளுக்கு இறுக்கமான கட்டுப்பாடுகள் இருந்தன.

பண மோசடி செய்தல், பாலியல் குற்றங்களை இழைத்தல் இப்படியான தவறுகளுக்கு அதி உச்சக்கட்ட தண்டனையாக மரண தண்டனையே வழங்கப்பட்டது.

ஆனால் இயக்கத்தின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையா தனது பொறுப்பின் கீழிருந்த போராளிகள் இத்தகைய தவறுகளில் ஈடுபடும்போது தண்டனை எதுவும் வழங்காத அதேவேளை, உங்களது தவறுகளைத் தலைவருக்குத் தெரியப்படுத்தினால் என்ன தண்டனை கிடைக்குமென்று தெரியும்தானே, நான் உங்களைப் பாதுகாக்கிறேன்;

நீங்கள் எனக்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அவர்களைத் தனது கையாட்களாகப் பயன்படுத்தியதாகவும் கூறப்பட்டது.

**அந்தக் கூட்டத்தில் கைதிகளாகக் கைவிலங்கிடப் பட்டிருந்தவர்கள் ஒவ்வொருவராக எழுந்து நின்று தாம் செய்த குற்றச் செயல்களைத் தாமே ஒப்புக்கொண்டனர்.**

அந்தக் கூட்டத்தில் கூடியிருந்த போராளிகள் அனைவரும் அசையாது சிலைபோல அமர்ந்திருந்தனர். என்னைப் பொறுத்த அளவில் இலட்சியத்தால் ஒன்றிணைந்த உணர்வு ரீதியான குடும்பமாகவே இயக்கத்தைக் கருதியிருந்தேன்.

ஆனால் இப்படியான விடயங்களை அறிந்த போது மூச்சுக்கூட விடமுடியாத அளவுக்குப் பயமும் கலக்கமும் ஏற்பட்டது.

என்னைப் போலவே பல போராளிகளும் உறைந்து போயிருந்ததை என்னால் உணர முடிந்தது. தமது உணர்ச்சி களைத் தாங்கிக்கொள்ள முடியாத சில போராளிகள் இரகசிய மாக அழுதுகொண்டிருந்தார்கள், வேறு சிலர் எழுந்து நின்று குற்றம் சாட்டப்பட்டிருந்தவர்களை நோக்கி ஆக்ரோசமாக ஏசத் தொடங்கினார்கள்.

அன்றைய காலகட்டத்தில் இயக்கப் போராளிகளை மிகுந்த மனப் பாதிப்படையச் செய்த நிகழ்வாக அது அமைந்திருந்தது.

பொதுமக்கள் மத்தியிலும் மாத்தையா விவகாரம் பயங்கரமான உணர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில் அவர் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கு பெற்றவராகவும், இயக்கத்தின் மிக நெருக்கடியான

காலகட்டங்களில் அதன் வளர்ச்சிக்காக மிகக் கடினமாக உழைத்தவராகவும் அறியப்பட்டிருந்தார்.

அரசியல்துறையினரால் நடாத்தப்படும் சமகால அரசியல் கருத்தரங்குகளில் மாத்தையா தொடர்பான பிரச்சனை பற்றிப் பல கேள்விகள் மக்களால் எழுப்பப்பட்டன. பல இடங்களில் 'மாத்தையா எங்கே?' எனக் கேட்டு மக்கள் கோபத்துடன் வாதிட்டார்கள்.

தலைவருக்கெதிரான சதி நடவடிக்கையொன்றின் சந்தேகத்தின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெறுவதாக மக்களுக்குக் கூறும்படி எமக்கு விளக்கம் தரப்பட்டிருந்தது.

## மயானத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பிரேதப் பெட்டிகள் : தமது பிள்ளைகளை ஒவ்வொரு பெட்டியாக ஓடியோடித் தேடி அழுத தாய்மார்கள்!



1992-93 காலப் பகுதிகளில் நான் கலந்துகொண்ட கூட்டங்களில் புலிகள் இயக்கத்திடம் மக்கள் பல கேள்விக் கணைகளைத் தொடுப்பார்கள்.

“ஏன் வடபகுதியிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டார்கள்?”, “ஏன் ஏனைய இயக்கப் போராளிகள் புலிகளால் அழிக்கப்பட்டார்கள்?” போன்ற கேள்விகளால் இளநிலைப் போராளிகளாய் இருந்த நாங்கள் திணறிப்போன சந்தர்ப்பங்கள் அநேகமிருந்தன.

உண்மையில் அந்தக் கேள்விகளுக்கான விளக்கம் அப்போதெல்லாம் எங்களுக்கே சரிவரத் தெரிந்திருக்கவில்லை. அரசியல் நிகழ்வுகளைத் தொடர்ச்சியாக அவதானித்து வருபவர்களாகவும், விடுதலைப் போராட்டத்தின் முழுச்சுமையையும் தாங்கி நிற்பவர்களாகவும் மக்கள் இருந்தனர்.

அவர்களுக்காகப் போராடுகின்ற நாங்கள் மக்களுக்கு விசுவாசமானவர்களாக இருக்க வேண்டும். அவர்களின் மனங்களில் திருப்தியேற்படும் வகையில் எமது செயற்பாடுகள் அமையவேண்டும் என்ற மனப்பாங்கு பல போராளிகளிடம் இருந்தது உண்மை.

ஆனால் இயக்கத்தின் சில செயற்பாடுகள் மக்களுக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்தும்போது போராட்டக் காலத்தில் இவை தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள், அர்ப்பணிப்புகள் என்ற வகையில்தான் பார்க்கப்பட்டன.

ஏனைய இயக்கங்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட விடயம் தொடர்பில் புலிகள் இயக்கத்தின் போராளிகளுக்கு

எந்தக் காலத்திலும் சரியான விளக்கம் கொடுக்கப்பட்டதில்லை.

மாறாக, மாற்று இயக்கங்களின் புலிகள் இயக்கத்தால் அவை தடை செய்யப்பட்டதான கருத்துருவாக்கமே இயக்கத்திற்குள் வளர்க்கப்பட்டிருந்தது.

புதிய போராளிகளைப் பதிவு செய்யும் படிவத்தில் சகோதரர்கள், உறவினர்கள் எவராவது வேறு இயக்கங்களில் இருந்திருக்கிறார்களா என்ற விபரம் கட்டாயமாகப் பெறப்படுவது வழக்கமாகும்.

2000க்குப் பிற்பட்ட காலப் பகுதியில் ஏனைய இயக்கங்களிலிருந்து உயிரிழந்த குறிப்பிட்ட சிலரை விடுதலைப் புலிகளின் மாவீரர் பட்டியலில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

எனக்குத் தெரிய கொக்காவில் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் உயிரிழந்த உஷா

என்கிற ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்த பெண் போராளி மாவீரர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

அவருடைய மேலதிகமான விபரங்கள், எந்த ஆண்டு அச் சம்பவம் நடைபெற்றது ஆகிய விபரங்கள் எனக்குத் தெரியாது.

2002 சமாதான நடவடிக்கைகளுக்கான முன்னெடுப்புகளில் முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர்களுடன் புலிகள் நடத்திய பேச்சு வார்த்தைகளும் உடன்பாடுகளும், அதன் பின்னரான காலத்தில் முஸ்லிம் மக்கள் தத்தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பிய சம்பவங்களும் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்த முழங்காவில் நாச்சிக்குடா மற்றும் முல்லைத் தீவு மாவட்டத்தின் முள்ளியவளையில் நீராவிப்பிட்டி, யாழ்ப்பாணம் ஐந்து சந்தி ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம் மக்களைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் எனக்கும் கிடைத்தன.

கடலை நம்பியும், நிலத்தை நம்பியும் வாழ்ந்தவர்களான மிகவும் சராசரியான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருந்த அந்த மக்களைச் சந்தித்தபோது என் மனதில் மிகுந்த குற்றவுணர்ச்சி ஏற்பட்டது.

அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவதாகக் கூறிக்கொண்ட எமது இயக்கம், இந்த அப்பாவி மக்களின் வாழ்வுரிமையை அடக்குமுறைக்குள்ளாக்கிய நியாயத்தை எனது இதயத்தால் ஏற்றுக்கொள்ள முடியாமலிருந்தது.



1994 இறுதிப் பகுதியில் மிகப் பெரிய அளவில் இயக்கத்தின் படையணிகள் ஒன்றிணைக்கப்பட்டுப் பாரிய வலிந்த தாக்குதல் ஒன்றிற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் அணிகளுக்கான பயிற்சிகள் நடந்தன.

அரசியல்துறையிலிருந்தும் போராளிகள் அனுப்பப்பட்டிருந்தோம். மகளிர்ப் படையணிக்கான பயிற்சி அரியாலை மணியந்தோட்டத்தில் இடம்பெற்றது.

கடல் மூலமாகப் படகுகளில் குறிப்பிட்ட தூரம்வரை நகர்ந்து அதன்பின் கழுத்தளவு நீருக்குள் இறங்கி நடந்துசென்று தாக்குதல் நடத்தவேண்டுமென விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

காயமடைந்தவர்களையும் கடல் வழியாகவே கொண்டு வரவேண்டும் என்கிற நிலைமையில் அதுவொரு சவால் நிறைந்த தாக்குதலாகவே இருக்குமெனக் கூறப்பட்டிருந்தது.




மண்டைத்தீவு இராணுவ தளத்தின் மீதான தாக்குதலுக்குரிய இறுதிக்கட்ட நடவடிக்கைகள் அனைத்தும் முடிந்துவிட்ட நிலையில், எமது அணிகளை அணிகள் தயாராக்கப்பட்டிருந்தன.

திடீரென வந்த ஒரு செய்தியில் அத்தாக்குதல் கைவிடப்பட்டிருப்பதாகக் கூறி, எம்மைத் தங்குமிடங்களுக்கு அனுப்பிவிட்டனர்.

அந்தத் தாக்குதல் கைவிடப்பட்டதற்கான சரியான காரணம் எமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. ஆனால் வேவுத் தரவுகள் இராணுவத்தினருக்குக் கசிந்துவிட்டன என்பதை அறிய முடிந்தது.

மீண்டும் எமது அணி அரசியல்துறைக்கு அனுப்பப்பட்டது. இதன்பின்னர் 1995 ஆரம்பத்தில் மணலாற்றுப் பகுதியில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, டொலர்பாம், கென்பாம் ஆகிய ஐந்து இராணுவ தளங்களின் மீது ஒரே நேரத்தில் பாரிய தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கைக்குத் தலைவரின் நெருக்கமான நேரடிக் கண்காணிப்புடன் வளர்க்கப்பட்ட சிறுத்தைப் படையணிகளே பெரிய அளவில் ஈடுபடுத்தப்பட்டன.

அவர்களை இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்கள்கூடப் பார்க்க முடியாது. அவர்களுக்கு முதல் ஐந்து வருடங்களுக்கு விடுமுறை கிடையாது.



வருடக் கணக்கில் தொடர்ந்து கடினமான பயிற்சிகளும் இராணுவத் தொழில் நுட்பங்களும் கற்பிக்கப்பட்டன. அந்த அணியின் பெண் உறுப்பினர்கள் தமது கூந்தலைக் கட்டையாக வெட்டிக்கொள்வதே வழக்கமாயிருந்தது. அவர்களுக்குக் கராத்தே, மல்யுத்தம், குத்துச்சண்டை எனப் பல தற்காப்புக் கலைகளும் பயிற்றப்பட்டிருந்தன.

எனது தங்கையும் இந்த அணியிலேயே செயற்பட்டுக் கொண்டிருந்தாள்.

இயக்கம் எதிர்பார்த்த வகையில் அந்தத் தாக்குதல் திட்டம் வெற்றி பெறவில்லை. மாறாக இயக்கத்திற்குப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தியிருந்தது.

தலைவரின் கனவுப் படையணியான **சிறுத்தைப் படையணி** பெரும் அழிவைச் சந்தித்திருந்தது. இருநூறுக்கும் மேற்பட்ட ஆண், பெண் போராளிகள் உயிரிழந்திருந்தனர். **சிறுத்தைப் படையணியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண் போராளிகள் உயிரிழந்த நிலையில் சிதைக்கப்பட்டிருந்த அவர்களின் சடலங்கள் இலங்கை அரசால் ஐ.சி.ஆர்.சி. மூலமாகப் புலிகளிடம் வழங்கப்பட்டன.**

அப்போது நான் வடமராட்சி பகுதியில் பணி செய்து கொண்டிருந்தேன். சிறுத்தைப் படையணி ஈடுபட்ட பாரிய தாக்குதல் நடவடிக்கை தோல்வியடைந்ததாகவும், அதிக அளவு பெண் போராளிகள் உயிரிழந்துவிட்டதாகவும் எங்களுக்குத் தகவல் கிடைத்திருந்தது.

எனது தங்கையும் இந்நடவடிக்கையில் கலந்துகொண்டாளா இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாத நிலையில் மனது தவித்துக்கொண்டிருந்தாலும் அமைதியாக எனது வேலைகளில் மூழ்கியிருந்தேன்.

உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கு அறிவித்தல் கொடுக்கும்படி பெயர்ப் பட்டியல்கள் வடமராட்சி கோட்டத்திற்கும் அனுப்பப்பட்டிருந்தது. நினைக்கும்போதே தலைசுற்றி மயங்கிவிழும் வேளையாக அது இருந்தது.

ஐந்து வருடங்களாகக் தவித்துக்கொண்டிருக்கும் பெற்றோர்களிடம், அந்தப் பிள்ளைகளின் மரண அறிவித்தல்களை எப்படிக் கொண்டு போய்ச் சேர்க்க முடியும்? அந்தச் சந்தர்ப்பத்தில் எனது அம்மாவை நினைத்துப் பார்த்தேன்.

எனது தங்கையை அவர் நான்கு வருடத்திற்கு மேல் காணாது இருக்கும் நிலையில் இப்படி ஒரு செய்தி அவருக்குச் சொல்லப்பட்டால், எவ்வளவு வலியுடன்

அழுகையும் ஆவேசமும் கொண்டு துடிப்பார்? என்ன செய்வது?

இயக்கத்தின் கட்டளையைச் சிரமேற் கொண்டு அவர்களுடைய முகவரிகளைக் கண்டுபிடித்து, பயந்து நடுங்கியபடி சென்று செய்திகளை அறிவித்தபோது, பெரும் பிரளயமே வெடித்தெழும்பியது.

ஒரு சில பெற்றோர் எம்மைக் கட்டியணைத்து அழுது புலம்பினார்கள். வேறு சிலர் எமக்கு அடித்தும், தூசண வார்த்தைகளால் திட்டியும் தமது வேதனையைக் கொட்டினார்கள்.

அவர்களுடன் சேர்ந்து கண்ணீர் விடுவதைத் தவிர எங்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. ஐம்பதிற்கும் மேற்பட்ட உடல்கள் வடமராட்சியில் இறுதிக் கிரியைகளுக்காக அனுப்பப்பட்டிருந்தன.

அவை நேரடியாக மயானத்திற்கே கொண்டு செல்லப்பட்டன. பெற்றோரிடம் கையளிக்கக் கூடிய அளவுக்கு அடையாளம்

தெரியக் கூடியதாகவோ நல்ல நிலைமையிலோ அவை இருக்கவில்லை.



**வரிசையாக மயானத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பிரேதப் பெட்டிகளில் தமது பிள்ளைகளின் பெட்டி எதுவாக இருக்கும் என்பதைக்கூட அறிய முடியாத நிலையில் ஒவ்வொரு பெட்டியாக ஓடியோடித் தேடி அழுத தாய்மாரின் கண்ணீரும் கதறலும் என் காதில் இப்போதும் ஒலிக்கிறது.**

அதே ஆண்டு முற்பகுதியில் இலங்கை இராணுவத்தினரால் '**முன்னேறிப் பாய்தல்**' என்றொரு

இராணுவ நடவடிக்கை வலிகாமம் கிழக்குப் பகுதியில் சண்டிலிபாய் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

அதனை வழிமறித்துப் புலிகள் ஒரு அதிரடியான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். அப்போது வான் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் நவாலி தேவாலயம் தாக்கப்பட்டது. அங்குத் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர்.



**அங்குச் சின்னஞ் சிறுவர்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்து துடித்த காட்சிகள் இனி ஒருபோதும் எமது தேசத்தில்**

**மட்டுமல்ல, உலகத்தின் எந்த மூலையிலும்கூட நிகழக்கூடாது.**

அந்தக் காலகட்டத்தில் இளைஞர், யுவதிகள் அதிகளவில் புலிகள் இயக்கத்துடன் இணைந்து கொண்டனர். இயக்கத்தின் பயிற்சிப் பாசறைகள் நிரம்பி வழிந்தன. பல புதிய மகளிர் அணிகள் கடல், தரைத் தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டன.

இலங்கை இராணுவம் யாழ்ப்பாண மாவட்டத்தை முழுமையாகக் கைப்பற்றும் ‘**ரிவிரெச்**’ (**சூரியக்கதிர்**)இராணுவ நடவடிக்கையை 1995 ஒக்டோபர் நடுப்பகுதியில் ஆரம்பித்திருந்தனர்.




பலாலி இராணுவ கூட்டுப்படைத் தலைமையகத்தைப் பின்னணியாகக் கொண்டு இலங்கைப் படையினரால் இந்தப் படை நகர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் புலிகளின் யாழ்ப்பாண மாவட்டத் தாக்குதலணிகள் முறியடிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தினசரி படையினரின் தாக்குதல்கள் விஸ்தரிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் படிப்படியாக முன்னேறிய இராணுவத்தினருடன் விடுதலைப் புலிகள் தமது முழு பலத்தையும் ஒருங்கிணைத்துப் போராடினார்கள்.

நாளாந்தம் போராளிகளின் இழப்பு அதிகரித்துச் சென்றது. மக்கள் மத்தியில் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டிருந்த நாம் களத்தில் உயிரிழக்கும் போராளிகளின் வீர மரண நிகழ்வுகளை நடத்திக் கொண்டிருந்தோம்.

**இராணுவத்தினர் வடமராட்சியைக் கைப்பற்றி வலிகாமத்தை முழுமையாகக் கைப்பற்றும் நடவடிக்கையை முடுக்கியபோது விடுதலைப் புலிகளின் தலைவர், எவரும் எதிர்பார்த்திராத அதிரடி முடிவொன்றை எடுத்தார்.**

வலிகாமத்திலிருந்து அனைத்து மக்களும் உடனடியாக வெளியேற வேண்டும் என்ற முடிவு மக்களுக்கு ஒலிபெருக்கிகள் மூலம் அவசர அவசரமாக அறிவிக்கப்பட்டது.

விரும்பியோ விரும்பாமலோ மக்கள் அந்த அறிவித்தலுக்குச் செவிசாய்த்து, கையில் எடுத்த பொருட்களுடன் நாவற்குழி பாலம் நோக்கி நகரத் தொடங்கினார்கள்.

வீடுவாசல்கள், சொத்துச் சுகங்கள், தோட்டங்கள், செல்லப் பிராணிகள் என அத்தனையையும் பிரிந்து குறிக்கப்பட்ட சில மணித் தியாலங்களில் ஐந்து இலட்சம் மக்கள் நாவற்குழி பாலம் கடந்த நிகழ்வை எப்படிப் பதிவு செய்தாலும் புரியவைக்க முடியாத மாபெரும் மனித அவலம் என்றே கூற வேண்டும்.

நானும் வேறு பல போராளிகளும் அந்த மக்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்தபடி தென்மராட்சிப் பகுதியில் நின்றிருந்தோம்.

இராணுவத்திற்கும் புலிகளுக்குமான தாக்குதல்களில் மக்கள் அகப்பட்டு உயிரிழந்துவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் இப்படியொரு முடிவு எடுக்கப்பட்டதாக இயக்கம் விளக்கம் கூறியது.

ஆனாலும் அதற்காக அந்த மக்கள் பட்டபாடும் கொடுத்த விலையும் கொஞ்ச நஞ்சமல்ல. தென்மராட்சி பிரதேசம் மக்களால் நிறைந்து போயிருந்தது.

அங்கிருந்த பாடசாலைகள், கோயில்கள், வீடுகள் நிறைந்து தோட்ட வெளிகளும் ஒழுங்கைகளும் வீதிகளும்கூட நிறைந்திருந்தன. இடைவிடாமல் மழை பொழிந்துகொண்டிருந்தது.

**புலிகள் இயக்கத்தின் அறிவித்தலை ஏற்றுக்கொண்டு மக்கள் யாழ்ப்பாணம் விட்டு வெளியேறியதைப் புலிகள் தமக்கான ஒரு அரசியல் வெற்றியாகவே பார்த்தனர்.**

ஐ.நா. உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகள் நேரடியாகவே புலிகளுக்கு ஊடாக மக்களுக்கான உதவிகளை மேற்கொள்ளும் வகையில் ஒரு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வாக அது கருதப்பட்டது.

புலிகளின் தலைமைக்குப் பின்னால்தான் தமிழ் மக்கள் அணி திரண்டுள்ளார்கள் என்ற செய்தியை உலகத்துக்குக் காட்டும் ஒரு சம்பவமாக இதனை இயக்கம் வெளிப்படுத்தியது.

இலங்கை இராணுவம் யாழ்ப்பாண மாவட்டத்தை முழுமையாகக் கைப்பற்றியிருந்தாலும் மக்களில்லாத பிரதேசத்தைக் கைப்பற்றியது அவர்களுடைய அரசியல் தோல்வி என்பதுடன், கட்டடங்கள் நிறைந்த மக்களில்லாத யாழ்ப்பாணத்தை நீண்ட நாட்கள் இராணுவத்தால் தக்கவைத்துக்கொள்ள முடியாத நிலையில் தாமாகவே பின்வாங்க வேண்டியேற்படும் எனவும் புலிகளால் கருதப்பட்டது.

யாழப்பாணம் இழக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இயக்கத்தின் முக்கியத் தளங்களும், ஆவணங்களும் கிளாலி கடலேரி மூலம் வன்னிக்கு நகர்த்தப்பட்டன.

மக்களையும் வன்னிக்குச் செல்லுமாறு கூறப்பட்டது. அதிக அளவு மக்கள் வன்னி நோக்கி நகரத் தொடங்கினார்கள். சிலர் தென்மராட்சியிலேயே தங்கியிருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அதிகளவு இளைஞர், யுவதிகள் பல்கலைக்கழக மாணவர்கள் இயக்கத்தில் இணைந்து கொண்டார்கள். இரகசியமான இராணுவ நகர்வொன்றை

மேற்கொண்டு தென்மராட்சியின் கனகம்புளியடிச் சந்தியை இராணுவத்தினர் கைப்பற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து தென்மராட்சி முழுவதையும் இராணுவத்தினர் கைப்பற்றினார்கள். இராணுவத்தினரின் வான் தாக்குதல்களையும் பொருட்படுத்தாது கிளாலி கடலேரி வழியாகப் பெருமளவு மக்கள் வன்னிக்கு நகர்ந்தார்கள்.

அதுவரை வன்னியே தெரியாத மக்களும் ஏதோவொரு நம்பிக்கையில் வன்னிக்கு இடம் பெயர்ந்தார்கள். இன்னொரு தொகுதி மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கே திரும்புவதற்குத் தீர்மானித்துத் தென்மராட்சியிலேயே தங்கியிருந்தார்கள்.

அந்த மக்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் செல்வதைப் புலிகள் அறவே எதுவுமே செய்ய முடியாத கையறு நிலையில், அவர்களைத் தடுக்க முடியாமல் இருந்தனர்.

இருப்பினும், தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலைகொள்ளும் இராணுவத்தினருக்குப் புலிகள் தொல்லை கொடுக்கும் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டுமாயின் யாழ்ப்பாண இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மக்கள் இருப்பது புலிகளுக்கு நன்மையளிக்கும் எனக் கருதப்பட்டது.

**வெறிச்சோடிப் போயிருந்த சாவகச்சேரிச் சந்தியில் நான் விதுஷாக்காவுடன் நடந்துகொண்டிருந்த இறுதி நாள் மறக்க முடியாதது.**

அதுவரை வன்னிக்கான நகர்வுப் பாதையாக இருந்த கிளாலி கடற்கரை திருவிழா முடிந்த கோயில் வீதியைப்போல வெறுமையாயிருந்தது.

இறுதியாக நின்றிருந்த படகுகளில் ஏறியமர்ந்தபடி கண் மறையும் வரைக்கும் யாழ்ப்பாணத்தின் தென்மராட்சி கரைகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஒரு அழகான நகரத்தையும், அங்கிருந்த மக்களின் வாழ்வையும் யுத்தம் எப்படிக் கொடூரமாக அழித்துச்

சிதைத்துவிட்டது என்பதை நினைத்துப் பார்க்கவும் முடியாமலிருந்தது.

**வாழையடி வாழையாக வாழ்ந்து வந்த மக்களை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கிப்போட்டிருந்தது போர்.**

## அன்ரன் பாலசிங்கம் புலிகளின் திருமணக் குழுவின் தலைவராக பதவி வகித்த கதை தெரியுமா?



• கிளாலி சோதியா முகாமில் ஒன்றுசேர்க்கப்பட்டு, அங்கே அத்தனை பேர் முன்னிலையிலும் மூன்று பெண்

போராளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. காரணம் என்ன??

• இப்ப பாக்கிற ஆக்கள் முகத்தை திருப்பிக் கொள்ளுகினம், அல்லது ஏளனமா சிரிக்கினம். ‘**இதுகள் உயிரோட வந்ததுக்கு சயனைட்டைக் கடிச்சிருக்கலாம்**’ எனக்குப் பின்னால் இப்பிடியான குரல்களும் கேட்டன.

• இயக்கத்தில் ஆண் பெண் போராளிகளுக்கிடையே காதல், திருமணம் போன்ற உறவுகளுக்கும் அனுமதி இருந்தது.

• வயது வந்த ஆண் போராளிகள் தம்மைவிட மிகவும் வயது குறைந்த பெண் போராளிகளைத் திருமணம் செய்ய ஆசைப்பட்டனர்



**ஆயுதப் போராளியான பெண்ணும் மாற்றம் காணாத சமூகமும்**

"இருபது வருசமா இயக்கத்தில இருந்தன். எத்தினையோ சண்டையில காயப்பட்டன், தாக்குதல் படையணிகளை வழிநடத்தவும் துவக்கு தூக்கிச் சுடவும்தான் எனக்குத் தெரியும்.

இனி வீட்டுக்குப் போய் என்ன செய்யப்போறன்" "நான் இயக்கத்தில் இருந்து சீருடையும் போட்டுக்கொண்டு

துவக்கோட ஊருக்குள்ள போனபோது எல்லாரும் என்னைப் பார்த்த பார்வையில ஒரு மதிப்பு இருந்தது.

நான் தங்களுக்காகப் போராடப் போனதற்காக சனங்கள் என்னைத் தங்கட வீட்டுப் பிள்ளையாகவே நினைச்சு உறவு கொண்டாடினவையள்.

இப்ப நான் ஊருக்குள்ள போறன். சீருடையில்லை துவக்கில்லை, ஏன் சாதாரணமாக உடுத்துறதுக்கு நல்ல உடுப்பே இல்லை. ஏனென்டால் நான் எனக்கென்று எதுவும் உழைச்சதேயில்லை.

இப்ப பாக்கிற ஆக்கள் முகத்தை திருப்பிக் கொள்ளுகினம், அல்லது ஏளனமா சிரிக்கினம். '**இதுகள் உயிரோட வந்ததுக்கு சயனைட்டைக் கடிச்சிருக்கலாம்**' எனக்குப் பின்னால் இப்பிடியான குரல்களும் கேக்குது, இப்ப நான் ஒரு செல்லாக்காசு"

"இது அப்ப இயக்கத்தில் இருந்தது. இப்ப ஆமிக்காரரோட வேலை செய்யுது, அங்க போறதுகளுக்கு நல்ல பெயரில்ல"

ஏன் இவ்விதமாக இந்தப் பகுதியைத் தொடங்குகிறேன் என என்னை நானே கேட்டுப் பார்த்தேன்.

இதுதானே இன்றைய யதார்த்தமாக இருக்கிறது? பெண் போராளிகளான நாங்கள் ஒருகாலத்தில் வானத்தை வில்லாக வளைக்கக் கனவு கண்டோம்.

இப்போது எல்லாக் கனவுகளும் கலைந்து நிஜத்தின் முற்றத்தில் விழுந்து கிடக்கிறோம். ஆயுதப் போராட்டத்தில் பெண் போராளிகளின் பங்களிப்பும் அர்ப்பணிப்புகளும் எமது சமூகத்தின் சராசரியான மனநிலைக்கும் மீறிய செயற்பாடுகளாகவே அமைந்திருந்தன.

எப்படி விடுதலைப் புலிகள் இயக்கம் தனிச் சமூகமாகத் தன்னைப் பிரம்மாண்டமாக வளர்த்துக்கொண்டு எழுந்து நின்றதோ அது போலவே ஆயுதம் தாங்கிய பெண் போராளிகளும் சமூகத்திலிருந்து முற்றிலும் பிரிக்கப்பட்டுத் தனித்துவமான அமைப்பாகக் கட்டமைக்கப்பட்டிருந்தார்கள்.

சமூகம் பெண் போராளிகளை விலகி நின்று நம்ப முடியாத அதிசயத்துடன் வேடிக்கைப் பார்த்து வியந்து பாராட்டியது.



தமிழ் அரசியல் தலைமைகளால் முன்மொழியப்பட்ட தனி நாட்டுக்கான போராட்ட வழிமுறையை அதிலிருந்த எல்லா விதமான விமர்சனங்களுடனும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகவிருந்தது.

ஆயுதப் போராட்டத்தினால் ஏற்பட்ட புறச்சூழ்நிலையின் தாக்கங்கள் ஆயுதம் ஏந்திய பெண்களையும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை சமூகத்தில் ஏற்படுத்தியிருந்தது.

அதனால்தான் பெண்கள் போராடப்போன ஆரம்ப காலத்தில் பெண்களுக்கெதிராகச் சமூகத்திலெழுந்திருந்த வசைபாடல்கள் காலப்போக்கில் அருகி ஒருகட்டத்தில் இல்லாமலே போயிருந்தது.

இன்னுமொரு விடயம் என்னவெனில், தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை அதிகம் அடக்குமுறையான கருத்துருவாக்கங்களுக் கூடாகப் பெண்கள் வார்த்தெடுக்கப்பட்டிருந்தாலும், அவளுடைய தனிப்பட்ட ஆளுமையின் வீரியம் குடும்பக் கட்டமைப்புக்குள்ளே நிரூபிக்கப்பட்டே வந்துள்ளது.

அதிகம் வீட்டுக்கு வெளியே போகாத, படிப்பறிவில்லாத பெண்களாக இருப்பினும் குடும்பத்தில் அவர்களுக்கிருந்த அதிகாரமும் சேமிப்புப் பொருளாதாரமும் அவசர காலங்களில் குடும்பத்தின் தாங்குசக்தியாகப் பெண்களைப் பலப்படுத்தியிருக்கிறது.

சாதாரண மனிதருக்குரிய சராசரி உரிமைகள்கூட மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில், உச்சமான சகிப்புத்

தன்மையோடு பிரச்சனைகளுக்குத் தாக்குப்பிடித்து வாழும் வலிமையான மனப்பாங்கு பெண்களுக்குள் விருத்தியாவதற்கும், பெண்கள் மீதான அடக்குமுறைகளே காரணமாக அமைந்திருக்கின்றன.

இதனுடைய நீட்சியாகவே இனத்தின் விடுதலைக்காக ஆயுதப் போராளிகளாகவும் அவர்கள் போராட்டத்தின் சென்ற தடங்களையும் கடந்தே தமிழ்ப் பெண்கள் போராட்ட அரசியலுக்குள் பிரவேசித்திருந்தார்கள்.

இதிலிருக்கும் கசப்பான உண்மை எதுவென்றால் பெண்களின் அறிவு மற்றும் சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்துவதை விடவும் ஆயுதமேந்திப் போராடுவதன் மூலம் சமூகத்தில் எமது நிலையை வலுப்படுத்துவது தொடர்பில் அதிகம் சாதித்துவிட முடியும் எனப் பெண்களான நாங்களே எமக்குக் கற்பிதம் செய்து கொண்டதுதான்.

எனது பாடசாலைக்காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தனிப்பெரும் விடுதலை இயக்கமாகப் பெருவளர்ச்சியை அடைந்திருந்தது. மகளிர் படையணிகள் களமுனைகளில் வீர

சாதனைகளையும் உயிர் அர்ப்பணிப்புகளையும் நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

நான் இயக்கத்தில் இணைந்து கொண்டமைக்குப் பொதுவான போராட்ட சூழ்நிலைகள் காரணமாக இருந்தாலும், ஒருபெண் என்கிற நிலையில் எனது குடும்பத்தினதும் என்னைச் சூழ்ந்திருந்த சமூகத்தினதும் பெண்ணியக் கருத்து நிலையை உடைத்து ஒரு புரட்சி செய்யக் கூடிய சந்தர்ப்பமாகவும் அதைக் கருதினேன்.

**நான் இயக்கத்தில் இணைந்த பள்ளிப் பருவத்தில் ஒரு வேகமும் துடிப்பும் என்னிடம் இருந்ததே தவிர அரசியல், சமூகம் பற்றிய எவ்விதமான புரிதலும் எனக்கிருக்கவில்லை என்றே கருதுகிறேன்.**

1989-92 காலப் பகுதியில் ஆயிரக்கணக்கில் பெண் போராளிகள் இயக்கத்துடன் இணைந்துகொண்டார்கள்.

ஒரே காலப் பகுதியில் தலா முந்நூறு பெண் பயிற்சியாளர்களைக் கொண்ட அடிப்படை ஆயுதப் பயிற்சி முகாம்கள் இவ்விரண்டாகவும் நடாத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் பொலிகண்டியில் சுகி பயிற்சி முகாம், மணலாறு காட்டுக்குள் ஜீவன், கஸ்ரோ பயிற்சி முகாம்கள், தென்மராட்சியில் கிளாலி சோதியா பயிற்சி முகாம், திலகா பயிற்சி முகாம், இதனைவிட 1992 இல் சிறுத்தைப் படையணி, கடற்புலி மகளிர் அணி எனப் பெண் போராளிகளின் படைப் பெருக்கம் உலகில் வேறெங்குமே இல்லாத வகையில் புலிகள் இயக்கத்திற்குள் ஏற்பட்டிருந்தது.

பெண்கள் ஆயுதப் பயிற்சி பெற்றபோது அவர்களால் தமது உடல் வலிமையை நிரூபிக்கக்கூடியதாக இருந்தபோதிலும் அவர்களுடைய அடிப்படைச் சிந்தனைகளில் எந்த அளவுக்கு மாற்றம் ஏற்பட்டிருந்தது என்பது கேள்விக்குறியானது.

குடும்பம் என்கிற அமைப்புக்குள்ளிருந்து வெளியே வந்து இயக்கம் என்கிற அமைப்பிற்குள் புகுந்து கொண்ட புலிப் பெண்கள் அனைவருமே புரட்சிகரமான புதிய சிந்தனை மாற்றத்திற்கு உட்பட்டார்கள் எனக் கூறிவிட முடியாது.

எப்படி ஒரு கட்டுக்கோப்பான குடும்பப் பெண்ணாக வீட்டில் வளர்க்கப்பட்டோமோ அதே போலக் கடினமான இராணுவப்

பயிற்சிகளைப் பெற்ற கட்டுக்கோப்பான மகளிர் படையணிப் போராளிகளாகவே இயக்கத்திலும் வளர்க்கப்பட்டோம்.



வரிச்சீருடை அணிந்து, கையில் ஆயுதத்தை ஏந்தி நிற்கும் ஒரு தமிழ்ப் பெண்ணின் மனநிலை முற்றிலும் வித்தியாசமானது.

என்னை நானே பாதுகாத்துக்கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கையும், பிறந்ததிலிருந்தே அனுபவித்து வந்த சமூகக் கட்டுப்பாடுகளிலிருந்து மீண்டு தன்னைத்தானே புதிதாகத் தரிசிக்கும் சுதந்திர உணர்வும், கடமைகள், பொறுப்புகள் தரப்படும்போது சுயமான முடிவுகளை

எடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதும்,**எல்லாவற்றிற்கும் மேலான அர்ப்பணிப்பு உணர்வுமாக ஒரு பெண் போராளிக்குள் ஏற்படும் இயல்பு மாற்றமானது அவளது வாழ்வில் ஏற்படும் முக்கியமான அம்சமே**.

சீனத்தின் செஞ்சேனையிலும் பலஸ்தீனத்திலும் தெலுங்கானாவிலும் இணைந்து போரிட்ட ஆயுதப் பெண்கள் படைத்த வீர வரலாறுகளைப் போன்று ஈழப் பெண்களாகிய நாமும் படைப்போம் என்ற உணர்வே கடினமான ஆயுதப் பயிற்சியையும் எதிர்கொள்ள எம்மைத் தூண்டியது.

எனினும், இத்தகைய உணர்வுகள் தற்காலிக அனுபவங்களாக இல்லாமல் ஒரு பண்பு மாற்றமாக உருவெடுப்பதற்குரிய வழிவகைகள் இயக்கத்திற்குள் நடைமுறையில் இல்லாமல் போனதுதான் அபத்தமானது.

பெண் விடுதலைக்குரிய தீர்க்கமான கொள்கைத் திட்டங்கள் எவையும் எங்களிடம் இருக்கவில்லை. பெண்கள் வீட்டுக்கு

வெளியே வந்து ஆயுதம் ஏந்துவதால் சமூகத்தையே நாம் மாற்றிவிடலாம் எனக் கனவு கண்டோம்.

ஆனால் உண்மையில் நடந்தது என்னவெனில், பெண் போராளிகள் ஆயுதமேந்திப் போராடியதால் போர்க்களத்தின் பல வெற்றிகளுக்குக் காரணகர்த்தாக்களாக இருக்க முடிந்ததே தவிர **சமூகத்தில் பெண்கள் சார்ந்த கருத்தமைவில் எவ்விதமான மாற்றங்களையும் எங்களால் ஏற்படுத்திவிட முடியவில்லை.**

தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் விடுதலைக்கான பாய்ச்சல் வளர்ச்சியானது ஆயுதப் பெண்களின் பிம்பமாகவே தொடங்கி ஆயுதப் போராட்டத்தின் தோல்வியுடனேயே முடிந்தும் போனது.

"கல்வி மற்றும் பொருளாதார நிலைமைகளில் பெண்கள் மேம்படுவதும், ஆண் பெண் பாலியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அவர்களுடைய மனிதம் பரஸ்பரம் மதிக்கப்படுவதும்தான் பெண் விடுதலையைச் சாத்தியமாக்கும்" இயக்கத்தின் தலைவரால் மகளிர்

தினங்களில் விடுக்கப்பட்ட அறிக்கைகளில் பெண் விடுதலை பற்றிய கருத்தை அவர் பல விதங்களில் விபரித்திருக்கிறார்.

அரசியல்துறை மகளிர் பிரிவினுடைய பணிகளாகச் சமூகத்தில் பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்களை இனங்கண்டு அவர்களுக்கான புனர்வாழ்வளிப்பதும் இன்னும் பரந்துபட்ட ரீதியில் சமூக மாற்றத்திற்காக உழைப்பதும் என்பனவாகவே இருந்தன.

இதன் அடிப்படையில்தான் அரசியல் மகளிர் பிரிவின் வேலைத்திட்ட அலகுகளும் பிரிக்கப்பட்டிருந்தன.

**ஆனாலும் நடைமுறையில் சாத்தியமானது என்னவோ இயக்கத்திற்குப் புதிய போராளிகளை இணைப்பதும், பெண்களுக்கான குறிப்பிட்ட சில வேலைகளை மாத்திரம் செய்ய முடிந்ததுமேயாகும்.**

ஏனெனில் இயக்கத்தின் முழுக் கவனமும் மொத்த வளங்களும் யுத்தத்தில் நோக்கியே திருப்பப்பட்டிருந்தன. 1999

வன்னி யுத்தம் மிக உக்கிரமடைந்திருந்த காலப் பகுதியாக இருந்தது.

புதிய போராளிகளை இயக்கத்திற்கு இணைக்கும் வேலைகளுக்காக அரசியல் துறையில் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு இயங்கியது.

அதற்கு ஒரு மூத்த ஆண் போராளி பொறுப்பாக இருந்தார். அவருடன் சேர்ந்து ஆண்-பெண் போராளிகள் செயற்பட்டனர். மாதந்தோறும் குறிப்பிட்ட அளவு இளைஞர்களையும் யுவதிகளையும் போராளிகளாக இணைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருந்தது.

இதற்காக வீதி நாடகங்கள், கருத்தரங்குகள், வீரமுரசு மேடை நிகழ்வுகள் என்பவற்றுடன் தனிநபர் சந்திப்புகளும் நடாத்தப்பட்டன. அதற்குப் பேச்சாளராகச் செல்வது எனக்குரிய மேலதிகமான வேலையாகத் தரப்பட்டிருந்தது.

பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் பங்கெடுப்பதன் மூலமே சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனக் கருத்துக்களை நான் கூறியிருக்கிறேன்.

ஆனாலும் ஆயுதப் போராட்டத்தோடு சமாந்தரமான நிலையில் சமூக மாற்றத்திற்கான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன என்று கூறுவதற்கில்லை.

இயக்கத்தில் பெண் போராளிகளின் கடமைகளும் செயற்பாடுகளும் பரந்துபட்டுச் செல்லத் தொடங்கியிருந்தன.

மகளிர் படையணி என்ற ஒரு நிர்வாக அலகு பிரிந்து பல படையணிகளும் பிரிவுகளும் உருவாகியிருந்தன. இவர்கள் பரந்து விரிந்திருந்த யுத்த முன்னணிகளிலும் பின் தளங்களிலும் செயற்பட்டு வந்தனர்.

புதிய பெண் தளபதிகளும் பொறுப்பாளர்களும் உருவாகியிருந்தனர். எனவே பெண் போராளிகளிடையே ஆரம்பத்தில் இருந்ததைப் போன்ற அறிமுகங்களும் ஐக்கியமும் குறையத் தொடங்கின.

மகளிர் படையணிப் போராளிகளின் ஒரேவிதமான ஒழுங்கு நடைமுறைகளில் மாற்றங்களும் வேறுபாடுகளும் ஏற்படத் தொடங்கின.

**1985 ஆவணி 18 தமிழ்நாடு திண்டுக்கல், சிறுமலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளுக்கு முதலாவது ஆயுதப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.**
இயக்கத்தின் மிகச்சிறந்த பயிற்சியாசிரியராக இருந்த பொன்னம்மான் ஆறுமாத காலக் கடும் பயிற்சியைப் பெண்களுக்கு வழங்கி இருந்தார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணம் கிளாலியில் நடைபெற்ற இரண்டாவது அணிக்குப் பெண் போராளிகளே பயிற்சி வழங்கியிருந்தனர். பெண் போராளிகளது எந்த நிர்வாகத்திலும் அளவுக்கதிகமாக ஆண் பொறுப்பாளர்கள் மூக்கை நுழைப்பதைப் பெண் தளபதிகள் விரும்புவதில்லை.

**ஆரம்பத்திலிருந்தே பெண் போராளிகளுடைய விடயங்களைத் தலைவர் தானே நேரடியாக வழிநடத்தி வந்திருந்தார்**. பெண் போராளிகள் வீடுகளிலே தமது

தகப்பனிடம் காட்டும் அன்பையும் உணர்வு ரீதியான நெருக்கத்தையும் தலைவரிடம் கொண்டிருந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆண் பெண் போராளிகள் இணைந்து பயிற்சிகள் எடுத்துப் பல பணிகளிலும் சேர்ந்து செயற்பட்டாலும், மிக இறுக்கமான ஒழுங்கு விதிகள் மீறப்படும்போது கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. இயக்கம் விதிவிலக்கான சம்பவங்களும் நடக்காமலில்லை.

அதற்குரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை இயக்கம் மேற்கொண்டிருந்தது.



**1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இயக்கத்தின் அனைத்துப் பெண் போராளிகளும் கிளாலி சோதியா முகாமில் ஒன்றுசேர்க்கப்பட்டு, அங்கே அத்தனை பேர் முன்னிலையிலும் மூன்று பெண் போராளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.**

வடமராட்சி முகாம் ஒன்றில் தங்கியிருந்த அவர்கள் இயக்கத்தைச் சாராத ஆண்களுடன் பாலியல் தொடர்புகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றத்திற்காகவே இயக்கத்தின் ஒழுக்க நடைமுறைகளுக்கமைவாக அவர்களுக்கு அந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தது.

அந்தக் குற்றச் செயலோடு தொடர்பு கொண்டிருந்த ஆண்களுக்கும் பொதுமக்கள் மத்தியில் மரண தண்டனை தீர்ப்பு நிறைவேற்றப்பட்டிருந்தது.

பெண் போராளிகளுக்கிடையே ஒரு பலமான உறவு நிலையைத் தொடர்ந்து கட்டியெழுப்புவதற்காக மகளிர் படையணிகளை இணைத்து ‘**மகளிர் பேரவை**’ என ஒரு

அமைப்பை உருவாக்க வேண்டுமென்பது பெண் தளபதிகளுடைய விருப்பமாக இருந்தது.

இக்கருத்தைத் தலைவரிடம் கொண்டுசென்றபோது, அவர் அதனை வரவேற்றதுடன் அந்தக் கூட்டத்தில் தானும் கலந்துகொண்டு தனது கருத்துக்களையும் பகிர்ந்துகொள்வதாகக் கூறியிருந்தார்.




அந்த அமைப்புக்குத் தலைவராகக் கேணல் விதுஷாவும், அவருக்கு அடுத்த நிலையில் கேணல் துர்க்காவும், அந்த அமைப்பின் செயலாளராக நானும், பொருளாளராக மூத்த உறுப்பினர் ஜனனியும் தெரிவு செய்யப்பட்டிருந்தோம்.

மகளிர் பேரவையின் நிர்வாகச் செலவுகளுக்கெனத் தலைவரால் ஐம்பதினாயிரம் ரூபாய் பணம் கேணல் விதுஷாவிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

அந்த அமைப்புக்காகப் பெண் போராளிகளுடைய நடைமுறைகள் பற்றிய ஒரு யாப்பும் உருவாக்கப்பட்டிருந்தது.

பெண் போராளிகளுக்கான பொதுவான தேவைகள், பிரச்சனைகள் என்பன ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளும் கண்டறியப்பட்டன. இந்தக் கூட்டத்தின் அறிக்கை நேரடியாகத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படுவதால் பெண் போராளிகளுடைய நிர்வாகங்களில் ஏனைய தளபதிகளும் மிகவும் கவனமாக ஈடுபட்டு வந்தனர்.

களமுனைகளிலும், ஏனைய வேலைகளிலும் முக்கியப் பணிகளில் பெண் போராளிகளும் ஈடுபட்டிருந்ததால் பெண் பொறுப்பாளர்கள், தளபதிகளின் கருத்துக்களுக்கும் இடமளிக்க வேண்டியதாகவே இருந்தது.

பெண் போராளிகளின் திருமணம், திருமணத்தின் பின்னர் அவர்களுடைய தொடர்ச்சியான செயற்பாடுகள் என்பனவற்றிலும் பல பிரச்சனைகள் ஏற்பட்டன.

**இயக்கத்தில் ஆண் பெண் போராளிகளுக்கிடையே காதல், திருமணம் போன்ற உறவுகளுக்கும் அனுமதி இருந்தது.** விடுதலைப் புலிகளின் திருமணக் குழுவின் தலைவராக அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைவரால் 1991ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டிருந்தார்.

அடுத்த வருடமே தன்னால் அந்தப் பொறுப்பைத் தொடர்ந்து செய்ய முடியாது எனக் கூறிவிட்டு விலகிவிட்டார்.

அதற்கான காரணத்தைப் பின்னர் ஒருதடவை குறிப்பிட்டபோது, "இயக்கத்தில எத்தினையோ வயது வந்த பெண் போராளிகள் இருக்கிறார்கள், யுத்தத்தில நின்று காயப்பட்ட, அங்கங்களை இழந்த போராளிகள் இருக்கிறார்கள்.

இவர்களை இயக்கத்தில இருக்கிற ஆண் போராளிகள்தான் திருமணம் செய்ய முன்வர வேண்டும். எங்கட பொடியளில சிலர் தங்களோடு சண்டைக் களத்தில நின்று போராடிய பெண் போராளிகளைக் கலியாணம் கட்டுவம் எண்டு யோசிக்காமல், அழகான, நல்ல உத்தியோகம் பார்க்கிற அல்லது வெளிநாட்டில சொந்தக்காரர் இருக்கிற பொம்பிளைகளைத் தேடித் திரிகினம்.

இப்படியான கலியாணங்களைச் செய்து வைக்க நான் தேவையில்லை எனத் தலைவரிட்ட சொல்லிப்போட்டு நான் விலகிட்டன்" எனக் கூறினார்.

இதற்குப் பின்னரான காலப் பகுதியில் இருவரும் இயக்கப் போராளிகளாக இருக்கின்ற திருமணங்கள் முக்கியத்துவப் படுத்தப்பட்டன.

பெரிய தளபதிகள் இயக்கப் பெண் போராளிகளை விரும்பி மணந்தனர். ஏனைய போராளிகள் மட்டத்திலும் காதல், திருமணங்கள் இயல்பாக ஏற்படத் தொடங்கின.

உறுப்பினர்கள் காதலிக்கும்போது தத்தமது பொறுப்பாளர்களுக்கூடாகத் தலைமைச் செயலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். திருமணத்திற்கு முன்னதாக அவர்கள் பாலியல் உறவில் ஈடுபடுவது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாக இருந்தது.

ஆண்களுக்குத் திருமண வயது 29ஆகவும் பெண்களுக்கான திருமண வயது 23ஆகவும் இருந்தது. இதில் ஒருவராவது கட்டாயமாக ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட சேவையைச் செய்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஒருசில போராளிகளின் திருமணங்களின்போது சாதி பற்றிய மறைமுகமான உறுதிப்படுத்தல்களும் இருந்தன. ஆனாலும் பல போராளிகள் இவற்றைக் கடந்து திருமணம்செய்து அன்பான காதல் வாழ்வை மேற்கொண்டனர்.

எனது குடும்பத்தில் அம்மம்மாவிடம் சாதி வேறுபாடு பார்க்கும் குணம் இருந்தது. எமது வீட்டிலே வேலைகள் செய்யவரும் ஒருவருக்கு அம்மம்மா போத்தலில்தான்

குடிப்பதற்குத் தண்ணீர் கொடுப்பதை அவதானித்து வந்திருந்தேன்.

ஒரு நாள் அவர் தண்ணீர் கேட்டபோது அம்மம்மாவுக்கு முன்னதாகவே நாங்கள் தண்ணீர் குடிக்கும் சொம்பிலே தண்ணீர் கொண்டு போய்க் கொடுத்தேன்.

அம்மம்மாவுக்குப் பயங்கர கோபம். என்னுடன் எதுவும் பேசாமல் அந்தச் சொம்பை வெளியே வீசி எறிந்துவிட்டார். அப்போதுதான் சமூகத்தில் சாதியம் ஒரு பெரிய பிரச்சனையாக இருப்பதை நான் புரிந்துகொள்ளத் தொடங்கினேன்.

இயக்கத்தில் இணைந்து யாழ்ப்பாணத்தில் அரசியல் வேலைகளுக்காக மக்கள் மத்தியில் போனபோது, பெரிய படித்த மனிதர்கள்கூட அற்பமான சாதிச் சாக்கடையில் விழுந்துகிடக்கும் சமூகக் கொடுமை என் மனதைச் சுட்டது.

எழுத்தாளர் கே. டானியல் எழுத்துக்களின் மூலம் சாதிக் கொடுமை சமூகத்தில் மலிந்து கிடக்கும் தன்மைகளை

விளங்கிக்கொண்டேன். எமக்கொரு நாடு கிடைத்ததும் இதற்கான விழிப்புணர்வு வேலைகளை மக்கள் மத்தியில் முன்னெடுப்பதன் அவசியத்தை எனது போராளி நண்பிகளுடன் பேசிக்கொள்வேன்.

பல போராளிகள் சாதியத்தை அறவே வெறுத்தார்கள். அதற்கெதிராகப் போராடுவதன் அவசியத்தை உணர்ந்திருந்தார்கள்.

ஆயுதப் பயிற்சியெடுத்து ஒரு போராளியாகியிருந்தாலும் சிலருடைய ஆழ் மனங்களில் சாதி, மதம், தேவையற்ற சம்பிரதாயங்கள், மூடநம்பிக்கைகள் பற்றிய கருத்துக்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்பட்டிருக்கவில்லை.

இது இப்படியிருக்க, பல வயது வந்த ஆண் போராளிகள் தம்மைவிட மிகவும் வயது குறைந்த பெண் போராளிகளைத் திருமணம் செய்வதற்கான அனுமதியைக் கேட்கும்போது தர்மசங்கடமான பிரச்சனைகள் எழுவது வழக்கம்.

ஆனால் இந்த இடத்தில் முடிவு எடுக்கும் அதிகாரம் பெண் பொறுப்பாளர்களிடமே இருந்தது. சில ஆண் தளபதிகள் தமது போராளிகளுக்காகச் சிபார்சு செய்து வரும்போது பலவிதமான முரண்பாடுகள் ஏற்படுவது வழக்கம்.

இதனால் பெண் பொறுப்பாளர்களுக்குப் பல உளைச்சல்களும் ஏற்பட்டதுண்டு. திருமணம் முடித்து இருவரும் பணிக்குச் செல்லும் போராளிக் குடும்பங்களில் அவர்களுடைய குழந்தைகளைப் பராமரிப்பதற்கு ஒரு காப்பகம் அமைக்கும்படியான ஆலோசனைக்கமைவாக அந்தப் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

முதன்முதலாகப் புதுக்குடியிருப்பில் ‘தளிர் குழந்தைகள் காப்பகம்’ அமைக்கப்பட்டது.

## நந்திக்கடல் வழியாக தலைவர் வெளியேறும் திட்டத்தில் பெண் போராளிகள் எவரையேனும் இணைத்துக் கொள்ளவில்லை!



• ஒருநாள் உயிர் தப்பி வந்த குற்றத்திற்காக ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைக்கும் துன்பத்தை அனுபவிக்க வேண்டியதாகவே இருக்கிறது.

• கடைசிக்கட்ட போரில் காயப்பட்டிருந்த பெண் போராளிகள் பலர் பதுங்குக்குழிகளுக்குள் கிடந்தபடி சயனைட்டை அருந்தி மரணித்திருந்தனர்.

• நாம் கிழக்கு மாகாணத்தில் மக்களைச் சந்தித்தபோது, அவர்கள் கொட்டிய பாச உணர்வுகளும் கொஞ்ச நஞ்சமல்ல.

• "எங்கட புள்ளைகள் நாட்டுக்காக எண்டுதானே போராடப் போனதுகள். இயக்கத்தை நம்பிப்போன பிள்ளைகளை இயக்கமே சுட்டுக் கொன்னு போட்டுதே" என்று அவர்கள் கதறினார்கள்.




அதேவேளை சராசரி திருமண வயது கடந்த நிலையிலும், படுகாயமடைந்த நிலையிலும், அங்கவீனமுற்ற நிலையிலும் பல பெண் போராளிகள் திருமணமாகாமல் இருந்தனர்.

இயக்கத்தின் இடைவிடாத வேலைப்பளுவில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்த காரணத்தால், தமக்கு வயது போய்க் கொண்டிருக்கிறது என்பதையோ, தமக்கு ஒரு

வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்வது பற்றியோ சிந்திக்காதிருந்தனர்.

இயக்கம் அவர்களுக்கான பாதுகாப்பையும் அடிப்படைத் தேவைகளையும் ஒரு போராளி என்கிற சமூக அந்தஸ்த்தையும் கொடுத்திருந்தது.

எனக்குத் தெரிந்த பல பெண் போராளிகள் திருமணம் செய்துகொள்ளாமல் தொடர்ந்தும் போராட்டத்தில் பங்களிப்பு செய்யவே விரும்பினார்கள். இந்த விடயத்தில் இயக்கம் அவரவர்களது சுதந்திரத்திற்கு இடமளித்திருந்தது.

போர்க்களங்களில் அதிக அளவு பெண் போராளிகள் செயற்பட்டாலும் பகுதி கட்டளை வழங்கும் அதிகாரிகளாக ஆண் தளபதிகளே இருந்தனர்.

நீண்ட போர் அனுபவம் கொண்ட பெண் தளபதிகளை ஆண் பெண் போராளிகளுக்கான கட்டளை அதிகாரிகளாகத் தலைவர் நியமித்திருந்தார். கேணல் விதுஷா, கேணல்

துர்க்கா ஆகியோரது பொறுப்பில் களமுனைப் பகுதிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இப்படியாக விடுதலைப் புலிப் பெண் போராளிகளின் வளர்ச்சி இராணுவ கட்டமைப்புக்குள் ஏற்பட்டிருந்தது.

1992ஆம் ஆண்டு வைகாசி மாதம் யாழ்ப்பாணம் வின்ட்ஸர் தியேட்டரில் விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணியினர் பெண்களுக்கான மாநாடு ஒன்றை நடாத்திப் பத்து முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தார்கள்.

தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தார்கள். அந்தத் தீர்மானங்களில் பிரதானமானது '**சீதனத் தடை**' பற்றியது. தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை பெண்களை மட்டுமல்லாமல் முழுச் சமூகத்தையும் பாதிக்கும் பிரச்சனையாக இருந்து வருவது சீதனம்.

இது தொடர்பான சமூக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, '**தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவினரின்**

**சட்டவாக்கப் பகுதி**‘யால் ‘மணக்கொடைத் தடைச் சட்டம்’ என்ற தனிச் சட்டம் உருவாக்கப்பட்டிருந்தது.
ஆனாலும் நடைமுறைச் செயற்பாட்டில் விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகக் கோவைகளுக்குள் தூசு படிந்து, தூங்கிக் கிடந்த சட்டமாகவே ‘சீதனத்(மணக்கொடை)தடைச் சட்டம்’ அமைந்திருந்தது.

பெண் போராளிகள் நீதிபதிகளாகவும் சட்டவாளர்களாகவும் நிதிச் செயற்பாடுகளில் ஈடுபடுவோராகவும் ஊடகப்பிரிவுகளான நிதர்சனம், புகைப்படப் பிரிவு, பத்திரிகை, வானொலி ஆகிய துறைகளில் செயல்படுவோராகவும் இருந்தனர்.

பெண் போராளிகளில் பலர் சிறந்த இலக்கியக் கர்த்தாக்களாகவும், ஆயுதப் போராட்டத்திற்கு அப்பால் அரசியல், சமூகம் பற்றிய தளங்களில் பரந்து விரிந்த தேடல் உள்ளவர்களாகவும் இருந்தனர்.

ஆனாலும் இயக்கத்தின் போராட்டக் கருத்தியலின் எல்லைக்கு வெளியே செல்லாமல் போராட்டத்தின்

நியாயங்களை வலுப்படுத்தும் வகையிலேதான் அவர்களது படைப்பாற்றல்களும் வெளிப்படுத்தல்களும் அமைய முடிந்திருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு கெரில்லா இயக்கம் என்ற நிலையைக் கடந்து மரபுவழி இராணுவமாக வளர்த்தெடுக்கப்பட்டு, இறுதிக்காலக் கட்டங்களில் ஒரு தனிச் சமூகமாகவே உருவாகியிருந்தது.

போராளிகள், அவர்களுடைய குடும்பங்கள், பிள்ளைகள், இயக்கத்தின் பராமரிப்பிலிருந்த முதியோர் (போராளி மாவீரர்களின் பெற்றோர்) செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை, மற்றும் புனர்வாழ்வு அமைப்புக்களால் பராமரிக்கப்பட்டு வந்த குழந்தைகள், அனாதரவான நிலையிலிருந்த பெண்கள், முதியவர்கள், மனநிலை பாதிப்புற்ற ஆண் பெண்கள் அத்தனை பேருமே இறுதியில் கைவிடப்பட்டிருந்தனர்.

**அவர்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்கள் எதுவுமே இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

**முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்களில் பெண் போராளிகளின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருந்தது.**

அவரவர்கள் அந்தந்த இடங்களிலேயே தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறு வழிகள் இருக்கவில்லை.

கடற்புலியணியின் பெண் போராளிகள் சிலர் வெடிமருந்து ஏற்றப்பட்ட வாகனங்களோடும், வெடிமருந்து அங்கிகளோடும் கடற்புலி தளபதி சூசையின் கட்டளைக்காக முள்ளிவாய்க்கால் பகுதியில் நிறுத்திவைக்கப் பட்டிருந்தனர்.

காயப்பட்டிருந்த பெண் போராளிகள் பலர் பதுங்குக்குழிகளுக்குள் கிடந்தபடி சயனைட்டை அருந்தி மரணித்திருந்தனர்.

பல பெண் போராளிகளுக்கு என்ன நடக்கப் போகிறது என்றே தெரியாமல் தத்தமது நிலைகளில் குழப்பத்துடன் நின்றிருந்தனர்.

பொதுவான அறிவித்தல்கள் எதுவுமே வழங்கப்பட்டிருக்கவில்லை.



**“இறுதி முயற்சியாகத் தலைவரும் அவருடன் சில தளபதிகளும் நந்திக்கடல் வழியாக வெளியேறும் திட்டத்தில் பெண் போராளி எவரையேனும் இணைத்துக்கொண்டதான தகவல்கள் எதனையும் நான் அறியவில்லை”.**

**நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் தாங்கிப் போராடிய பெண்களின் நிலை இன்று சமூகத்தில் எவ்வளவு மோசமானதாக ஆகிவிட்டது?**

ஒருநாள் உயிர் தப்பி வந்த குற்றத்திற்காக ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைக்கும் துன்பத்தை அனுபவிக்க வேண்டியதாகவே இருக்கிறது.

வாழ்க்கையின் பொருளாதார நெருக்கடி, போரின் அனுபவங்களால் ஏற்பட்ட மனச்சுமை, சமூகத்தின் அவதூறுகள், பொருத்தமான வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்வதில் உள்ள பிரச்சனைகள் எனப்போராடப் போன குற்றத்திற்காகப் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் எல்லை கடந்து நீளுகின்றன.

தமிழ்ப் பெண்களுக்கு இயல்பாகவே இருக்கும் சகிப்புத்தன்மையும், துன்பங்களை எதிர்த்து நின்று போராடும் மனோபாவமும், போர்க்களங்களில் கற்றுக்கொண்ட துணிச்சலும் இன்று அவர்கள் தமது வாழ்க்கைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கின்றன.

ஆனாலும் அவர்களது உளவியல் தாக்கங்களையும் சுமந்து கொண்டுதான் அடுத்த சந்ததியும் உருவாகிறது.

எனக்குத் தெரிந்த ஒரு பெண் யுத்தக்களத்தில் வயிற்றில் காயமடைந்தவள், அவளுக்காக ஒரு வெளிநாட்டு மணமகனைப் பெற்றோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்தப் பெண் வயிற்றில் காயமடைந்திருந்த காரணத்தால் அவளது மருத்துவ எக்ஸ்-ரே அறிக்கைகளை ஆராய்ந்த பின்பே அவளை மணப்பதா இல்லையா என்ற முடிவை மணமகன் எடுக்கவிருப்பதாக அறிய முடிந்தது.

ஏனெனில் அவளால் குழந்தையைப் பெற்றெடுக்க முடியாதுவிடின் அவள் ஒரு வாழ்க்கைத் துணையாகவும் ஆக முடியாது. எந்தக் குறை குற்றங்களோடும் ஒரு பெண்ணை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லாத சராசரியான சமூக மனப்பாங்கானது, களமுனையில் பலத்த காயங்களை அடைந்த போராளிப் பெண்களுக்குக் குடும்ப வாழ்வு அமைவதற்கு எவ்வளவு தடையாக இருக்கிறது.

பெண்கள் போராடப் போனது தவறல்ல, அவர்கள் உயிருடன் மீண்டு வந்ததுதான் தவறானது. இதுதான் முன்னாள்

போராளிப் பெண்கள் சந்திக்கும் சமூகப் போர்க்களம். இதில் வெற்றி பெறுபவர்களையும் வீழ்ந்துபோவோர்களையும் கடந்து கொண்டு போகிறது காலம்.



**கிழக்கு மண்ணின் நினைவுகள்**

2004இன் இறுதிப் பகுதியில் இலங்கையின் கரையோரங்களைத் தாக்கிய சுனாமிப் பேரனர்த்தத்தினால் வடக்கு, கிழக்கின் பல கரையோரக் கிராமங்கள் முற்றிலுமாக அழிந்துபோயின.

இந்த இயற்கைப் பேரனர்த்தம் நிகழ்ந்தபோது நான் மன்னார் நகர்ப் பகுதியிலிருந்த எமது முகாமில் அரசியல் வேலைத்திட்டம் காரணமாகத் தங்கியிருந்தேன்.

சுனாமியால் காயமடைந்திருந்த பெருந்தொகையான மக்களுக்கு மிக அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாகவும், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து உடனடியாக இரத்தத்தை முல்லைத் தீவுக்கு அனுப்பிவைக்கும்படியும் தலைமைப் பீடத்திலிருந்து எனக்கு அறிவுறுத்தல் வந்திருந்தது.

போரின் கொடூரமான பல அழிவுகளை நான் நேரில் கண்டிருந்தாலும், இந்த அளவுக்கு ஆங்காரத்தின் உச்சத்துடன் இயற்கை பொங்கியெழுந்து மக்களைக் காவு கொண்டதைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாமலிருந்தது.

எமது உடன் பிறந்தோருக்கு உயிர் பிழைப்பதற்கு இரத்தம் தாருங்கள் என்ற எமது ஒலிபெருக்கி அறிவித்தல்களைச் செவிமடுத்த மக்கள்

**தமது இரத்தத்தைத் தானமாக வழங்குவதற்காக மன்னார் பொதுமருத்துவமனைக்குப் பெருந்தொகையாகப் படையெடுத்து வரத் தொடங்கியபோது சக மனிதன் மீதான மானுடத்தின் நேசம் இன்னமும் மடிந்துவிடவில்லை என்ற உண்மையை உணர்ந்துகொண்டேன்.**



தலைமன்னார் கடலிலும் வழமைக்கு மாறான பெரிய அலைகள் ஏற்படுவதாகக் கரையோர மக்கள் தெரிவித்திருந்தனர்.

நாங்கள் தலைமன்னாருக்குச் சென்று பார்த்தபோது, தூர இடங்களிலிருந்து வந்து வாடிகளில் தங்கியிருந்த சிங்கள, முஸ்லிம் மீனவக் குடும்பங்களின் பெண்களும் குழந்தைகளும் பேரலைகள் ஏற்படுத்திய பயத்தில் உறைந்துபோயிருந்தனர்.

அவர்களைக் கரையோரங்களிலிருந்து அப்புறப்படுத்தி உட்பகுதிகளில் இருந்த பாடசாலைக் கட்டடங்களில் அன்றிரவு தங்கவைப்பதென முடிவெடுக்கப்பட்டது.

அடுத்த நாள் நிலைமையைப் பார்த்து அவர்களை என்ன செய்வது எனத் தீர்மானிப்பதாக இருந்தது. கிளிநொச்சிக்கு உடனே வரும்படி எனக்கு அறிவித்தல் வந்திருந்ததால், உடனடியாக விரைந்தேன்.

அரசியல் துறையின் எந்த முகாம்களிலும் போராளிகள் ஒருவர்கூடத் தங்கியிருக்கவில்லை. அனைவரும் வடமராட்சி கிழக்கில் தொடங்கி, முல்லைத்தீவு வரையுள்ள கரையோரங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துரித மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த வேலைகளை ஒழுங்குபடுத்தும் அவசரக் கூட்டமொன்றிற்காக அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் என்னையும் தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார்.

காயமடைந்தவர்களையும் உயிரிழந்தவர்களின் சடலங்களையும் மீட்கும் பணிகள் தொடர்ந்துகொண்டேயிருந்தன.
மீட்டெடுக்கப்பட்டவர்களுக்கான தங்குமிடங்களாகப் பாடசாலைக் கட்டடங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

அவர்களுக்கான சமைத்த உணவுகள், குழந்தைகளுக்கான பால்மா என்பனவும் உடனடி அத்தியாவசியப் பொருட்களும் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

**புலிகள் இயக்கத்தின் படையணிகள் அனைத்தும், மக்களுடன் இணைந்து அசுர வேகத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்தன.**
நான் பங்குபெற வேண்டிய கூட்டம் இயக்கச்சி சந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அப்போது போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த காரணத்தால் வன்னிப் பகுதியில் பணியாற்றிக்கொண்டிருந்த பல அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் பிரதேச மக்கள் கட்டமைப்புகளின் உறுப்பினர் களும் இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர்களும் மதகுருமார்களும் ஏ9 நெடுஞ்சாலைக்கருகில் ஒரு மரத்தின் கீழ் ஒன்று கூடியிருந்தனர்.

அவர்கள் சார்ந்திருக்கும் அமைப்புகள் ரீதியாக எத்தகைய உடனடிப் பணிகளைச் செய்யமுடியும் என அவர்களிடம் கேட்டார் தமிழ்ச்செல்வன்.

மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அவசரமாக வழங்க வேண்டியிருந்த சூழ்நிலையில், சில அரச சார்பற்ற நிறுவனங்கள், தமது வழமையான ஒழுங்குகளுக்கமைய அலுவலகத்திற்குத் திட்டத்தை அனுப்பி அவர்களுடைய பரிந்துரைக்கமையவே செயற்பட முடியும் என்ற கருத்தை முன்வைத்தனர்.

அவர்களுடைய கருத்து அரசியல்துறைப் பொறுப்பாளருக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. பாரிய இயற்கை அனர்த்தம் ஏற்பட்டுள்ள நிலைமையில் அவசரமும் அவசியமுமான பணிகளை உடனடியாக முன்னெடுக்கக்கூடிய நிறுவனங்கள் மாத்திரம் இங்கிருந்து செயற்படலாம்.

அதை விடுத்து தமது வழமையான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் செயற்பட முடியும் எனக் கருதுகிற நிறுவனங்கள் வெளியேறுவதுதான் நல்லது என அவர் கூறினார்.

அது பல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியது. பல நிறுவனங்கள் உடனடியாகவே தம்மால் முன்னெடுக்கக் கூடியதாயிருந்த வேலைகளின் விபரங்களைத் தெரிவிக்கத் தொடங்கின.

அங்குச் செயற்பட்ட அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களையும் இணைத்துத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திட்டங்களைச் செயற்படுத்தும் எனத் தீர்மானிக்கப் பட்டது.




பெண்கள் குழந்தைகளுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதற்காக, மக்களின் தற்காலிகத் தங்குமிடங்களில் பெண் போராளிகளுடன், மக்கள் பெண் தொண்டர்களும் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவுப் பிரதேச மக்களுக்கும் இதே மாதிரியான ஒழுங்குபடுத்தல் கூட்டம் முள்ளியவளை பிரதேசத்தில் நடத்தப்பட்டது.

எல்லாக் கூட்டங்களையும் முடித்துக்கொண்டு கிளிநொச்சி திரும்பும் வரையில் எனக்கான தனிப்பட்ட வேலைகள் பற்றி

எதுவும் தெரிவிக்கப்படாத காரணத்தால் மறுநாள் மக்களின் தங்குமிடங்களுக்குச் சென்று ஏனைய போராளிகளின் வேலைகளுடன் நானும் இணைந்துகொள்ளுவது என்ற தீர்மானத்துடன் இருந்தேன்.

கிளிநொச்சி சமாதானச் செயலகத்திற்கு வந்து சேர்ந்தபோது மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் பொறுப்பாளர்களுடனான தொடர்புகள் அதுவரை சரிவரக் கிடைக்கவில்லை என்பது தெரியவந்தது.

அந்த இடங்களுக்கு நேரடியாக ஒருவர் செல்ல வேண்டிய தேவை உணரப்பட்டதால், தமிழ்ச்செல்வன் என்னிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருந்தார்.

“**தமிழினி**! நீங்கள் உடனடியாக அம்பாறைக்குப் போக வேணும், கடற்பெருக்கு ஏற்பட்டதோட அங்க தொடர்ச்சியான மழையும் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டிருக்குது.

யாழ்ப்பாணத்திலிருந்து இருபத்தைந்து லொறிகளில் நிவாரணப் பொருட்கள் வந்திருக்குது, அதையும் கொண்டு

போகவேணும். ‘ஆமியின்ர ஸ்கொட்’ எடுக்கிறதெண்டால் நீங்கள் காலையில் போகமுடியாது.

தாமதமாகும் . . . அவர்களுக்குத் தெரியாமல் களவாத்தான் போகவேணும், என்னமாதிரி உங்களால் ஏலுமா?” எனது மனம் ஒரு கணமேனும் தாமதிக்கவில்லை.

“**ஓம், ஏலும், நான் போறன்.**” போர் நிறுத்தம் ஏற்பட்டதன் பின்பு சில தடவைகள் அரசியல் பணி காரணமாக ஏற்கனவே கிழக்கு மாகாணத்திற்குச் சென்றிருந்த அனுபவம் எனக்கிருந்தது.



நான் முதலிரு தடவைகள் சென்றிருந்தபோது, புலிகளின் கருணா அம்மானைச் சந்தித்திருந்தேன். கிழக்கில் நாம் ஏற்பாடு செய்து நடாத்திய பெண்கள் மாநாட்டுக்கும் அவர் பல உதவிகளைச் செய்திருந்தார்.

**புலிகள் இயக்கம் பிளவுபட்டதன் பின்னர், கிழக்கு மாகாணப் போராளிகளை மீட்டெடுக்கும் நடவடிக்கை**

**என்ற பெயரிலான ஒரு சகோதர யுத்தமொன்றில் புலிகளின் தாக்குதல் படையணிப் போராளிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.**

அதன் பின்னர் கிழக்கு மாகாண மக்களைச் சந்திப்பதற்காக ஒரு சிறப்புப் பரப்புரை அணியாக அரசியல்துறைப் போராளிகள் அனுப்பிவைக்கப்பட்ட ஒரு அணியில் நானும் சில பெண் போராளிகளும் சென்றிருந்தோம்.

பளுகாமம், களுவாங்கேணி, கொக்கட்டிச்சோலை, தாண்டியடி, மகிழடித்தீவு, வாகரை, கதிரவெளி உள்ளிட்ட பல பகுதிகளில் வீடுவீடாகச் சென்று மக்களைச் சந்தித்த அனுபவங்கள் என் வாழ்நாளில் மறக்க முடியாதவை.

எவ்வளவுதான் துன்ப துயரங்கள் நெஞ்சில் இருந்தாலும், வாசலுக்கு வந்தவர்களை “**வாங்க மகள் உட்காருங்க, சாப்பிடுங்க மகள், களைச்சுப் பொயிட்டியள் தண்ணியெண்டாலும் குடிச்சிட்டுப் போங்க புள்ளையள்**” என்ற அந்த அன்புக்கு ஈடாக உலகில் வேறு எதுவுமே இருக்க முடியாது.

இயற்கை எழில் கொஞ்சும் அந்த மண்ணைப் போன்றே மக்களின் இதயங்களில் எளிமையும் அன்பும் நிறைந்தே இருந்தது.

வாகரைப் பகுதியில் பரப்புரை வேலைகளை முடித்துக்கொண்ட எமது அணி கரடியனாறு செல்லப் புறப்பட்டபோது, அந்தப் பிரதேசங்களை நன்கு அறிந்திருந்த நான்கு போராளிகள், எமக்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்றனர்.

அவர்கள் புறப்பட்ட சில நிமிடங்களில் யாரும் எதிர்பாராத நிலையில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில், ஒரு ஆண் பொறுப்பாளர் உயிரிழந்ததுடன் ஒரு பெண் போராளி பலத்த காயமடைந்தார்.

உயிர் தப்பிய இரண்டு போராளிகளும் காடுகளுக்கூடாகத் தப்பியோடி இறுதியில் எம்மிடம் வந்து சேர்ந்தார்கள்.

அன்றைய நிலையில் வன்னியிலிருந்து போராளிகள் அங்குச் சென்று பணி செய்வது என்பது மிகவும் உயிராபத்தை ஏற்படுத்தும் ஒரு சவாலாகவே இருந்தது.

வன்னிப் போர்க் களங்களில் புலிகள் இயக்கம் பெற்ற பல பாரிய இராணுவ வெற்றிகளுக்குப் பின்னால், கிழக்கு மாகாணப் போராளிகள் எத்தகைய வீர, தீர சாதனைகளையும் அர்ப்பணிப்புக்களையும் செய்திருந்தார்கள் என்பதை மறக்க முடியாது.

**நாம் கிழக்கு மாகாணத்தில் மக்களைச் சந்தித்தபோது, அவர்கள் கொட்டிய பாச உணர்வுகளும் கொஞ்ச நஞ்சமல்ல.**

கிழக்கு மாகாணப் போராளிகளுடன் மேற்கொள்ளப்பட்ட சகோதர யுத்தம் எத்தனை வலிகளை அந்த மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தது என்பதை நேரடியாக அவர்களிடம் கேட்டறிந்தபோது ஏற்பட்ட மனத் துயரம் நினைத்துப் பார்க்கவும் முடியாத அளவுக்குச் சோகமானது.

பல வருடங்களாக எம்முடன் ஒன்றாயிருந்து போரிட்டவர்களின் வாழ்க்கை, பின்பு எமது கரங்களாலேயே முடிவு கட்டப்பட்டபோது, வஞ்சகப் பொறியினுள் அகப்பட்ட பொறுப்பாளர்களின் பலவீனம் காரணமாகவும்,

**முதுகில் குத்திய துரோகத்தை என்றும் மன்னிக்க முடியாது எனச் சூளுரைத்து**, சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் தடம் மாறிய சாதாரண கீழ்நிலைப் போராளிகளுக்குச் சிறு மன்னிப்பேனும் வழங்குவது தமது மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்ட செயல் என்பதால் அப்போராளிகள் ஈவிரக்கமின்றி இயக்கத்தால் கொன்றழிக்கப்பட்ட போதும் நாம் மீண்டும் **ஒரு கண்ணுக்குப் புலப்படாத வஞ்சகப் பொறியினுள் விழவே செய்தோம்.**

இக்கொடும் பழிவாங்கலில் உயிரிழந்த தமது பிள்ளைகளின் உடல்கள்கூட தமக்குத் தரப்படவில்லையென அழுது அரற்றிய எத்தனையோ பெற்றோரை ஆற்றுப்படுத்தும் நிலைக்கு நான் தள்ளப்பட்டேன்.

**“எங்கட புள்ளைகள் நாட்டுக்காக எண்டுதானே போராடப் போனதுகள். இயக்கத்தை நம்பிப்போன பிள்ளைகளை இயக்கமே சுட்டுக் கொன்னு போட்டுதே”** என்று அவர்கள் கதறினார்கள்.

இயக்கம் எமக்குத் தந்திருந்த அரசியல் விளக்கங்களை அந்த அப்பாவிப் பெற்றோருக்கு எப்படிப் புரியவைக்க முடியும்? அந்தச் சூழ்நிலைகள் மிகவும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள் நிறைந்தவை.

மனதுக்கு மிகவும் கடினமானவை. ஒரு விடுதலைப் போராட்டம் இத்தகைய கட்டங்களையும் கடந்துதான் முன்னேறிச் செல்ல வேண்டியிருக்கும் என்பதை ஜீரணித்துக்கொள்வது என்பது எனக்கு மட்டுமல்ல, பல போராளிகளுக்கும் நெருப்பை விழுங்குவதாகவே இருந்தது.

## “கையெழுத்து வைச்சிட்டு வந்திட்டன், இனிமேல்த்தான் பிரச்சனையே இருக்குது” : 2002 இல் போர் நிறுத்த

## உடன்படிக்கையில் கையொப்பமிட்ட தலைவர் பிரபாகரன் கூறியது!!



வெருகலாற்றுக் கரையில் பெண் போராளிகளும் நிறுத்தப்பட்டிருந்தனர். வன்னியிலிருந்து மாலதி படையணி பெண் போராளிகளும் தாக்குதலுக்காக அனுப்பப்பட்டிருந்தனர்.

ஆயுதமேந்திய பெண்களின் வாழ்க்கையில் இது மோசமான கறை படிந்த நாட்களாயிருந்தன. கிழக்கு மாகாணப் பெண் போராளிகள் பாதுகாப்புத் தேடித் திக்குத்திசையற்று அலறியடித்தபடி வீதிகளில் ஓடியதும், அவர்களுடைய காயங்களுக்கு இலங்கை இராணுவத்தினர், முதலுதவியளித்து வீடுகளுக்கு அனுப்பிவைத்த கதைகளையும் நேரிலே கண்ட

பொதுமக்கள் எம்மிடம் சொன்னபோது எதுவுமே பேசமுடியாமல் வாயடைத்து நின்றோம்.

2009இல் முள்ளிவாய்க்காலில் அதே நிலைமை எமக்கும் வந்தபோதுதான் அந்த வலியின் கொடூரத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

**இனத்தின் விடுதலைக்காக என்ற நியாயத்திற்குள் புதையுண்டுபோன உண்மைகளுக்கு எந்த ஆராய்ச்சி மணியை அடித்து யாரிடம் நீதி கேட்க முடியும்?**



**உண்மையற்ற சமாதானமும் உருக்குலைந்த மக்கள் வாழ்வும்**

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே 2002 பெப்ரவரியில் போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தானதன் பின்பு கிளிநொச்சி நகரம் கொழும்புக்கு நிகரான அரசியல் தலைநகரம் என அரசியல் ஆய்வாளர்கள் விளிக்கும்படியான நிகழ்வுகள் அங்கு நடந்தேறத் தொடங்கின.

இதன் முதற்கட்டமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், அவரது துணைவியாரும் இங்கிலாந்திலிருந்து மாலைத்தீவுக்கு வந்து அங்கிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட**"Maldive air taxi"** மூலமாக இரணைமடு நீர்த்தேக்கத்தில் வந்து இறங்கினார்கள்.

அவர்களை வரவேற்பதற்காகத் தலைவர் பிரபாகரனும் துணைவியார் மதிவதனியும், இன்னும் இயக்கத்தின் பல முக்கியமான பிரமுகர்களும், தளபதிகளும் பொறுப்பாளர்களும் வந்திருந்தனர்.




**மகளிர் தளபதிகளான கேணல் விதுஷா, கேணல் துர்க்கா ஆகியோருடன் நானும் போயிருந்தேன்.**

அன்று அனைவரது முகங்களிலும் விசேடமாகத் தயாரிக்கப்பட்டிருந்த 'சபாரி' உடையணிந்து இலகுவான மனநிலையுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த தலைவரைப் பார்த்த அனைவரது மனங்களிலும் பெருத்த நிம்மதியும் நம்பிக்கையும் நிரம்பியிருந்தது.

வானத்தில் பறக்கக்கூடியதும் நீரில் மிதக்கக்கூடியதுமான, சிறிய இலகு ரக விமானம் ஒன்று கிளிநொச்சி நகரின் மேலாகப் பறந்து வந்து இரணைமடுக் குளத்தைச் சுற்றித்

தாழ்வாக வட்டமடித்து அதன் நீர்ப்பரப்பில் இறங்கி, சிறுதூரம் நீந்திச் சென்று தன்னை நிலைப்படுத்தியது.

கடற்புலிகளின் சிறப்பு அணியினர் குளத்தின் நீர்ப்பரப்பில் விமானம் இறங்குவதற்கு பொருத்தமான இடத்தைச் சுட்டும் அடையாள மிதவைகளை ஏற்கனவே அமைத்திருந்தனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையும் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தியும் காற்று நிரப்பப்பட்ட பிளாஸ்ரிக் படகில் சென்று அரசியல் ஆலோசகரையும் அவரது துணைவியையும் அழைத்து வந்தனர்.

அனுபவம் வாய்ந்த கடற்புலிப் போராளிகள் மிகவும் அவதானமாகப் படகினைச் செலுத்தி வந்தனர்.

சிறுநீரக நோயினால் மோசமாகப் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிய நிலையில், ஆபத்தான கடல்வழிப் பயணத்தை மேற்கொண்டு நாட்டைவிட்டு வெளியேறிச் சென்று, தனது

சிறுநீரக அறுவைச் சிகிச்சையினை முடித்துக்கொண்டதன் பின்னர்,



**மீண்டும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகக் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் வந்திறங்கிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் படகிலிருந்து இறங்குவதற்கு ஏதுவாகத் தலைவர் பிரபாகரன் கைகொடுத்து உதவினார்.**

நீண்ட காலம் பிரிந்திருந்த குடும்பம் மீண்டும் கூடிக்கொண்டதைப் போன்றிருந்த அச்சூழல் மகிழ்ச்சியான சுக, நல விசாரிப்புக்களால் நிரம்பியிருந்தது.

அங்கு வந்திருந்த அனைவருமே அன்ரன் பாலசிங்கத்திற்கும் அவரது துணைவியாருக்கும் ஏற்கனவே அறிமுகமும் நெருக்கமும் கொண்டவர்களாகவே இருந்தனர்.

ஒரேயொரு தடவை சந்தித்த போராளியைக்கூட நினைவில் வைத்திருந்து தோளிலே தட்டி நலம் விசாரிப்பது அவர்கள் இருவரதும் சிறப்பம்சமாக இருந்த காரணத்தால் பல சாதாரணப் போராளிகள்கூட அவர்கள்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தனர்.

நான் முதன்முதலாக அன்ரன் பாலசிங்கம் அவரது மனைவி அடேல் இருவரையும் 1993 இல் யாழ்ப்பாணத்தில் அவர்களுடைய வீட்டில் சந்தித்தேன்.

அப்போது நான் '**சுதந்திரப் பறவைகள்**' பத்திரிகைக்கு ஒரு அரசியல் கட்டுரை எழுதியிருந்தேன்.

யாராவது பெரியவர்களிடம் கொடுத்து அதைத் திருத்தம் செய்ய வேண்டும் என எனது நண்பியான மலைமகளிடம் கூறியிருந்தேன். அவள்தான் என்னை முதன்முதலாக அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

மலைமகளை அவர் ஏற்கனவே அறிந்திருந்த காரணத்தால் எனது பெயரை விசாரித்தார். அப்போது எனது பெயர் சந்திரிகா.

**அந்தப் பெயரைக் கேட்டதும் அவருக்குள் ஒரு சிரிப்பு பரவியது. "ம் . . . சந்திரிகா அம்மையார் என்ன விஷேசம்? என்ன வேலை செய்யிறிங்கள்?"** என வினவினார்.
ஒரு நான் அதுவரையிலும் ஊடகங்கள் மூலமாக மட்டுமே அறிந்திருந்த இயக்கத்தின் முக்கியமான ஒரு நபருடன் பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை நினைக்க ஒருவிதமான படபடப்பு ஏற்பட்டது.

அவரது துணைவியார் மிகவும் சுவையான தேனீரைப் பருகத் தந்து, புன்னகையுடன் எமக்கருகில் அமர்ந்துகொண்டார்.

"சாப்பிட்டு விட்டீர்களா? என்ன சாப்பிட்டீர்கள்?" என விசாரித்தார். வெள்ளையினப் பெண்மணியான அவர் தமிழ் மொழியைத் தன்னால் முடிந்தவரை அழகாக உச்சரித்துப் பேச முயல்வதை வியப்போடு அவதானித்தேன்.

பாலசிங்கம் அவர்கள் நான் கொண்டு சென்ற கட்டுரையைச் “**சத்தமாக வாசி பிள்ளை**” என்றார். நான் வாசித்தேன். கண்ணை மூடிக்கொண்டு முழுவதையும் பொறுமையாகக் கேட்ட பின்னர், “அந்தப் பந்தியை வெட்டு, இந்தப் பந்தியை கொஞ்சம் வடிவா யோசிச்சு திருப்பி எழுது. பரவாயில்லை. இப்பிடித்தான் எழுதி எழுதிப் பழக வேணும். கெட்டிக்காரி. நிறையப் புத்தகங்களை எடுத்துப் படி. கொஞ்சமாக எழுதுறதுக்கும் நிறைய வாசிக்க வேணும்.

என்ன ஐசே நான் சொல்லுறது விளங்குதே” என தனது வழக்கமான பாணியில் அதட்டினார். நான் வேகமாகத் தலையை ஆட்டிக்கொண்டேன்.

அன்ரன் பாலசிங்கம் மற்றும் அடேல் பாலசிங்கம் ஆகிய இருவருடனும் பெண் போராளிகள் பலரும் ஒருவிதமான தனிப்பட்ட உரிமையுடன் நெருங்கிப் பழகினார்கள் என்பதை என்னால் கூறமுடியும்.

அடேல் ஒரு வெள்ளையினப் பெண்மணியாக இருந்தபோதும் மிக எளிமையாகவும் இயல்பாகவும் அனைவருடனும் பழகி

வந்தார். போர் நிறுத்த நடவடிக்கைகளின் ஆரம்ப கட்டமாக கிளிநொச்சியில் சமாதானச் செயலகம் அமைக்கப்பட்டது.

போக்குவரத்துப் பாதைகள் திறக்கப்பட்டன. கிளிநொச்சியில் நடத்தப்பட்ட சர்வதேச ஊடகவியலாளர் மாநாடு, முஸ்லிம் மற்றும் மலையக அரசியல் தலைவர்கள் மற்றும் பலதரப்பட்ட அரசியல் சக்திகளுடனான சந்திப்பு எனப் புலிகளின் தலைமை தீவிரமான அரசியல் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட ஆரம்பித்தது.

**யாழ்ப்பாண இடப்பெயர்வினைத் தந்திரோபாயப் பின்னடைவு என இயக்கம் கூறினாலும், அது புலிகள் இயக்கம் சந்தித்த மாபெரும் தோல்வியாகவே இருந்தது.** அதனைத் தொடர்ந்து வன்னியில் நடைபெற்ற உக்கிரமான சமர்களில் புலிகள் பெற்ற வெற்றிகளின் விளைவாகவே இத்தகையதொரு அரசியல் சூழல் கனிந்தது என்ற வகையில், வெற்றிப் பெருமித உணர்வு புலிகளிடம் நிரம்பியிருந்தது.

இலங்கை நாட்டில் அரசியல் மற்றும் இராணுவ பலம் மிக்க இன்னொரு சக்தியாகச் செல்வாக்குப் பெற்றிருந்த புலிகள் இயக்கமானது, சர்வதேச அனுசரணையுடன் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் தனது பேரம் பேசும் வல்லமையை உச்சமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதில் தீவிரமாயிருந்தது.




**2002இல் போர் நிறுத்த உடன்படிக்கையில் கையொப்பமிட்ட தலைவர் பிரபாகரன், அரசியல்துறைப் பொறுப்பாளரான தமிழ்ச்செல்வனிடம் கூறிய விடயத்தை அவர் ஏனைய பொறுப்பாளர்களிடமும் தெரிவித்தார்.**

“கையெழுத்து வைச்சிட்டு வந்திட்டன், இனிமேல்த்தான் பிரச்சனையே இருக்குது, இயக்கத்திற்கு ஆளணியைப் பெருக்க வேணும், அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்குப் புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தின் அவசியத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லி இளைஞர் யுவதிகளைப் போராட்டத்திற்கு அணிதிரட்ட வேணும்” என அண்ணை சொல்லிப்போட்டார்.இந்த இடைவெளியைப் பயன்படுத்தி நாங்கள் தீவிரமாக வேலைசெய்து படைபலத்தைப் பெருக்க வேணும்.

ஆரம்ப காலத்தில எங்களிட்ட ஆயுதங்கள் இல்லை, ஆளணி இருந்தது. இப்போது இயக்கத்திடம் தேவையான அளவு ஆயுதங்கள் இருக்குது. ஆளணி தான் இல்லை, நாங்கள்தான் அந்த ஆளணியைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்பது வெளியுலகத்திற்குத்தானே தவிர எங்களுக்கு அல்ல என்பதை நீங்கள் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்” எனக் கூறினார்.

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தமானது, நீண்ட போருக்குப் பின்னரான அமைதியையும் ஆறுதலையும் மக்களுக்குக் கொடுத்திருந்தாலும் நிரந்தரச் சமாதானம் ஒன்று ஏற்படுவதற்கான அதீத நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கவில்லை.

ஏனெனில் அரசு, புலிகள் இந்த இரண்டு தரப்புமே எள்ளளவும் இதய சுத்தியுடன் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள் என்பதைக் கடந்த கால அனுபவங்களின் மூலம் மக்கள், மிக நன்றாகவே அறிந்து வைத்திருந்தார்கள்.

எனவே அவ்வப்போது கிடைக்கின்ற இடைவெளியைப் பயன்படுத்தித் தமது இடர்ப்பாடு நிறைந்த வாழ்க்கை நிலையைக் கொஞ்சமேனும் உயர்த்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்களுடைய முழுமுயற்சியாக இருந்தது.

இடைவிடாது தொடர்ச்சியாக நடந்த போரினால் அழிந்துபோயிருந்த வீடுகள், கடைகள் என்பனவற்றை

மக்களே தமது சொந்த முயற்சிகளினால் மீண்டும் கட்டியெழுப்பினார்கள்.

**“திருப்பியும் எப்ப தொடங்கப் போறீங்கள்”, “தொடங்குவதற்கு முதல் எங்களுக்கும் சொல்லுங்கோ” “ஒரு ஐந்து வருடத்திற்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய மாதிரி கலவையைப் போட்டுக் கட்டினால் போதும்”** என்கிற மனநிலையுடனேயே மக்கள் சமாதான முயற்சிகளை அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

பாங்கொக், ஜெனிவா, டோக்கியோ என அரசியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் பெற்ற தலைநகரங்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. சமாதானப் பேச்சுவார்த்தைகளை இரண்டு பிரதான கட்டங்களாக நடத்த வேண்டும் எனப் புலிகள் திட்டமிட்டிருந்தார்கள்.

முதலில் மக்களுடைய அன்றாடப் பிரச்சனைகள் பற்றிய விடயங்களில் இணக்கப்பாடுகளை எட்டுவதும் அவற்றை நடைமுறைப் படுத்துவதுமே!

அடிப்படை அரசியல் விடயங்களைப் பேசக்கூடிய முக்கியமான கட்டத்திற்குச் சமாதானப் பேச்சுவார்த்தையை நகர்த்திச் செல்லும் என்பதில் புலிகள் தீர்மானமாக இருந்தார்கள்.

ஆனால் அரசாங்கமோ மக்களின் அன்றாட பிரச்சனைகளைப் பேசுகின்ற அதே நேரத்தில் ஒரு அரசியல் தீர்வையும் எட்டிவிட வேண்டும் சமஷ்டி முறையிலமைந்த ஒரு தீர்வுத் திட்டத்தைப் பரிசீலிக்க முடியும் என்கிற கருத்து புலிகளின் தலைமைப் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கத்தினால் முன்வைக்கப்பட்டது.

புலிகளின் இத்தகைய சமிக்ஞையை ஒரு பிடியாக எடுத்துக்கொண்டு, மேற்குலகமும் இலங்கையரசும் புலிகளை வழிக்குக் கொண்டுவரும் தந்திரமான காய்நகர்த்தல்களை நுட்பமாக மேற்கொண்டனர்.

தனது கையை மீறிச் செல்லும் அரசியல் விடயங்களால் சர்வதேச ராஜதந்திர முற்றுகை சிக்கலுக்குள் தான் மாட்டப்படுவதாக உணர்ந்த தலைவர் தனது வழக்கமான

இறுக்கத்துடன், இலங்கையரசுக்கும் மேற்குலகத்திற்கும் அதிருப்தி தரக்கூடிய முடிவுகளை எடுக்கத் தொடங்கினார்.

சமாதான கீதத்தின் சுருதி கொஞ்சம் கொஞ்சமாகக் கீழிறங்கத் தொடங்கியது. இலங்கை அரசுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்து வதற்கு ஒரு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு அமைய, சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் நோர்வே மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தது.




மேற்கு நாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டது. அந்த வகையில்

மூன்றாம் தரப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த சர்வதேச சமூகம், சமாதான செயல் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான ராஜதந்திரத்தின் அடிப்படையில் தமக்கேயுரித்தான நவீன அணுகுமுறைகளின்படி தமது நிகழ்ச்சி நிரலைச் செயற்படுத்தினார்கள்.

அதாவது போரில் ஈடுபட்ட இருதரப்புக்கும் நடுவே தூது செல்வது, அவர்களுடைய விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவது, பேச்சுவார்த்தை மேசையின் நடுவிலே அமர்ந்திருந்து அனுசரணையாளராகச் செயற்படுவது என்பதோடு மட்டும் நின்றுவிடாது, போரில் ஈடுபட்ட இரு தரப்பு மக்கள் மத்தியிலும் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும்விதமான வேலைகளைச் செய்ய விழைந்தனர்.

உதாரணமாகச் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே வர்த்தக உறவுகளை ஏற்படுத்துவது, பெண்கள் அமைப்புகளிடையே தொடர்புகளைக் கட்டியெழுப்புவது, மாணவர்களிடையே கல்வித் தொடர்புகளை ஏற்படுத்துவது, எனப் பல்வேறுபட்ட வகையில் பிரிந்திருந்த சகல

சமூகங்களையும் ஒன்றிணைப்பதற்கான திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் ஏற்படக்கூடிய இன நல்லுறவும் சமூக இணைப்புகளும் பிரச்சனையின் தீவிரத் தன்மையைக் குறைத்துச் சமாதானத் தீர்வின் அவசியத்தை நோக்கி அனைத்துத் தரப்பினரையும் இழுத்துச்செல்லும் என்பதுதான் அதன் சூத்திரமாக இருந்தது.

**“படுகொலைகளை அரசாங்கம் மட்டும்தான் செய்திருக்கிறார்கள் என நினைக்க வேண்டாம். புலிகளும் ஒன்றும் சுத்தமான சூசைப்பிள்ளைகள் இல்லை”- அன்ரன் பாலசிங்கம் கூறியது!**



போக்குவரத்துப் பாதைகள் திறக்கப்பட்டதன் பின்னர் பல சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் தமிழ்ப் பகுதிகளுக்குள் தமது புதிய கருத்திட்டங்களுடன் வருகைதரத் தொடங்கின.

**"சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்" "இனங்களுக்கிடையே இணக்கப்பாட்டினை உருவாக்குதல்"** என்ற அவர்களுடைய திட்ட எண்ணக் கருக்களின் தலைப்புகளைக் கேட்பதே புலிகளுக்குத் தாங்க முடியாத ஒவ்வாமையை ஏற்படுத்தியது.

இதன் காரணமாகச் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் எதுவுமே நேரடியாக மக்கள் மத்தியில் சென்று வேலை செய்வதைப் புலிகள் விரும்பவில்லை.

கிளிநொச்சியில் புலிகளால் அமைக்கப்பட்டிருந்த திட்டமிடல் செயலகத்தின் வழிகாட்டுதலுக்கமையவே, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் மக்கள் மத்தியில் வேலை செய்ய முடியும் என்று புலிகளின் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களின் புள்ளிவிபரங்களும், மக்களுடைய தேவைப் பகுப்பாய்வு அறிக்கைகளும், மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கான மாதிரித் திட்டமிடல்களும் கிளிநொச்சியில் அமைந்திருந்த திட்டமிடல் செயலகத்தில் ஏற்கனவே தயாராக வைக்கப்பட்டிருந்தன.

வெளியிலிருந்து வருகின்ற எந்த அமைப்பும் தமிழ் மக்கள் மத்தியில் சென்று புள்ளி விபரங்கள் சேகரிப்பதையோ, மக்களின் தேவைகளைப் பற்றி அவர்களுடன் கலந்துரையாடுவதையோ புலிகள் அறவே விரும்ப வில்லை.

சமாதான நடவடிக்கைகளின் ஆரம்ப நாட்களில் பலவண்ணக் கொடிகளைப் பறக்கவிட்டபடி, இலகுவில் புரிந்துகொள்ள முடியாத பல புதிய பெயர்களைத் தாங்கியவாறு, அரச

சார்பற்ற நிறுவனங்களின் பல வாகனங்கள் ஏ9 வீதியில் அணிவகுத்ததை மக்கள் வேடிக்கைப் பார்த்தனர்.

**ஆனால் புலிகளின் நிபந்தனைக் கெடுபிடிகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல், துண்டைக் காணோம் துணியைக் காணோம் எனப் பல நிறுவனங்கள் ஓடியே போய்விட்டன.**



2003இன் ஆரம்பத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வலுவூட்டும் வகையில் அரச தரப்புப் பெண் பிரதிநிதிகளுக்கும் புலிகள் தரப்புப் பெண் பிரதிநிதிகளுக்குமிடையேயான பேச்சு வார்த்தை, நோர்வே

மத்தியஸ்த்துடன் கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் நடத்தப்பட்டது.

அரச தரப்புப் பிரதிநிதிகளாக இரண்டு முஸ்லிம் பெண்கள் உட்பட ஐந்து பெண் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அவர்களுக்கான தலைமைப் பேச்சாளராகக் கலாநிதி குமாரி ஜெயவர்த்தன அவர்கள் கலந்துகொண்டார்.மூத்த பெண்ணியவாதியும் சமூக ஆய்வாளருமாகிய இவர் பல ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார்.

இவருடன் கலந்துகொண்ட அனைவருமே பெண்ணியம், சமூகம், சட்டம், மருத்துவம் ஆகிய துறைகளில் செயற்பட்டு வந்தனர். விடுதலைப் புலிகளின் தரப்பில் தலைமைப் பேச்சாளராக நான் நியமிக்கப்பட்டிருந்தேன்.

என்னுடன் அரசியல் பிரிவில் செயற்பட்ட போராளிகள் நான்கு பேர் கலந்துகொண்டனர். இவர்கள் சமூகப் பெண்கள் மத்தியில் நீண்டகாலமாக வேலைசெய்த அனுபவம் கொண்டவர்கள்.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்கு அனுசரணையாளராக, நோர்வே நாட்டின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமூக, உளவியல் ஆய்வாளருமான திருமதி அஸ்றிச் கெய்ப்பேர்க் அம்மையார் கலந்துகொண்டார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இந்தப் பேச்சுவார்த்தைக்காக எம்மைத் தயார்ப்படுத்தினார். சமாதான பேச்சுவார்த்தை முன்னெடுப்புகளில் இப்படியான உப சந்திப்புகள் மிகவும் முக்கியத்துவம் வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்றுவந்த நீண்டகாலப் போரின் காரணமாகப் போரில் ஈடுபட்டிருந்த இருதரப்பையும் சேர்ந்த பெண்கள் அதிகமான இழப்புக்களையும் வாழ்வின் நெருக்கடிகளையும் சந்தித்திருக்கின்றனர் என்ற அடிப்படையில் இப்படியானதொரு சந்திப்பைப் பெண்

பிரதிநிதிகளிடையே நடாத்தி அவர்களால் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படும் தீர்மானங்களின் பிரகாரம் பெண்களுக்குரிய விசேட தேவைகளையும் கவனத்திலெடுத்து, வேலைத்திட்டங்கள் வகுக்கப்படும் எனவும், தேவையேற்படும்போது பிரதான பேச்சு வார்த்தை மேசைக்குப் பெண் பிரதிநிதிகள் அழைக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

**"தென்னிலங்கையில் இருந்து வருகின்ற பெண் பிரதிநிதிகள் அதிகம் படித்தவர்கள். அனைவரும் கலாநிதிகள். அதற்காக நீங்கள் பயப்படத் தேவையில்லை**; உங்களுக்கு இந்தப் போர்ச் சூழலுக்குள்ளே வாழும் பெண்களின் பிரச்சனைகளை நேரில் பார்த்த அனுபவம் இருக்கின்றது. எனக்கு உங்களில் நம்பிக்கை இருக்கின்றது; நீங்கள் கல்லாத நிதிகள்" என்று கூறி எமக்கு உற்சாகமூட்டினார்.

அத்துடன் எமக்குச் சந்தேகமான பல விடயங்கள் பற்றியும் அவரிடம் கேட்டறிந்துகொண்டோம். அவற்றுள் முக்கியமானது படுகொலைகள் தொடர்பானது.

கிழக்கு மாகாணத்தில் நடந்த படுகொலைகள், பொதுமக்கள் மீதான விமானக் குண்டுத் தாக்குதல்கள் இவற்றில் அதிக அளவு பெண்கள், குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இந்த விடயங்கள் பற்றியும் அந்தச் சந்திப்பில் பேசப்பட வேண்டும் என்று எமது போராளிகள் அபிப்பிராயம் தெரிவித்தபோது, அன்ரன் பாலசிங்கம் அதனை மறுத்ததுடன், பின்வருமாறு குறிப்பிட்டார்.



**“படுகொலைகளை அவர்கள் மட்டும்தான் செய்திருக்கிறார்கள் என நினைக்க வேண்டாம். புலிகளும் ஒன்றும் சுத்தமான சூசைப்பிள்ளைகள் இல்லை. நாங்கள் ஒரு படுகொலைப் பட்டியலைக் கொடுத்தால் அவர்களும் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைப் பட்டியலுடன் வருவார்கள்.**

**ஆகவே இப்படியான விடயங்களைக் கிண்டிக் கிளறுவது இரண்டு தரப்புக்கும் பிரச்சனையான விடயமாகத்தான் முடியும்”** எனக் கூறினார்.

பெண்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைப் பற்றி ஆராய்வது நல்லது. அவர்களுடைய அனுபவங்களை நீங்களும் உங்களுடைய அனுபவங்களை அவர்களும் பகிர்ந்துகொள்ளுவது பயனுள்ளதாக அமையும்.

எதிர்காலத்தில் உங்களுடைய திட்டங்கள் பிரதான பேச்சு வார்த்தை மேசைக்கு நிச்சயமாக வரும். ஏனென்றால் இன்று உலகத்தில் பெண்ணுரிமை பற்றிய விடயங்கள் முதன்மை பெற்று விளங்குகின்றன.

இது காலமும் நடந்த பேச்சுக்களில் இப்படியான ஒரு சந்திப்பு நடைபெறவில்லை. இது ஒரு அருமையான சந்தர்ப்பம்.

இதனை நல்ல விதமாகப் பயன்படுத்திப் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்குக் குறிப்பாகப் பெண்களுக்குப் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான சூழலை உருவாக்க வேண்டும் எனப் பலவகையான விளக்கங்களையும் எடுத்துக்கூறி எம்மைத் தயார்படுத்தியிருந்தார்.

அரச தரப்புப் பிரதிநிதிகள் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியில் வந்து கிளிநொச்சி மைதானத்தில் இறங்கினார்கள்.




தரைவழியாக வருகை தந்திருந்த நோர்வே அனுசரணையாளர்கள், கிளிநொச்சிக் குளத்திற்கு அருகில் அமைந்திருந்த 'ராங்வியு' ஹொட்டலில் தங்கியிருந் தனர்.

காலை பத்து மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில், வரலாற்றில் முதல்தடவையாக அரச மற்றும் புலிகள் தரப்புப் பெண்களின் பிரதிநிதிகள் நோர்வே நாட்டு அனுசரணையாளர்கள் முன்னிலையில் சந்தித்த நிகழ்வு இடம்பெற்றது.

பரஸ்பர அறிமுகங்களைத் தொடர்ந்து, அனுசரணையாளரின் தலைமையில் முக்கிய விடயங்கள் பேசப்பட்டன. போரினால் பாதிப்புற்ற தமிழ்ப் பெண்களுடைய பிரச்சனைகளை முன்வைத்துப் புலிகள் தரப்பு சார்பாக நான் உரையாற்றினேன்.

பெண்களின் பாதிப்புக்கள் தொடர்பான பல புள்ளி விபரங்களையும் முன்வைத்தேன். அரச தரப்புத் தலைமைப் பேச்சாளராக வருகை தந்திருந்த குமாரி ஜெயவர்த்தனா அவர்கள் “இனம் மொழி கடந்து நாங்கள் பெண்கள்.

இந்த நாட்டில் நடந்த யுத்தத்தால் பெண்கள் அதிக அளவு துயரங்களை அனுபவித்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில், இந்தச் சமாதானச் சூழலில் நாங்கள் ஒன்றிணைந்து பெண்களுக்குச் செய்யவேண்டிய வேலைகளைப் பற்றிப் பேசுவோம்” எனக் குறிப்பிட்டுத் தனது கருத்துக்களை முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, மாலை வரை அந்தச் சந்திப்பு நடைபெற்றது. யுத்தத்தில் கணவரை இழந்துபோன சிங்களப்

பெண்கள் எதிர்நோக்கும் துயரங்கள் மற்றும் போரில் காணாமல்போன இராணுவத்தினரைத் தேடியலையும் குடும்பத்தினர்,

எல்லைப்புறக் கிராமங்கள் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகும்போது இடம்பெயரும் சிங்களக் குடும்பங்கள், அவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சனைகள் என அவர்களும் பல பிரச்சனைகளை முன்வைத்தனர்.

இறுதியில் பெண்களுக்கான சமாதானச் செயலகம் ஒன்றை அமைத்துச் செயற்படுத்துவதன்மூலம், அந்த இடத்தைத் தளமாகக் கொண்டு பெண்களுக்கான வேலைகளை அடுத்தகட்டத்திற்கு நகர்த்திச் செல்ல முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

பெண்களுக்கான பிரதானச் செயலகத்தைக் கொழும்பிலும் அதன் உப செயலகத்தைக் கிளிநொச்சியிலும் அமைக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டபோது, நாங்கள் முற்றிலுமாக அதை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன் அதற்கான எமது தரப்பு நியாயத்தையும் முன்வைத்தோம்.

“போரில் ஈடுபட்ட இரு தரப்பைச் சேர்ந்த பெண்களும் பாதிப்படைந்திருக்கிறார்கள் என்பது உண்மையானது.

அதேவேளை ஒப்பீட்டளவில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில்தான் அதிகமான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், கூடுதலான வேலைகளை இப்பிரதேசங்களிலேயே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஆகவே, பெண்களுக்கான சமாதானச் செயலகத்தின் பிரதான மையம் கிளிநொச்சியில் அமைக்கப்படுவதே பொருத்தமானதாக அமையும்” எனத் தெரிவிக்கப்பட்ட எமது கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அன்றைய பேச்சுவார்த்தையின் முடிவில் ஊடகங்களுக்கான கூட்டு அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது.


**குமாரி ஜெயவர்த்தனா, நோர்வேஜிய அனுசரணையாளர் அஸ்ரிட்ஜ் ஹைட்பேர்க்குடன்**



கிளிநொச்சியில் இரண்டு தடவைகள் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றன. இரண்டாவது சந்திப்பில் பெண்களுக்கான சமாதானச் செயலகம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதைப் பற்றிய செயல்திட்டமொன்று வரையப்பட்டது.

இந்தச் செயலகத்திற்கான நிதி உதவியை நோர்வே அரசு வழங்க முன்வருவதாகத் தெரிவித்திருந்த காரணத்தால், அதற்கான செலவு மதிப்பீட்டு அறிக்கையொன்றும் தயாரிக்கப்பட்டது.

பிரதானப் பேச்சுவார்த்தை மேசையின் ஆயுட்காலம் எவ்வளவாக அமையும் என்பதே கேள்விக்குறியாக இருந்த நிலைமையில், பெண்களுக்கான சந்திப்புக்கள் அதிக அளவு முன்னேற்றகரமான விடயங்களைச் சாதிக்கும் என எனக்கு உண்மையாகவே நம்பிக்கை இருக்கவில்லை.

இருப்பினும் தமிழ்ப் பெண்களின் பிரச்சனைகளை ஏனைய சமூகங்களைச் சேர்ந்த பெண்களிடம் மனம் திறந்து பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமையும், அரசியலுக்கு அப்பால் போரின் காரணமாகப் பெண்களைப் பாதிக்கும் விஷயங்களில் ஒரேவிதமான மனப்போக்குடைய பல தரப்பட்டவர்களின் அபிப்பிராயங்களையும் பகிர்ந்துகொண்ட அனுபவமும் மிக வித்தியாசமானதாக இருந்தது.

சந்திப்பின் முடிவில் எமக்கிடையே இருந்த கருத்து வேறுபாடுகளைவிட, ஒத்த தன்மையும், தனிப்பட்ட முறையிலான நட்புறவும் ஓங்கியிருந்ததை உணரக் கூடியதாக இருந்தது.

சமூகங்களுக்கிடையேயான அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் பெண்களும் அதிக அளவில் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்களேயானால் சமூகங்களின் முன்னேற்ற நலன் சார்ந்த சமரசங்கள் அதிக அளவில் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்க முடியும் எனப் பின்னாட்களில் நான் சிந்தித்ததுண்டு.

இச்சந்திப்புக்குப் பின்னரான காலப் பகுதியில், பெண்களுக்கான சமாதானச் செயலகமொன்றை அமைப்பதற்கான பணத்தை நோர்வே பிரதிநிதிகள் கிளிநொச்சியில் வைத்து எம்மிடம் ஒப்படைக்க முன்வந்தபோது, சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகுவதற்கான முடிவை இயக்கத் தலைமை எடுத்திருந்த

காலமாக அது இருந்ததால், அப்பணத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து இயக்கம் திருப்பியனுப்பியது.

இலங்கை அரசாங்கம் சார்பில் கலந்து கொண்ட பெண்கள் குழுவினருடனான சந்திப்பில் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே பேச்சுவார்த்தைகளை முறிக்கும் வகையில் பல சம்பவங்கள் நடைபெற்றிருந்தபோதிலும், அவ்வாறான சந்தர்ப்பங்களிலிருந்து மயிரிழையில் உயிர்தப்பிக் கொண்டிருந்தது சமாதானம்.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தைப் பேச்சுவார்த்தைகள் தொடங்கிய ஓரிரு நாட்களில் நான் நேரடியாகக் கண்டேன்.




வன்னியில் சில வாரங்களாகத் தங்கியிருந்த அன்ரன் பாலசிங்கம் பல முக்கியச் சந்திப்புக்களை முடித்துக்கொண்டு லண்டன் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தார்.

அப்போது அவரை உலங்கு வானூர்தியில் வழியனுப்பி வைப்பதற்காகப் பல பொறுப்பாளர்களும் அவரது வீட்டிற்கு வந்திருந்தனர். நானும் அங்கிருந்தேன். சற்று நேரத்தில் தலைவர் பிரபாகரன் அங்கு வந்து இறங்கினார்.

**அன்ரன் பாலசிங்கத்துடன் மகிழ்ச்சியாக உரையாடிக்கொண்டிருந்த சற்று நேரத்தில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை பெரும் பதற்றத்தோடு அங்கு வந்து சேர்ந்தார்.**

பிரபாகரன், அன்ரன் பாலசிங்கத்துடன் மகிழ்ச்சியாக உரையாடி கொண்டிருந்த இடம் தேடி பெரும் பதற்றத்தோடு ஓடி வந்த கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை ...காரணம் என்ன?

• தலைவர் பிரபாகரன், கருணா அம்மான் மீது அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தார்!: கருணா பிளவுக்கு பொட்டமன் காரணமா??

• 'கிழக்கு மாகாணப் போராளிகளை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்' என்ற பெயரில் இயக்கத்திற்குள்ளே ஒரு கொடூரமான 'சகோதர யுத்தம்' முன்னெடுக்கப்பட்டது.

• முப்பது வருட காலப் போராட்டத்தின் எச்சங்களாகக் காயமடைந்த போராளிகளும், கடினப் பயிற்சிகளில் ஈடுபட முடியாத வயதடைந்த போராளிகளுமே எஞ்சியிருந்தனர்.



வன்னியில் சில வாரங்களாகத் தங்கியிருந்த அன்ரன் பாலசிங்கம் பல முக்கியச் சந்திப்புக்களை முடித்துக்கொண்டு லண்டன் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தார்.

அப்போது அவரை உலங்கு வானூர்தியில் வழியனுப்பி வைப்பதற்காகப் பல பொறுப்பாளர்களும் அவரது வீட்டிற்கு வந்திருந்தனர். நானும் அங்கிருந்தேன். சற்று நேரத்தில் தலைவர் பிரபாகரன் அங்கு வந்து இறங்கினார்.

**அன்ரன் பாலசிங்கத்துடன் மகிழ்ச்சியாக உரையாடிக்கொண்டிருந்த சற்று நேரத்தில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை பெரும் பதற்றத்தோடு அங்கு வந்து**

**சேர்ந்தார்.**

**இனி.....**

வந்தவர் நேரடியாகத் தலைவரும் அன்ரன் பாலசிங்கமும் பேசிக்கொண்டிருந்த இடத்திற்குப் போய் சீரியசாக எதையோ கூறினார். சற்று நேரத்தில் அவர்கள் பரபரப்பாக உரத்துப் பேசிக்கொண்டார்கள்.

முல்லைத்தீவு ஆழ்கடற் பரப்பில் இலங்கை கடற்படையினரின் 'டோரா' அதிவேக விசைப் படகுகளின் நடமாட்டம் தென்படுவதாகப் புலிகளின் '**ரேடர்**' நிலையம் அறிவித்ததையடுத்து, கடற்புலிகளின் தாக்குதல் படகுகளைத் தயார்படுத்திவிட்டு, நிலைமையை நேரடியாகத் தலைவரிடம் பேசித் தாக்குதலுக்கான உத்தரவைப் பெற்றுக்கொள்வதற்காகவே தளபதி சூசை அவசரமாக அங்கு வந்திருந்தார்.

அவரைச் சற்று நேரம் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக்கொண்ட அன்ரன் பாலசிங்கம், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளராக இருந்த புலித்தேவனை உடனே அழைத்து, கொழும்பு சமாதான செயலகத்துடனும், போர்

நிறுத்த கண்காணிப்புக் குழுவுடனும் அவசர தொடர்புகளை ஏற்படுத்திப் பேசினார்.

அவர்கள் உரிய இடங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திப் பேசுவதன் மூலம் போர்ப்படகுகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதாக வாக்குறுதியளித்துள்ளனர் என்பதைத் தலைவரிடம் அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

குறிப்பிட்ட சில மணித் தியாலங்களுக்கு அந்த இடம் பதற்றமாகவே இருந்தது. இலங்கை கடற்படைக்குரிய டோரா படகுகளின் நடமாட்டம் பற்றிய தகவல்களைத் தளபதி சூசை கேட்டறிந்து கொண்டிருந்தார்.

அன்ரன் பாலசிங்கம், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவருடன் தொடர்பில் இருந்தார். “பாலா அண்ணை! இப்பவும் டோராக்காரன் ஓடித்தான் திரியுறான், கரைக்குக் கிட்ட வந்தானென்டால் கட்டாயம் அடிப்பம் எண்டு சொல்லுங்கோ” என சூசை அச்சுறுத்திக் கொண்டிருந்தார்.

“கொஞ்சம் பொறு. போர்நிறுத்த கண்காணிப்பு குழுத் தலைவர் கடற்படைக் கட்டளை அதிகாரியோடு கதைத்துக் கொண்டிருக்கிறார், இப்ப முடிவு சொல்லுவாங்கள்” எனக் கூறிய அன்ரன் பாலசிங்கம் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்துக்கொண்டிருந்தார்.

சற்று நேரத்தில் புலிகளின் ‘ராடர்’ திரைகளிலிருந்து இலங்கைக் கடற்படையின் ‘டோரா’ப் படகுகள் மறைந்துவிட்டதாகத் தளபதி சூசைக்கு அறிவிக்கப்பட்டது.



அவரும் கடற்புலியின் தாக்குதலணிகளை முகாம்களுக்குத் திரும்பும் படி கட்டளையிட்டார். அதுவரை இறுக்கமான முகத்துடன் யோசனையிலிருந்த தலைவர், தனது

வழமையான சிரிப்புடன் அனைவருடனும் பகிடிகளை விட்டுப் பேசத் தொடங்கினார்.

ஒரு சினிமா காட்சிபோல அங்கு நடந்தவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த அனைவருக்கும் நிம்மதிப் பெருமூச்சு வெளியேறியது. இன்னும் சற்றுநேரம் தாமதமாகியிருந்தால் நிலைமை தலைகீழாக மாறியிருந்திருக்கும்.

தளபதி சூசையிடம் தாக்குதல் நடத்துவதற்கான உத்தரவைத் தலைவரே வழங்கியிருப்பார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஏனெனில் இலங்கைத் தீவில் போரா சமாதானமா என்பதைத் தீர்மானிக்கக்கூடிய சக்தி மிக்க மனிதராகத் திகழ்ந்தார் பிரபாகரன்.

ஆமை வேகத்தில் நகர்ந்துகொண்டிருந்த சமாதான முன்னெடுப்புகள் ஒருபுறமிருக்க, இயக்கத்தின் உள் கட்டமைப்புகளில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

அதில் முக்கியமானது இயக்கத்தின் ஆளணி பலத்துடன் தொடர்புடையது. இயக்கத்தின் ஆணிவேரே அதில்தான் அடங்கியிருந்தது.

அது கொஞ்சம்கொஞ்சமாக ஆட்டம் காணத் தொடங்கியிருந்தது.



கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்த கருணா அம்மான் தன்னுடைய கட்டுப்பாட்டிலிருந்த ஆயிரக்கணக்கான போராளிகளுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து செல்வதாக அறிவித்திருந்தார்.

அதிகம் வெளியே காட்டிக்கொள்ளப்படாது விட்டாலும், அந்நிகழ்வானது இயக்கத்துக்குள்ளே பேரதிர்வினையே ஏற்படுத்தியிருந்தது.

இயக்கத்தின் செல்வாக்குமிக்க முதன் நிலைத் தளபதியாகக் கருணா அம்மான் இருந்தார். அவருடன் செயல்திறன்மிக்க போராளிகள் மற்றும் இளநிலைத் தளபதிகள் பலர் இருந்தனர்.

வன்னிக் களமுனைகளின் பல வெற்றிகளில் அவர்கள் தமது பலமான முத்திரைகளைப் பொறித்திருந்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்நிலையில் இயக்கத்தில் அரைப்பங்கு இராணுவ பலம் கருணா அம்மானின் பிரிவோடு இழக்கப்பட்டுவிட்டது.

2004 ஏப்ரலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் கருணா அம்மானின் பிரிவு ஏற்பட்டபோது, அம்மாதம் நடக்கவிருந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரச்சார வேலைகளில் நான் யாழ்ப்பாணத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன்.

தமிழ்க் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்திப் புலிகளின் ஆதரவுடன் அவர்களைத் தேர்தலில் வெற்றியடையச் செய்வதன் மூலம் தமிழ் மக்களின் சக்தி புலிகளுக்குப் பின்னால் இருக்கின்றது என்கிற செய்தியை வெளிப்படுத்துவதுடன் பாராளுமன்றத் தீர்மானங்களில் தமது செல்வாக்கையும் நிலைநிறுத்தலாம் எனப் புலிகள் கருதினார்கள்.



**இளம்பரிதி**

அப்போது யாழ்ப்பாண மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இளம்பரிதி இருந்தார். அவருக்கு உதவியாக வன்னியிலிருந்து நானும் வேறு பல போராளிகளும் அனுப்பப்பட்டிருந்தோம்.

ஞாபகமில்லாத ஒரு நாளின் அதிகாலை ஆறு மணியளவில் போராளிகளுக்கான இரகசிய கூட்டமொன்றை இளம்பரிதி அவசரமாகக் கூட்டியிருந்தார்.



**“ஒரு முக்கியமான விடயத்தை உங்களுக்குச் சொல்லும்படி கிளிநொச்சியிலயிருந்து அவசரமா அறிவிக்கப்பட்டிருக்கிறது. எங்கட இயக்கத்தின்ர மட்டக்களப்பு – அம்பாறை தளபதி கருணா அம்மான் தன்னோடு இருக்கின்ற ஆறாயிரம் போராளிகளோடு**

**இயக்கத்தில இருந்து பிரிந்துபோறதாக அறிவித்திருக்கிறார்” என்ற செய்தியை இளம்பரிதி அங்கிருந்த அனைத்துப் போராளிகளுக்கும் தெரிவித்தார்.** அனைவரும் விறைத்துப்போனவர்கள் போல் அசைவேதுமின்றி உட்கார்ந்திருந்தார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டதன் பின்பு அங்குப் பேசப்பட்ட வேறு எந்த விடயங்களும் என்னுடைய காதுகளுக்குள் ஏறவே இல்லை.

அந்த நிமிடம் இயக்கமே அழிந்துபோனது போன்ற உணர்வுதான் எனக்குள் ஏற்பட்டிருந்தது.

ஏனென்றால் அத்தகைய பலமான சக்தியாகக் கிழக்கு மாகாணப் போராளிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவத்தில் இடம் பிடித்திருந்தார்கள்.

கிளிநொச்சியிலிருந்து அடுத்த தகவல் வரும்வரை தேர்தல் பொதுக் கூட்டங்களை நிறுத்திவைக்கும்படி அறிவிக்கப்பட்டிருந்தது. இரண்டு முழு நாட்கள் கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்திருந்த எமது முகாமுக்குள்

எதுவும் செய்ய மனமின்றியும், பொதுமக்களது கேள்விக் கணைகளுக்கு முகம்கொடுக்க முடியாமலும் முடங்கிக் கிடந்தோம்.

மக்களுக்கு என்ன பதில் சொல்வது என்பது மிகவும் புரிபடாத குழப்பமான நிலையாக இருந்தது.

அடுத்த நாள் கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளரின் கூட்டத்திற்காக அழைக்கப்பட்டிருந்தோம்.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் 'நிதிப் பிரச்சனை மற்றும் தனிப்பட்ட ஒழுக்கப் பிரச்சனை காரணமாக மட்டு-அம்பாறை தளபதியை விசாரணை செய்வதற்கு வன்னிக்கு வரும்படி தலைவர் அறிவித்திருந்தபோது, அதனை மறுத்து அவர் இத்தகையவொரு அறிவித்தலைச் செய்திருப்பதாகவும், ஆகவே அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், அவரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள போராளிகளை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளில் இயக்கம் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

இதற்காகப் போராளிகள் குழப்பமடையத் தேவையில்லையெனவும், தனது போராட்ட வாழ்வில் இதுபோன்ற எத்தனையோ நெருக்கடிகளை வெற்றிகரமாகத் தாண்டி வந்த தலைவர் பிரபாகரன் இந்த நெருக்கடியையும் வெற்றிகரமாகத் தாண்டி வருவார் என்ற நம்பிக்கையோடு, மக்களின் கேள்விகளுக்குத் தெளிவுடன் பதிலளிக்குமாறும் அரசியல் துறைப் பொறுப்பாளரால் எமக்கு அறிவுறுத்தப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் இயக்கத்தின் பிரதித் தலைவராக இருந்து கைது செய்யப்பட்டு, பின்னர் இல்லாமலாக்கப்பட்ட மாத்தையா அண்ணருடைய நினைவுகள் மீண்டும் எனக்குள் ஏற்பட்டன.

ஒருவருக்கான தண்டனை இதுதான் என இயக்கம் தீர்மானித்துவிட்டால், அவர்மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகள், தலைவருக்கெதிராகச் சதி செய்தார், இயக்கத்தின் நிதியை மோசடி செய்தார், பாலியல் குற்றமிழைத்தார் என்பவைகளே ஆகும்.

ஆரம்பத்தில் ஏனைய விடுதலைப் போராட்ட இயக்கங்களைத் தடைசெய்வதற்கும் இவ்வாறான குற்றச்செயல்களே அவர்கள் மீதும் சுமத்தப்பட்டிருந்தன என்பதையும் அறிந்திருக்கிறேன்.

உண்மையாகவே கிழக்கு மாகாணத் தளபதிக்கும் இயக்கத்தின் தலைவருக்கும் இடையே என்ன நடந்தது என்பது எனக்கு மட்டுமல்ல, பெரும்பாலான போராளிகளுக்கும்கூடச் சரிவரத் தெரியாத மர்மமாகவே இருந்தது.

**ஆனால் தலைவர் பிரபாகரன், கருணா அம்மான் மீது அளவற்ற நம்பிக்கையும் தனிப்பட்ட முறையிலான பாசமும் வைத்திருந்தார் என்பதை ஓரளவுக்கு என்னால் உறுதியாகக் கூறமுடியும்.**



ஒருநாள் நானும் தளபதிகள் விதுஷாவும், துர்காவும் தலைவரைச் சந்திப்பதற்காக அழைக்கப்பட்டிருந்தோம்.

அது சமாதானம் தொடங்கிய ஆரம்பகாலக் கட்டம். அந்தச் சந்திப்பில் தலைவர் பல விடயங்கள் பற்றியும் எம்மோடு பேசிக்கொண்டிருந்தார்.

அதில் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்; "மட்டக்களப்பு, அம்பாறைப் போராளிகள் போராட்டத்தில எவ்வளவோ கஷ்டங்களைப் பட்டிருக்கிறாங்கள்.

அவங்கட குடும்பங்களுக்கும் அந்த மக்களுக்கும் நிறைய வேலைகள் செய்யவேணும். நிதித்துறை மூலமா ஓரளவு பண உதவியையும் செய்து கருணாவுக்கும் சொல்லியிருக்கிறன், அந்தச் சனத்திற்கு நிறைய உதவிகள் செய்யச் சொல்லி.

**அவன் செய்யிறான், இவங்கள் பொட்டு ஆக்கள் என்னட்ட வந்து அங்க அது பிழை இது பிழை எண்டு சொல்லிக்கொண்டு நிக்கிறாங்கள்.**

தளபதிமாருக்குள்ள முதலில ஒற்றுமை இருக்கவேணும்" என்று குறிப்பிட்டார்.



மட்டு-அம்பாறைத் தளபதியான கருணாவுக்குப் புலிகள் இயக்கத்துடன் ஏற்பட்ட முரண்பாடுகளின் பின்னர், அங்கிருந்து சில போராளிகள் இயக்கத் தலைமை மீது கொண்டிருந்த விசுவாசம் காரணமாக வன்னிக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

அவர்களையும் இணைத்துக்கொண்டு '**கிழக்கு மாகாணப் போராளிகளை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்**' என்ற

பெயரில் இயக்கத்திற்குள்ளே ஒரு கொடூரமான ‘**சகோதர யுத்தம்**‘ முன்னெடுக்கப்பட்டது.

பல வருட காலமாக என்னுடன் பழகிய பல போராளிகள் இரு தரப்பிலும் உயிரிழந்து போயிருந்தனர். இயக்கத்தை நம்பிச் சரணடைந்திருந்த மட்டு-அம்பாறை மகளிர் தளபதியாகவிருந்த சப்தகி (சாளி) உட்பட நான்கு பெண் போராளிகளும் பல ஆண் தளபதிகளும் இயக்கத்தின் புலனாய்வுத் துறையினரின் சிறைகளில் அடைக்கப்பட்டுப் பின்னர் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதாக அறிய முடிந்தது.

**இயக்கத்தின் போரிடும் வல்லமையானது இத்தகைய மூர்க்கத்தனமான களையெடுப்புக்களாலும் சிதையத் தொடங்கியிருந்தது.**

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நீண்ட காலப் போராளிகள் பலர் போர்களில் பலத்த காயமடைந்திருந்தனர். அத்துடன் பல இடைநிலைப் பொறுப்பாளர்களும் போராளிகளும் தனிப்பட்ட காரணங்களை முன்வைத்து இயக்கத்திலிருந்து விலகிச் சென்றார்கள்.

நானறிந்த வரையில் பல ஆண் மற்றும் பெண் போராளிகள் தமது குடும்ப வறுமை காரணமாகவும் பெற்றோரின் வற்புறுத்தல் காரணமாகவும் இயக்கத்திலிருந்து விலகினார்கள்.

வேறு பல போராளிகள் காதல், திருமணம் போன்ற உறவுகளில் தம்மை இணைத்துக் கொண்டார்கள். தாக்குதலணிகளில் அனுபவம் வாய்ந்த போராளிகளின் வீதம் இக்காரணங்களால் குறைவடைந்து கொண்டே சென்றது.

**முப்பது வருட காலப் போராட்டத்தின் எச்சங்களாகக் காயமடைந்த போராளிகளும், கடினப் பயிற்சிகளில் ஈடுபட முடியாத வயதடைந்த போராளிகளுமே எஞ்சியிருந்தனர்.** அவர்கள் தமது இளமையையும் உடல் வலிமையையும் நாட்டு விடுதலைக்காக உழைத்துத் தொலைத்திருந்தார்கள். பல பாரிய காயங்களை அடைந்து செயற்பட முடியாத நிலையிலிருந்த ஆண், பெண் போராளிகள் பலர் “யார் எங்களை கைவிட்டாலும் அண்ணை கைவிடமாட்டார்” என்ற

ஒரே பற்றுதலிலும், நம்பிக்கையிலும் உயிர் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

இயக்கத்தால் கட்டளையிடப்படும் வேலைகள் சில சந்தர்ப்பங்களில் மனதிற்கு ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாக இருந்தபோதிலும்கூட, பல பொறுப்பாளர்கள், போராளிகள் சொல்லும் வசனம், **“அண்ணை சொல்லுறார், செய்யத்தானே வேணும்”**, **“எல்லாத்திற்கும் அண்ணை ஒரு திட்டம் வைத்திருப்பார்”**என்பவையாகவே இருந்தன.
இதனைப் பலரும் தனிமனித வழிபாடு எனக் குறை கூறினார்கள். உண்மையும் அதுதான்.

இது எமது பண்பாட்டோடும் பழக்கவழக்கத்தோடும் கூடி வந்த விஷயமாகவே நான் கருதுகிறேன்.

எத்தனையோ நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து, ஒரு போராட்டத்தை முப்பது வருடத்திற்கும் மேலாகப் பெரும் படைபலத்துடன் கட்டி வளர்த்தவர் என்ற பிரமிப்போடுதான், என்னைப் போன்ற பல்லாயிரக்கணக்கான போராளிகளும் தலைவரைப் பார்த்தோம்.

தலைவர் எடுத்த முடிவுகள் பல சந்தர்ப்பங்களில் விமர்சனத்திற்குள்ளாகும்போதும் அவர் மக்களின் நலனுக்காகவும் நாட்டின் விடுதலைக்காகவும்தான் இப்படியான முடிவுகளை எடுத்திருக்கிறார் எனவும், தலைவர் ஒரு முடிவு எடுத்தால் அதில் நிச்சயமாக ஒரு நியாயம் இருக்கும் எனவும், ஒவ்வொரு போராளியும் எவ்வித ஐயப்பாடுமின்றி நம்பினோம்.

தலைவர் எடுக்கும் முடிவுகளை விமர்சிப்பதோ, கேள்வி கேட்பதோ தெய்வ குற்றம் இழைப்பதற்குச் சமமானதாக இயக்கத்தினுள்ளே கருதப்பட்டது.

இந்தப் போக்கின் வளர்ச்சியே இயக்கத்தின் உள்ளேயான விவாதத்தையும் விமர்சனத்தையும் இல்லாதொழித்து அதன் மிக அவலகரமான முடிவுக்கும் வழி வகுத்தது.

தாக்குதல் படையணிகளின் சிறப்புத் தளபதிகள், கட்டளைத் தளபதிகள் மற்றும் துறைப்பொறுப்பாளர்கள் தொடக்கம் சாதாரண போராளிகள் வரை இயக்கத் தலைமை சொல்வதையே செய்யவேண்டும் என்ற இராணுவ

ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவர்களாகவே நாம் வளர்க்கப்பட்டிருந்தோம்.

சாதாரணமாக எமக்குத் தெரிந்தவரை இயக்கத்தின் மூத்த, முக்கிய உறுப்பினர்களாக அன்ரன் பாலசிங்கம், முன்னாள் ஈரோஸ் தலைவர் பாலகுமாரன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோரும் மூத்த தளபதி என்கிற தரத்தில் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் ஆகியோருமே இருந்தனர்.

**அவர்களிலும் தலைவருக்குத் தனது கருத்துக்களை ஓரளவுக்குத் துணிந்து சொல்லக்கூடியவராக இருந்தவர் அன்ரன் பாலசிங்கம் மட்டுமே.**

**மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களியுங்கள்!! "மகிந்த ஜனாதிபதியா வந்தா கட்டாயம் சண்டைதான் தொடங்கும்.. சண்டை தொடங்கினா நாங்கதான் வெல்லுவம்!!: அண்ணன் கூறினார்!**



இறுதியாக நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, அதிகாரப் பரவலாக்கப்பட்ட அரசியல் தீர்வொன்றை எப்படியாவது பெற்றுக்கொடுத்துவிட வேண்டும் என்ற ஆர்வத்துடன் அன்ரன் பாலசிங்கம் '**உள்ளக சுய நிர்ணய உரிமையுடன் அமைந்த சமஷ்டி**' என்ற தீர்வைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக ஒரு கருத்தை முன்வைத்திருந்தார்.

**ஆனால் அந்த விடயம் தலைவர் பிரபாகரனுக்கு அவ்வளவு உவப்பானதாக இருக்கவில்லை.** ஒரு அரசியல் தீர்வைத் திணிப்பதன் மூலம் புலிகளின் ஆயுதங்களை அவர்களிடமிருந்து பிடுங்குவதற்குச் சர்வதேச சக்திகள் முனைவதாக அவர் குற்றம் சாட்டினார்.

அவர்கள் விரித்த வலைக்குள் அன்ரன் பாலசிங்கமும் சிக்கிவிட்டதாக அவர் கருதினார்.

தமக்கு மரணம் ஏற்பட்டாலன்றி வேறு எந்தக் கட்டத்திலும் ஆயுதங்களைக் கையை விட்டு இழப்பதற்குத் தலைவர் கிஞ்சித்தும் தயாராக இருக்கவில்லை.

அதனால் இருவருக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு, ஒருவரோடொருவர் முகம்கொடுத்துப் பேசிக்கொள்ளவும் விரும்பாத ஒரு நிலையில், மிகவும் மனமுடைந்தவராகவே அன்ரன் பாலசிங்கம் இறுதியாகக் கிளிநொச்சியை விட்டு வெளியேறியிருந்தார்.

வழமையாக அவர் உலங்கு வானூர்தியில் ஏறிச் செல்லும்போது இருக்கக்கூடிய சிரிப்பும் மகிழ்ச்சியும் மறைந்துபோய் அவரதும் அவருடைய துணைவியாரின் கண்களிலும் கண்ணீர்க் கசிவுகள் தென்பட்டதைப் பலரும் அவதானித்தோம்.



விடுதலைப் புலிகள் இயக்கம் பல துறைகளாகப் பிரிந்து மக்கள் மத்தியில் தமது நிர்வாக வேலைகளை முன்னெடுத்த போதும், அந்தப் பிரிவுகளுக்கிடையே ஒரு கூட்டுப்பொறுப்பு உருவாக முடியாத நிலையே இறுதிவரை இருந்தது.

தமது பிரிவினது வேலைகளைச் சிறப்பாகச் செய்துவிட்டால் மட்டும் போதும் என்ற எண்ணத்துடனேயே ஒவ்வொரு பிரிவுப் பொறுப்பாளர்களும் செயற்பட்ட காரணத்தால், மக்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சனைகளை ஒருங்கிணைந்த முறையில் தீர்ப்பதற்காக மாதந்தோறும் அனைத்துப் பிரதான

தளபதிகளும் பொறுப்பாளர்களும் சந்திக்கும் கூட்டமொன்றை நடாத்துவதன் மூலம் நிர்வாகப் பிரச்சனைகளைக் கூடிக் கதைத்துத் தீர்த்துக்கொள்ளும்படி தலைவர் கூறிய ஆலோசனைக்கமைவாக அத்தகைய சந்திப்புகள் இடம்பெறத் தொடங்கின.

அதனால் ஓரளவுக்குப் பிரச்சனைகள் சுமூகமாகக் கையாளப்பட்டபோதிலும் முற்றிலுமாக மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் தமது வரி வசூலிப்பு நடைமுறையைச் செயற்படுத்திய விதம் மக்கள் மத்தியில் மோசமான விமர்சனத்தை ஏற்படுத்தியது.

நீண்டகாலப் போரினால் பொருளாதார ரீதியில் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த மக்களைப் புலிகள் சுரண்டுவதாகப் பலமான குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் எழுந்தன.

இயக்கத்தின் நிதிப்பொறுப்பாளரான தமிழேந்தி இதற்கான எந்த விளக்கத்தைக் கூறினாலும், மக்கள் மனப்பூர்வமாக அவற்றை ஏற்றுக்கொள்ளவே இல்லை.

மேலும் அங்குப் பணியாற்றியவர்களின் மக்களுடனான அணுகுமுறையில் இருந்த குறைபாடுகளும் இப்பிரச்சனையை இன்னும் பெரிதாக்கின.

**சமாதான காலத்தில் தாயகத்திற்கு விடுமுறையைக் கழிக்க வந்து சென்ற புலம்பெயர் உறவுகளும் பெரும் விசனத்துடன் அக்குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள்.** ஓமந்தையில் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசம் ஆரம்பமாகும் இடத்தில் "**வன்னி நிலம் வரவேற்கிறது**" என்ற பெரிய பதாகை நிறுவப்பட்டிருந்தது. அதனை "**வன்னி நிலம் வர வேர்க்கிறது**" எனக் கேலியாக மக்கள் அழைக்குமளவுக்கு, இயக்கத்தின் வரி வசூலிப்பு நடவடிக்கைகளை மக்கள் வெறுத்தார்கள்.
இயக்கத்திற்கும் மக்களுக்குமிடையே அதிக முரண்பாடுகளை ஏற்படுத்திய இன்னொரு விஷயம், இயக்கத்திற்கான கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையாகும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகள் நீண்டகாலமாக இயக்கத்தின் நேரடித் தொடர்பு இல்லாமலிருந்த காரணத்தால், ஆரம்பத்தில்

புலிகளைக் கண்டதுமே ஒரு அலைபோல, இளைஞர்கள் யுவதிகள் புதிய போராளிகளாகத் திரண்டுவந்து இணைந்தனர்.

ஆனால் நாட்கள் செல்லச்செல்ல அந்த அலை வெகுவாகக் குறையத் தொடங்கியது. இதனால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் தீவிர பரப்புரை செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சமாதான காலத்தில் ஆண்-பெண் போராளிகளுக்கான புதிய பல பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டு, அடிப்படை ஆயுதப் பயிற்சிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

அத்துடன் எல்லைப்படை, மக்கள்படை பயிற்சி என்பனவும் மீண்டும் தொடங்கப்பட்டன. இயக்கத்திலிருந்து விலகிச் சென்ற போராளிகளை மீண்டும் இயக்கத்தில் இணைக்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதனால் மக்கள் மீண்டும் பல அழுத்தங்களுக்கு உள்ளானார்கள். இயக்கத்தின் பரப்புரை மூலமான ஆளணி

இணைப்பு நடவடிக்கைகள் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளாக மெல்லமெல்ல மாற்றமடையத் தொடங்கியிருந்தன.

எப்படியாவது, எவரையாவது இயக்கத்தில் ஒரு உறுப்பினராக இணைத்துக்கொண்டால் போதும் என்ற மோசமான நிலைப்பாடு இயக்கத்திற்குள்ளே உருவாகத் தொடங்கியிருந்தது.



**இயக்கத்திற்குத் தேவையாக இருந்ததெல்லாம் ஆயுதங்களை இயக்குவதற்குப் பயிற்சியளிக்கப்பட்ட ஒரு மனித உருவம் மட்டுமே என்றளவிற்கு இயக்கத்தின் கொள்கை நிலைப்பாடுகள் சுருங்கத் தொடங்கியிருந்தன.** அரசியல்துறையின் கைங்கரியம் என்ற வெளிப்படையான பெயருடன் இயக்கத்தின் சகல பிரிவுகளும் இந்த வேலைத்திட்டத்தில் முழுமூச்சுடன் ஈடுபடுத்தப்பட்டன.

முப்பது வருடங்களுக்கும் மேலான ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஆயிரக்கணக்கான போராளிகள், தமது உயிரை அர்ப்பணித்தும், இலட்சக்கணக்கான மக்கள் தமது உயிரையும் உடைமைகளையும் இழந்தும் தாங்கொணாத் துயரத்தை அனுபவித்திருந்தனர்.

இருந்தும் போர்க்களங்களில் புலிகள் பெற்றிருந்த வெற்றிகளின் காரணமாகவும், உயிரை அர்ப்பணிப்பு செய்திருந்த தமது பிள்ளைகளின் காரணமாகவும், புலிகளின் சகல விதமான குற்றங்குறைகளையும் அத்துமீறல்களையும் பொறுத்துக்கொண்டு மிகுந்த சகிப்புத் தன்மையுடன் ஆயுதப்

போராட்டம் ஏற்படுத்திய அனைத்து வலிகளையும் சுமைகளையும் மக்கள் தாங்கி நின்றார்கள்.

தமிழ் மக்களின் தனிப்பெரும் அரசியல் சக்தியாக எழுச்சி பெற்றிருந்த விடுதலைப் புலிகளை எல்லா விமர்சனங்களுக்கும் அப்பால் தமிழ் மக்கள் தமக்கு விடுதலையைப் பெற்றுத் தரும் மீட்பர்களாக நம்பியிருந்தார்கள்.

2004 டிசம்பரில் சுனாமி பேரழிவு ஏற்பட்டதன் பின்னர் சுனாமிக்குப் பின்னரான வேலைத் திட்டம் **(Post-Tsunami management structure P-TOMS.)** சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த மீள் கட்டமைப்பு வேலைத் திட்டத்தில் இலங்கையரசுடன் சேர்ந்து புலிகளும் ஈடுபடுவது என்ற இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் நடாத்தப்பட்டன.

ஆனாலும் புலிகளால் இந்தப் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையுடன் ஈடுபட முடியவில்லை.

திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டரீதியான அதிகாரம் எதுவும் வழங்கப்படாத நிலையில், தமிழர் பகுதிகளில் மீள் கட்டமைப்பு வேலைகளில் ஈடுபடுவதற்கு அரசாங்கத்திற்கு அனுமதியளிப்பது புலிகளுக்குச் சிக்கலானதாக இருந்தது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழர்களின் அரசியல் பிரச்சனை மேற்குலக மத்தியஸ்தத்துடன் கையாளப்படும் நிலையை எட்டியிருந்ததனால் அந்த அரசியல் சூழலைக் கையாளக்கூடிய ராஜதந்திர துணிச்சல் புலிகளின் தலைமைக்கு அதிகம் தேவைப்பட்டது.

யுத்த களத்தில் இலங்கையின் பாதுகாப்புப் படைத் தலைமைகளும் சர்வதேச இராணுவ ஆய்வாளர்களும் வியந்து நிற்குமளவுக்குப் போர்த் தந்திரங்களைக் கையாண்டு பல வெற்றிகளைப் பெற்றிருந்த தலைவர் பிரபாகரன், சமாதானச் சூழ்நிலையில் அரசியல் ராஜதந்திரத்தின் நுணுக்கங்களைத் துணிச்சலுடன் பயன்படுத்தி, தமிழர்களுக்கு உறுதியான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் நிலையை

நோக்கி முன்னேறிச் செல்ல முடியாமல் திணறத் தொடங்கினார்.

வாழ்வாதாரங்கள் எல்லாவற்றையும் இழந்துபோன நிலையிலும், போராட்டத்தை நம்பியிருந்த மக்களுக்காகத் தனது பிடிவாத குணத்திலிருந்து வெளியே வரவேண்டியவராகத் தலைவர் பிரபாகரன் இருந்தார்.

ஆனால் அந்த நேரத்தில் அவர் அதைச் செய்வதற்கான துணிச்சலற்றவராகவே இருந்தார்.

எந்த மக்களுக்காகப் போராடுவதாக அவர் கூறினாரோ அந்த மக்களைப் பாதுகாப்பதா அல்லது கோடானுகோடிப் பணத்தைச் செலவு செய்து மிகவும் பிரயத்தனங்களின் மத்தியில் கொண்டு வந்து சேர்த்திருந்த ஆயுதங்களைப் பாதுகாப்பதா என்ற கேள்வி அவருக்கு முன்பாக இரத்தமும் தசையுமாக எழுந்து நின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையானது ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு அப்பால் தொடர முடியாதவாறு இறுக்கமடையத் தொடங்கியது.

போரினால் பாதிப்புற்ற மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான "**சிராண்**" கட்டமைப்பு புலிகளின் ஒத்திசைவொடு உருவாக்கப்பட்டிருந்தாலும் அதனுடைய சில நடைமுறை விடயங்களில் புலிகள் தமது அதிருப்தியை வெளிக்காட்டத் தொடங்கினார்கள்.
நியுயோர்க்கில் நடைபெற்ற நிதி வழங்கும் நாடுகளின் மாநாடு ஒன்றிற்குப் புலிகளை எப்படியும் அழைத்துச் செல்ல வேண்டுமென்பதில், நோர்வே அனுசரணையாளர்கள் உச்சக்கட்ட முயற்சிகளை எடுத்திருந்தனர்.

புலிகளின் பிரதிநிதிகளுக்கான விமான இருக்கைகள் இறுதி நிமிடம் வரையிலும் ஒதுக்கப்பட்டிருந்தது. புலிகள் மட்டத்திலும் போவதா, விடுவதா என்கிற இழுபறி நிலை இறுதிவரை இருந்தது.

இறுதியில் போவதில்லை என்ற அறுதியான முடிவுக்குத் தலைவர் வந்துவிட்டார் என்பதை அறியமுடிந்தது.

சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற ஒரு சந்திப்பில் எம்மோடு உரையாடிக்கொண்டிருந்த அரசியல்துறைப் பொறுப்பாளர், "**நாங்கள் இந்த மாநாட்டுக்குப் போனால் சர்வதேச வலைக்குள்ளே சிக்குப்பட்டு விடுவோம் என அண்ணை யோசிக்கிறார்**.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் எங்களுடைய ஆயுதங்களை எப்படியாவது பறித்துவிட வேண்டும் என்பதற்காகத்தான், இந்த அளவுக்கு இறங்கி வந்து எம்மைச் சுற்றி வளைக்கின்றன.



ஆனால் “**ஆயுத ஒப்படைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அண்ணை சொல்லிப் போட்டார். இனியென்ன சண்டைதான், எல்லா வேலைகளையும் நிறுத்திப்போட்டு இயக்கத்திற்கு ஆளணியைத் திரட்டச் சொல்லி அண்ணை சொல்லுறார்.**

இனி ஏற்படப் போகும் யுத்தம் இலங்கை இராணுவத்தோடு மட்டும் நடக்கப் போகிற சண்டையில்லை. சர்வதேசத்தோடு நடைபெறப் போகும் போர்.

அதைப் பற்றி நானோ நீங்களோ கவலைப்பட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை. அண்ணை பாத்துக்கொள்ளுவார். அவர் சொல்லுற வேலைகளை நாங்கள் ஒவ்வொருவரும் சரிவரச் செய்தமெண்டால், எப்ப என்ன முடிவு எடுக்க வேணும் என்பதை அண்ணை பாத்துக்கொள்ளுவார்" எனத் தமிழ்ச்செல்வன் எம்மிடம் குறிப்பிட்டார்.

2004இன் இறுதிப் பகுதியிலிருந்து தொடர்ச்சியாக இராணுவத் தரப்புக்கும் புலிகளின் தரப்புக்கும் இடையே போர்நிறுத்த மீறல் சம்பவங்கள் அதிகரித்துச் சென்றன.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இந்தக் குற்றச் செயல்களைப் பதிவு செய்ததுடன் இருதரப்பின் சமாதானச் செயலகங்களுக்கும் அனுப்பிக்கொண்டிருந்தது.



**லக்ஷ்மன் கதிர்காமர்**

2005 ஆகஸ்ட் 12 அன்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் உயிரிழந்தார்.

அதற்கு மறுநாள் பொறுப்பாளர்களுக்கான ஒரு கூட்டத்தில் கலந்துகொண்ட தலைவர் பிரபாகரன், "எப்பிடி, சொறிஞ்சுசொறிஞ்சு கொண்டிருந் தாங்கள். சொத்தையில குடுத்திருக்கிறம்" எனக் குறிப்பிட்டார்.

புலிகளின் தாக்குதல் பலத்தை நிரூபிக்கும் வகையில் இலங்கையின் அதி உயர் பாதுகாப்பு வலையத்திற்குள் அத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

நாலாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்படும்போது அந்த யுத்தம் வடக்குக் கிழக்குக்கு வெளியேதான் நடைபெறும் என்ற நம்பிக்கை புலிகளின் தளபதிகளிடையே பெரிதாக நிலவியது.

அதற்கேற்ற வகையில் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வெற்றிகரமாக ஊடுருவியுள்ளனர் என்கிற நம்பிக்கை இயக்கத்திற்கு இருந்தது.

அத்துடன் புலிகளால் கட்டியெழுப்பப்பட்டிருந்த வான்படையின் பலமும் ஆட்லறி பீரங்கிகளின் உயர் சூட்டு வலுவும் எந்தக் கட்டத்திலும் தமது உயிர்களை அர்ப்பணிக்கத் தயாராக இருந்த கரும்புலியணிப் போராளிகளின் உயிராயுதமும் இயக்கத்தின் உச்ச நம்பிக்கைகளாக அமைந்திருந்தன.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடைய படுகொலையைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரித்தானியா உட்பட பல மேற்குலக நாடுகள் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்தபோது, அந்த விடயத்தைப் புலிகளின் தலைமை பெரிய விடயமாக எடுத்துக்கொள்ளவில்லை.

இயக்கம் தடைசெய்யப்பட்ட செய்தியைக் கேட்டபோது என்னைப்போலப் பல போராளிகளுக்கும் கவலையும் குழப்பமும் ஏற்பட்டது. அரசியல்துறைப் பொறுப்பாளரால் எமக்கு நடத்தப்பட்ட கூட்டத்தில் அவர் சிரித்தபடி கூறிய விடயம் எமக்கு மலைப்பை ஏற்படுத்தியது.

“உங்களைப் போலத்தான் நாங்களும் கொஞ்சப் பேர் சரியான மனக் குழப்பத்தோட அண்ணையைச் சந்திக்கப் போனனாங்கள், அண்ணை சிம்பிளா சிரிச்சுக்கொண்டு சொன்னார் ‘**இந்தப் பெரிய நாடுகள் எல்லாம் தடைசெய்கிற அளவுக்குச் சர்வதேச அளவில இராணுவ பலம் பொருந்திய இயக்கமாக நாங்கள் வளந்திருக்கிறம் எண்டு**

**நினைச்சு சந்தோசப்படுங்கோ**' எண்டு, அப்பிடிப்பட்ட தலைவர் எங்களுக்கு இருக்கேக்க நாங்கள் ஏன் குழம்ப வேணும்" எனக் கூறினார் தமிழ்ச்செல்வன்.

கதிர்காமர் மீதான பழிதீர்ப்புத் தாக்குல் எமது போராட்டத்தில் ஏற்படுத்தியிருந்த அரசியல் பின்னடைவை அலட்சியமாகக் கடந்துபோய்விடலாம் என விடுதலைப் புலிகளின் தலைமை கருதியது.

உலகத்தையே பகைத்துக்கொண்டு ஒரு விடுதலைப் போராட்டத்தில் வெற்றியடைதல் என்பது எப்படிச் சாத்தியமாகும் என்ற அளவிற்கேனும் சிந்திக்கத் தோன்றாதவாறு புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தின் மீதான நம்பிக்கை அனைவரது கண்களையும் கட்டிப்போட்டிருந்தது.

**2005 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு மக்களை வாக்களிக்கத் தூண்டும்படி தலைவர்**

**கூறியிருப்பதாக அரசியல் பொறுப்பாளர்களுடைய கூட்டத்தில் தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார்.**

"மகிந்த ஜனாதிபதியா வந்தா கட்டாயம் சண்டைதான் தொடங்கும், இப்பிடி இவங்களோட பேச்சு வார்த்தையெண்டு இழுபட்டுக் கொண்டிருக்கிறதுக்கு சண்டை தொடங்கினா நாங்கதான் வெல்லுவம்; அதுக்கு சரியான ஆள் இவர்தான்" எனக் குறிப்பிட்ட வார்த்தைகள் அதன் பின்னரான நாட்களில் அடிக்கடி எனது நினைவுக்கு வருவதுண்டு.

## தலைவரின் ஒப்புதலுடன் "மாவிலாற்றை பூட்டி கடைசிக்கட்ட போரை தொடங்கி வைத்த தளபதி சொர்ணம்!



ஜெனிவாவில் 2006 பெப்ரவரியில் நடப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள், 2006 ஜூன் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஆனாலும் வெளிநாடுகள் தடை செய்திருக்கின்ற நிலையில் புலிகளின் பிரதிநிதிகளால் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள முடியாது என்ற காரணத்தை முன்வைத்துப் பேச்சுக்களில் ஈடுபடுவதை இயக்கம் தவிர்த்துக்கொண்டது.

அதன்பின் 2006 ஒக்டோபர் 28, 29 திகதிகளுக்கு மீண்டும் பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்டன.

இதற்கிடையில் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலும் புலிகளால் சிங்கள

மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட பதில் தாக்குதல் நடவடிக்கைகளுமெனப் போருக்கான சாத்தியங்கள் கூடிவரத் தொடங்கியிருந்தன.



2006 ஜூலை 21ஆம் திகதி திருகோணமலையில் மாவிலாற்றின் நீர் விநியோகக் கதவுகள் புலிகளின் கட்டளைத் தளபதி சொர்ணத்தின் உத்தரவுக்கமைய மூடப்பட்டன.

பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள விவசாயிகளின் வயல் நிலங்களுக்கான நீர் விநியோகம் இதனால் தடைப்பட்டது.

திருகோணமலை அரசியல் பொறுப்பாளராக இருந்த எழிலனுடன் இந்த விடயம் பற்றி ஒரு தடவை நான் பேசிக்கொண்டிருந்தபோது "**சொர்ணமண்ணை மாவிலாத்துக் கதவுகளை மூடச் சொன்னார். பொடியங்கள் மூடினாங்கள்**" எனக் குறிப்பிட்டார்.

இறுதிப் போர் தொடங்குவதற்கு உடனடிக் காரணமாக அமைந்த மாவிலாற்று விவகாரம் எந்தவிதமான அரசியல், இராணுவ முக்கியத்துவமுமற்றுச் சிங்கள மக்களைச் சீண்டி விளையாடும் ஒரு நடவடிக்கையாகவே இருந்தது.



**சொர்ணம்**

இலங்கைப் படையினரை வலுச் சண்டைக்கு இழுத்து யுத்தத்தை ஆரம்பிப்பதன் மூலம் தலைவரால் திருகோணமலைப் படையணிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ஆட்லறிகளைப் பயன்படுத்தி வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டு இராணுவ கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்களைக் கைப்பற்ற முடியும் எனத் திருகோணமலையின் தளபதியாக இருந்த சொர்ணம் கருதினார்.

அவரது திட்டத்திற்குத் தலைவருடைய அனுசரணையும் இருந்தது. இயக்கம் எதிர்பார்த்தபடியே இறுதி யுத்தம் திருகோணமலை மாவிலாற்றங்கரையில் மூண்டது.

2006 ஆகஸ்ட் 15இல் மாவிலாறு பகுதி முழுமையாக இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்டதுடன் மூதூர், சம்பூர், கட்டைப்பறிச்சான், தோப்பூர் எனப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளை நோக்கி யுத்தம் விரிவடையத் தொடங்கியது.

**புலிகள் இயக்கம் எதிர்பார்த்தமைக்கு மாறாகத் திருகோணமலைத் தோல்விகள் அமைந்தன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தின் மீது இருந்த அதீத நம்பிக்கை மாவிலாற்றில் பலத்த அடிவாங்கத் தொடங்கியது.**

17 ஆகஸ்ட் 2006 தென்னிலங்கையில் உள்ள காலி துறைமுகம் கடற்புலிகளின் பாரிய தாக்குதலுக்கு உள்ளாகியது. முற்று முழுதான சிங்களப் பிரதேசமாக இருக்கும் காலியில் உயர் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இருந்த துறைமுகத்தின் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் மூலம் இலங்கைத் தீவின் கடற்பரப்பில் தமக்கிருக்கும் செல்வாக்கைப் புலிகள் நிரூபிக்க முனைந்தனர்.

இறுதிப் போரின் ஆரம்பத் தாக்குதல்கள் அனைத்துமே புலிகள் தமது பலத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக ஏற்படுத்திக் கொண்ட களங்களாகவே அமைந்திருந்தன.

2006 நடுப்பகுதியில் மீண்டும் ஏ9 நெடுஞ்சாலை மூடப்பட்டதால் மக்கள் நெருக்கடி நிலைக்குள்

தள்ளப்பட்டனர். எப்படியாவது போரை வென்றே ஆகவேண்டும் என்ற நிலைக்கு இயக்கம் தள்ளப்பட்டது.

2006 ஒக்டோபரில் ஜெனிவாவில் நடப்பதாக இருந்த சமாதானப் பேச்சுக்கள் நடைபெறாமலேயே போயின. போர் உக்கிரம் பெறத் தொடங்கியது. ஆனால் இயக்கம் எதிர்பார்த்த வகையில் திருகோணமலையில் நடந்த யுத்தம் புலிகளுக்குச் சாதகமாக அமையவில்லை.

இலங்கை இராணுவம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளை வேகமாகக் கைப்பற்றத் தொடங்கியது. மீண்டும் ஒரு பயங்கர யுத்தத்திற்குப் புலிகள் இயக்கம் முகம் கொடுக்கத் தயாராகியது.

மக்கள் மீண்டும் பேரவலத்திற்குள் தள்ளப்பட்டனர். சர்வதேசத்தின் அரசியல் இராஜதந்திரச் சூழ்நிலையைச் சற்றேனும் கவனத்தில் கொள்ளாது, 2006 மாவீரர் நாளில் "நாம் தொடர்ந்து போராடுவோம்" என்கிற கோசத்தை முன்வைத்துத் தலைவர் பிரபாகரன் உரையாற்றினார்.

இறுதி யுத்தம் ஒரு தீச்சுவாலையைப் போன்று பற்றியெரிந்து வேகமாகப் பரவத் தொடங்கியது.

**நாங்கள் ஆயுதங்களைக் கீழே போடுகிறோம்**

போரும் நெருப்பும் ஒரே இயல்புடையவை. பற்றிக் கொண்டு விட்டால் எவ்விதப் பாரபட்சமும் பார்க்காது.

தமக்கேயுரித்தான உக்கிரத்துடன் கோரத் தாண்டவம் ஆடத் தொடங்கிவிடுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமான இறுதி யுத்தத்தின் முதலாவது கட்டம் கிழக்கு மாகாணத்தில் முடிவுக்கு வந்திருந்தது.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் அனைத்தையும் இராணுவத்தினர் கைப்பற்றினார்கள்.

இறுதியாக, 2007 ஜூலை 11இல் குடும்பிமலையும் (தொப்பிக்கல்) இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வீழ்ந்தது.

**பிரிகேடியர்**

**பானு**

பல நூற்றுக்கணக்கான போராளிகள் உயிரிழந்த நிலையில், எஞ்சிய போராளிகளுடன் திருகோண மலைத் தளபதியான சொர்ணமும் மட்டக்களப்பு தளபதியாகவிருந்த பானுவும் தமது தோல்வியை முதுகில் சுமந்தபடி வன்னிக்கு வந்து சேர்ந்தனர்.

புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் மற்றும் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் உட்பட, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் மட்டுமே போரை மீண்டும் தொடங்குவதில் தீவிர முனைப்புடன் இருந்தனர்.

போராளிகளின் மனநிலையானது வெளியே காட்டிக்கொள்ளாது விட்டாலும் உள்ளுக்குள் தளர்வாகவே இருந்ததைப் பல தளபதிகள் நன்றாக உணர்ந்திருந்தனர்.

ஏற்கனவே பலவீனமடைந்திருந்த புலிகளது தாக்குதல் திறன் களமுனையை முன்னின்று வழிநடத்தும் தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்களுக்குப் போரில் வெற்றியடைய முடியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவிக்கவில்லை.

**மாவிலாற்றின் கதவுகளை மூடி, போரை ஆரம்பித்து மோசமான முறையில் இராணுவத்திடம் தோற்றுப்போனதற்காகத் தளபதி சொர்ணம் போராளிகள் மத்தியில் சலிப்போடு விமர்சிக்கப்பட்டார்.**

2007க்குப் பின்னரான காலப் பகுதியில் வன்னிப் பெருநிலப் பரப்பு மட்டுமே புலிகளின் கைவசமிருந்த ஒரேயொரு தளமாக அமைந்திருந்தது.

புலிகள் இயக்கத்திடம் கைவசமிருந்த அதிக அளவிலான ஆயுதங்கள் குறிப்பாகத் தூரவீச்சு ஆட்லறி பீரங்கிகள், கனரக

ஆயுதங்கள், கடற்சண்டைகளில் பயன்படுத்தும் கனரக ஆயுதங்கள் என்பன அதிகரித்துக் காணப்பட்டன.

இப்படியான விசேட ஆயுதங்களின் உண்மையான பெயர்கள் போராளிகளுக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை. சாரை, சண்டியன், மொங்கான் எனப் பலவிதமான சங்கேதப் பெயர்களினால் களமுனைகளில் இவை பயன்படுத்தப்பட்டன.

இறுதிப்போரில் ஈடுபட்ட வேளையில், போராளிகளின் தாக்குதல் படையணிகளை விடவும், ஆயுதப் படைக்கலன்களே இயக்கத்தின் பெருத்த நம்பிக்கையாக இருந்தன.

**சமாதானத்தின் இறுதிக் காலப் பகுதியான 2006க்குப் பின்னர் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் சில சர்வதேச கடற் பரப்பில் அடுத்தடுத்து மூழ்கடிக்கப்பட்ட சம்பவங்கள் நிகழத் தொடங்கின.**

திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் இலங்கைக் கடற்படையினரால் கப்பல்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் அதிநவீன ராடர் பொருத்தப்பட்டுச்

சந்தேகத்திற்கிடமான கப்பல்கள் கண்காணிக்கப்பட்டதுடன், இத்தகைய கப்பல்களின் நடமாட்டம் பற்றிய தகவல்களை இந்திய கரையோரக் காவல் படையிடமிருந்தும் இலங்கை கடற்படை பெற்றுக்கொண்டது.

புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிவந்த குறைந்தபட்சம் மூன்று கப்பல்களேனும் சர்வதேச கடல் எல்லையில் இலங்கை கடற்படையால் தாக்கியழிக்கப்பட்டன.

இந்தச் செய்திகளை அறிந்த பொதுமக்கள் "**என்ன பிள்ளையள், வெளிநாட்டில இருக்கிற எங்கட சனத்தின்ர காசு எல்லாம் அநியாயமா கடலில எரிஞ்சுபோகுதே**" என எம்மிடம் குறைபட்ட சம்பவங்களும் உண்டு.

**Sri Lankan Air Force Jets Destroyed LTTE**

புலிகளின் ஆயுதக் கப்பல்கள் இவ்வாறு தாக்கியழிக்கப்பட்டதன் காரணமாக இயக்கத்திடம் கைவசமிருந்த ஆட்லறி பீரங்கிகளுக்குத் தேவையான எறிகணைகள் மற்றும் வெடிபொருட்களைத் தொடர்ந்து வெளிநாடுகளிலிருந்து பெற்று யுத்தத்தில் தாராளமாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியம் இல்லாமல் போனது.

இறுதி யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படைநகர்வுகளை முறியடிப்பதற்கான புலிகளின் எதிர்த் தாக்குதல்களில் ஆட்லறி மற்றும் ஏனைய பீரங்கிகள் தாராளமான சூட்டாதரவை வழங்கி, முன்னணிக் களமுனைத் தாக்குதலணிகளுக்குப் பக்கபலமாகச் செயற்பட்டன.

புலிகளின் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, போர்க்களத்தில் இராணுவத்தினருக்கு அதிகமான இழப்புக்களை ஏற்படுத்தி, அவர்களின் முன்னேற்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதில் புலிகளின் பீரங்கிப் படையணி பெரும் பங்காற்றியது.

ஆனால் இதன்பின்னர் தொடர்ந்த சண்டைகளில் புலிகளுக்கு ஏற்பட்ட எறிகணைப் பற்றாக்குறை காரணமாக, இத்தகைய பின்னணிச் சூட்டாதரவு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டது.

கூடுதலான தூர இடைவெளிகளைக் கொண்ட காவலரண்களில் மிகவும் குறைந்த தொகையில் நிலைப்படுத்தப்பட்டிருந்த போராளிகளுக்குத் தமது

கையிலிருக்கும் துப்பாக்கியை விடவும், அவர்களது பின்னணியிலிருந்து ஏவப்படும் சரமாரியான பீரங்கிச் சூடுகளே பெருத்த உளவுரனாக இருந்தன.

தமக்கெதிரே முன்னேறி நகர்ந்துவரும் ஒரு இராணுவத்தினனைக் கண்டதும், உடனடியாகவே எறிகணை ஆதரவு தரும்படி தமது பகுதிக் கட்டளை மையங்களுக்கு அறிவித்தார்கள்.

இதனால் களமுனையில் படைகளை வழிநடத்தும் புலிகளின் இடைநிலைத் தளபதிகளும் பீரங்கிப் படையணியினரும் பெருத்த நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொண்டனர்.

அதேவேளை மழைபோலப் பொழியும் இராணுவத்தினரின் எறிகணை வீச்சு ஆதரவுடன், குண்டு துளைக்காத கவசங்களையும் அணிந்தபடி தாக்கவீச்சுக் கூடிய பி.கே. கனரக ஆயுதத்தினால் சரமாரியாகச் சூடுகளை வழங்கியபடி முன்னேறி வந்து கொண்டிருந்த இராணுவப் படைக்கு எதிராக நின்று தாக்குப்பிடிக்க முடியாத நிலை புலிகளின் முன்னணிக் களமுனைத் தாக்குதலணிகளுக்கு ஏற்பட்டது.

இதனால், போர்க் களமுனைகளில் போராளிகளின் உயிர் இழப்புக்களும் மிகவும் அதிகமாக ஏற்பட்டன. இந்நிலையில், புலிகளின் தாக்குதலணிகள் படிப்படியாகப் பின்வாங்குவதைத் தவிர வேறு வழிகள் எதுவும் இருக்கவில்லை.

இத்தகைய நிலைமையில்தான் உள்ளூரிலேயே எறிகணைகள் மற்றும் கண்ணி வெடிகளைத் தயாரிப்பதற்கான முயற்சிகளில், தலைவர் பிரபாகரனின் மூத்த மகன் சாள்ஸ் அன்ரனி அதிக முனைப்புடன் ஈடுபடத் தொடங்கினார்.

அதிகமான போராளிகளையும் மற்றும் பொருளாதார வளங்களையும் உள்ளடக்கியதான 'கணினிப் பிரிவு' அவரது தலைமையில் இயங்கியது.

தலைவருடைய மிகுந்த நம்பிக்கைக்குரிய நண்பரான 2ஆம் லெப் சீலன் என்ற இயக்கப் பெயரைக்கொண்ட சாள்ஸ் அன்ரனியினுடைய பெயரைத் தனது மூத்த மகனுக்குத் தலைவர் சூட்டியிருந்தார்.



**பிரபாகரன்-சார்ல்ஸ் ஆன்ரனி**

சாள்ஸ் அன்ரனியினுடைய சிந்தனை முறைகளும் செயற்பாடுகளும் வித்தியாசமான அணுகு முறைகளாக இருந்தன. நடைமுறைச் சாத்திய, அசாத்தியங்களைப் பற்றி அவர் அதிகம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க மாட்டார். இறுதிக்கட்டப் போராட்டத்தில் இயக்கத்தின் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளிலும் களமுனைச் செயற்பாடுகளிலும் கதாநாயகனாக அனைவராலும் 'தம்பி' என அழைக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி செயற்பட்டிருந்தார்.

சாள்ஸ் அன்ரனி எடுக்கும் அதிரடியான முடிவுகளால், அவரைக் குழந்தைப் பருவத்திலிருந்து தூக்கி வளர்த்த இயக்கத்தின் மூத்த தளபதிகள்கூட மனக் கசப்படைந்த சம்பவங்களை அறியக் கூடியதாக இருந்தது.

தாக்குதல் தளபதிகளுக்கான கூட்டங்களில் அனுபவம் மிக்க தளபதிகளின் முன்பாகத் தம்பி சாள்ஸ் அவர்களை அவமானப்படுத்தும் வகையில் கருத்துக்களை முன் வைப்பதாகவும் அதைப் பார்த்துக்கொண்டிருக்கவே சங்கடமாக இருப்பதாகவும் தளபதி விதுஷா பல தடவைகள் என்னிடம் கூறியிருக்கிறார்.

மக்கள் அனைவருமே போர்க் களமுனைகளில் நேரடியாகப் பங்களிப்பு செய்ய வேண்டும் என்பது அவருடைய கருத்தாக இருந்தது. எனவே கட்டாய ஆட்சேர்ப்பு விடயத்தில் எந்தவிதமான தயவு தாட்சண்யமும் விலக்களிப்புகளும் இருக்கத் தேவையில்லை என்ற அடிப்படையில் அவரது செயற்பாடுகள் அமைந்தன.

அரசியல்துறையினர் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடாமல் மெத்தனமாக உள்ளனர் என்ற குற்றச்சாட்டு அவரால் முன்வைக்கப்பட்டது.

எனவே தனது கணினிப் பிரிவையும் காவல்துறையையும் இணைத்து முள்ளிவாய்க்கால்வரை கட்டாய ஆட்சேர்ப்பை முன்னெடுக்கும்படிச் செய்தார். போராளிகளுக்கான அடிப்படைப் பயிற்சி முகாம்களையும் தனது மேற்பார்வையிலேயே நடத்தினார்.

அந்தப் போராளிகளுடன் சேர்ந்து தானும் களமுனைக்குச் சென்றார். இயக்கத்திலிருந்து விலகியிருந்த மற்றும் விலக்கப்பட்ட முன்னாள் போராளிகளையும் தன்னுடன் இணைத்துச் செயற்படுத்த முனைந்தார்.

ஒரு குறுகிய காலமாகவே இருப்பினும் சாள்ஸ் அன்ரனி விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கிக்கொண்டு, எதைப் பற்றியும் கவலைப்படாது செயற்பட்டுக்கொண்டிருந்தார்.

2006இல் இயக்கத்தின் ஆளணியை அதிகரிப்பதற்காகக் கட்டாய ஆட்சேர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற முடிவுக்கு இயக்கம் வந்திருந்தபோது, இயக்கத்தின் பயங்கரமான இன்னொரு முகத்தை மக்கள் காணத் தொடங்கியிருந்தனர்.

அரசியல்துறைப் போராளிகளின் கூட்டத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் இந்த அறிவித்தலை வெளியிட்டபோது பெரும்பாலான போராளிகள் அதிர்ந்துபோயிருந்தார்கள்.



**“எங்களிட்ட போதியளவு ஆயுதங்கள் இருக்குது. ஆளணிதான் இல்லை, தலைவர் எதிர்பார்க்கிற ஆளணி இருக்குமெண்டால் இந்த யுத்தத்தில நாங்கள்தான் வெல்லுவம். கடல், தரை, வான் என முப்படைகளின் பலம் இயக்கத்திட்ட இருக்கிது.**

அனுபவம் வாய்ந்த தளபதிகள் இருக்கிறார்கள், எல்லாத்துக்கும் மேலாக அண்ணை இருக்கிறார். தலைவர் எதிர்பார்க்கிற ஆளணி பலம் மட்டும் இருக்குமெண்டால், இதுதான் தமிழீழத்திற்கான இறுதிப் போராக இருக்கும்.

வீட்டுக்கு ஒருவர் இருவர் இயக்கத்தில் இருந்தால் போதாது. போராட வல்லமையுள்ள அனைவரும் ஆயுதம் ஏந்திப் போராட முன் வரவேண்டும்.

எனவே நீங்கள் தயக்கம் காட்டாது இளைஞர் யுவதிகள் அனைவரையும் இயக்கத்தில் இணைக்க வேண்டும். இதுதான் தலைவருடைய எதிர்பார்ப்பு.” அரசியல்துறைப் பொறுப்பாளர் இந்த விடயத்தைப் போராளிகளின் மத்தியில் தெரிவித்தபோது உண்மையில் மக்கள் இதனை எப்படி

எதிர்கொள்ளப்போகிறார்கள் என்பதை என்னால் கற்பனை செய்தும் பார்க்க முடியாதிருந்தது.

என்னைப் போன்றே பல போராளிகளுடைய உணர்வுகளும் இருந்தன. ஆனாலும் அத்தகைய சந்தர்ப்பத்தில் எமது கருத்துக்களை வெளிப்படுத்திக்கொண்டிருப்பது தலைமையின் கட்டளையை மீறும் துரோகச் செயலாகவே கருதப்படும்.

இயக்கத் தலைமையால் தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு முடிவை நடைமுறைப்படுத்துவது தான் போராளிகளின் தலையாய கடமையே தவிர அபிப்பிராயம் கூறிக்கொண்டிருப்பது போராட்டத்தில் தெளிவற்றதான குழப்பம் ஏற்படுத்தும் செயற்பாடாகவே கருதப்பட்டது.



**கட்டாய ஆட்சேர்ப்பு**

கட்டாய ஆட்சேர்ப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட ஆண், பெண் போராளிகளுக்கு மக்களுடனான அணுகுமுறைகள் குறித்துப் பலராலும் வகுப்புகள் எடுக்கப்பட்டன.

ஆனாலும் ஒரு இளைஞனையோ யுவதியையோ கட்டாயமாக இயக்கத்தில் இணைப்பது எவ்வளவு கடினமானதும் மிக மோசமானதுமான வேலை என்பதை இயக்கத்தின் தலைமை உணரத் தவறியது.

கட்டாய ஆட்சேர்ப்புக் காரணமாகப் போராளிகளுக்கிடையே பலத்த விமர்சனங்களும் முரண்பாடுகளும் ஏற்பட்டன.

அந்தக் காலகட்டத்தில் வன்னிக்குள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் சிக்குண்டிருந்த மக்களின் நிலைமைகளை விபரிக்க வார்த்தைகளே இல்லை.

**எந்தச் சமூகத்தை வாழவைக்க வேண்டுமென்பதற்காக நாம் போராடப் போனோமோ அதே சமூகத்தின் சீரழிவு நிலைக்கும் நாமே காரணமாக இருந்தோம்.**

## புலிகளின் இராணுவ பலம் வெளிப்பார்வைக்குப் பிரமிப்பூட்டுவதாக அமைந்திருந்தது: உண்மையில் உள்ளே வெறும் கோறையாகிப் போயிருந்தது!



• தலைவர் பிரபாகரன் எடுத்த மிகத் தவறான முடிவுகளில் முக்கியமானது, கட்டாய ஆட்சேர்ப்பு

• பதினெட்டு வயதில் தனது ஆயுதப் போராட்ட வாழ்வைத் தொடங்கியவரான விதுஷா, இறுதிப்போரின் ஆரம்ப காலத்தில் நாற்பது வயதை நெருங்கியிருந்தார்.

• பல்வேறு களம்கண்ட ஆனந்தபுரத்தில் வீர மரணமடைந்த வீரப் பெண் தளபதியின் விதுஷா உடலைக் கவனிக்க யாருமின்றித் தோல்வி கொத்தித் தின்றுகொண்டிருந்தது.

• **தளபதி பிரிகேடியர் பால்ராஜ் நீரிழிவு** நோயால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் வேறு பல உடல் உபாதைகளும் சேர்ந்து 2008இல் எதிர்பாராத வகையில் மரணத்தை தழுவியிருந்தார்.



கட்டாய ஆட்சேர்ப்பிலிருந்து தப்புவதற்காகச் சமூகத்தில் இளவயது திருமணங்கள் வேகமாக நடைபெறத் தொடங்கின. திருமணமாகாமலே இளவயது ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் சூழ்நிலைகள் சமூகத்தில் அனுமதிக்கப்பட்டன. பதுங்குக்குழிகளை அமைத்து மாதக்கணக்கில் தமது பிள்ளைகளைப் பெற்றோர் மறைத்து வைத்துப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் உருவானது.

கட்டாயமாக இணைக்கப்பட்ட பல போராளிகள் பின்பு தமது சுயவிருப்பத்துடன் மிகச் சிறப்புடன் செயற்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்தன. அதேவேளை, ஆயுதங்களைக் களமுனைகளிலேயே எறிந்துவிட்டு வீட்டுக்கு ஓடியவர்களும் உண்டு. இன்னும் சிலர் கட்டாயத்தின் பேரில் களமுனைகளுக்கு அனுப்பப்பட்டதால் மரணத்தைத் தழுவியவர்களாகவும் இருந்தனர்.

அக்காலகட்டத்தில் அரசியல்துறையில் ஒரு போராளியாக இருப்பதே பெருத்த மன உளைச்சலையும் அவமானத்தையும் ஏற்படுத்துவதாக இருந்தது. அதுவரையிலும் மக்களின் நலனுக்காகப் புலிகள் இயக்கம் செய்த எல்லா வேலைத் திட்டங்களும் மக்களின் மனங்களிலிருந்து முற்றாக அடிபட்டுப் போனது.

புலிகள் இயக்கம் கட்டாய ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை வெற்றி பெறச்செய்ய முடியும் என நான் ஒருபோதும் நம்பவில்லை. மாறாக நாம் ஒரு படுபயங்கரமான தோல்வியை நோக்கிப்

போய்க்கொண்டிருக்கிறோம் என்பதை உணரத் தொடங்கினேன்.

ஆனாலும், தலைவரின் பிடிவாதமான நடவடிக்கைகளால் மக்களும் போராளிகளும் மனரீதியாகப் பாதிப்படைந்ததுடன் தாங்க முடியாத அலைக்கழிவுகளையும் சந்திக்க வேண்டியிருந்தது.

**தலைவர் பிரபாகரன் எடுத்த மிகத் தவறான முடிவுகளில் முக்கியமானது, கட்டாய ஆட்சேர்ப்பு என்பது எனது நிலைப்பாடு.**

இந்தக் காரியத்தில் சூழ்நிலைக் கைதிகளாகப் பல போராளிகளும் பொறுப்பாளர்களும் மன விருப்பின்றிச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

கட்டாய ஆட்சேர்ப்பில் அரசியல்துறை மட்டுமன்றி, தாக்குதல் தளபதிகளும் படையணிகளும் தீவிரமாக ஈடுபட்டிருந்தன. புதுக்குடியிருப்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மூத்த தாக்குதல் தளபதி ஒருவரிடம் மக்களின் அபிப்பிராயங்களை நான் எடுத்துக்கூற முற்பட்டபோது



அவர் சொன்னார்: **“தமிழினி, ஏன் இப்பிடி குழம்புறிங்கள்? தலைவர் சொன்ன வேலையைத்தான் நாங்கள் செய்யுறம், உங்களுக்கு ஏலாட்டில் விட்டிட்டுப் போங்கோ, மற்றவங்களையும் குழப்ப வேண்டாம்”.**

**அதன் பின்பு ஏற்பட்ட சில மனக் கசப்புகள், அதனால் ஏற்பட்ட மனச்சோர்வு காரணமாக என்னால் தொடர்ந்தும் உற்சாகமாக வேலைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.**

அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் என்னிடம் கூறினார்; “தமிழினி, நீங்கள் பெண்கள் தொடர்பான வேலைகளில்

கூடுதலான கவனம் செலுத்துங்கள். ஏனைய வேலைகளைக் கவனிப்பதற்கு வேறு ஒரு பொறுப்பாளரை நியமிக்கலாம் என முடிவு செய்திருக்கிறோம்" எனக் கூறினார்.
அச்செய்தி எனக்கு மிகுந்த நிம்மதியாக இருந்தது. ஏதோ இறுக்கம் தளர்ந்து மனதும் உடலும் இலேசானதுபோல உணர்ந்தேன்.

பொறுப்பாளராக இருந்து நிர்வாகப் பிரச்சனைகளில் மனப் பாதிப்புகள் அடைவதை விட ஒரு போராளியாக இருந்து அதுவும் பெண்களுக்கான வேலைகளை மகிழ்ச்சியோடு செய்வதே உகந்தது எனக் கருதினேன்.

அரசியல்துறை மகளிர் பொறுப்பாளராகத் தாக்குதலணியைச் சேர்ந்த மூத்த போராளி ஒருவர் நியமிக்கப்பட்டார். எனக்குக் கிடைத்த சுதந்திரத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் எனக் கருதினேன்.

களமுனையில் நின்ற மகளிர் படையணிப் போராளிகளுடன் அதிக அளவு நாட்களைச் செலவு செய்தேன். இயக்கத்தின் பரப்புரைக் கூட்டங்களுக்கான அழைப்புகளிலும்,

அரசியல்துறையின் முக்கியமான கலந்துரையாடல்களுக்கான அழைப்புகளிலும் கலந்துகொண்டேன்.

கடினமான நிர்வாகப் பணிச் சுமைகளின் அழுத்தங்களுக்குள் சிக்கிக்கொள்ளும்போது, எமது போராட்டத்தின் முழுப் பரிமாணத்தையும் சிந்தித்துச் செயலாற்ற முடியாமல் மட்டுப்படுத்தப்பட்ட வேலைகளுடனேயே உழல வேண்டியேற்படுவதை மகளிர் பொறுப்பாளராக இருந்த காலத்தில் எனது அனுபவத்தில் உணர்ந்துகொண்டேன்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு போராட்ட அமைப்பு என்கிற தன்மையை இழந்து ஓர் அரச இயந்திரம்போலத் தன்னை விசாலித்துக் கொண்டதனால் இயக்கத்தின் கூடுதலான மூளைப் பலம் நிர்வாகச் சிக்கல்களில் வீணே சிதறடிக்கப்பட்டது.

பல திறமையான போராளிகள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டு நிர்வாகச் சிக்கல்களில் தமது நேரத்தையும் திறமையையும் வீணடித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் அது இயக்கத்தின் வளர்ச்சியாகவும் பெருமையாகவுமே கருதப்பட்டது.

சமாதான காலத்தில் புலத்திலிருந்து வந்த பலரும்கூட ஓமந்தைக்கு அப்பால் வடக்கே இன்னொரு தேசத்தை தாம் காண்பதாகப் புளகாங்கிதப்பட்டதை நானறிவேன்.

நான் இயக்கத்தில் இணைந்த காலத்திலிருந்தே மனம் விட்டுப் பேசக்கூடிய ஒரு நண்பியைப்போல என்னுடன் பழகினார். அவர் இயக்கத்தில் மூத்தவராகவும் பொறுப்பு கூடியவராகவும் இருந்தாலும்கூட, என்னைப் போன்ற பல மகளிர் பொறுப்பாளர்களுக்குப் புரிந்துணர்வு மிக்க ஒரு தளபதியாகவும் இருந்தார்.

வடமராட்சியிலுள்ள கப்பூது கிராமம் அவருடைய பிறப்பிடமாய் இருந்தது. ஆசாரமான இந்துப் பிராமணக் குடும்பத்தின் மூத்த மகளான அவர் 'குமுதினிப் படகு படுகொலை' சம்பவத்தால் ஏற்பட்ட மனப் பாதிப்பு காரணமாகவே இயக்கத்தில் இணைந்ததாகக் கூறுவார்.

தனது ஆரம்பச் செயற்பாடுகளைச் சுதந்திரப் பறவைகள் அமைப்பின் மூலம் தொடங்கிய அவர், கிளாலிப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் இரண்டாவது பயிற்சி முகாமில் தனது ஆயுதப் பயிற்சியைப் பெற்றிருந்தார்.

தனக்குக் கொடுக்கப்படும் வேலையை மிகவும் நேர்த்தியாகச் செய்து முடிக்க வேண்டும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.

இந்திய இராணுவ காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் மணலாற்றுக் காட்டுக்குள் மறைந்திருந்தபோது, களஞ்சியப் பொறுப்பு இவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் யாழ்ப்பாணக் கோட்டைத் தாக்குதல் தொடங்கி இறுதியில் 2009 புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் இவர் உயிரிழக்கும் வரையிலும் மகளிர் படையணி பங்குகொண்ட அனைத்துத் தாக்குதல்களிலும் முக்கியப் பங்கினை வகித்திருந்தார்.

ஆரம்பத்தில் மகளிர் படையணியின் சிறிய தாக்குதல் அணிகளுக்குப் பொறுப்பாகச் செயற்பட்டவர் படிப்படியாக

வளர்ந்து இயக்கத்தின் முதன்மையான கட்டளைத் தளபதிகளில் ஒருவராக உருவானார்.

1993இல் மகளிர் படையணியின் இரண்டாம் நிலைத் தளபதியாக இருந்தவர், 1995இன் பின்னர் மாலதி படையணியின் சிறப்புத் தளபதியாக நியமிக்கப்பட்டு இறுதிவரையிலும் செயற்பட்டு வந்தார்.

**இவரது உடன்பிறந்த தம்பியான விதுஷன் 1999இல் வவுனியா விளக்குவைத்தகுளம் பகுதியில் இராணுவத்துடனான சண்டையில் வீர மரணமடைந்தார்.** நேரடித் தாக்குதல் நடவடிக்கைகளில் பங்கு பெற்றும் சந்தர்ப்பங்கள் எனக்கு அதிகமாகக் கிடைக்காவிட்டாலும், போர்க்களத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் தளபதி விதுஷாவின் கட்டளை மையத்திற்குச் சென்று அவருடன் போர்க்கள நிலவரங்களைப் பற்றி அவ்வப்போது கலந்துரையாடுவேன்.

இறுதிப்போர்க் காலகட்டத்தில் தளபதி விதுஷா மிகுந்த மனக்குழப்பத்திற்கு உள்ளாகியிருந்ததை என்னால் உணர

முடிந்தது. 2007 காலப்பகுதியில் அவருடைய மாலதி படையணி மன்னார் முன்னணிக் களமுனையில் நிலைகொண்டிருந்தது.

மன்னார் பிரதேசத்தில் வேலைசெய்துகொண்டிருந்த அரசியல் போராளிகளைச் சந்திப்பதற்குச் செல்லும் ஒவ்வொரு தடவையும் அவரது கட்டளை மையத்திற்கும் சென்று வருவேன்.

போர்க்கள விடயங்கள் பற்றியும் மற்றும் மாலதி படையணியின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இயக்கத்தின் தலைவருடன் நேரடியாகப் பேசுகின்ற வாய்ப்பு அவருக்கிருந்தது.



**‘யுத்தக் களமுனையின் உண்மையான நிலவரங்களை, நடைமுறைப் பிரச்சனைகளைத் தலைவருக்கு ஒருவரும் முழுமையாகத் தெரியப்படுத்துவதில்லை‘** என்ற மனக்குறை அவரிடமிருந்தது.

தலைவருக்கு உண்மையான விடயங்களை, கள நிலவரங்களைத் தெரியப்படுத்த வேண்டும் என்ற மனப்பாங்கு கொண்டவரான தளபதி விதுஷா, தலைவரைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் களமுனையில் காணப்படும் பிரச்சனைகளை, போராளிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை அவரிடம் தெரியப்படுத்திவிடுவார்.

அதன் பின்னர் தலைவர் ஆண் கட்டளைத் தளபதிகளிடம் அந்தப் பிரச்சனைகள் பற்றிய விளக்கங்களைக் கேட்கும்போது, பல மூத்த தளபதிகளுக்கு அது மிகவும் சங்கடத்தை ஏற்படுத்துவது வழக்கம்.

“களமுனைகளில் ஏற்படும் பிரச்சனைகளை நாங்கள்தான் பார்த்துச் சரிப்படுத்த வேணும். விதுஷா, எல்லாப் பிரச்சனைகளையும் அண்ணைக்கு கொண்டு போய்ச் சொல்லி, ஏற்கனவே நிறைய பிரச்சனைகளோடு இருக்கிற அண்ணையை மேலும் டென்சன் படுத்தக் கூடாது” என ஆலோசனை சொல்லுகிற தோரணையில் குத்திக் காட்டிப் பேசுவார்கள்.

இப்படியான நிகழ்வுகளால் விதுஷா மிகுந்த மன உளைச்சலை அனுபவித்தார்.

பதினெட்டு வயதில் தனது ஆயுதப் போராட்ட வாழ்வைத் தொடங்கியவரான விதுஷா, இறுதிப்போரின் ஆரம்ப காலத்தில் நாற்பது வயதை நெருங்கியிருந்தார்.

பல யுத்த களங்களில், உடலிலே பல காயங்களைத் தாங்கிய அவருக்குத் தொடர்ச்சியான நீண்ட நெருக்கடி மிக்க போர்க்கள வாழ்வும் தினசரி சந்திக்கும் உயிரிழப்புகளும் முடிவில்லாது தொடரப்படும் யுத்தமும் நீண்டகாலப் போராளிகள் பலரைப் போலவே உள்ளூர ஒரு சலிப்புத் தன்மையை ஏற்படுத்தியிருந்தது.



சில சந்தர்ப்பங்களில் தளபதி விதுஷா மிகவும் விரக்தியான மனநிலையுடன் மனம் திறந்து பேசுவார். மன்னார் ஆண்டான்குளப் பகுதியில் அமைந்திருந்த அவருடைய தலைமையகத்தில் ஒருநாள் இருவரும்

பேசிக்கொண்டிருந்தபோது, “**இந்தச் சண்டையில நாங்கள் வெல்லுவம் எண்டு நீ நினைக்கிறியா**?” எனக் கேட்டார். நான் சற்று நேரம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

“**எங்களுக்கு மட்டும் ஏனடியப்பா இப்பிடி ஒரு வாழ்க்கை**? உலகம் எங்கேயோ போயிட்டுது, நாங்கள் மட்டும் காட்டுக்குள்ளேயும் சேத்துக்குள்ளேயும் செத்துக் கொண்டிருக்கிறம்”.

இலகுவில் பதில் கண்டுபிடிக்கப்பட முடியாத கேள்விகளுடன், இறுதிப்போரில், புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் விடுதலைப் புலிகள் கடைசியாக மேற்கொண்ட ஊடுருவித் தாக்குதலில் பங்கேற்று, வீர மரணமடைந்த அந்த வீரப் பெண் தளபதியின் உடலைக் கவனிக்க யாருமின்றித் தோல்வி கொத்தித் தின்றுகொண்டிருந்தது.

ஐம்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்த பல மூத்த ஆண் தளபதிகளும் மனச்சலிப்படைந்த நிலைமைகளுக்கே சென்றிருந்தனர்.

போர்க்களங்களில் ஏற்படும் அதிகமான மன அழுத்தங்களும், அவர்களுடைய சீரற்ற உணவுப் பழக்கங்களும் தொடர்ச்சியான அலைச்சல்களும் காரணமாக உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, முள்ளந்தண்டு பாதிப்பு என்பன போன்ற பல நிரந்தர நோய்களுக்கு உள்ளாகியிருந்தார்கள்.



விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பல வெற்றிகரமான தாக்குதல்களை **வழிநடத்தியிருந்த முன்னணித் தளபதி பிரிகேடியர் பால்ராஜ் நீரிழிவு** நோயால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் வேறு பல உடல் உபாதைகளும் சேர்ந்து 2008இல் எதிர்பாராத வகையில் மரணத்தை தழுவியிருந்தார்.

இயக்கத்தில் இரண்டாம் நிலைத் தளபதிகளின் வளர்ச்சி மிகவும் குறைவாகவே இருந்தது என்பதைவிட அறவே இருக்கவில்லை என்பதுதான் உண்மையானது.

மிகவும் திறமையான ஆண் பெண் போராளிகள் உயர்நிலைகளுக்குத் தகுதியானவர்களாக முன்னேறி வந்தபோதும் அவர்கள் குறுகிய காலத்திற்குள்ளாகவே போர்க்களத்தில் உயிரிழந்துபோன சம்பவங்களே அதிகமாயிருந்தன.

தலைவருடைய சிந்தனைக்கு அமைவாக இயக்கத்தில் பல நிர்வாக அலகுகளும், புதிய புதிய தாக்குதல் படையணிகளும் உருவாக்கப்பட்டிருந்தன.

ஆனால் அவற்றிற்குரிய ஆளணி பலம் போதிய அளவு இருக்கவில்லை. குறிப்பிட்ட அளவு தளபதிகளும் போராளிகளுமே பல வேலைகளைத் தமது தலைகளில் சுமந்துகொண்டிருந்தனர்.

இதனால் போதிய அளவு பயிற்சிகளையோ, மேலதிக தயார்படுத்தல்களையோ செய்யமுடியாத நிலையில் இயக்கத்தின் ஒட்டுமொத்தமான செயல்திறனும் குன்றத் தொடங்கியிருந்தது.

உண்மையான நிலைமை இப்படியிருக்கையில், கடந்த காலங்களில் புலிகள் ஈட்டிய யுத்த வெற்றிகளை அடிப்படையாகக் கொண்டு புலிகளின் இராணுவ பலம் பற்றிய பிம்பம் பெரும் பிரம்மாண்டத்துடன் உருவாக்கப்பட்டிருந்தது.

இவ்விடயத்தில் புலம்பெயர் மக்களின் நம்பிக்கை மிகவும் அதீதமாக இருந்தது. நவீன மின்னியல் ஊடகங்களின் உதவியுடன் பிரச்சாரப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் வெளிப்பார்வைக்குப் பிரமிப்பூட்டுவதாக அமைந்திருந்தபோதிலும், உண்மையான நிலையில் அது உள்ளே வெறும் கோரையாகிப் போயிருந்தது.

தலைவரின் இருப்பிடமான புதுக்குடியிருப்புவரை ஊடுருவி 'கேணல் சங்கரின்' வாகனம் மீது கிளைமோர் தாக்குதல் நடத்திய ஆழ ஊடுருவும் படையணி!



• ஆழ ஊடுருவும் படையணியினரால் புலிகளின் விமானப் படையணியின் சிறப்புத் தளபதியான தளபதி சங்கரின் வாகனம் கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளாகி முகம் சிதைந்து, நாடிப்பகுதி உடைந்து தொங்கிக்கொண்டிருந்தது.

• 2007 செப்டம்பரில் இலங்கைப் படையினரால் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை பெரும் நிலப் பிரதேசங்களை ஆக்கிரமித்தபடி வேகமாக முன்னேறி வந்து கொண்டிருந்தது.

• தலைவரைப் பொறுத்தவரை தமிழ்ச்செல்வனின் இழப்பு ஒரு பேரிழப்பாக இருந்தது. தலைவரின் எந்தக் கருத்தையும் மறுகேள்வி கேட்காமல் செயற்படுத்தும் உயர் விசுவாசம் கொண்ட போராளியாக அவர் இருந்தார்.



**தமிழ் செல்வன்**

2007ஆம் ஆண்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனும் அவரின் உதவியாளர்களுமாக ஏழு போராளிகள் இலங்கை வான்படையினரின் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தார்கள்.

தலைவரைப் பொறுத்தவரை தமிழ்ச்செல்வனின் இழப்பு ஒரு பேரிழப்பாக இருந்தது. தலைவரின் எந்தக் கருத்தையும் மறுகேள்வி கேட்காமல் செயற்படுத்தும் உயர் விசுவாசம் கொண்ட போராளியாக அவர் இருந்தார்.

தலைவருக்குரிய பல தனிப்பட்ட வேலைகளையும் அவரே பொறுப்பாக செய்து கொடுப்பது வழக்கம். 1993இலிருந்து அரசியல் துறை நிர்வாகத்தில் தமிழ்ச்செல்வனின் பொறுப்பிலே நான் பணியாற்றியிருந்தேன்.

உடன்பிறந்த சகோதரனின் இழப்பைப்போல அவரது இழப்பு என்னை மிகவும் பாதித்திருந்தது. எந்தவொரு வேலைத்திட்டத்தை எமக்கு விளங்கப்படுத்தும்போதும் "**அண்ணை இப்பிடித்தான் எதிர்பார்க்கிறார்.**

நாங்கள் அதற்கேற்ற விதமாகத்தான் செயற்பட வேண்டும்" என்று வார்த்தைக்கு வார்த்தை தலைவரையே குறிப்பிடுவார். குறிபார்த்துச் சுடுவதில் மிகவும் திறமைசாலியான தமிழ்ச்செல்வன் தமிழ்நாட்டில் ஆயுதப் பயிற்சியெடுத்துத்

தலைவரின் மெய்ப்பாதுகாவலர் அணியில் செயற்பட்டிருந்தார்.



1993இல் அதுவரை மாத்தையாவின் பொறுப்பிலிருந்த அரசியல் பிரிவு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளராகத் தனது இறுதிக் காலம் வரை செயற்பட்டிருந்தார்.

பெண் போராளிகள் தொடர்பான அணுகுமுறையிலும் இவர் தலைவரின் கருத்துக்களை அப்படியே பின்பற்றினார் என்பதை நானறிவேன். மிகவும் அனுபவம் குறைந்த

போராளியாக இருந்த என்னை ஒரு பொறுப்பாளராக வளர்த்தெடுத்தவர் தமிழ்ச்செல்வன்.
ஒருவரிடம் காணப்படும் திறமையைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி அவர் மேலும் வளர்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் மனப்பாங்குடையவராக இருந்தார். வேலைகளை வழங்குவதில் ஆண்கள் பெண்கள் என வேறுபாடு பார்த்துக்கொண்டிருக்க மாட்டார். பல நெருக்கடியான வேலைத் திட்டங்களில் ஆண் போராளிகளுக்கு நிகராகப் பெண் போராளிகளையும் ஈடுபடுத்துவார்.

1994ஆம் ஆண்டு கொக்குவில் லிங்கம் முகாமில் கல்விக் குழு பிரிவில் நான் செயற்பட்டுக் கொண்டிருந்தேன். திடீரென என்னைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அழைப்பதாகக் கூறப்பட்டது. பல பெரிய பொறுப்பாளர்கள் அங்கு வந்து அவரைச் சந்தித்துச் செல்வது எனக்குத் தெரியும். நான் ஒரு சாதாரண போராளி.

எதற்காக என்னை அழைக்கிறார் என மிகுந்த பயத்துடன் சென்றேன்.

“**இங்க வாங்கோ தங்கச்சி.** நான் உங்களுக்கு ஒரு முக்கியமான வேலை தரப் போறன், பருத்தித்துறை பிரதேசத்திற்குப் பரப்புரை வேலைகளுக்குப் பொறுப்பாக உங்களை நியமித்திருக்கிறன். நீங்கள்தான் பொறுப்பாக நிண்டு செய்யவேணும். உங்களுக்கான முழு ஒத்துழைப்பையும் நான் செய்து தாறன்.

உடனடியாக வேலையைத் தொடங்க வேணும்” என செய்ய வேண்டிய வேலைகளை விளங்கப்படுத்தி அனுப்பி வைத்தார். முதன்முதலாக ஆண், பெண் போராளிகளை இணைத்து அந்த வேலைத் திட்டத்தை வழிநடத்தியமை எனக்குப் புதியதும், வளர்ச்சிக்குரியதுமான பல அனுபவங்களைத் தந்திருந்தது.

1999இல் நான் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர், தன்னால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒருவர்தானே என்கிற அலட்சிய மனப்பாங்கின்றி எனது பொறுப்புக்குரிய மதிப்போடு என்னை நடாத்தினார். அதனால் ஏனைய ஆண் பொறுப்பாளர்களுக்கிடையே நான் கொஞ்சமாவது தலையெடுத்து வளரக்கூடியதாக இருந்தது.

வேலைத் திட்டம் காரணமாகப் பல பொறுப்பாளர்களுடன் முரண்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தபோது, நடுநிலையோடு தனது கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். அவரது திடீர் மறைவுக்குப்பின் காவல்துறை பொறுப்பாளராக இருந்த திரு. நடேசன், அரசியல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இவரும் தலைவருக்கு மிகவும் நம்பிக்கைக்குரியவராக இருந்தார்.



**2007 செப்டம்பரில் இலங்கைப் படையினரால் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை பெரும் நிலப் பிரதேசங்களை ஆக்கிரமித்தபடி வேகமாக முன்னேறி வந்து கொண்டிருந்தது.**

முன்னைய காலங்களைப் போலன்றி, இராணுவத்தினர் தந்திரமான ஊடுருவித் தாக்குதல்கள் மூலமும் எமது கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களை வேகமாகக் கைப்பற்றினார்கள்.

இராணுவத்தினரின் 'ஜெயசிக்குறு' படையெடுப்புக் காலப்பகுதியில் புலிகளுக்குச் சாதகமாக இருந்த வன்னிக் காடுகளின் அனைத்துச் சூட்சுமங்களையும் இராணுவத்தினர் இப்போது நன்றாக அறிந்து உள்வாங்கியிருந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்காக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முன்னேற்ற நடவடிக்கைகள் ஒருபுறம் நடந்து கொண்டிருந்த அதேவேளை மறுபுறத்தில், புலிகளுடைய பின்னணிச் செயற்பாடுகளை முடக்கும் திட்டத்துடன் பல கிளைமோர் தாக்குதல்களும் வான் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

புலிகளின் களமுனைத் தளபதிகள், பொறுப்பாளர்கள் பயணிப்பதற்கும் போராளிகளின் உதவி அணிகள், கனரக ஆயுதங்கள் நகர்த்தப்படுவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற பாதைகளை இலக்கு வைத்து இராணுவத்தினரின் ஆழ

ஊடுருவும் அணியினர் கிளைமோர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

முன்னணிக் காவலரண்களுக்குப் பின்புறமாக அமைக்கப்படும் நகர்வுப் பாதைகளிலும் இராணுவத்தினரின் கிளைமோர் தாக்குதல்கள் பலமாக இருந்தன. சில சந்தர்ப்பங்களில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்ட

அதே இலக்கின் மீது கனரக ஆயுதங்களினாலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஏ9 வீதியில் தளபதி பால்ராஜ் மீது நடத்தப்பட்ட அத்தகைய தாக்குதல் நடவடிக்கை ஒன்றிலிருந்து அவர் சாதுர்யமாக உயிர் தப்பியிருந்தார். நான் முதன்முதலாகக் கண்ணெதிரே கண்ட ஒரு கிளைமோர் தாக்குதல் சம்பவம் புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் செல்லும் வீதியில் நடைபெற்றிருந்தது.



**ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்திருந்த பெண் போராளிகளின் முகாமொன்றுக்கு நானும் இன்னொரு பெண் பொறுப்பாளரும் 'எம்டி90' மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தோம்.**

கிறவல் எழும்பிக் கிடந்த மேடு பள்ளம் நிறைந்த வீதியில் எமது மண்ணெண்ணெய் மோட்டார் சைக்கிள், கடலில் போகும் படகுபோல எழுவதும் விழுவதுமாகப் போய்க்கொண்டிருந்தது. நேரம் காலை எட்டு மணி கடந்திருக்கும். வீதியில் சன நடமாட்டமே இருக்கவில்லை.

இருவரும் மோட்டார் சைக்கிள் என்ஜின் சத்தத்திற்கும் மேலாக உரத்துப் பேசியபடி போய்க்கொண்டிருந்தோம். பின் இருக்கையில் அமர்ந்திருந்த நான், எமக்குப் பின்புறமாக எழுந்த பேரதிர்வினால் வீதிக்கரையில் தூக்கியெறியப்பட்டேன். அங்கே ஏதோ பயங்கரமான அசம்பாவிதம் நடந்திருக்க வேண்டும் என எண்ணியபடி எமது மோட்டார் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு அந்த இடத்தை நோக்கிச் சென்றோம்.

**அங்கே தலைவருடைய மெய்ப்பாதுகாவலர்கள் பதற்றமான நிலையில் வேகமான தேடுதல் நடவடிக்கையைச் செய்துகொண்டிருந்தனர்.**

எம்மை முன்னே செல்லவிடாமல் தடுத்து நிறுத்தினார்கள். எமக்கு மனது படபடக்கத் தொடங்கியது.

தலைவருடைய முகாம் அமைந்திருந்த சிறு உள்வீதியை அண்மித்த இடமாக அது இருந்தது. எமக்குத் தெரிந்த ஒரு போராளியிடம் என்ன நடந்தது எனக் கேட்டபோது, நேரடியாகப் போய்ப் பார்க்கும்படி கூறினார்.

அங்கே ஒரு வாகனம் கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளாகி அதன் முன்புறம் முற்றாகச் சிதைந்து போயிருந்தது. சற்றுப் பருமனான தோற்றம்கொண்ட ஒரு உயிரற்ற உடல் வாகனத்துடன் சாய்த்து இருத்தி வைக்கப்பட்டிருந்தது.

முகம் சிதைந்து, நாடிப்பகுதி உடைந்து தொங்கிக்கொண்டிருந்தது. அந்த உடல் அமைப்பையும் வாகனத்தின் அமைப்பையும் பார்த்து அவர் யாரென்பதை அடையாளம் கண்டுகொண்ட போது தாங்க முடியாத அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்றோம்.

விடுதலைப் புலிகளின் விமானப் படையணியின் சிறப்புத் தளபதியான தளபதி சங்கரப்பா அந்தத் தாக்குதலில் உயிரிழந்து போயிருந்தார்.



விமானப் பொறியியலாளரான இவர் லண்டனிலிருந்து வந்து இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவர். 1987இல் சயனைட் உட்கொண்டு உயிர் நீத்த புலிகள் இயக்கத்தின் தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு பேரில் ஒருவரான கரன், சங்கரப்பாவின் இளைய சகோதரன் ஆவார்.

கேணல் சங்கர் அவர்களுடைய கடுமையான உழைப்பினால்தான் புலிகள் இயக்கத்தில் ஒரு வான்படை உருவாகியிருந்தது. அம்பகாமம் காட்டுப் பகுதி இவருடைய முழுமையான கட்டுப்பாட்டில் இருந்தது.

இரணைமடுவை அண்டிய அதே காட்டுப் பகுதியில் ஒரு விமான நிலையத்தையும் உருவாக்கியிருந்தார்.

அடர்ந்த காட்டுப் பகுதியினூடாகத் திசையறிக் கருவியின் உதவியுடன் நகர்தல், உச்ச இரகசியம் பாதுகாத்தல் என்பது போன்ற விடயங்களைப் புலிகள் இயக்கத்தின் ஆரம்பகாலப் போராளிகளுக்குக் கற்பித்தவர் இவர்தான்.



**வான்படை தளபதி கேணல் சங்கர்**

**ஏனைய தளபதிகளைப் போல் அல்லாது தலைவரிடம் தனது கருத்துக்களை நெருக்கமாகப் பகிர்ந்துகொள்ளக்கூடியவர்.**

பல தளபதிகளுக்கும் பொறுப்பாளர்களுக்கும் நல்ல ஆலோசகராக இருந்தவர். என்னுடன் மிக அன்பாக உரையாடுவார். என்னுடைய மேடைப் பேச்சுக்களைக் கேட்டுப் பலமுறை என்னைப் பாராட்டியிருக்கிறார்; நிறைய புத்தகங்களை வாசிக்கும்படி ஆலோசனை கூறியிருக்கிறார்.

'லெனின்கிராட், ஸ்டாலின்கிராட்' போன்ற உலகப்போர் வரலாறு பற்றிய புத்தகங்களை வாசிக்கும்படி கொடுத்துவிட்டு, போராளிகளைக் காணும் இடங்களில் கேள்விகள் கேட்பதால் இவரைக் கண்டதும் பல போராளிகள் சத்தமில்லாமல் நழுவிக்கொண்டு ஓடிவிடுவார்கள்.

இவருடைய இழப்பு இயக்கத்திற்கும், போராட்டத்திற்கும் ஒரு பேரிழப்பாக இருந்தது. இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரின் கைகளில் புலிகளின் மிக முக்கியமான இடங்கள் பற்றிய அனைத்துத் தரவுகளும் மிகத் துல்லியமாக இருக்கின்றன என்கிற விடயம் புலிகளுக்கு வெளிப்படத் தொடங்கியது.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முன்னணிக் களமுனையிலிருந்து எத்தனையோ கிலோமீற்றர்

உட்புறமாகப் புலிகளின் உயர்பாதுகாப்பு வளையமாக இருந்த புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் திட்டமிட்ட முறையில் நடத்தப்பட்ட இத்தகைய மறைமுகத் தாக்குதல் நடவடிக்கைகளிலிருந்தும், சில முக்கியமான இடங்களில் பொருத்தப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட கிளைமோர் குண்டுகளை வைத்தும் இயக்கத்தால் இதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது.

மன்னார் பகுதியில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, புதுக்குடியிருப்பு வல்லிபுனம் காட்டுப் பகுதியில் ஆழ ஊடுருவும் அணியினரின் தடயங்களையும் புலிகள் கண்டெடுத்திருந்தனர்.

அன்றைய நிலையில் அந்த விடயம் இயக்கத்தின் உள்வட்டத்தில் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இறுதிப்போரின் பிரதான இலக்காக இயக்கத்தின் தலைவரே குறி வைக்கப்பட்டிருந்தார் என்பது புலிகளால் புரிந்துகொள்ளப்பட்டது.

எனவே சமாதான காலத்தில் ஓரளவு வெளிப்படையாக இடம்பெற்ற தலைவரின் சந்திப்புகள் இறுதியுத்தம் நடந்துகொண்டிருந்தபோது முற்றாக நிறுத்தப்பட்ட நிலையில் முக்கியத் தளபதிகளுடன் மாத்திரம் சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளை அவருடைய பாதுகாப்பும் அணிகளும் பலப்படுத்தப்பட்டிருந்தன.

ஆழ ஊடுருவும் அணியினரின் இத்தகைய அச்சுறுத்தல் நடவடிக்கைகளால் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களின் உள்ளகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் அதிக அளவு கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இயக்கத்தின் ஆளணிப் பற்றாக்குறை மிகமோசமாக இருந்த காரணத்தால், உள்ளகப் பாதுகாப்புப் பணிகளுக்கு அதிக அளவு பொதுமக்கள் பயன்படுத்தப்பட்டனர். புலிகளின் உள்ளகப் புலனாய்வுப் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டன. இரவு நேரங்களில் வீதிக் கண்காணிப்பு அணிகள் நிறுத்தப்பட்டுப்பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

புலிகளின் விசேட அணிகள் அடர்ந்த காட்டுப் பகுதியில் இரகசிய நிலைகளை அமைத்துக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஆங்காங்கு ஆழ ஊடுருவும் அணியினரின் தடயங்கள் கண்டெடுக்கப்பட்டதுடன் மோதல்களும் இடம்பெற்றன. ஆனாலும் ஆழ ஊடுருவும் அணியின் நகர்வுகளைப் புலிகளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஏ9 நெடுஞ்சாலை உட்பட அதிகம் பயன்பாட்டிலிருந்த வன்னியின் பிரதான வீதிகளின் இருபுறமும் ஐம்பது மீற்றர் அகலத்தில் காடுகள் அழிக்கப்பட்டு நிலம் சமப்படுத்தப்பட்டு, மக்கள் படையணியினரின் காவலரண்கள் வீதிகள் நீளத்திற்கும் அமைக்கப்பட்டன.

முறிகண்டியிலிருந்து இரணைமடுவரை மக்கள்படையில் சேர்ந்த பெண்களும் காவலரண்களை அமைத்திருந்தார்கள். போராளிகளே இதற்குப் பொறுப்பாகச் செயற்பட்டார்கள். வன்னியின் காடுகளைப் பற்றிய அனுபவம் கொண்ட ஒரு தளபதி இந்த உள்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.

எப்படியிருந்தபோதும் இயக்கம் எதிர்பார்க்கும் இடங்களைத் தவிர்த்து வேறு முக்கியமான இடங்களில் ஆழ ஊடுருவும் அணியினர் தமது கைவரிசையைக் காண்பித்துப் பல அதிர்ச்சி வைத்தியங்களைச் செய்தார்கள்.

இறுதிப்போரின் கடைசிக் கட்டம்வரை ஆழ ஊடுருவும் அணியினரின் நடவடிக்கைகளைப் புலிகளால் தடுத்துநிறுத்த முடியவில்லை.

“நல்லா உள்ளுக்கு வரவிட்டிட்டுத்தான் அடிக்கப்போறாங்கள்” என்று எதிர்பார்த்திருந்த புலம்பெயர்ந்த தமிழ் மக்கள்!! : என்னட்ட ஒன்டுமில்லை என கையை விரித்து காட்டிய தலைவர்!



வன்னியின் காடுகளைப் பற்றிய அனுபவம் கொண்ட ஒரு தளபதி இந்த உள்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார். எப்படியிருந்தபோதும் இயக்கம் எதிர்பார்க்கும் இடங்களைத் தவிர்த்து வேறு முக்கியமான இடங்களில் ஆழ ஊடுருவும் அணியினர் தமது கைவரிசையைக் காண்பித்துப் பல அதிர்ச்சி வைத்தியங்களைச் செய்தார்கள்.

இறுதிப்போரின் கடைசிக் கட்டம்வரை ஆழ ஊடுருவும் அணியினரின் நடவடிக்கைகளைப் புலிகளால் தடுத்துநிறுத்த முடியவில்லை.

இதுபோலவே இலங்கை வான் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகளால் புலிகளது பல செயற்பாடுகள் பாதிப்படைந்தன. அதிகாலையிலிருந்தே வேவு விமானங்கள் வானத்தில் பறக்கத் தொடங்கிவிடும்.

**'றிமோட் கொன்ட்ரோல்' மூலம் இயக்கப்படும் கண்ணுக்குப் புலப்படாத அந்த விமானத்தை 'வண்டு' எனப் போராளிகள் அழைப்பது வழக்கம்.**

இயக்கத் தளபதிகளின் பிரதான முகாம்கள், தாக்குதலணிகளின் பயிற்சித் தளங்கள், அடிப்படைப் பயிற்சி முகாம்கள், பின்னணி நிர்வாக மையங்கள் என்பவற்றின் மீது குறிவைத்து இலங்கை வான் படையினர் பல துல்லியமான தாக்குதல்களை நடத்தினர்.

அடர்ந்த காடுகளுக்குள்ளே உச்சக்கட்ட உருமறைப்புகளுடன் இருக்கும் இரகசிய முகாம்களின் மீதுகூட மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் இயக்கத்திற்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஒருதடவை வல்லிபுனம் வீதியில் நானும் இன்னொரு போராளியும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, வானத்தில் பேரிரைச்சலுடன் தோன்றிய விமானங்கள் வீசிய குண்டின் அதிர்வுகளால் தூக்கியெறியப்பட்டோம்.

வல்லிபுனம் வீதிக்கரையின் சிறு காட்டுப் பகுதியில் மிகுந்த உருமறைப்புடன் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின்

தலைமைச் செயலகம் விமானத்திலிருந்து வீசப்பட்டிருந்த குண்டுகளினால் பிய்த்தெறியப்பட்டிருந்தது.

தலைவரால் மேற்கொள்ளப்படும் நிர்வாக விடயங்கள் அனைத்தையும் தலைமைச் செயலர் மூலமாக ஒருங்கிணைக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதான நிர்வாக மையமாக அது அமைந்திருந்தது.

எண்ணிக் கணக்கிட முடியாத பல விமானத் தாக்குதல்களிலும் கிளைமோர் தாக்குதல்களிலும் சிக்குண்ட அனுபவங்கள் எனக்கு நிறைய உண்டு.

**ஆனாலும் இரத்தக் காயமோ மரணமோ எனக்கு வந்து சேராமலிருந்தது வெறும் அதிர்ஷ்டமேயன்றி வேறேதுமில்லை.**

சில சந்தர்ப்பங்களில் நான் அணிந்திருந்த ஆடைகளில் கிழிசல்கள் ஏற்பட்டதுடன், மோட்டார் சைக்கிள்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. முற்றாகக் காது கேளாத நிலையிலும் பல நாட்கள் இருந்திருக்கிறேன்.

முழங்காலில் அடிபட விழுந்த காரணத்தால் எனது இடது முழங்காலில் ஏற்பட்ட உள் தாக்கம் நிரந்தரமாகவே தங்கிப்போனது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் பின் தலையில் அடிபட்ட காரணத்தால் ஒரு நாள் முழுவதும் சுய நினைவின்றிக் கிடந்தேன்.

அப்போது நான் உளறலாகக் கதைத்துப் பிதற்றியதாக எனது நண்பிகள் கேலி பண்ணுவார்கள்.

எனக்காக வந்த கனரகத் துப்பாக்கி ரவைகளும் எறிகணைச் சிதறல்களும் மயிரிழையில் தவறிப் போயிருக்கின்றன.

அவற்றை நான் கைகளில் எடுத்து அவற்றின் உஷ்ணத்தை அனுபவித்திருக்கிறேன். மனப் பாதிப்புகள் ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களில் எதற்காக இப்படியொரு கடின வாழ்வு ‘போனஸ்’ ஆக ஏன் நீண்டுகொண்டே போகிறது எனச் சலிப்புடன் மனம் வருந்தியிருக்கிறேன்.

2007இன் இறுதிப் பகுதியில் ஒருநாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் அவர்களுடைய கூட்டத்திற்கான அழைப்பு அறிவித்தல் எனக்குத் தரப்பட்டிருந்தது.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் அமைந்திருந்த சமாதானச் செயலகத்தில் கூட்டம் நடைபெறவுள்ளதாகவே அறிவிக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட நேரத்திற்கு ஓரிரு நிமிடங்கள் முன்னதாக நான் மாத்திரம் தனியாக மோட்டார் சைக்கிளில் சென்றிருந்தேன்.

அந்த வளாகத்தின் உள்ளே எந்த ஆள் நடமாட்டமும் தென்படவில்லை. என்ன செய்வது என நான் யோசித்துக்கொண்டிருந்த கணத்தில் சுனாமி அலை வானத்திலிருந்து வருவதுபோல இரைச்சல் எழுந்தது.

அந்த இடம் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகப்போவது புரிந்தவுடன், அவசரமாக வெளியேறிவிட நினைத்தாலும். மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியேறுவதற்கான நேர அவகாசமிருக்கவில்லை.

அந்த வீதி முழுவதும் எமது இயக்க முகாம்களே நிறைந்து காணப்பட்டதால் வெளியே ஓடிச் செல்வதும் சரியெனப் படவில்லை. எப்படியும் இன்றுதான் எனது மரணம் நிகழப்போகிறது என நினைத்துக்கொண்டேன்.

குண்டுகளை இறக்குவதற்காக விமானம் தாழப் பறந்தபோது ஒரு சிறிய மரத்திற்குக் கீழே நிலமட்டத்தோடு படுத்துக் கிடந்தேன். ‘கடவுளே, உடலுறுப்புக்களை இழந்து காயப்படாமல் உடனே செத்துப் போகவேணும்’ என மனதுக்குள் வேண்டிக்கொண்டேன்.

சமாதானச் செயலகத்தின் ஒரு பகுதிக் கட்டடம் சிதிலமாய் நொறுங்கி விழுந்தது. கண்ணாடித் துண்டுகளும் கற்களும் சிதறிப் பறந்தன. கந்தக மணம் நிறைந்த புகைமண்டலம் அந்த இடத்தை மூடிக்கொண்டிருந்தது.

மெதுவாகக் கண்ணைத் திறந்து என்னை நானே தடவிப் பார்த்தேன். கை கால்களை ஆட்டி எனக்கு ஏதாவது காயம்பட்டிருக்கிறதா எனப் பார்த்தேன்; எதுவு மில்லை.

எனது மோட்டார் சைக்கிளில் ஒருசில சிதறல்கள் மட்டுமே பட்டிருந்தன. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் இறுதி நேரத்தில் இடமாற்றம் செய்யப்பட்டதையும், தவறுதலாக எனக்கு அது தாமதமாக அறிவிக்கப்பட்டிருந்ததையும் பின்னர்தான் அறிந்துகொண்டேன்.

இயக்கத்தின் பெரும்பாலான முக்கியத் தளங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் வான் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தன.

கடற்புலித் தளங்களை நெருங்கிச் செல்ல முடியாத அளவுக்கு வான் தாக்குதல் அச்சுறுத்திக் கொண்டிருந்தது.

விசுவமடு பகுதியில் அமைந்திருந்த மாலதி படையணியின் நிர்வாகச் செயலகம் விமானத் தாக்குதலில் முற்றாக அழிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அதே பிரதேசத்தில் தலைவருடைய சந்திப்புகளுக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன்

அமைக்கப்பட்டிருந்த ஒரு வீடு மாலதி படையணிக்குரிய நிர்வாகச் செயலகமாக வழங்கப்பட்டிருந்தது.

அங்கே தளபதி விதுஷா என்னையும் வேறு சில பொறுப்பாளர்களையும் அவசரமாக அழைத்துக் கதைத்துக்கொண்டிருந்துவிட்டுப் புறப்பட்டார்.

அடுத்த அதிகாலை நேரத்தில் அந்த வீடும் துல்லியமாகத் தாக்கப்பட்டது. விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் தற்பாதுகாப்புப் பயிற்சிகள், மக்கள் படை கட்டுமானப் பயிற்சிகள் போன்றவற்றின் ஒரு கட்டமாக மாணவர்களுக்கான பயிற்சிகளும் நடத்தப்பட்டன.



புதுக்குடியிருப்பு வல்லிபுனம் செஞ்சோலை வளாகத்தில்

நூற்றுக்கும் அதிகமான மாணவிகளுக்குத் தற்காப்பு மற்றும் போர்க்கால முதலுதவிப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது அந்த இடம் விமானத் தாக்குதலுக்குள்ளாகியது.

அத்தாக்குதலில் ஐம்பதிற்கும் அதிகமான உயர்தர வகுப்பில் படித்த பள்ளி மாணவிகள் உயிரிழந்தனர். பலர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார்கள்.

**மாணவர்களுடைய பாதுகாப்பைப் பற்றிய போதிய திட்டமிடல்களோ முன்னேற்பாடுகளோ இல்லாமல், அவசர கதியில் இயக்கம் முன்னெடுத்த மக்கள் படை பயிற்சிகளால் ஏற்பட்ட அந்த அவலம் மிகவும் கொடூரமானது.**

எத்தனையோ கனவுகளுடன் தமது மடிகளுக்குள் பொத்தி வளர்த்த பிள்ளைகளை இழந்த பெற்றோர் துடித்த துடிப்பு இதயத்தையே கிழித்துப்போட்ட துயரத்தின் உச்சமாகும்.

களமுனைகளில் நிலவிய ஆளணி பற்றாக்குறை காரணமாகப் புலிகள் இயக்கத்தின் முன்னணி

காவலரண்களுக்கிடையே நீண்ட இடைவெளிகள் காணப்பட்டன.

ஆபத்து குறைந்ததாகக் கருதப்பட்ட சில பகுதிகளில் முன்னணி காவலரண்களில் போராளிகள் நிறுத்தப்படாமல் ரோந்து நடவடிக்கைகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் இராணுவத்தினர் சில இடங்களில் இரகசிய நகர்வுகளைச் செய்து பிரதேசங்களைக் கைப்பற்றினார்கள்.

மன்னார் பிரதேசத்தில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே சந்தர்ப்பத்தில், வேறு சில சிறப்புத் தாக்குதல் நடவடிக்கைகளும் சிறப்புக் கரும்புலி அணிகளால் முன்னெடுக்கப்பட்டன.



**அனுராதபுரம் விமான நிலையத் தாக்குதலில் பங்கு பற்றிய சிறப்பு கரும்புலிகள்**

அனுராதபுரம் விமான நிலையத் தாக்குதல் மற்றும் வவுனியா இராணுவ தளம் மீதான ஆட்லெறித் தாக்குதல் என்பது போன்ற பல தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

முன்னைய காலங்களைப் போலவே இத்தகைய சிறப்புத் தாக்குதல் நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமான இராணுவ நடவடிக்கைகளின் பின்னணிப் பலத்தைச் சிதறடிக்கும் எனக் கருதப்பட்டது.

ஆனால் இராணுவம் மிக வேகமாகத் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு அடுத்தகட்ட தயார்படுத்தல் நடவடிக்கைகளில் இறங்கத் தொடங்கியது.

அனுராதபுரம் விமான நிலையத் தாக்குதலுக்காக இயக்கம் உச்சக்கட்ட தயார்படுத்தல்களைச் செய்து திறமையான கரும்புலிகளையும் பயன்படுத்தியது.



**இயக்கம் எதிர்பார்த்த வகையில் வான்படையினருக்கு இழப்புக்களும் ஏற்பட்டிருந்தன.** ஆனாலும் அடுத்த வாரத்துக்குள்ளாகவே பல புதிய ரக விமானங்களை இலங்கை அரசு கொள்முதல் செய்து தனது வான்படையின் பலத்தை அதிகரித்திருந்தது.

இறுதிக் கட்டப் போரில் இயக்கத்தின் திட்டங்கள் எல்லாமே தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்தன.

அதேவேளை தொடர்ந்துகொண்டிருந்த இராணுவத்தினரின் வான் மற்றும் தரைத் தாக்குதல்கள் காரணமாகப் புலிகளின்

தாக்குதலணிகளை ஒன்றுசேர்த்துப் பாரிய அளவில் ஒரு சிறப்புத் தாக்குதல் திட்டத்தை நடத்த முடியாத நிலைமை இயக்கத்திற்கு ஏற்பட்டது.

கடலிலும் தரையிலும் அப்படியான சிறப்பு நடவடிக்கைகளுக்காகச் சில பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டிருந்தபோதும், தொடர்ந்துகொண்டிருந்த முன்னணிக் காவலரண் சண்டைகளுக்கே அந்த அணிகளையும் அவசரமாகப் பயன்படுத்த வேண்டியேற்பட்டது.

2008 காலப் பகுதியில் கொழும்புத் துறைமுகத்தில் பாரிய கரும்புலித் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை இயக்கம் மேற்கொள்வதற்கான திட்டமிடல்களைச் செய்திருந்தது. இதற்கான வேவுகள் பார்க்கப்பட்டுக் கரும்புலிப் போராளிகளும் அனுப்பப்பட்டிருந்தனர்.

ஆனால் அந்தத் தாக்குதல்கள் இயக்கம் எதிர்பார்த்தபடி வெற்றியளிக்கவில்லை. கரும்புலிகளுக்குரிய தாக்குதல்

இலக்குகள் கிடைக்காத காரணத்தால் அவர்கள் வன்னிக்குத் திரும்ப வேண்டியேற்பட்டது.

அக்கரும்புலிப் போராளிகள் கடற்புலித் தளபதி சூசையால் கடுமையான விசாரணைக்குட்படுத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்ட சம்பவமும் நடைபெற்றது.

இதில் பெண் கரும்புலிப் போராளிகளும் உள்ளடங்கியிருந்தனர். சமாதானத்துக்குப் பின்னரான இறுதிப் போர்க் காலங்களில் இயக்கம் இத்தகைய பல நிலைகுலைவுகளைச் சந்திக்கத் தொடங்கியிருந்தது.

முழங்காவில் பகுதியில் பாரிய மண் அரண் அமைத்து இராணுவத்தினரின் முன் வருகையைத் தடுத்து நிறுத்தும் தாக்குதல் உத்திகள் கையாளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து அக்கராயன் வன்னேரிப் பகுதியிலும் இப்படியான மண் அரண்கள் அமைக்கப்பட்டன. பிரதேச ரீதியாக அணிதிரட்டப்பட்ட மக்கள் கட்டாயச் சேவையாக இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

அந்த இடங்களை நோக்கி நடத்தப்பட்ட இராணுவத்தினரின் தாக்குதல்களில் பல உயிரிழப்புகளும், படுகாயங்களும், அங்கவீனங்களும் ஏற்பட்டன.

தமது குடும்பங்கள் இடம்பெயர்ந்து போகவேண்டியிருந்த சூழ்நிலைகளில் குடும்பஸ்தர்களான ஆண்கள் இயக்கத்தின் எல்லைப் படைகளிலும் வேறு களமுனை நடவடிக்கைகளிலும் செயற்படுவதற்கு முன்வராத தன்மை காணப்பட்டது.

இயக்கம் எல்லைப் படையினருக்கு முற்கூட்டிய சம்பளத்தை வழங்கியபோதிலும் அவர்கள் களமுனைகளுக்குச் செல்லத் தயங்கினார்கள்.

இதனால் இயக்கம் பலவந்தமான முறையில் அவர்களைக் கட்டாயச் சேவையில் ஈடுபடுத்தியது.



2008

**ஒக்டோபர் மாதமளவில் அக்கராயன் பகுதி இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது.**

இடப்பெயர்வும் பொருளாதர நெருக்கடியும் திணிக்கப்பட்ட போரும் உயிரச்சமும் மக்களைப் பெரிதும் வாட்டி வதைத்தன. இறுதிக்கட்டப் போர் நடந்துகொண்டிருந்த நாட்களில் மக்களின் நன்மைகளைப் பற்றி இயக்கம் கிஞ்சித்தும் சிந்தித்து நடக்கவில்லை.

கண்ணில் காண்பவர்களையெல்லாம் களமுனைக்குச் சாய்த்துச் செல்பவர்களாக அரசியல்துறைப் போராளிகள் பயன்படுத்தப்பட்டார்கள்.

2008 நவம்பர் 23ஆம் திகதி கிளிநொச்சி மீதான தாக்குதல்களை இராணுவப் படையினர் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். 2009 ஜனவரி 02இல் கிளிநொச்சி நகரமும் அதை அண்மித்த பகுதிகளும் முழுவதுமாக இராணுவத்தினரிடம் வீழ்ந்தது.

இராணுவத்தைப் புலிகளின் பிரதேசத்திற்குள் நன்றாக உள்நுழையவிட்ட பின்னர் அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கான திட்டம் தலைவரிடம் உள்ளது என்ற நம்பிக்கை தளபதிகள், போராளிகள் மட்டத்தில் மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கும் இருந்தது.

“**நல்லா உள்ளுக்கு வரவிட்டிட்டுத்தான் அடிக்கப்போறாங்கள்**” என்ற எதிர்பார்ப்பு புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமும் பரவியிருந்த நிலையில், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனுடைய மெய்ப்பாதுகாவலனாக இருந்து, அவருடைய மரணத்தின் பின்னர், ஒரு திறமை மிக்க தாக்குதல் போராளியாக உருவாகியிருந்த ஈழப்பிரியன் கிளிநொச்சியில் என்னை

இறுதியாகச் சந்தித்தபோது தலைவர் தன்னிடம் குறிப்பிட்ட ஒரு விடயத்தை எனக்குச் சொன்னார்:




**“எல்லாரும் என்னுடைய கையிலதான் எல்லாம் இருக்குது எண்டு நினைச்சுக் கொண்டிருக்கினம். என்னட்ட ஒன்டுமில்லை. என்ர கை வெறுங்கை” என்று தலைவர் தனது கையை விரித்துக் காட்டியதாக ஈழப்பிரியன் தனது கைகளை விரித்துக் காட்டினார்.**

“அண்ணையே இப்பிடிச் சொன்னால் நாங்கள் என்ன செய்ய முடியும்?” என மன வருத்தத்துடன் கூறிவிட்டுச் சென்ற அடுத்த சில நாட்களில், ஈழப்பிரியன் என்ற இளம் போராளி

மகாபாரதத்தில் வரும் அபிமன்யூவின் தீரத்துடன் கிளிநொச்சியில் தன்னைச் சுற்றி வளைத்த இராணுவத்துடன் மோதி வீர மரணத்தைத் தழுவினான்.

கிளிநொச்சியைத் தக்கவைக்கும் பெரியதொரு இராணுவ நடவடிக்கை எதனையும் புலிகளால் மேற்கொள்ள முடியவில்லை என்ற உண்மையை ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

சமாதான காலத்தில் கட்டியெழுப்பப்பட்டிருந்த அந்த நகரத்தின் மையத்தில் அமைந்திருந்த பாரிய தண்ணீர்த் தாங்கி, இயக்கத்தால் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது.

1996இல் சத்ஜெய படையினரின் முன்னேற்ற நடவடிக்கையின்போதும், ஏற்கனவே அதே இடத்தில் அமைந்திருந்த தண்ணீர்த்தாங்கி புலிகளால் தகர்க்கப்பட்டிருந்தது.

2008இல் மீண்டும் கிளிநொச்சி நிர்மூலமாகியது. மக்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சியிலிருந்து பதின்மூன்று கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் தருமபுரத்திற்குச் சென்றிருந்தனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த நடேசனுடைய வற்புறுத்தலுக்கும் தலைவரின் உத்தரவுக்கும் அமைவாக ஆறு மாதங்களின் பின்னர் 2008 ஜனவரியிலிருந்து மீண்டும் மகளிர் பொறுப்பாளராகப் பணியாற்றத் தொடங்கியிருந்தேன்.



**அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் புற்றுநோய் காரணமாக 2007 காலப் பகுதியில் உயிரிழந்ததன் பின்பு ஏற்பட்ட**, அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் திடீர் மறைவானது, மேற்குலகத்தின் சமாதான

ஏற்பாட்டாளர்களுடன் புலிகள் இயக்கத்திற்கு இருந்த ஓரளவு நெருக்கமான நேரடியான தொடர்புகளையும் துண்டிக்கச் செய்திருந்தது.
தமிழ்ச்செல்வனின் மறைவுக்குப் பின்னர் அரசியல்துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட நடேசன் தமிழ்நாட்டில் இருக்கும் ஈழத் தமிழ் ஆதரவு சக்திகளுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிவந்தார்.

அவர்களது அரசியல் செயற்பாடுகள் இயக்கத்தை நெருக்கடி நிலையிலிருந்து காப்பாற்றும் என்ற பெரும் நம்பிக்கை அவரிடம் இருந்தது.

**ஜெயலலிதாவை நம்பியிருந்த புலித்தலைமைகள்**

2009இல் நடக்கவிருந்த தேர்தலில் ஜெயலலிதா முதலமைச்சரானதும் அவர் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் உடனடியான ஒரு போர் நிறுத்தம் ஏற்படுவதற்கான சாத்தியம் உருவாகும் என்ற கருத்து புலிகளின் தலைமைக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**அந்த அளவிற்கு நடேசன் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டிருந்தார்.**

ஆனால் அப்படியானதொரு உடனடி மாற்றத்தைத் தமிழ்நாட்டிலிருக்கும் ஆதரவு சக்திகளால் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

அவர்களுடைய உணர்ச்சிகரமான பேச்சுக்களும் முத்துக்குமார், செங்கொடி போன்ற உறவுகளின் தீக்குளிப்புத் தியாகங்களும் இந்திய அரசின் கவனத்தைத் திருப்புமென எதிர்பார்க்க முடியவில்லை.

**“தமிழ்நாட்டில் மக்கள் செல்வாக்கு மிக்க அரசியல் கட்சித் தலைவர்களின் தேர்தல் காலத்து ஈழத் தமிழர் ஆதரவுக் கோஷம், தமது வாக்குப் பெட்டிகளை நிரப்புவதற்காக மட்டும்தான் பயன்படுத்தப்படும் என்பதைக்கூட மறந்து, அலைகடலில் ஒரு துரும்பேனும் அகப்படாதா என்ற அங்கலாய்ப்புடன் இறுதிப் போரின் தோல்விகளுக்குள்**

**தனித்து விடப்பட்டிருந்தார் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன்."**



2008 நவம்பர் மாதம் இலங்கைப் படையினரால் பூநகரி கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து பரந்தன் நோக்கிய படைநகர்வு டிசம்பர் 31இல் ஆனையிறவு உட்பட யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப் பாதையையும் இணைத்து இராணுவத்தினர் முழுப் பிரதேசத்தையும் கைப்பற்றியதுடன் கிளிநொச்சியை நோக்கி நகரத் தொடங்கினர்.

2009 ஜனவரி 02ஆம் திகதி புலிகளின் சமாதான காலத் தலைநகரமாக இருந்த கிளிநொச்சி முழுவதுமாக இராணுவத்தினரிடம் வீழ்ச்சியடைந்தது.

ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுச் சரணடையும்படி இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் பகிரங்க அறிவித்தலை விடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து எந்தவிதமான உக்கிரச் சண்டைகளும் இல்லாமலே தருமபுரத்தையும் இராணுவத்தினர் கைப்பற்றினார்கள்.

சுதந்திரபுரம் உடையார் கட்டு, வல்லிபுனம் பகுதிகளில் மக்கள் நெரிசலாகத் நகரத் தொடங்கினார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் விசுவமடுக்குளத்தின் அணைக்கட்டுகளைக் கரும்புலித் தாக்குதல் மூலம் தகர்த்து இராணுவத்தினரைத் தண்ணீருக்குள் மூழ்கடிக்கும் இயக்கத்தின் தாக்குதல் திட்டமும் படுதோல்வியைத் தழுவியது.

நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் உயிரிழந்ததாகப் புலிகளின் குரல் உண்மைக்குப் புறம்பான செய்திகளை

வெளியிடுவதால் மக்களின் மனநிலையில் கொஞ்சமாவது நம்பிக்கையை ஏற்படுத்தலாம் என முயற்சி செய்தது.

இனியும் எந்தத் திசையை நோக்கி என்ன எதிர்பார்ப்புடன் நகர்ந்து செல்வது எனப் புரிபடாத நிலைமையில் மக்கள் பேரவலப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மக்களுக்கு ஒரு உறுதியான

நம்பிக்கையை வழங்க முடியாத கடைசிக் கையறு நிலைக்குப் புலிகள் இயக்கம் வந்திருந்தது.

தப்பியோடும் சனங்களை காலிற்கு கீழே சுடச் சொல்லி ஒரு கேவலமான வேலையை செய்ய உத்தரவிட்ட இயக்கம்!

• இயக்கத்தின் தலைமை எடுத்த முடிவுகளால் இனமே அழிந்துபோகும் நிலைமை உருவாகியிருந்தது.

• “சண்டைப் பயிற்சி உள்ள இருபத்தையாயிரம் பேரும் ஆட்லறிக்குரிய எறிகணைகளும் இருந்தால்தான் மீண்டும்

கிளிநொச்சியைப் பிடிக்கலாம்," என்று தலைவர் கூறியதாகச் சுரத்தேயில்லாமல் கூறினார் விதுஷா

• தமிழ் மக்களுக்கான ஆயுதப் போராட்டமும் தனியொரு மனிதனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு மட்டுமே கட்டுப்பட்டு நின்றதும், அவருடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற தீர்மானங்களின்படியே வழி நடத்தப்பட்டதும் எத்தகைய மோசமான இனஅழிவை ஏற்படுத்தியிருந்தது?



இயக்கத்தின் ஆட்லறி பீரங்கிகளை நிலைப்படுத்தி இராணுவத்தினர் மீது எறிகணைகளைச் செலுத்துவதற்கு வேறு இடங்கள் இல்லாத நிலையில் சுதந்திரபுரம்,

வல்லிபுனம், தேவிபுரம் ஆகிய இடங்களில் அவை நிலைப்படுத்தப்பட்டிருந்தன.

புலிகளின் ஆட்லறி இலக்குகள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட பதில் எறிகணைத் தாக்குதல்களிலும் விமானத் தாக்குதல்களிலும் அந்த இடங்களில் நெருக்கமாகத் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டார்கள்.

எந்த மக்களுக்காகப் போராடப் போனோமோ அந்த மக்களின் குருதி மண்ணில் ஆறாகப் பெருகி ஓடியது. நாம் ஈடுபட்டுக்கொண்டிருந்த யுத்தத்தின் எந்த நியாயங்களாலும் எமது மனதை ஆற்றுப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

அந்தச் சூழநிலையில் நான் ஆயுதப் போராட்டத்தையே வெறுத்தேன். இயக்கத்தின் தலைமை எடுத்த முடிவுகளால் இனமே அழிந்துபோகும் நிலைமை உருவாகியிருந்தது.

முப்பது வருடப் போராட்டத்திலும் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், இலட்சக்கணக்காக அழிந்து

போயிருக்கிறார்கள். கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்திருக்கிறார்கள், பல இலட்சம் பேருடைய எதிர்காலம் சிதைக்கப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் விடுதலைக்கான மக்களின் அர்ப்பணிப்புகள். ஆனால் எமது மக்கள் அழிக்கப்பட்டபின் யாருக்காக இந்தத் தேசம்? யாருக்காக இந்த விடுதலை?

இயக்கத்தின் ஆட்லறி பீரங்கிகளை நிலைப்படுத்தி இராணுவத்தினர் மீது எறிகணைகளைச் செலுத்துவதற்கு வேறு இடங்கள் இல்லாத நிலையில் சுதந்திரபுரம், வல்லிபுனம், தேவிபுரம் ஆகிய இடங்களில் அவை நிலைப்படுத்தப்பட்டிருந்தன.

புலிகளின் ஆட்லறி இலக்குகள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட பதில் எறிகணைத் தாக்குதல்களிலும் விமானத் தாக்குதல்களிலும் அந்த இடங்களில் நெருக்கமாகத் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டார்கள்.

எந்த மக்களுக்காகப் போராடப் போனோமோ அந்த மக்களின் குருதி மண்ணில் ஆறாகப் பெருகி ஓடியது.

நாம் ஈடுபட்டுக்கொண்டிருந்த யுத்தத்தின் எந்த நியாயங்களாலும் எமது மனதை ஆற்றுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. அந்தச் சூழநிலையில் நான் ஆயுதப் போராட்டத்தையே வெறுத்தேன்.

**இயக்கத்தின் தலைமை எடுத்த முடிவுகளால் இனமே அழிந்துபோகும் நிலைமை உருவாகியிருந்தது.**

முப்பது வருடப் போராட்டத்திலும் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், இலட்சக்கணக்காக அழிந்து போயிருக்கிறார்கள். கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்திருக்கிறார்கள், பல இலட்சம் பேருடைய எதிர்காலம் சிதைக்கப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் விடுதலைக்கான மக்களின் அர்ப்பணிப்புகள்.

**ஆனால் எமது மக்கள் அழிக்கப்பட்டபின் யாருக்காக இந்தத் தேசம்? யாருக்காக இந்த விடுதலை?**

இறுதிப் போரில் எமது மக்கள் அனுபவித்து நின்ற அவலங்களை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

எமது போராட்ட வழிமுறை மிகவும் தவறானது என்பதை எனது கண் முன்னே அனுபவத்தில் கண்டேன். எங்களால் நேசிக்கப்பட்ட மக்கள் எமது கண்ணுக்கு முன்பாகவே தெருவோரப் பிணங்களாகக் கைவிடப்பட்டுக் கிடந்தார்கள்.

அதற்குப் போராட்ட இயக்கமும் ஒரு காரணமாகவே இருந்தது. அப்படியாயின் யாருக்காக இந்தப் போராட்டம்? நீண்டகாலப் போராளிகள் வெறுப்பின் உச்சத்திற்கே சென்றிருந்தார்கள்.

கட்டாய ஆட்சேர்ப்பில் இணைக்கப்பட்டிருந்த புதிய போராளிகள் பலர் போதிய பயிற்சிகளும் இல்லாத நிலையில் களமுனையில் தாக்குப்பிடிக்க முடியாது ஆயுதங்களை வைத்துவிட்டு வீடுகளுக்குச் செல்வது அதிகமாக இருந்தது.

மிகக் குறுகியதாக இருந்த மக்கள் வாழ்விடங்கள் எங்கணும் போர்க்களமாகவே மாறிவிட்டிருந்தன. கணத்துக் கணம் மரண ஓலம் எழுந்துகொண்டேயிருந்தது.



புலிகள் இயக்கம் மிகவும் பரிதாபகரமான நிலையில் தனது இறுதி நாட்களை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஆயுதம் தமிழீழத்தைப் பெற்றுத் தரும் என்கிறதான கனவு உண்மையாகவே உடைந்து நொறுங்கிய சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழத் தொடங்கின.

புலிகள் போகச் சொல்கிற இடத்திற்கெல்லாம் போய்க்கொண்டிருந்த மக்கள் புலிகள் மீதான வெறுப்பின் உச்சக்கட்டத்திற்குச் சென்றிருந்தார்கள்.

காலூன்றி நிற்க ஒரு இடமில்லை, வயிற்றுப் பசியைப் போக்க ஒரு பிடி உணவில்லை, எந்தக் கணத்திலும் உயிருக்கு உத்தரவாதமில்லை என்ற நிலையில் மக்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள்.

முதன்முதலாக உடையார்கட்டுப் பிரதேசத்தின் இருட்டுமடு பகுதிக்கூடாகவே மக்கள் பெருமெடுப்பில் வெளியேறத் தொடங்கியிருந்தார்கள். உடனடியாக மக்கள் வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்துமாறு இயக்கத் தலைமையால் அறிவிக்கப்பட்டது.

அதற்காக அரசியல்துறைப் போராளிகள் அவசரமாக அனுப்பப்பட்டார்கள். இனிமேலும் எத்தகைய நம்பிக்கை வார்த்தைகளைக் கூறி மக்களைத் தடுத்து நிறுத்துவது என்று எவருக்குமே புரியவில்லை.

மக்களைப் பணயமாக வைத்துத்தான் மக்களுக்காகப் போராடுவதா, அப்படியானால் இது யாரைப் பாதுகாப்பதற்கான போர் என்ற கேள்விகளுக்கான பதில் படுபயங்கரமாகக் கண் முன்னால் எழுந்து நின்றது.



**ஒரு ஆண் பொறுப்பாளர் என்னிடம் இரகசியமாக இவ்வாறு கூறினார்; "தமிழினியக்கா சனங்கள் எங்களத் தள்ளி விழுத்திக்கொண்டு போகுதுகள், இனியும் மறிச்சுப்பிடிச்சால் அடிச்சு விழுத்திப் போட்டுத்தான் போகுங்கள், போற சனம் போய் உயிர் தப்பிப் பிழைக்கட்டுமெண்டு நினைச்சு நான் பேசாமலே நிண்டிட்டன்**" என்றார்.

அந்தப் போராளியின் உணர்வுதான் எனக்கும் இன்னும் பல போராளிகளுக்கும் இருந்தது. ஆனாலும் நான் அந்தப் போராளிக்கு எதுவும் கூறாமல் மௌனமாக நின்றேன்.

சுதந்திரபுரத்தை நோக்கி இராணுவம் முன்னேறத் தொடங்கியது. அங்கிருந்த மக்களை இராணுவத்தின் பகுதிக்குப் போகவேண்டாமெனவும், அவர்களை இரணைப்பாலைப் பகுதிகளுக்குச் செல்லும்படியாகவும் இயக்கம் தெரியப்படுத்தியது.

பகல்பொழுது முழுவதும் நடந்த தாக்குதல்களினால் மக்கள் காயங்களுடனும் உயிரிழப்புகளுடனும் தொடர்ந்தும் இடம் பெயர்ந்துகொண்டே இருந்தார்கள்.

இயக்கத்தின் பல தளங்களும் சுதந்திரபுரத்திலே நிலைப்படுத்தப்பட்டிருந்தன.

சுதந்திரபுரம் பாடசாலைப் பகுதியில் தாக்குதலணிப் போராளிகள் நிலை கொண்டிருந்தனர். எமது பிரிவைச் சேர்ந்த மூன்று பெண் போராளிகளும் இரண்டு ஆண்

போராளிகளும் மக்கள் குடியிருப்புப் பகுதியில் நின்றிருந்தோம்.

பெரும்பான்மையான மக்கள் ஏற்கனவே அங்கிருந்து வெளியேறிவிட்டிருந்தார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில குடும்பங்கள் மட்டும் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தன.

இரவின் மெல்லிய நிலவொளியில் சாரிசாரியாக மக்கள் வயல்வெளிகளுக்கூடாக நடந்துகொண்டிருப்பது தெரிந்தது. உடையார்கட்டுப் பகுதியில் புலிகளின் எரிபொருள் சேமிப்பு வைத்திருந்த இடமொன்று வெடித்துச் சிதறி வானளவுக்கு நெருப்பு எழுந்து எரிந்துகொண்டிருந்தது.

அந்த நேரத்தில் மிகவும் அதிசயமாகச் சூட்டுச் சத்தங்கள் எதுவுமே கேட்கவில்லை. அந்தச் சூழ்நிலையின் மௌனம் மிகவும் பயங்கரமாயிருந்தது. சுதந்திரபுரம் பாடசாலையின் வேலியோடு எந்தக் கணமும் தொடங்கப்போகும் ஒரு சண்டைக்குத் தயாராகப் போராளிகள் நின்றுகொண்டிருந்தார்கள்.

அங்கு மாலதி படையணி போராளிகளுடன் தளபதி விதுஷாவும் நின்றிருந்தார். அவரைச் சந்தித்துச் சில தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காக அந்த இடத்திற்குச் சென்றோம்.

மிகவும் மனமுடைந்த நிலையில் இருந்த விதுஷாக்கா என்னைக் கண்டதும் வெடித்துப் புலம்பத் தொடங்கினார். "இயக்கம் எண்டு நினைக்கவே வெட்கமா இருக்குது, பிள்ளைகள் கேக்கிற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் இருக்குது" என ஒருபோதுமில்லாதவாறு மனங்கசந்து விரக்தியுடன் பேசினார்.



**“சனம் இனி ஏலாத கட்டத்தில ஆமியிட்ட போகுது, அப்பிடிப்போற சனத்திற்குக் காலிற்கு கீழே சுடச் சொல்லி இயக்கம் சொல்லுது.** என்ர கடவுளே சனத்திற்குச் சுடு எண்டு எந்த மனசோட நான் சொல்லுறது.

அப்பிடியிருந்தும் சில பிள்ளைகளிட்ட இயக்கம் இப்பிடிச் சொல்லுது என்ற தகவலைச் சொன்னபோது, அந்தப் பிள்ளைகள் கேக்குதுகள் ‘என்னக்கா எங்கட அம்மா அப்பா சகோதரங்களையோ நாங்கள் சுடுறது.

இதைவிட எங்களை நாங்களே சுட்டுச் சாகிறது நல்லது’ எண்டு சொல்லிக் குழம்புதுகள். உண்மை தானேயடி. **இப்பிடி கேவலமான ஒரு வேலையை செய்ய வேண்டிய கட்டத்திற்கு இயக்கம் வந்திட்டுது,”** என்று புலம்பினார்.

அன்று அவர் மனமுடைந்து நின்ற காட்சி இன்றும் எனது கண்களுக்குள் நிற்கிறது. உடலும் மனதும் விறைத்துப்போன மனநிலையுடன் அவருடன் கதைத்துவிட்டுத் திரும்பினேன்.

ஒரு வோக்கி டோக்கியை விதுஷாக்காவிடம் வாங்கி என்னுடன் வந்திருந்த ஆண் போராளியிடம் கொடுத்தேன்.

நாங்கள் ஒரு பரந்த வயல்வெளியைக் கடந்து மீண்டும் சுதந்திரபுரம் வீதிக்கு வர வேண்டியிருந்தது.

சூழ்நிலை இப்போதும் அமைதியாகவே இருந்தது. இராணுவத்தினர் எங்கேயும் பதுங்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தை அது கிளப்பியது.

நாம் இரண்டு அணிகளாகப் பிரிந்து போவது நல்லது என நினைத்தேன். வயல்வெளிக்கூடாக நாங்கள் சென்று கொண்டிருந்தபோது, வோக்கியில் ஆண் போராளிகளைத் தொடர்புகொண்டு பேசினேன்.

எங்கிருந்தோ ஒரு ரவை கூவிக்கொண்டு வந்து நான் உட்கார்ந்திருந்த வயல் வரம்பில் குத்தியது. இராணுவம் எமக்கு மிக அருகில் நிற்பது புரிந்தது.

முன்னணியில் நிற்கும் தாக்குதலணிகளுக்குத் தெரியாதபடி இரகசியமான முறையில் இராணுவம் பின்புறமாக நகர்ந்திருப்பதை அனுமானித்துக்கொண்டேன்.

இப்போது என்னுடன் வந்த ஆண் போராளிகளின் தொடர்பை ஏற்படுத்தவும் முடியாத நிலைமை உருவாகியிருந்தது.

வோக்கியில் கதைக்க முடியாத காரணத்தால் சற்று உரத்த குரலில் "தம்பீ . . ." எனக் கூப்பிட்டுப் பார்த்தேன்.

அவர்களை எப்படியும் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அவர்கள் போன திசையை நோக்கி நகரத் தொடங்கினோம்.

சற்று தூரம் போனதும் நிழலுருவங்கள் இரண்டு அசையாமல் இருப்பதை அவதானிக்க முடிந்தது. அது எம்முடன் வந்த ஆண் போராளிகளாக இருக்குமோ என்ற யோசனையுடன், அந்த நிழலுருவங்களை நோக்கி நகரத் தொடங்கினேன்.

"**அக்கா . . . அங்கால போகாதே**" எனக் கத்தியவாறு நான் தேடிப் போன போராளிகளில் ஒருவன் என்னைத் தடுத்து நிறுத்தியதுடன் என்னைப் பிடித்துத் தரதரவெனப் பின்னோக்கி இழுக்கத் தொடங்கினான்.

அனைவருமாகச் சற்றுதூரம் ஓடிவந்து சேர்ந்தபின்பு "அக்கா அதில ஆமிதான் நிற்கிறான். சனங்கள் ஆமிக்குள்ள

போய்க்கொண்டிருக்குதுகள் போல. அதுதான் பேசாமல் இருக்கிறான்.

நாங்களும் கிட்டடத்தில் போய்ட்டுத்தான் உங்களுக்குச் சொல்லுறதுக்காக ஓடி வந்தனாங்கள்" எனக் கூறினான். அதன்பின்பு நான் விதுஷாக்காவுக்கு நிலைமையைத் தெரியப்படுத்திவிட்டு எனது பொறுப்பில் இருந்த காயப்பட்ட போராளிகளை நகர்த்துவதற்காக விரைந்தேன்.



பொழுது புலர்ந்தபோது சுதந்திரபுரம் முழுவதுமாக இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டிருந்தது.

அன்று இயக்கம் எதிர்பார்த்தபடி ஒரு சண்டையைச் செய்து இராணுவ நகர்வைத் தடுத்து நிறுத்த முடியாமல் போயிருந்தது. புதுக்குடியிருப்பின் இரணைப்பாலை, ஆனந்தபுரம் பகுதிகளில் மக்கள் இடைவெளியில்லாதபடி நிறைந்து போயிருந்தார்கள்.

புதுக்குடியிருப்பு ஊடாகச் செல்லும் முல்லைத்தீவு பிரதான வீதியில் வல்லிபுனம் பகுதியில் வீதி நோக்கிய எறிகணைத் தாக்குதல்களால் இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்களது லான்ட்மாஸ்டர், ட்ராக்டர் வாகனங்களும் சேதமடைந்திருந்தன.

பாத்திரம் பண்டங்களும் வேறு வீட்டுப் பாவனைப் பொருட்களும் மக்களின் சடலங்களும் மிருகங்களின் உடல்களும் வீதியெங்கும் சிதறிக் கிடந்தன.

அந்தப் பிரதேசம் முழுவதுமே துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. மக்கள் சுதந்திரபுரத்திலிருந்து இரணைப்பாலையை அடைவதற்குத் தேவிபுரம் காட்டுப்பாதையூடாகவே நகர்ந்தனர்.

அந்தப் பகுதிகளில் சில முக்கியக் கடற்புலித் தளங்களும் ஆட்லறி நிலைகளும் அமைந்திருந்த காரணத்தால் இலங்கை விமானப் படையினரின் வான் தாக்குதல்கள் இடைவெளியின்றி நடாத்தப்பட்டன.

அப்படியொரு தாக்குதலில் நானும் என்னுடன் வந்த போராளியும் அதிர்ஷ்டவசமாக மயிரிழையில் உயிர் தப்பினோம். இரணைப்பாலையில் அமைந்திருந்த மருத்துவ முகாமொன்றில் தளபதி விதுஷாவை மீண்டும் சந்தித்தேன்.

நீண்ட நாட்களின் பின் தலைவரைச் சந்தித்துவிட்டு வந்ததாகக் கூறினார். இந்த நெருக்கடிக்குள் தலைவர் எங்கேயிருப்பார் என நினைத்துக்கொண்டேன்.

ஆனாலும் கேட்கவில்லை. தலைவருடைய இருப்பிடத்தைப் பற்றி ஆராயும் பழக்கம் போராளிகளிடையே இருந்ததில்லை.




**விதுஷா.**

**“சண்டைப் பயிற்சி உள்ள இருபத்தையாயிரம் பேரும் ஆட்லறிக்குரிய எறிகணைகளும் இருந்தால்தான் மீண்டும் கிளிநொச்சியைப் பிடிக்கலாம்,”** என்று தலைவர் கூறியதாகச் சுரத்தேயில்லாமல் கூறினார் விதுஷா.



**“பொட்டம்மான் கதைக்கிற கதைகளை நினைச்சா விசர்தான் பிடிக்கும். எனக்கென்டால் அவரில இருந்த கொஞ்சநஞ்ச மரியாதையும் போட்டுது. நிலைமைகள் விளங்காமல் கதைச்சுக் கொண்டு நிற்கிறார்”** மேலதிகமாக எதுவும் கதைக்கத் தோன்றாமல் அமைதியாக இருந்தார். அவரது மனதிலும் மக்கள் அனுபவிக்கும் கொடுமைகள் பயங்கர வேதனையை ஏற்படுத்தியிருந்ததைப் புரிந்துகொள்ள முடிந்தது.

போதிய நித்திரை இல்லாது நெருப்புப்போலச் சிவந்து போயிருந்த கண்களில் நீர் மல்க “**சனங்கள்தான் பாவம்**” எனக் கூறிப் பெருமூச்சு விட்டுக்கொண்டார்.

அந்த விரக்தியான சூழ்நிலையை விபரிப்பது மிகவும் கடினமானது. அதுதான் அவருக்கும் எனக்குமான இறுதிச் சந்திப்பாக இருந்தது.

இறுதி யுத்தக்காலத்தில் பொட்டு அம்மான் மீது ஏனைய தளபதிகள் மிகுந்த கோபமடைந்திருந்ததை வெளிப்படையாகவே உணரக்கூடியதாக இருந்தது.

படையணிகளின் பலவீனங்களைப் புரிந்துகொள்ளாமல் அவர் வழங்கும் கட்டளைகள் பலருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தின. **அங்கங்களை இழந்த போராளிகள் வெடி மருந்துகளோடு புதுக்குடியிருப்பைச் சுற்றி நிலைகளை அமைக்க வேண்டும் என்ற கருத்தை அவர் முன்வைத்திருந்தார்.**
இராணுவத்தினர் முன்னேறி வரும்போது அவர்கள் வெடித்துச் சிதறவேண்டும் என அவர் கட்டளையிட்டிருந்தார்.

கரும்புலிப் போராளிகள் பலர் கிளைமோர் குண்டுகளுடன் முன்னணிக்குப் போய் இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்த வேண்டும் எனவும் அவரால் கூறப்பட்டது.

அப்படியே பல போராளிகள் முன்னணி நிலைகளுக்குப் போய் வெல்லப்பட முடியாத ஒரு யுத்தத்தில் அநியாயமாக உயிரிழந்து போனார்கள்.

**“பலவீனமான இனத்தின் பலமான ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன்” என ஒருமுறை கூறியிருந்தார் எமது தலைவர்.** ஒரு கரும்புலி வீரன் வாகனத்தில் ஏற்றப்பட்ட வெடிமருந்தோடு புதுக்குடியிருப்பு கேப்பாபிலவு வீதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண் ஒன்றை அழிப்பதற்காகச் சென்று மோதி வெடித்தான்.

இப்படியான தாக்குதல்கள் எவையுமே இராணுவத்தினருடைய முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் வலுக் கொண்டவையல்ல என்ற களநிலை யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாத நடவடிக்கைகளால் பல போராளிகளின் உயிரர்ப்பணிப்புக்கள் பெறுமதியற்றதாகிப் போயின.

சமாதானம் முறிவடைந்து மீண்டும் யுத்தம் மூண்டிருந்த நிலையில் இயக்கத்தின் திரைப்பட மொழியாக்கப் பிரிவால்

மொழிமாற்றம் செய்யப்பட்டிருந்த '**முந்நூறு போர் வீரர்கள்**' என்ற திரைப்படம் தலைவரின் ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் திரையிட்டுக் காண்பிக்கப்பட்டது.
அத்துடன் 'ஹிட்லரின் இறுதி நாட்கள்' என்பது போன்ற திரைப்படங்களும் மொழியாக்கம் செய்யப்பட்டுப் போராளிகளுக்குக் காண்பிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் இயக்கம் என்ற ஒரு பிரம்மாண்டமான விடுதலை அமைப்பு செயலிழந்துபோன விதத்தை நம்பமுடியாத அதிசயமாக உலகம் பார்த்தது.

ஆனால் தோல்வியைக் கற்பனை செய்தபடிதான் தலைவர் இறுதி யுத்தத்தை ஆரம்பித்தாரோ என நான் அடிக்கடி நினைத்துப் பார்த்திருக்கிறேன்.

எத்தனையோ இலட்சம் பேருடைய இரத்தமும் கண்ணீரும் இயக்கத்தினுடைய வளர்ச்சிக்கு நீர்ப் பாய்ச்சியிருக்கிறது. அப்படியிருக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கமும், **தமிழ் மக்களுக்கான ஆயுதப் போராட்டமும் தனியொரு மனிதனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு மட்டுமே**

**கட்டுப்பட்டு நின்றதும், அவருடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற தீர்மானங்களின்படியே வழிநடத்தப்பட்டதும் எத்தகைய மோசமான இனஅழிவை ஏற்படுத்தியிருந்தது?**

2009ஆம் ஆண்டின் மூன்றாம் மாதமளவில் புதுக்குடியிருப்பில் அமைந்திருந்த முகாமொன்றில் அனைத்துப் பொறுப்பாளர்களுக்குமான சந்திப்பு புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானால் நடாத்தப்பட்டது.



விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதியுயர் பாதுகாப்பு வளையமாக இருந்த புதுக் குடியிருப்புப் பிரதேசம் ஆபத்துகள் நிறைந்த போர்க்களமாக மாறியிருந்தது. அன்றைய சந்திப்பு அதிக நேரம் நீடிக்கவில்லை. மிகவும் சுருக்கமாகப் பின்வரும் விடயங்களைப் பொட்டம்மான் தெரிவித்தார், “ஒரு அதிசயம் நடந்தாலே தவிர இயக்கம் வெல்வது என்பது இனிச் சாத்தியமில்லை; இயக்கத்தின் ஆவணங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை முற்றாக அழித்துவிடுங்கள். மக்கள் இராணுவத்திடம் செல்லத் தொடங்கிவிட்டார்கள்.

இறுதிக் கட்டத்தில் போராளிகளும் அவர்களோடு சேர்ந்து செல்ல வேண்டி வரும்போது ‘இதிலே புலி இருந்தால் எழும்பி வா’ என்று கூப்பிடுவான்.

அப்போது ‘நான் புலி’ என எழுந்து போகும்போது சுட்டுக் கொல்லுவான். இதுதான் நடக்கப்போகுது. யுத்தத்தில ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துவதற்குத் தலைமை முழு முயற்சிகளையும் செய்துகொண்டுதான் இருக்கிறது.

ஆனாலும் திரும்பவும் ஒரு விடயத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுங்கள்; அதிசயமொன்று நடந்தாலே தவிர நாங்கள் வெல்லுறது சாத்தியமில்லை. நான் உங்களைக் குழப்புவதற்காக இப்படிச் சொல்லவில்லை.

உண்மையான நிலைப்பாட்டைச் சொல்லுகிறேன்; முக்கியமாக, உங்களை இன்றைக்குக் கூப்பிட்ட விடயம் உங்களிடமிருக்கும் ஆவணங்களை அழித்துவிடுங்கள் என்பதைக் கூறுவதற்காகத்தான்". அத்துடன் கூட்டம் நிறைவுபெற்றது.

காயப்பட்டிருந்த போராளிகளைப் பற்றியோ அல்லது இயக்கத்தையே நம்பி பராமரிப்பு இல்லங்களில் இருந்தவர்களைப் பற்றியோகூட ஒரு வார்த்தை கூறப்படவில்லை.

பெண் போராளிகள் எதிர் நோக்கக்கூடிய இரட்டிப்பு ஆபத்து பற்றியோ எதுவுமே பேசப்படவில்லை.

ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவும் தோன்றாத மனநிலையில், அனைவரும் கலைந்து சென்றோம். விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்களுக்குப் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற இறுதியான ஒன்றுகூடல் அதுவாகத்தான் இருந்தது.

## மக்கள், காயப்பட்டுக் கிடந்த, உயிரோடிருந்த போராளிகள் அனைவரையும் கைவிட்டு 300 போரளிகளுடன் இயக்க தலைமை கேப்பாபிலவு காட்டுக்குள் தப்பியோட முயற்சி!



• கையிலே ஆயுதத்தைத் தூக்கி விசைவில்லை அழுத்தத் தெரிந்தால் போதும் என்ற நிலையில் பயிற்சிகள்

வழங்கப்பட்டன. அநியாயமான உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய இவ்வாறான நடவடிக்கைகளால் எவ்விதப் பயனுமில்லை எனத் தெரிந்தும் ஒரு விடாப்பிடியான மனநிலையுடன் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

• இயக்கம் எவ்வளவுதான் தடைகளைப் போட்டாலும் துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்தாலும், மக்கள் இயக்கத்திலிருந்த தமது பிள்ளைகளையும் தேடிப்பிடித்துக் கூட்டிக்கொண்டு வெளியேறத் தொடங்கியிருந்தார்கள்.

• “ஆமிக்காரனிட்டதான் போகப் போறம், என்ன செய்யப் போறீயள்? உங்களை நம்பி இவ்வளவு தூரம் வந்திட்டம். இனி எங்கே போகச் சொல்லுறிங்கள், இனியும் என்னவாம் செய்யப் போறார் உங்கட தலைவர்?”

• இப்போது இயக்கத் தலைமை காண்பித்த 300 போர்வீரர்கள் படம் நினைவுக்கு வந்தது. எமது போராட்ட வாழ்க்கையின் முடிவை இயக்கத் தலைமை என்றோ தீர்மானித்துவிட்டதாகத்தான் அக்கணத்தில் எண்ணத் தோன்றியது.



கைப்பற்றப்பட்டதன் பின்னர் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் ஒரு ஊடுருவித் தாக்குதலைப் புலிகள் மேற்கொண்டனர். பல பிரதான தளபதிகள் நேரடியாகப் பங்குபெற்ற இந்த நடவடிக்கைக்குத் தளபதி பானு தலைமை தாங்கினார்.

மூன்று நாட்கள்வரை நீடித்த தாக்குதலில், பல மூத்த தளபதிகள் உட்பட அதிகமான போராளிகள் உயிரிழந்தனர். தளபதி பானுவுடன் சொற்பமான போராளிகளே உயிருடன் மீண்டனர்.




**துர்க்கா, விதுஷா,**

**தளபதிகள் விதுஷா, துர்க்கா, மணிவண்ணன், கடாபி** ஆகியோரும் மேலும் பல போராளிகளும் அந்தத் தாக்குதலில் உயிரிழந்தனர்.

அவர்களுடைய உடல்கள் மீட்கப்பட முடியாமல் அங்கேயே கைவிடப்பட்டன. காயமடைந்திருந்த பல போராளிகளையும் அப்படியே கைவிட்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததாக அந்தத் தாக்குதலில் கலந்துகொண்டவரான கிட்டு, பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி பவநிதி என்னிடம் கூறியிருந்தார்.

கிளிநொச்சி இழக்கப்பட்டதன் பின்பு மக்கள் வாழும் இடங்களே முன்னணிக் களமுனைகளாக மாற்றமடைந்தன.

இயக்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் மக்கள் கூட்டத்தின் நடுவிலிருந்தே மேற்கொள்ளப்பட்டன.

கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் முள்ளிவாய்க்கால் வரை அதி தீவிரத்துடன் மேற்கொள்ளப்பட்டன. அப்பிரதேசங்களின் பனைமரக் கூடல்களில் அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**கையிலே ஆயுதத்தைத் தூக்கி விசைவில்லை அழுத்தத் தெரிந்தால் போதும் என்ற நிலையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அநியாயமான உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய இவ்வாறான நடவடிக்கைகளால் எவ்விதப் பயனுமில்லை எனத் தெரிந்தும் ஒரு விடாப்பிடியான மனநிலையுடன் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.**

இதனால் பொதுமக்களும் போராளிகளும் வெறுப்பின் உச்சத்திற்கே சென்றனர். பல அனுபவமான போராளிகள் இயக்கத்திலிருந்து வெளியேறத் தொடங்கினார்கள்.

மக்கள் மத்தியில் தமது குடும்பங்களுடன் கலந்திருந்த அவர்கள் மீண்டும் இயக்கத்தின் செயற்பாடுகளுடன் வந்து இணைந்துகொள்ளாது விட்டால் மரண தண்டனை நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டது.

அப்படியான ஓரிரு சம்பவங்கள் கடற்புலிப் போராளிகள் மத்தியில் நடந்தன.



புலம்பெயர்ந்த மக்களின் ஏற்பாட்டில் '**வணங்காமண்**' என்ற கப்பல் மக்களுக்கான நிவாரணப் பொருட்களுடன் வந்துகொண்டிருப்பதான ஒரு எழுச்சியான செய்தியைப் புலிகளின் குரல் வானொலி மக்களுக்கு அறிவித்துக்கொண்டிருந்தது.

அந்த நெருக்கடியான கட்டத்தில் புலிகளின் குரல் வானொலி மக்களுக்குப் பலவிதமான நம்பிக்கைகளையும் ஊட்டும் விதத்தில் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் வழங்கிக்கொண்டிருந்தது.

நோயாளர்களையும் காயமடைந்த மக்களையும் ஏற்றிச் செல்வதற்காகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கப்பலில் செல்வதற்கான அனுமதியை எப்படியாவது பெற்றுக்கொண்டு வெளியேறிச் சென்றுவிட வேண்டுமென்ற அங்கலாய்ப்புடன் மக்கள் முண்டியடித்தனர்.

பல போராளிக் குடும்பங்களும் தமது குழந்தைகளையாவது பாதுகாப்பாக அனுப்பிவிட வேண்டும் என்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். கடல்வழி மூலமாகவும் தரைவழிகள் மூலமாகவும் மக்கள் இயக்கத்திற்குத் தெரியாமல் வெளியேறிக்கொண்டேயிருந்தார்கள்.

**இயக்கம் எவ்வளவுதான் தடைகளைப் போட்டாலும் துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்தாலும், மக்கள்**

**இயக்கத்திலிருந்த தமது பிள்ளைகளையும் தேடிப்பிடித்துக் கூட்டிக்கொண்டு வெளியேறத் தொடங்கியிருந்தார்கள்.**

எனது தாயாரின் கர்ப்பப்பையில் கட்டி ஏற்பட்டிருந்ததன் காரணமாகக் கர்ப்பப்பையை அகற்றும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு ஆறுமாதம் முடிவதற்குள்ளாகவே கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்திருந்த எமது வீட்டைவிட்டு அவர் இடம் பெயர்ந்திருந்தார்.

மாறிமாறி ஒவ்வொரு இடத்திலும் இருந்து, இறுதியாக ஒரு சிறிய பையுடன் தன்னந்தனியாக வட்டுவாகல் கடற்கரையில் நிற்பதைக் கண்டதாக எனக்குத் தெரிந்த போராளிகள் கூறினார்கள்.



புதுமாத்தளன் பகுதியில் ஒருதடவை என்னைச் சந்தித்த எனது தாயார் ‘**சனங்கள் போற மாதிரி நாங்களும் போவம் பிள்ளை, உன்னை விட்டால் எனக்கு வேறு ஒத்தருமில்லை’ எனக்கூறி அழுது புலம்பியிருந்தார்**.

எனது சகோதர சகோதரிகளுடைய குடும்பத்தில் யார் எங்கே இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்று எதுவுமே தெரியாதிருந்தது.

முள்ளிவாய்க்காலில் அம்மாவைக் கண்டபோது தனது கால்களில் முட்கள் கீறிக் கிழித்த காயங்களை எனக்குக் காண்பித்தார். தேவிபுரம் காட்டுப் பாதையூடாக ஓடிவந்தபோது அந்தக் காயங்கள் ஏற்பட்டதாகக் கூறினார்.

வெயிலுக்கு மறைப்பாகத் தலையை ஒரு துணியால் மூடிக்கொண்டு கஞ்சி பெற்றுக்கொள்வதற்காக ஒரு அலுமினியச் சட்டியுடன் வரிசையில் நின்றுகொண்டிருந்தார்.

நாடு மீட்கப்போய் எம்மைப் பெற்ற தாய்மாரின் நிர்க்கதி நிலைக்கும் காரணமாகிவிட்டோமே என மனம் அங்கலாய்த்தது.

இயக்கத்தின் களஞ்சியங்களுக்குள் அத்துமீறிப் புகுந்த மக்கள் தமக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்லத் தொடங்கினார்கள்.

போராளிகள் என்கிற மதிப்புடனும் ஒருவிதப் பாசத்துடனும் எம்முடன் பழகிய மக்கள், வெறுப்பும், கோபமும் எல்லைமீறிப் போனவர்களாக, விடுதலைப் புலிகளுடன் முரண்படத் தொடங்கினார்கள்.



**“ஆமிக்காரனிட்டதான் போகப் போறம், என்ன செய்யப் போறீயள்? உங்களை நம்பி இவ்வளவு தூரம் வந்திட்டம். இனி எங்கே போகச் சொல்லுறிங்கள், இனியும் என்னவாம் செய்யப் போறார் உங்கட தலைவர்?”** மக்களின் ஆதங்கம் கோபமான வார்த்தைகளாகவும் கண்ணீராகவும் பொங்கிப் பெருகியது.

இயக்கத்திலிருந்த தமது போராளிப் பிள்ளைகளை “**நீங்கள் போராடிக் கிழிச்சது காணும், வாங்கோ**” என ஆத்திரத்துடன் வலுக்கட்டாயமாகக் கையைப் பிடித்து இழுத்துச்சென்ற சம்பவங்களும் நடைபெற்றன.

இனி இயக்கத்தால் எதுவுமே செய்ய முடியாத நிலைமை என்றாகிவிட்டிருந்த பின்பும், மக்கள் வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்தும்படியான செயற்பாடுகளை இயக்கம் மேற்கொண்டிருந்தது.

ஒரு எறிகணை விழுந்து வெடித்தால் பத்துப்பேருக்கு மேல் உயிரிழக்க வேண்டிய நெருக்கடியான நிலைமையில் மக்கள் சிக்குண்டிருந்தனர்.

2009ஆம் ஆண்டு மே 09ஆம் திகதி இரவு ஏழுமணியளவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்களுடைய பதுங்குக்குழி அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் கடற்கரையின் மணற்பாங்கான ஒரு இடத்தில் சிறிய மரம் ஒன்றின் கீழே அரசியல்துறையின் ஒருசில பொறுப்பாளர்களை அவசரச் சந்திப்புக்காக அழைத்திருந்தார்.

நிலவு பகல்போல ஒளி வீசிக் கொண்டிருந்தது. அருகிலே மக்கள் நெருக்கமாகப் பிளாஸ்டிக் தரைப்பாய்களைக் கட்டி இருப்பிடங்களை அமைத்திருந்தார்கள்.

அந்த இருப்பிடங்களுக்கிடையே ஆங்காங்கு சிறிய குழுக்களாகப் போராளிகள் விழிப்பு நிலையில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஏனெனில் இராணுவம் மீது பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளாமல் இரகசிய ஊடுருவல்களைச் செய்வதன் மூலமாக மக்கள் நெருக்கமாயிருக்கும் பகுதிகளைக் கைப்பற்றலாம் எனப் புலிகள் கருதினார்கள்.

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, மிக அருகிலே திடீரென இரவைப் பகலாக்கும்படியான வெளிச்சம் எழுந்தது. புலிகளின் எரிபொருள் பரல்கள் புதைக்கப்பட்டிருந்த இடத்தில் எறிகணைகள் விழுந்து வெடித்ததனால் அந்த இடம் சொக்கப்பனைபோல மூண்டெரியத் தொடங்கியது.

அருகிலிருந்த சில ஆயுதங்களும் வெடித்துச் சிதறின. அந்த நெருப்பின் உக்கிரம் நாங்கள் இருந்த இடத்தையும் மூடித் தகித்தது. அனைவரும் சிதறியோடினோம்.

என்னுடைய தலைக்கு மேலாக வண்டு ரீங்காரமிடுவதுபோலச் சத்தம் கேட்டது. சற்றுத் தலையை அசைத்துப் பார்த்தேன். எனக்கு முன்பாக ஒரு எறிகணைச் சிதறல் தொப்பென விழுந்தது.

தலையை அசைக்காமல் இருந்திருந்தால் வேகமாக வந்த அந்தச் சிதறல் எனது தலையைப் பதம் பார்த்திருக்கும். அதைக் கையிலே தூக்கிப் பார்த்தேன், நெருப்புத் துண்டமாகக் கொதித்துக் கொண்டிருந்தது.



**2009 மே பதின்மூன்றாம் திகதி முள்ளிவாய்க்காலில் இறுதியாக அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்தேன்.** அதற்கு முன்னைய சில தினங்கள்வரை அவரிடமிருந்த

தமிழ்நாட்டு உதவிகள் பற்றிய நம்பிக்கையான வார்த்தைகள் எவையுமிருக்கவில்லை.
நீண்ட நேரம் அமைதியாக இருந்தார். அவருடைய முகத்தைப் பார்த்தபோது அவர் ஏதோ பாரதூரமான விடயமொன்றை எமக்குச் சொல்ல முடியாத சங்கடத்தில் இருப்பதுபோலப் புரிந்தது.

சற்று நேரத்தில் அந்த இடத்திற்கு அண்மையாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் உடனடியாகக் கலைந்து செல்லுமாறு அனுப்பிவிட்டார். அதுதான் அவருடனான எனது இறுதிச் சந்திப்பாகவும் அமைந்தது.

2009 மே பதினைந்தாம் திகதி மாலையாகியது. மீண்டும் மீண்டும் பல தடவைகள் முயற்சி செய்தபோதும் எந்தப் பொறுப்பாளரின் தொடர்பையும் என்னால் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

நானும் சில போராளிகளும் முள்ளிவாய்க்காலில் பனைமரங்கள் அடர்ந்த பகுதியில் நிலையை

அமைத்திருந்தோம். மிக அண்மையாகத் துப்பாக்கி ரவைகள் பறந்து வந்துகொண்டிருந்தன.

அப்போது கடற்புலி மகளிர் பொறுப்பாளராகிய பூரணி எமது நிலைகளுக்கு வந்திருந்தார். அவரும் நானும் ஒரே காலத்தில் இயக்கத்தில் இணைந்திருந்த காரணத்தால் ஆரம்பத்திலிருந்தே நல்ல நண்பர்களாக இருந்தோம்.

அவர் என்னுடன் இரகசியத் தகவல் ஒன்றினைப் பகிர்ந்துகொண்டார்.



“அதாவது, இயக்கத்தின் தலைவரும் அவருடன் சில போராளிகளும் இரகசியமாக வெளியேறுவதற்கான திட்டமிருப்பதாகவும், ஆனாலும் அவர்கள் பெருங்கடல் மூலமாக வெளியேற முடியாதபடி முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரின் சண்டைப் படகுகள் இறுக்கமாக முற்றுகையிட்டிருப்பதால், நந்திக்கடல் நீரேரியைச் சிறிய படகுகள் மூலம் கடந்துசென்று கேப்பாபிலவு பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்துடன் சண்டையிட்டு ஒரு பாதையை ஏற்படுத்திக் கொண்டு கேப்பாபிலவு காட்டுப் பகுதிக்குள் நுழைந்து அதனூடாக முன்னேறிப் பெருங்காட்டுக்குள் நுழைந்துவிடுவது எனத் தீர்மானித்திருப்பதாக அறியமுடிந்தது.“

இராணுவத்தினரின் பலமான முற்றுகையை உடைக்கக் கூடிய வகையில் இயக்கத்திடம் எந்தவிதமான பலமோ, தந்திரோபாயமோ இல்லாத நிலையில் இந்தத் திட்டம் வெற்றியளிப்பதற்கான சாத்தியம் மிகவும் குறைவாகவே இருக்குமென்பதை வெளிப்படையாகவே உணர முடிந்தது.

இதுபற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது தகவலறிந்த ஒரு போராளி சொன்னாள் "நந்திக்கடலைக் கடந்து நகரும்போது இராணுவத்தினருடைய நிலைகளைக் கண்டால் எழுந்த மானத்தில் அடித்துக்கொண்டு முன்னேறிச்சென்று காட்டுப் பகுதியை அடைந்துவிடுவதுதான் திட்டம்" என அந்தப் போராளியை விரும்பியிருக்கும் ஆண் போராளி தன்னிடம் கூறியதாகச் சொன்னாள்.

அந்தப் போராளி இம்ரான், பாண்டியன் படையணியில் இருந்தான். எனக்கு இந்தத் தகவல் எவ்வளவு நம்பகத்தன்மையானது எனத் தெரியவில்லை.



**இருப்பினும், போராளிகள் கைவிடப்பட்டு விட்டார்கள் என்பது அக்கணத்தில் தெட்டத்தெளிவாகப் புரிந்தது.**

இறந்துபோனவர்கள் போக, காயப்பட்டுக் கிடந்த போராளிகளுக்கும் உயிரோடிருந்த போராளிகளுக்கும் முடிவு என்ன என்பது பற்றி எவருக்கும் எந்தத் தகவலும் சொல்லப்பட்டிருக்கவில்லை.

**இப்போது இயக்கத் தலைமை காண்பித்த 300 போர்வீரர்கள் படம் நினைவுக்கு வந்தது.**

எமது போராட்ட வாழ்க்கையின் முடிவை இயக்கத் தலைமை என்றோ தீர்மானித்துவிட்டதாகத்தான் அக்கணத்தில் எண்ணத் தோன்றியது.

எமது நிலைக்கு அருகிலேயே சோதியா படையணியினர் நிலையமைத்திருந்தனர். அங்கே இரண்டொரு போராளிகளே எஞ்சியிருந்தனர். பெரும்பாலானவர்கள் பெற்றோர்களையும் அறிந்தவர்கள் தெரிந்தவர்களையும் தேடிச் சென்றுவிட்டதாக அங்கிருந்த ஒரு மூத்த போராளி கூறினார்.

அவர் அப்படையணியின் முக்கியப் பொறுப்புகளை ஆற்றியவர். அவருடைய கணவர் இயக்கத்தின் முக்கியப் பயிற்சி ஆசிரியராகச் செயற்பட்டவர்.

மிகவும் கல்வியறிவு கொண்ட, திறமைசாலியான அவர் இயக்கத்தின் சில தவறான நடவடிக்கைகளால் மிகவும் மனமுடைந்த நிலையில் இருந்ததை நானறிவேன்.

அவர் படுகாயமடைந்த நிலையில் தனது துணைவியிடம் மக்களோடு சேர்ந்து வெளியேறிச் சென்று இராணுவத்திடம் சரணடையும்படி வற்புறுத்திக் கூறியிருந்தார்.

அதன்பின் அவர் தற்கொலை செய்துகொண்டதாக அறியமுடிந்தது. கடற்புலிகளின் பெரிய படகு ஒன்று நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் கடற்புலித் தளபதி ஸ்ரீராம் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன்.

அவர் மிக இளவயது போராளியாக இயக்கத்தில் இணைந்து ஒரு திறமையான தளபதியாக வளர்ந்தவர். எப்போது என்னைக் கண்டாலும் அன்போடு அக்கா என அழைத்து உரையாடும் அவரிடம் “என்ன நிலைப்பாடு சிறிராம்” எனக் கேட்டேன்.

“இனியென்னக்கா இருக்குது, பேசாமல் சனத்தோடு சனமாக வெளியேறத்தான் வேணும்” எனக் கூறினார். இந்தப் படகை எரிப்பதற்குப் பெற்றோல் கொண்டு வருவதற்காகப் பொடியள் போயிருக்கிறாங்கள் அதுதான் பாத்துக்கொண்டு நிற்கிறன்” எனக் கூறினார்.

அவரது மனைவியான இசைப்பிரியா எங்கே எனக் கேட்டேன். பக்கத்தில் எங்கேயோ ஒரு இடத்தில் நிற்பதாகவும் விரைவில் வந்துவிடுவாள் என்றும் குறிப்பிட்டார்.

## சயனைட் குப்பியைக் கடிப்பதா? என்னை நானே சுட்டுக் கொல்வதா?பெண்ணொருவர் தந்த பழசாய்ப் போன சல்வார் உடையை அணிந்துகொண்டு மக்களோடு மக்களாகக் கலந்தேன்!



• இராணுவத்தினரின் துப்பாக்கி ரவைகள் எமது தலைகளுக்கு மேலாகப் பறந்துசென்றன. இன்னும் சில மணித் தியாலங்களில் எல்லாமே முடிவுக்கு வந்துவிடும்.

இப்போதுதான் நான் என்னைப் பற்றிய முடிவை எடுக்கவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதை உணர்ந்தேன். சயனைட் குப்பியைக் கடிப்பதா? என்னை நானே சுட்டுக் கொல்வதா?

• உயிருடன் இருக்கும் ஒரு போராளி மக்களோடு சேர்ந்து வெளியேற வேண்டும் அல்லது தன்னைத்தானே அழித்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தவிர வேறு வழியேதும் இருக்கவில்லை.

• வார்த்தைகளால் விபரிக்க முடியாதபடி இரத்தமும் தசையுமாக இதயத்தை அறுத்துக் கொல்லும் வலிகளோடு முள்ளிவாய்க்காலிலிருந்து வெளியேறிய அந்தச் சூழ்நிலையை இலகுவில் புரிய வைக்க முடியாது.



கடற்புலிகளின் பெரிய படகு ஒன்று நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் கடற்புலித் தளபதி ஸ்ரீராம் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன்.

அவர் மிக இளவயது போராளியாக இயக்கத்தில் இணைந்து ஒரு திறமையான தளபதியாக வளர்ந்தவர். எப்போது என்னைக் கண்டாலும் அன்போடு அக்கா என அழைத்து உரையாடும் அவரிடம் "என்ன நிலைப்பாடு சிறிராம்" எனக் கேட்டேன்.

"இனியென்னக்கா இருக்குது, பேசாமல் சனத்தோடு சனமாக வெளியேறத்தான் வேணும்" எனக் கூறினார். இந்தப் படகை

எரிப்பதற்குப் பெற்றோல் கொண்டு வருவதற்காகப் பொடியள் போயிருக்கிறாங்கள் அதுதான் பாத்துக்கொண்டு நிற்கிறன்" எனக் கூறினார்.

அவரது மனைவியான இசைப்பிரியா எங்கே எனக் கேட்டேன். பக்கத்தில் எங்கேயோ ஒரு இடத்தில் நிற்பதாகவும் விரைவில் வந்துவிடுவாள் என்றும் குறிப்பிட்டார்.



நான் எனது நேரடிப் பொறுப்பாளரான நடேசனின் தொடர்பை எடுப்பதற்குப் பல தடவைகள் தொடர்ந்து முயற்சித்தேன்; எந்தப் பதிலுமே கிடைக்கவில்லை.

அதற்குப் பின்பும் பொறுப்பாளர்களது தொடர்பை எதிர்பார்த்துக் கொண்டு, என்னுடனிருக்கும் போராளிகளைத் தக்கவைத்துக் கொண்டிருப்பது ஆபத்தானதாகப் பட்டது.

காயமடைந்த சில போராளிகளும் திருமணமான போராளிகளும் ஏனைய சில போராளிகளும் என்னுடன் இருந்தனர். அவர்கள் அனைவரையும் சாதாரண உடைகளை அணிந்துகொண்டு, மக்களோடு சேர்ந்து வெளியேறிச் செல்லும்படி கூறினேன்.

பல போராளிகள் கதறியழுதார்கள். ஒரே குடும்ப உறுப்பினர்கள் ஒருவரையொருவர் பிரிந்து, அடுத்து என்ன நடக்கும் என்று புரியாத ஒரு சூனிய வெளிக்குள் நுழையும் மன நிலையில் அவர்கள் இருந்திருப்பார்கள் போலும்.

காயமடைந்த போராளிகளுக்கு அவர்களுடைய குடும்பத்தவர்களின், அறிந்தவர்களின் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முயன்றுகொண்டிருந்தேன். நேரம் செல்லச்செல்ல பெரும்பாலானவர்கள் வெளியேறி விட்டிருந்தனர்.

பூரணியும் அவருடன் சில போராளிகளும் என்ன செய்வதென்றே புரியாத சூழ்நிலையில் நின்றிருந்தார்கள்.

பூரணி நடக்க முடியாதவாறு தனது காலில் பலமான காயமடைந்தவர். சுழிபுரத்தில் பிறந்த இவர் மூத்த தமிழ் அரசியல் தலைவரான திரு. அமிர்தலிங்கத்தின் நெருங்கிய உறவினர்.

திரு. அமிர்தலிங்கத்தைப் போன்றே பூரணியும் மிகுந்த பேச்சுவன்மை கொண்டவர். பூரணியின் பெற்றோர் காலமாகியிருந்தனர். சகோதரர்களும் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்திருந்தனர்.

“நாங்கள் வாழத்தெரியாமல் இயக்கத்திற்கு வரயில்லை, மக்களுக்காகப் போராட வேணும் எண்டுதான் வந்தனாங்கள்.

நாங்களும் மற்றைவையைப் போல வாழ்ந்திருந்தால் எப்பிடியோ வாழ்ந்திருக்கலாம். என்ன செய்யிறது எங்களைப் போல எத்தினை பேரை இழந்திட்டடம், இயக்கத்தை நம்பி கையைக் காலை குடுத்திட்டு இண்டைக்கு என்ன செய்யிறதெண்டே தெரியாமல் நிக்கிறம்” என மிகவும் மனங்கசந்து வருந்திக் கொண்டிருந்தார்.

இயக்கத்தின் தளபதிகளில் சூசையின் தொடர்பு மாத்திரம் கிடைக்கக் கூடியதாக இருந்தது. தளபதி சூசையைச் சந்திப்பதற்காகப் பூரணி செல்லத் தயாரானார்.



**பதினாறாம் திகதி மாலை நெருங்கத் தொடங்கியது.**

முள்ளிவாய்க்கால் வீதியில் முல்லைத்தீவு நோக்கி நகரத் தயாரான நிலையில் மக்கள் நிறைந்து நின்றார்கள். இயக்கத்தின் உயர்மட்டத்தில் என்ன நடக்கிறது என்று எதுவும் தெரியாத நிலையில், போராளிகள் இயக்கத் தலைமையால் முற்றிலுமாகக் கைவிடப்பட்டிருந்தார்கள்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் ஆங்காங்குச் சிதறிக் கிடந்தன. காயப்பட்டுக் கிடந்தவர்களுக்குக் கூட யாருமே உதவி செய்ய முடியாத நிலைமையாக இருந்தது.

**உயிருடன் இருக்கும் ஒரு போராளி மக்களோடு சேர்ந்து வெளியேற வேண்டும் அல்லது தன்னைத்தானே அழித்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தவிர வேறு வழியேதும் இருக்கவில்லை.**

இந்த நிலையில் ஆயிரக்கணக்கான போராளிகளும் மக்களோடு இணைந்து வெளியேறத் தயாராகியிருந்தார்கள்.

ஆபத்துக் காலத்தில் கோழி தனது சிறகுகளுக்குள் குஞ்சுகளை இழுத்துக்கொள்வதுபோலத் தமிழ் மக்கள்

தம்முடனே போராளிகளையும் பாசத்துடன் அரவணைத்து உள்வாங்கிக் கொண்டார்கள்.

காயமடைந்து அனாதரவாகக் கிடந்த சில போராளிகளையும் மக்களில் சிலர் தூக்கிச் சுமந்துகொண்டு வெளியேறத் தயாரானார்கள்.

பல போராளிகளுக்கு வெளியேறிச் செல்வதற்கான விருப்பம் இருந்தும் அடுத்து என்ன நடக்கும் என்ற மனப் பயம் காரணமாகத் தயக்கத்துடன் பின்வாங்கினார்கள்.

கட்டுமீறிய வெள்ளம் கரை தாண்டத் துடிப்பதுபோல மக்கள் அலையலையாக முள்ளிவாய்க்கால் வீதியில் திரண்டிருந்தனர்.

மாலையாகும் வரை மக்கள் வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்திவைக்க வேண்டுமெனத் தளபதி சூசை குறிப்பிட்டிருந்த தாகவும், அதற்காக இரண்டொரு போராளிகளை வீதியில் நிறுத்தி வைத்திருப்பதாகவும் போராளிகள் மத்தியில் பேசிக் கொண்டார்கள்.

**மதியத்திற்குப் பின்னரான பொழுதில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஒருசில போராளிகளையும் தள்ளி விழுத்திக் கொண்டு, அலைபோல மக்கள் வெளியேறத் தொடங்கினார்கள்.**

யார்தான் ஏற்றுக்கொண்டாலென்ன, மறுத்தாலென்ன? விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் படுபயங்கரமான முறையில் தோல்வியடைந்துவிட்டது என்ற உண்மையை அக்கணத்தில் உணர்ந்துகொண்டேன்.

முள்ளிவாய்க்காலில் சன நெருக்கடி குறையத் தொடங்கியது.

இராணுவத்தினரின் துப்பாக்கி ரவைகள் எமது தலைகளுக்கு மேலாகப் பறந்துசென்றன. இன்னும் சில மணித் தியாலங்களில் எல்லாமே முடிவுக்கு வந்துவிடும்.

இப்போதுதான் நான் என்னைப் பற்றிய முடிவை எடுக்கவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதை உணர்ந்தேன்.

சயனைட் குப்பியைக் கடிப்பதா? என்னை நானே சுட்டுக் கொல்வதா? உணர்ச்சிக்கும் புத்திக்குமான போராட்டத்தில் சிக்கித் திணற ஆரம்பித்தேன்.

ஒரு குடும்பமாக வாழ்ந்த விடுதலைப் போராட்ட வாழ்வும் உயிரைப் பிழிந்தெடுத்த சக போராளிகளின் மரணங்களும் இலட்சியத்திற்காக மரணிக்கத் தயாராகவிருந்த மனத்துணிவும் இதயத்தில் இரும்பாகக் கனத்தது.



**எதிரிகளாகிய இலங்கைப் படையினரிடம் சரணடைவதை முற்றிலுமாக மனம் ஏற்க மறுத்தது. என்னை நானே அழித்துக் கொள்வது பயனற்ற சாவு எனப் புரிந்தாலும், உணர்ச்சிப்பூர்வமாக உயிரை மாய்த்துக்கொள்வதுதான்**

**ஒரு விடுதலைப் புலிக்குரிய பண்பு என்பதை உணர்ந்திருந்தேன்.**

உறுதியும் வீரமும் மிக்க போராளி என்பதை நிரூபிப்பதற்காகச் செத்துப்போவதா? உயிரைக் காத்துக்கொள்ளும் கோழையாகத் தப்பியோடுவதா?

நெஞ்சு வெடித்துவிடுவதுபோல அடைத்துக்கொண்ட நிலையில் கண்ணீர் மட்டுமே பொங்கிக்கொண்டிருந்தது.

அதேவேளை எனது உள்ளுணர்வு தற்கொலை மரணத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்குவதும் புரிந்தது. அந்தக் கணத்தில் நான் தற்கொலை செய்துகொள்வது எவ்விதத்திலும் பயனற்ற ஒரு செயலாகவே மனதுக்குப்பட்டது.

என்ன என்பது தெளிவில்லாத அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறிச் சென்று இன்னதென்றே தெரியாத அதன் விளைவுகளுக்குள் பயணிப்பது எந்த அளவுக்கு ஒரு பெண் போராளிக்குப் பாதுகாப்பான முடிவாக அமையும் என்று சிந்திக்கத் தொடங்கினேன்.

இப்போதிருக்கும் இருண்ட சூழ்நிலையை எதிர்கொள்ளும் திராணியற்று தற்கொலை செய்துகொள்வதைவிட, உயிரோடிருந்து எதிர்வரப்போகும் சூழ்நிலைகளைக் கடந்து செல்வதற்குத்தான் அதிக மனோபலம் தேவைப்படும் என்பதை அறிவு உணர்த்தியது.

உணர்ச்சியும் புத்தியும் குறிப்பிட்ட அளவு விகிதங்களில் கலந்ததாகவே முடிவுகள் இருக்கவேண்டும் எனக் கருதுவதுதான் என்னுடைய தனிப்பட்ட இயல்பு.

தனிப்பட்ட உணர்ச்சிகளின் உந்துதலினால் மட்டுமே நான் போராளியாக இணையவில்லை. உயர்தர வகுப்பு படிக்கின்ற மாணவியாக அன்றைய சூழ்நிலையில் எனக்கிருந்த அறிவுக்கேற்ற வகையில் சமூகத்திற்கான சேவை செய்யும் மனப்பாங்குடனேயே நான் இயக்கத்தில் இணைந்தேன்.

அன்றிருந்த புறச்சூழ்நிலையில் ஆயுதம் ஏந்திப் போராடுவதுதான் எனது மக்களுக்கு ஆற்றக்கூடிய உயர்ந்த சமூகச் சேவையென நான் கருதினேன்.

ஒவ்வொரு போராளிகளினதும் மரணத்திற்குப் பின்னாலும் ஆக்கப்பூர்வமான நன்மை ஒன்று எனது சமூகத்திற்குக் கிடைக்கும் என மனப்பூர்வமாக நம்பினேன்.

அப்படியொரு பொது நன்மைக்காக உயிரை அர்ப்பணிப்பதென்பது எனக்கு முற்றிலும் சம்மதமாயிருந்தது.

அந்தக் காலகட்டத்தில் வேறெந்த தெரிவுகளுக்கும் இடமில்லாதவாறு விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் செல்வாக்கைப் பெற்று பலம் பொருந்திய ஒரு விடுதலை இயக்கமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த காரணத்தால் நானும் ஒரு விடுதலைப் புலியாக இணைந்துகொண்டேன்.

மக்களின் விடுதலைக்காகப் போர் புரியும் கனவுடன் இயக்கத்தில் சேர்ந்த எனக்கு, நான் நினைத்துக்கூடப் பார்த்திராத வகையில் மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்யும் பணி தரப்பட்டது.

நான் மக்களை மிகவும் நேசித்த காரணத்தால் மிகுந்த விருப்பத்துடன் கடினமாக உழைத்தேன். எல்லா மக்களும் நிம்மதியும் சமத்துவமுமாக வாழும் வாழ்க்கையை நினைத்துப் பார்ப்பதே ஆனந்தமாயிருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் வெற்றியடைந்து அப்படி ஒரு நாட்டை உருவாக்குவார்கள் என உறுதியாக நம்பினேன். அதற்காக எனது உள்ளம், உடல், உயிர், ஆன்மா அனைத்தையும் அர்ப்பணித்துப் போராடுவது எனத் திடசங்கற்பம் கொண்டேன்.

அதன் பின்னரான காலங்களில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களும் படிப்பினைகளும் போராட்டத்தில் நம்பிக்கையை ஏற்படுத்திய நிலைமைகளும் அவநம்பிக்கையை ஏற்படுத்திய முடிவுகளும் மக்கள் நலனை முன்னிறுத்தாத செயற்பாடுகளும் எனக்குள் பலமான உணர்ச்சிக் கொந்தளிப்புக்களையும், சுய விமர்சனத்தையும் ஏற்படுத்தின.

ஆனாலும் ஆயிரமாயிரம் உயிர்களின் அர்ப்பணிப்பு வீண் போகாதபடி, கனிந்துவந்த அரசியல் சூழ்நிலைகளைத் தலைவர் பயன்படுத்தி மக்களுக்கு ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவார் என அனைத்துப் போராளிகளையும் போல் நானும் உறுதியாக நம்பினேன்.

இறுதிப் போருக்கான முடிவைத் தலைமை எடுத்தபோது எனது சிறிதான அறிவுக்கெட்டிய வகையில் அது ஒரு சிறந்த முடிவாகப்படவேயில்லை.

அதன் பின்னரான காலகட்டத்தில் வெல்லப்பட முடியாத யுத்தமொன்றுக்காகப் போராளிகளுடைய உணர்ச்சிகளும் உயிர்களும் கையாளப்பட்ட விதங்கள், மக்களுடைய நம்பிக்கையைப் பொய்யாக்கிய செயற்பாடுகள் எனக்கு மட்டுமல்ல பல போராளிகள், பொறுப்பாளர்கள் மற்றும் தளபதிகளுக்கும் உடன்பாடானதாக இருக்கவில்லை.

ஆனாலும் தலைமையின் கட்டளைக்குக் கீழ்ப்பணிந்து செயற்படுவதே எமது கொள்கைப் பிடிப்புக்கும் இயக்க விசுவாசத்திற்குமான அடையாளமாயிருந்தது.

அப்படியானதொரு இராணுவ பண்பாட்டின் அடிப்படையில்தான் நாம் வளர்க்கப்பட்டிருந்தோம்.

புதுக்குடியிருப்பில் நடந்த இறுதியான சந்திப்பில் பொட்டு அம்மான் கூறியதுபோலத் தலைவர் ஒரு அதிசயம் நிகழ்த்துவார் என்று நம்பிக்கொண்டு, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து செயற்படுவதைத் தவிர எமக்கு வேறு வழி இருக்கவில்லை.

மே பதினாறாம் திகதி மாலை, நானும் அங்கிருந்த போராளிகளுடன் சேர்ந்து வெளியேறுவது எனத் தீர்மானித்தேன்.



**வார்த்தைகளால் விபரிக்க முடியாதபடி இரத்தமும் தசையுமாக இதயத்தை அறுத்துக் கொல்லும் வலிகளோடு முள்ளிவாய்க்காலிலிருந்து வெளியேறிய அந்தச் சூழ்நிலையை இலகுவில் புரிய வைக்க முடியாது.**

என்னுடனிருந்த போராளிப் பெண்ணொருவர் தந்த பழசாய்ப் போன சல்வார் உடையை அணிந்துகொண்டு மக்களோடு மக்களாகக் கலந்த நாங்கள், நடந்துபோனதாக எனக்கு நினைவில்லை. கரைகடந்த மாபெரும் மக்கள் வெள்ளத்தினூடே இழுத்துச் செல்லப்படுவதாகவே உணர்ந்தோம்.

29.07.1991 விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்ததிலிருந்து 16.05.2009 வரையான எனது பதினெட்டு வருடப் போராட்ட வாழ்க்கை அக்கணத்தில் முடிவடைந்து போனது.

அடுத்து என்ன நடக்கும் என நினைத்துப் பார்ப்பதே பயங்கரமாக இருந்தது. எமக்குப் பின்புறமாக இன்னமும் வெடிகள் அதிர்ந்து கொண்டேயிருந்தன.



கன்னங் கரிய புகை மண்டலங்கள் வானளாவி எழுந்துகொண்டிருந்தன. போர்க்களத்தின் வாழ்வை ஒன்றாகப் பகிர்ந்துகொண்ட, **உறவுகளின் உயிர்வலி நிரம்பிய ஏக்க விழிகளின் இறுதி விசும்பல்கள் வங்கக்கடலின் பேரலைகளாக எனது நெஞ்சுக்குள் மோதித் தெறித்துக் கொண்டிருந்தன.**

உயிரற்ற சடலத்தைப் போல என்னைச் சுமப்பதே எனக்குப் பெரும் பாரமாயிருந்தது. மக்களால் நிறைந்துபோயிருந்த முல்லைத்தீவு மைதானத்தில் மின் விளக்குகள் பகலைப் போல ஒளி சிந்திக் கொண்டிருந்தன.

இராணுவத்தினர் மைதானத்தைச் சூழ்ந்து நின்றனர். மனதிற்குள் ஆழ்ந்த இருட்டாகத் தென்பட்ட அடுத்த கட்டத்துக்குள்ளே நானும் பிரவேசித்தேன்.

## சரணடைவும் சிறைச்சாலையும்: "உங்கட தலைவர் செத்துப் போனார், அழுங்கோ எல்லாரும்" என கேலியாக அழுது காட்டிய இராணுவத்தினாகள்!

• "இயக்கத்தில் இருந்தவர்கள் எழும்பி வாருங்கள்; ஒருநாள் இயக்கத்தில் இருந்தாலும் சரி கட்டாயமாக எழுந்து வரவும்" என அறிவிக்கப்பட்டது.

• 18.05.2009 நள்ளிரவு ஓமந்தை இராணுவச் சோதனை நிலையத்தைச் சென்றடைந்தோம். வாகனத்திலிருந்து இறக்கப்பட்டபின் அனைவரையும் ஒரு இடத்தில் அமர்ந்து கொள்ளும்படி கூறப்பட்டது.

• தலைவர் கொல்லப்பட்ட காட்சிகள் அந்தப் புகைப்படங்களில் வெளியிடப்பட்டிருந்தது. "உங்கட தலைவர்

செத்துப் போனார், அழுங்கோ எல்லாரும்" எனக் கூறியதுடன் கேலியாக அழுதும் காட்டினார். மண்டபத்திலிருந்த அனைவரிடமும் சட்டென ஒரு சிறிய ஒலியெழுநது அக்கணமே அடங்கிப்போனது




முள்ளிவாய்க்கால் வீதியுடாக வட்டுவாகல்பாலம் கடந்து முல்லைத்தீவின் மையப்பகுதியை நோக்கி மக்கள் வெள்ளம் போல் நகர்ந்துகொண்டிருந்தார்கள்.

மக்கள் வெளியேறிக்கொண்டிருந்த பாதையைத் தவிர்த்து வீதியின் இரு கரையோரமுமாக இராணுவத்தினர் முள்ளிவாய்க்காலை நோக்கித் தாக்குதல்களை நடத்தியவாறு முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர்.

பெரும் எண்ணிக்கையில் மக்களின் வருகையை எதிர்பார்த்து அதற்கேற்ற வகையில் பல பாதுகாப்பு ஒழுங்குகளை இராணுவத்தினர் அமைத்திருந்தனர்.

யுத்தத்தின் இறுதிக்கட்டமாக மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதும் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தமை தெளிவாகியது.

சற்று முன்வரை ஆயுதத்துடன் எதிர்த்து நின்ற இராணுவத்தினர் எங்களை என்னவிதமாக நடத்தப் போகிறார்களோ என்ற அச்சமும் குழப்பமும் சேர்ந்து போராளிகளின் மனங்கள் குற்றவுணர்வுடன் நடுங்கிக்கொண்டிருந்தன.




முல்லைத்தீவு மைதானத்தை அடைந்தபோது இருள் சூழத் தொடங்கியிருந்தது. சுற்றிவர முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. மைதானத்தைச் சுற்றிலும் இராணுவத்தினர் காவலில் நின்றிருந்தனர்.

துப்பாக்கி ரவைகளும் குண்டுச் சிதறல்களும் இல்லாத ஒரு ஆசுவாசத்தை அனுபவித்தபடி பசியும் களைப்பும் வாட்டியெடுக்க மக்கள் அனைவரும் அந்தந்த இடங்களிலேயே கூட்டம் கூட்டமாக அமர்ந்துகொண்டார்கள்.

ஒரு மலைப்பாம்பு போல மரணம் அந்த மக்களை விழுங்கிக் கக்கியிருந்தது. மக்களோடு மக்களாக ஆயிரக்கணக்கான போராளிகளும் அந்த மைதானத்தில் இலங்கைப்

படையினரிடம் எமது தலைவிதியை ஒப்படைத்துவிட்டு அமைதியிழந்த மனத்துடன் காத்திருந்தோம்.



இராணுவத்தினரால் தண்ணீர்ப் போத்தல்களும் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன. நானும் சில போராளிகளும் மைதானத்தின் மத்தியாக ஒரு பகுதியில் அமர்ந்திருந்தோம்.

என்னைப் பொறுத்தவரை பசி தாகத்தை உணரக்கூடிய மனநிலையில் நான் இருக்கவில்லை. பயங்கரமான தவறொன்றைச் செய்துவிட்டதான குற்றவுணர்வு மட்டுமே வாட்டி வதைத்துக்கொண்டிருந்தது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் கேட்டுக்கொண்டிருந்த வெடியதிர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியிருந்தன.

வெளியேறி வர விருப்பமிருந்தும் சரணடைந்தால் என்ன நடக்குமோ என்ற பயத்துடன் தயங்கி நின்ற பல போராளிகளின் முகங்கள் என் மனதிற்குள் சுழன்றுகொண்டேயிருந்தன.

இராணுவத்தினர் மும்முரமாக மக்களுக்கான தேவைகளைக் கவனிப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். மறுநாள் புலரத் தொடங்கியது. அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சம் நிறைந்தவர்களாக மக்கள் அனைவரும் அடுத்த கட்டத்திற்குத் தயாராகத் தொடங்கியிருந்தார்கள்.

தமது அடையாள அட்டைகளையும் இதர ஆவணங்களையும் தயாராக எடுத்துவைத்துக் கொண்டிருந்தார்கள். எங்களிடம் தயார்படுத்திக் கொள்வதற்கு ஆவணங்கள் எதுவுமிருக்கவில்லை.

**எனது இலங்கை தேசிய அடையாள அட்டையும் கடவுச் சீட்டும் எங்கே கைவிடப்பட்டது என்பதுகூட நினைவிலில்லை.** ஏனெனில் அவற்றை எனது வாழ்க்கையில் மீண்டும் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஒன்று அமையுமென நான் நினைத்திருக்காததால் அவற்றைப் பத்திரப்படுத்தவில்லை.
என்னுடன் வந்திருந்த சில போராளிகளும் அவர்களின் உறவினர்களையோ ஊரவர்களையோ தேடிக் கண்டுபிடித்து அவர்களுடன் போய்ச் சேரத் தொடங்கினார்கள்.

நானும் எனது அம்மாவையோ சகோதரிகளின் குடும்பங்களையோ அந்த மக்கள் கூட்டத்திற்குள் எப்படிக் கண்டுபிடிப்பது எனப் புரியாமல் திகைத்து நின்றேன்.

பதினெட்டு வயதில் அம்மாவுக்குப் பொய் சொல்லிவிட்டு இயக்கத்திற்குப் போய் இணைந்துகொண்ட நாளுக்குப் பின்பு இப்போதுதான் அம்மாவின் பாதுகாப்பு மீண்டும் எனக்குத் தேவைப்பட்டது.




**தமிழினி, தாய்**

**எனது தங்கையின் கணவர் அந்தச் சனக்கூட்டத்திற்குள் எப்படியோ என்னைக் கண்டுபிடித்து விட்டார்.**

வேகமாகச் சென்று எனது அம்மாவையும் கூட்டிக் கொண்டு நான் நின்ற இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

இறுதிவரை எனக்காகவே யுத்தப் பிரதேசத்திற்குள் நின்றிருந்த எனது தாயார் இனி என்னைக் காணவே முடியாது என்கிற நிலைமையில் ஏனைய சகோதரிகளுடன் வெளியேறியிருந்தார்.

முல்லைத்தீவு மைதானத்தில் என்னைக் கண்டதும் கட்டியணைத்து முத்தமழை பொழிந்து கண்ணீர்விட்டுக் கதறத் தொடங்கிவிட்டார்.

தான் வணங்கிய தெய்வங்களையெல்லாம் கூப்பிட்டு, உயிர் மீண்டு வந்த பிள்ளையை இனியும் காப்பாற்றித் தருமாறு கண்ணீருடன் வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்.

திருவிழாவில் தொலைந்துபோன தனது நாலு வயது பிள்ளை மீண்டும் கிடைத்துவிட்ட நிம்மதியுடன் என்னைத் தனது நெஞ்சோடு அணைத்துக்கொண்ட அம்மாவின் அன்புக்கு முன்னால் குற்ற மனச்சாட்சியுடன் ஒடுங்கிப் போயிருந்தேன்.

தனது கால்வலியையும், இயலாமைகளையும் மறந்து, இராணுவத்தினரால் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்த உணவுப் பார்சல், குடிநீர் என்பனவற்றை அந்த மக்கள் நெரிசலுக்குள் மிகுந்த பிரயத்தனப்பட்டுப் பெற்றுக்கொண்டு வந்து என்னை வற்புறுத்தி உண்ணச் செய்தார்.

அப்பாவை இழந்த நிலையில் குடும்பத்தில் மூத்த மகளாகிய நான் அம்மாவுக்கு எப்போதுமே ஆறுதலாக இருந்தது கிடையாது. அம்மாவின் நம்பிக்கைகளைப் பாழடித்து அவருக்குத் துன்பம் கொடுத்ததைத் தவிர, வேறு எவ்விதத்திலேனும் பிரயோசனமில்லாத பெண்ணாகவே இதுவரை நான் இருந்திருக்கிறேன்.

**இப்போதும் ஒரு ஆபத்து நிறைந்த சுமையாகவே அவரிடம் வந்து சேர்ந்திருக்கிறேன். என்னைத் தனது கைப்பிடியிலிருந்து நழுவவிடாமல் ஒரு சிறு குழந்தையைக் கண்பார்வைக்குள் வைத்திருப்பதைப்போல அம்மா என்னைக் காத்துக்கொண்டு வந்து சேர்த்திருக்காது விட்டால் இன்று நான் உயிரோடிருந்திருக்க முடியாது.**

அன்றைய பகல்பொழுதும் முல்லைத்தீவு மைதானத்திலேயே கழிந்தது. மக்கள் படிப்படியாக உள்வாங்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் அலையலையாக இன்னும் மக்கள் வந்து சேர்ந்துகொண்டே இருந்தார்கள்.

மீண்டும் இரவு நேரமாகியபோதுதான் எமது பரிசோதனைகள் முடிந்து நானும் எனது அம்மாவும் உள்ளே அனுமதிக்கப்பட்டோம். அந்த இரவும் அதே மைதானத்தில். நானும் எனது அம்மாவும் இன்னும் இரண்டு போராளிப் பிள்ளைகளுமாகத் தங்கினோம்.

வெறும் புழுதி நிலத்தில் ஒரு போர்வையை விரித்து நீண்ட வருடங்களுக்குப் பின்பு அம்மாவுக்கருகில் பாதுகாப்பாகப் படுத்துக்கொண்டு என் துயரச் சுமைகள் பாறாங்கற்களாய் அழுத்த நான் இரவு முழுவதும் விழித்திருந்தேன்.

மறுநாள் காலை முல்லைத்தீவு வீதியில் நிறுத்தப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான பேருந்துகளில் மக்கள் ஏற்றப்பட்டனர்.

நானும் அம்மாவும் ஒரு பேருந்தில் ஏறிக்கொண்டோம். எமது வாகனத்தில் வேறு சில போராளிகளும் இயக்கத்தின் பராமரிப்பு நிலையத்திலிருந்து வந்திருந்த குழந்தைகளும் இருந்தனர்.

அந்தக் குழந்தைகளை உதவி வழங்கும் அமைப்பைச் சேர்ந்தவர்கள் யாரேனும் பொறுப்பெடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்தது.

இந்த மட்டில் உயிர்மீண்டிருந்த அவர்களின் முகங்களைப் பார்க்கவே முடியாமல் எனது நெஞ்சம் கொதித்துக்கொண்டிருந்தது. அந்த வாகனத் தொடரணி இடையிடையே பல இடங்களில் நின்று தாமதித்து நகர்ந்தது.

18.05.2009 நள்ளிரவு ஓமந்தை இராணுவச் சோதனை நிலையத்தைச் சென்றடைந்தோம். வாகனத்திலிருந்து இறக்கப்பட்டபின் அனைவரையும் ஒரு இடத்தில் அமர்ந்துகொள்ளும்படி கூறப்பட்டது.

நள்ளிரவிலும் மின் விளக்குகள் ஒளிவெள்ளத்தை வாரியிறைத்துக்கொண்டிருந்தன. இலங்கை நாட்டின் ஜனாதிபதி அவர்களால் மக்கள் அனைவரும் வரவேற்கப்படுவதாகவும், நீண்டகால யுத்தம் வெல்லப்பட்டு மக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், இனி அவர்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை என்றும், இன்னும் வேறு

பல விடயங்களைப் பற்றியும், ஒலி பெருக்கியில் ஒருவர் உரையாற்றிக் கொண்டிருந்தார்.




சற்று நேரத்தில் "**இயக்கத்தில் இருந்தவர்கள் எழும்பி வாருங்கள்; ஒருநாள் இயக்கத்தில் இருந்தாலும் சரி கட்டாயமாக எழுந்து வரவும்**" என அறிவிக்கப்பட்டது.

அம்மா மிகவும் பயப்படத் தொடங்கினார். நிச்சயமாகவே இயக்கத்திலிருந்தவர்களுக்கான பதிவுகள், நடவடிக்கைகள் வேறுபட்டதாக இருக்கும் என்பது எனக்குப் புரிந்த காரணத்தால் நான் அம்மாவை ஆறுதல் படுத்தினேன். "நீங்கள் பயப்பட வேண்டாம் அம்மா.

உங்களை மக்களுக்கான இடம்பெயர்ந்தோர் முகாமுக்கு அனுப்புவார்கள். அங்கே தம்பி தங்கச்சிமாரின் குடும்பங்களோடு, நீங்கள் கவனமாகப் போய்ச் சேர்ந்துகொள்ளுங்கள்.

நான் எப்படியாவது உங்களுடன் தொடர்புகொள்வேன் அம்மா, பயப்படாதையுங்கோ" என ஆறுதல் கூறிவிட்டுத் தாமதிக்காமல் என் சிறிய பையுடன் எழுந்து சென்று இயக்கத்திலிருந்தவர்களின் வரிசையில் சேர்ந்துகொண்டேன்.

என்னை மறைத்துப் பாதுகாப்புத் தேடிக் கொள்ள வேண்டும் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை.

இந்த மாதிரியான நிலைமையில் நேர்மையாகச் செயற்படுவது ஒன்றுதான் என்னைக் காப்பாற்றும் என்பதில் உறுதியாக இருந்தேன். ஒரு குறிப்பிட்டளவு ஆட்கள் சேர்ந்ததும் ஒரு வழிகாட்டி எங்களை அருகிலிருந்த இன்னொரு இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

அன்று மே மாதம் பத்தொன்பதாம் திகதி பொழுது விடியத் தொடங்கியிருந்தது. சிறிது தூரம் நடந்துசென்றதும் ஒரு பெரிய மண்டபத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் அமர்ந்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

அத்தனை பேருமே இயக்கப் போராளிகள். ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

இப்போது வெடியதிர்வுகளே கேட்காத தூரத்திலிருந்தோம்; பிரிந்து வந்த உறவுகளை நினைத்தபோது தாங்க முடியாத வேதனையில் மனம் புண்ணாக வலித்துக்கொண்டிருந்தது.

மண்டபத்தில் இருந்தவர்கள் அனைவரும் இயக்கத்திலிருந்தவர்கள் என்றாலும், நன்கு அறிமுகமான முகங்கள் இருக்கின்றதா எனக் கண்கள் தேடியலைந்தன.

ஆனாலும் எவருடனும் பேச வேண்டும் எனத் தோன்றவில்லை. என்னைப் போலவே பலரும் மனமொடிந்த

நிலையில், மௌனமாக அமர்ந்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

இயக்கத்திலிருந்தவர்கள் ஒவ்வொருவரது முழுமையான விபரங்களும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் அதிக சிரத்தையுடன் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

தனித் தனியாகப் புகைப்படங்களும் எடுக்கப்பட்டன. இப்படியாக ஒவ்வொருவரையும் பதிவு செய்வதற்கு அதிக நேரமானது.

சரளமாகத் தமிழ் பேசக்கூடிய இராணுவத்தினரே பதிவுகளை மேற்கொண்டனர். அன்றைய பகல்பொழுதும் கடந்துகொண்டிருந்தது. இன்னும் புதிதாக ஆட்கள் வந்துகொண்டேயிருந்தார்கள்.

பதிவு நடவடிக்கைகள் முடிந்தவர்கள் பேருந்துகளில் ஏற்றப்பட்டு வேறெங்கோ ஒரு இடத்திற்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள்.

இராணுவத்தினருக்கு உதவியாக ஒருசில தமிழ் இளைஞர்கள் ஓடித் திரிந்து வேலைகள் செய்வதை அவதானிக்க முடிந்தது.

அவர்களில் சிலர் பேசிய அவமானப்படும்படியான பேச்சுக்கள், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இருந்தது. உச்சக்கட்ட சகிப்புத் தன்மையுடன் மனதை ஒரு கோமா நிலையில் வைத்துக்கொண்டிருந்தேன்.



**மெதுவாக நகர்ந்துகொண்டிருந்த வரிசையில் முன்னேறி, பதிவு மேசைக்கு அருகாக வந்துவிட்டிருந்தேன். அப்போது "தமிழினியக்கா . . . தமிழினியக்கா . . ." என்னை நன்கு**

**அறிந்தவர் போல ஒருவர் அழைக்கும் சத்தம் கேட்டுத் திரும்பினேன்.**

அந்தத் தமிழ் இளைஞர்களில் ஒருவர் என்னை எழுந்து வரும்படி சைகை செய்தார். அவருடன் மேலும் இரண்டு இராணுவத்தினர் அவ்விடத்தில் நின்றிருந்தனர்.

என்ன நடக்கப்போகிறதோ என்ற தயக்கத்துடனும் பயத்துடனும் அவ்விடம் சென்றேன்.

நான் தமிழினிதான் என்பதை மறைக்காமல் அவர்களிடம் ஒப்புக்கொண்டேன். என்னை நேராகப் பதிவுசெய்யும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

எனது முழுப்பெயர், முகவரி, இயக்கத்தில் செயற்பட்ட காலம் என்பவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டன. எந்த ஒளிவுமறைவுமில்லாமல் எனது தனிப்பட்ட விபரங்களைப் பதிவுசெய்துகொண்டேன்.

என்னைப் புகைப்படமும் எடுத்தனர். நான் உண்மையாக இருக்கும் பட்சத்தில் யுத்தத்தில் சரணடைந்த ஒருவருக்குக்

கிடைக்கும் நீதி எனக்கும் கிடைக்குமென ஆரம்பத்திலிருந்தே மெலிதான ஒரு எதிர்பார்ப்பு என்னிடம் இருந்தது.

எனது விபரங்கள் அனைத்தும் பதிவுசெய்யப்பட்டதும் அந்த மண்டபத்தின் ஒரு ஓரத்தில் தனியாக இருத்தி வைக்கப்பட்டேன். எனக்கான நடவடிக்கைகள் வித்தியாசப்படுவதை உணர முடிந்தது.




**அப்பொழுது அங்கு வந்த இராணுவ உயர் அதிகாரி ஒருவர் என்னைக் கண்டதும் "வணக்கம் தமிழினி" எனச் சரளமான தமிழில் பேசினார். அவரைக் கண்டதும் எனக்கு மிக அதிர்ச்சியாக இருந்தது.**

அந்த மனிதரை முன்னர் எங்கேயோ சந்தித்துப் பேசிய நினைவு பொறி தட்டியது. ஒரு கணம்தான். தலைக்குள் மின்னலடித்ததைப்போலச் சுதாகரித்துக்கொண்டேன்.

சமாதான காலத்தில் வன்னிக்கு வந்த ஊடகவியலாளர்களோடு ஏதோவொரு சிங்கள ஊடகத்தின் சார்பில் அதன் பிரதிநிதியாக இவரும் வந்திருந்தார்.

அரசியல் பொறுப்பாளர் உள்ளிட்ட பல இயக்க முக்கியஸ்தர்களைச் சந்தித்ததுடன் கிளிநொச்சியில் அமைந்திருந்த அரசியல்துறை மகளிர் செயலகத்தில் என்னையும் சந்தித்திருந்தார்.

சரளமாகத் தமிழில் பேசக்கூடிய அவர், பல போராளிகள், பொறுப்பாளர்களுடன் போராட்டத்திற்குச் சார்பான ஒருவர் என்ற தோரணையுடன் மிக இலகுவாக நட்புரிமையுடன் பழகிய ஞாபகங்கள் வந்தன.

அது மட்டுமல்லாமல், 2004ஆம் ஆண்டில் முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப் மாலதியின் நினைவுநாள் நிகழ்வுகள்

மிகவும் எழுச்சியாகக் கிளிநொச்சியில் நடத்தப்பட்டபோது இவரும் கலந்துகொண்டு அனைவரோடும் தன்னை ஊடகவியலாளர் என அறிமுகப்படுத்திக்கொண்டு மிக இயல்பாகப் பல விடயங்கள் பற்றியும் உரையாடியதும் நினைவுக்கு வந்தது.

**அந்த இராணுவப் புலனாய்வு அதிகாரி எவ்வளவு சாதுரியமாகப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுக் கிளிநொச்சியின் சந்து பொந்துகளில் உலவித் திரிந்தார் என்பதைப் பெரும் திகைப்போடு நினைத்துப் பார்த்தேன்.**

எத்தகைய தந்திரோபாயங்களைப் பாவித்துப் புலிகளின் பிரதேசங்களுக்குள், இராணுவப் புலனாய்வு அணியினர் ஊடுருவி இருந்துள்ளார்கள் என்ற உண்மையைப் புரிந்துகொள்வதற்கு இதுவே நான் கண்ட சாட்சியாகும்.

நான் தன்னை அடையாளம் கண்டுகொண்டேன் என்பதை அந்த இராணுவப் புலனாய்வு அதிகாரியும் புரிந்துகொண்டார். அவர் என்னுடன் மிகவும் மரியாதையுடன் உரையாடினார்.

**“தமிழினி! நீங்கள் பயப்படத் தேவையில்லை. எல்லோரைப் போலவும் இப்பொழுதே உங்களைப் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்ப முடியாது.**

நீங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஒரு பொறுப்பாளராகச் செயற்பட்டுள்ள காரணத்தால் உங்களைச் சில விசாரணைகள் செய்ய வேண்டியிருக்கிறது.

எனவே உங்களை சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்கவுள்ளோம். நீங்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவீர்கள்” எனக் கூறினார்.

அதன் பின்பு நீண்ட மணித் தியாலங்களாக மீண்டும் அந்தப் பதிவு மண்டபத்தின் ஒரு ஓரத்தில் தனிமையாக அமர்த்தி வைக்கப்பட்டிருந்தேன்.

அடுத்து என்ன நடக்கப்போகிறது எனச் சிந்திப்பதை இயன்றவரை தவிர்க்க முனைந்தேன். ஒரு ஜடப்பொருள் போல அவ்விடத்தில் அமர்ந்திருந்து கண்ணுக்குத் தென்பட்ட காட்சிகளை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தேன்.

எதனையும் மூளைக்கு எடுத்துச் சென்று அலசி ஆராய்ந்து முடிவெடுக்கும் சக்தியை நான் முற்றாக இழந்திருந்தேன். ஒரு தமிழ் இளைஞர் அன்றைய பத்திரிகையொன்றைக் கொண்டுவந்து அதிலிருந்த புகைப்படங்களை அனைவருக்கும் காட்டினார்.

தலைவர் கொல்லப்பட்ட காட்சிகள் அந்தப் புகைப்படங்களில் வெளியிடப்பட்டிருந்தது. “உங்கட தலைவர் செத்துப் போனார், அழுங்கோ எல்லாரும்” எனக் கூறியதுடன் கேலியாக அழுதும் காட்டினார்.

**மண்டபத்திலிருந்த அனைவரிடமும் சட்டென ஒரு சிறிய ஒலியெழுந்து அக்கணமே அடங்கிப்போனது.**



**எந்த மனிதரை மரியாதைக்குரிய அண்ணனாகவும் பாசமிகுந்த தந்தையாகவும் கண் முன்னேயிருந்த கடவுளாகவும்** ஒவ்வொரு போராளியும் எமது இதயத்தில் இறுக்கமாக நிலைநிறுத்தியிருந்தோமோ, எந்த மனிதரின் வார்த்தைகளை மந்திரம் என்றெண்ணிச் செயற்பட்டோமோ, அந்த மனிதரின் மரணச் செய்தியைக் கேட்டும் கேளாதவர்களைப் போல இருக்க முயற்சித்த அந்தச் சூழ்நிலையைப் புரியவைப்பது மிகவும் கடினமானது.

அங்கிருந்த ஒவ்வொரு போராளியின் முகமும் பேயறைந்ததாக மாறியிருந்தது.

புலிகள் இயக்கத்தின் தலைவர் வகுத்த இறுதித் திட்டத்தை ஓரளவு தெரிந்துவைத்திருந்தவர்களுக்கு, நந்திக்கடல் நீரேரியில் என்ன நடந்திருக்கும் என்பதை அந்தச் செய்தி உணர்த்தியது.

இருப்பினும் எவருமே வாய் திறந்து எதையுமே பேசிக்கொள்ளவில்லை.

இப்போது ஒவ்வொருவரும் தனிநபர்கள் என்ற வகையில் தத்தமது நிலைமைகளை மேலும் மோசமாக்கிக் கொள்ளாமல் இருப்பதே சிறந்ததாகப் பட்டிருக்க வேண்டும்.

பத்தொன்பதாம் திகதி மாலையானதும், அங்கே கொண்டு வரப்பட்ட ஒரு பஸ் வண்டியினுள் ஏற்றப்பட்டேன். ஏற்கனவே பல ஆண் போராளிகளும் அதற்குள் இருந்தனர்.

வாகனம் ஓமந்தை கடந்து வவுனியா நோக்கிச் செல்லத் தொடங்கியது. சாதாரண உடை அணிந்திருந்த சி.ஐ.டி அதிகாரிகள் இருவர் அந்த வாகனத்தில் இருந்தனர். அவர்கள் என்னைப் பார்ப்பதும் தமக்குள் சிங்கள மொழியில் உரையாடிக்கொள்வதுமாய் இருந்தார்கள்.

விரைந்துசென்ற வாகனம் மரங்களடர்ந்த ஒரு வளைவினுள் நிறுத்தப்பட்டது. அனைவரும் இறக்கப்பட்டு ஒரு கட்டடத்தினுள் அழைத்துச் செல்லப்பட்டோம்.

கம்பிக்கூடுகளாலான சிறையறைகளைக் கொண்ட மண்டபம் ஒன்றினைக் கடந்து சென்றோம். அந்தக் கம்பியறைகளில்

இளைஞர்கள் பலர் நெருக்கமாக அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன்.

அதில் ஒரு சிலர் எனது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். வேகமாக நடந்துசென்றுகொண்டிருந்த காரணத்தால் எனக்கு அவர்களைத் திரும்பிப் பார்க்க முடியவில்லை, தலையைக் கவிழ்ந்தபடி நான் அவர்களைக் கடந்து சென்றேன்.

என்னோடு கொண்டு வரப்பட்ட ஆண்கள், வேறு வழியால் அழைத்துச் செல்லப்பட்டு விட்டார்கள்போலத் தெரிந்தது. இப்போது நான் மட்டும் தனியாக ஒரு அலுவலகத்திற்குக் கூட்டிச் செல்லப்பட்டேன்.

**நாலாம் மாடிக்கு அழைத்துச்செல்லப்பட்டேன்…எனது கை, கால் நகங்களையெல்லாம் பிடுங்கப் போகிறார்களோ, தலைகீழாகக் கட்டித் தொங்க விடுவார்களோ என**

**நினைக்கும்போதே தலைச்சுற்றி மயக்கம் வருவதுபோல இருந்தது.**

சாதாரண உடையணிந்த இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் பலர் குழுமியிருந்த ஒரு பெரிய அலுவலக அறையொன்றினுள் அழைக்கப்பட்டேன். பெரிய சுவரொட்டி போன்ற பேப்பர் ஒன்றை அதிகாரி ஒருவர் என்னிடம் காண்பித்தார்.

அதில் இயக்கத் தலைவர் உட்பட அனைத்துத் தளபதிகள், துறைசார்ப் பொறுப்பாளர்களின் புகைப்படங்களும் அச்சுப் பதிக்கப்பட்டிருந்தன.

அவற்றின் மீது பல அடையாளங்கள் இடப்பட்டிருந்தன. அதிலே இருந்த எனது புகைப்படத்தை அவர் குறிப்பிட்டுக் காட்டினார்.

வரிச் சீருடையும் தொப்பியும் அணிந்திருந்த என் புகைப்படத்தின் மீது கேள்விக்குறி போடப்பட்டிருந்தது.

அதிகாரிகள் பலர் என்னிடம் தமிழிலும் சிங்களத்திலும் பல கேள்விகளைக் கேட்டனர்.

எனக்குச் சிங்கள மொழி கொஞ்சமும் புரியவில்லை. நான் எதுவும் பேசாமல் நின்றேன். அதன்பின்பு தமிழ்த் தெரிந்த ஒரு அதிகாரி என்னிடம் கதைத்தார்.




**"உங்கட தலைவர் பிரபாகரனுக்கு என்ன நடந்தது?", "நீங்க அவரை கடைசியாக எப்போ சந்திச்சது?"**, "தளபதிகளில சிலபேர் செத்துப் போய்ட்டாங்க மத்தாக்களுக்கு என்ன நடந்ததெண்டு தெரியுமா? நீங்க எப்படி உள்ளுக்கு வந்தது?"

எனப் பலதரப்பட்ட கேள்விகளை என்னிடம் வினவினார்கள். அவர்களுடைய எந்தக் கேள்விக்கும் என்னால் தெளிவான பதில் கூற முடியவில்லை.

ஏனென்றால் கடைசி நாட்களில் எவருடைய தொடர்புகளும் எனக்குக் கிடைத்திருக்கவில்லை. தங்களுக்கிடையே சிங்களத்தில் என்னவோ பேசிக்கொண்டார்கள்.

பின்பு என்னை அழைத்துச் செல்லும்படி கூறப்பட்டது. இரவு உணவு பார்சல் ஒன்றும் சிறிய தண்ணீர்ப் போத்தல் ஒன்றையும் எனக்குத் தந்தார்கள். அங்கிருந்த கதிரையில் அமர்ந்து அந்த உணவை உண்ணும்படி கூறினார்கள்.

அப்போது ஒரு பிடி உணவைக்கூட உண்ணக்கூடிய மனநிலை எனக்கு இருக்கவில்லை. பின்பு சாப்பிடுவதாகக் கூறி அந்த உணவுப் பொதியைப் பெற்றுக்கொண்டேன்.

எம்மை ஏற்றிக்கொண்டு வந்த அதே பஸ்ஸில் மீண்டும் ஏற்றப்பட்டு வவுனியா பொலிஸ் நிலையத்திற்குக்

கொண்டுசெல்லப்பட்டேன். அங்கு போலிஸார் எனது விபரங்களை எழுதிக்கொண்டனர்.

அதன்பின் பெண் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த மிகச் சிறிதான ஒரு கம்பிக் கூட்டுக்குள் நானும் அடைக்கப்பட்டேன். அங்கு ஏற்கனவே மூன்று பெண்கள் அடைக்கப்பட்டிருந்தனர்.

ஒரு வயோதிப சிங்களப் பெண் வார்டன் அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் படுத்திருந்தார்.

எனது வாழ்வில் முதல் தடவையாக ஒரு சிறைக் கூட்டினுள் அடைக்கப்பட்டிருந்தேன். படுப்பதற்குத் தயாராக இருந்த அந்த மூன்று பெண்கள் எனக்கும் இடம் ஒதுக்கித் தந்தார்கள்.

நான் என்ன வழக்குக்காக வந்திருக்கிறேன் என விசாரித்தார்கள். எல்.டி.டி.ஈ எனக் கூறினேன். **“எங்க வைச்சு பிடிச்சவங்கள்”**எனக் கேட்டார்கள்.

“எப்பிடியெண்டாலும் உங்கள கொழும்புக்குத்தான் கொண்டுபோய் விசாரிப்பாங்கள். நான் போனமுறை இங்க இருக்கேக்க இப்பிடித்தான் ஒரு பிள்ளையைக் கொண்டுவந்து அடுத்த நாளே கொழும்புக்குக் கொண்டு போட்டாங்கள்.

நீங்கள் நல்ல லோயரைப் பிடிச்சு வழக்காடி வெளியில வரலாம்” என எனக்கு ஆலோசனையும் தரத் தொடங்கினார்கள்.

சாதாரண கிராமப் பெண்களான இவர்கள் இப்படியான சட்ட நடைமுறைகளையெல்லாம் இலகுவாக அறிந்து வைத்திருந்தது மட்டுமல்லாமல் அடிக்கடி போலிஸ் சிறைக்கு வந்து போவதையும் வழக்கமாகவும் கொண்டிருந்தார்கள் என்பதை நினைத்துப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

வன்னியில் சண்டை நடக்கிறது என அறிந்து வைத்திருந்தார்களே தவிர, தற்போதைய நிலவரம் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தாங்கள் விடுதலையானவுடன் தமது எதிராளிகளை எப்படியெல்லாம்

பழிவாங்க வேண்டுமென ஆக்ரோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களின் உரையாடலிலிருந்து அடிபிடி வழக்கிற்காகவும் மற்றும் கள்ளச் சாராயம் காய்ச்சிய வழக்கிலும் வந்திருப்பது புரிந்தது. அந்த இரவு நேரத்திலும் வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்தார்கள்.

உடலும், மனதும் களைத்துப் போயிருந்த அந்த நிலைமையில் நான் சுவரோரமாக முடங்கிக்கொண்டிருந்தேன். கண்கள் தூங்கி விழுந்தபோதும் பதற்றமான விழிப்பு ஏற்பட்டது.

மனம் படபடவென அடித்துக்கொண்டது. நள்ளிரவு கடந்த நிலையில் திடீர் பரபரப்புடன் கதவு திறக்கப்பட்டு மேலும் மூன்று பெண்கள் உள்ளே தள்ளப்பட்டனர்.

கதவு மீண்டும் அடைக்கப்பட்டது. அங்கு கொண்டுவரப் பட்டிருந்தவர்களைக் கண்டதும் நான் அதிர்ந்து போனேன். அவர்கள் எனக்கு நன்கு பரிச்சயமானவர்கள்.




**சோதியா படைப்பிரிவின் நிர்வாகப் பணிகளில் செயற்பட்டவர்கள்.** "நீங்கள் புனர்வாழ்வு நிலையத்திற்கு அல்லவா அனுப்பப்பட்டீர்கள், பின்பு என்னவாயிற்று?" என ஆதங்கத்துடன் கேட்டேன்.

அங்கே ஆயிரக்கணக்கில் ஆட்கள் வந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், சரியான சத்தமும் நெருக்கடியுமாக இருந்ததாகவும் சில பிள்ளைகள் மத்தியில் வாக்குவாதமும் சண்டையும் ஏற்பட்டதாகவும் தாங்கள் பிரச்சனையைச் சமாளிப்பதற்காகக் கதைக்கப்போனபோது கட்டாய ஆட்சேர்ப்பில் இணைக்கப்பட்ட ஒரு இளம் பெண் சத்தமாகப்

பேசித் தம்மை அடிக்க வந்ததாகவும் பிரச்சனை பெரிதாகிவிட்டதை, அறிந்த இராணுவத்தினர் தங்களை இங்கே அனுப்பிவிட்டதாகவும் கூறினார்கள்.

இனித் தங்களுக்கு என்ன நடக்கப் போகிறதோ என மிகுந்த குழப்பம் அடைந்திருந்தார்கள். காலை விடிந்ததும் குளிப்பதற்காக இரண்டு பேராக வார்டன் கூட்டிச் சென்றார்.

அவரால் நியமிக்கப்பட்ட நேரத்திற்குள் அங்கிருந்த ஒரேயொரு நீர்க்குழாயில் வடிந்துகொண்டிருந்த குறைவான நீரில் குளித்து மாற்றி உடுப்பதற்காக என்னிடம் இருந்த ஒரேயொரு சட்டையை அணிந்துகொண்டேன்.

காலை உணவாகச் சோறும் சம்பலும் பார்சலாகத் தரப்பட்டது.

என்னிடமிருந்த நேற்றைய உணவுப் பார்சலை எவருக்கும் தெரியாது குப்பை வாளியினுள் வீசியபோது, மனம் வருந்தியது. முள்ளிவாய்க்காலில் மக்கள் கஞ்சிக்காக நீண்ட வரிசையில் நின்ற நினைவுகள் மனதை எரித்தன.

வயிற்றுப் பசி சாப்பிடத் தூண்டினாலும் மன இறுக்கம் தொண்டைக் குழியினை அடைத்துக்கொண்டிருந்ததால் ஒருபிடி உணவுகூட உள்ளே இறங்க மறுத்தது.




சற்று நேரத்தில் சோதியா படைப்பிரிவுப் பெண்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். தம்மை வேறு ஒரு புனர்வாழ்வு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்போவதாகக் கூறினார்கள்.

2009 மே இருபதாம் திகதி மதியநேரம் கடந்தபோது என்னை வெளியே வரும்படி கூப்பிட்டார்கள். நேற்றிரவு என்னை

இங்கே விட்டுச்சென்ற சி.ஐ.டி அதிகாரிகளில் ஒருவர் வந்திருந்தார்.

எனது சுயவிபரங்களை ஒரு படிவத்தில் எழுதினார். மிகவும் கண்ணியமானதாக அவரது அணுகுமுறைகள் அமைந்திருந்தன.

இன்னும் சற்று நேரத்தில் கொழும்புக்கு என்னைக் கொண்டு செல்லவிருப்பதாகவும், அதற்குத் தயாராகும்படியும் கூறிவிட்டுச் சென்றார்.

அங்கிருந்தவர்களிடம் ஒரு பிளாஸ்டிக் போத்திலைக் கேட்டு வாங்கி அதில் தண்ணீர் நிறைத்துவைத்துக்கொண்டேன். மாலையானதும் ஒரு பஜரோ வாகனத்தில் ஏற்றப்பட்டேன்.

அதில் ஏற்கனவே இரண்டு பெண் பொலிஸார் அமர்ந்திருந்தனர். அந்த வாகனம் நேற்றிரவு சென்ற அந்த இடத்திற்குள் மீண்டும் பிரவேசித்தது.

சற்றுநேரத்தில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கனகரத்தினம் ஐயாவும் அந்த வாகனத்தில் ஏற்றப்பட்டார்.

அவரது முகமும் வாடி வதங்கிக் களைத்துப் போயிருந்தது. அந்தச் சூழ்நிலையில் எதுவும் கதைக்கத் தோன்றாத காரணத்தால் இருவரும் மௌனமாகவே இருந்துகொண்டோம்.

அந்த வாகனம் கொழும்பு நோக்கிச் செல்லத் தொடங்கியது.

அடுத்து நடக்கப்போகும் விசாரணைகளை நினைத்துப் பார்க்கவே மனம் நடுங்கத் தொடங்கியது.

தேவையில்லாமல் குழம்புவதை விடுத்து மனதை ஒருநிலைப்படுத்திக் கொள்வதில் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும் என நினைத்துக்கொண்டேன்.

பாடசாலை நாட்களிலிருந்தே தியானம் செய்வதில் எனக்கிருந்த ஆர்வம் உண்மையில் அந்த மனநெருக்கடியான

காலகட்டத்தில் எவ்வளவு உதவியாக இருந்தது என்பதை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன்.

வெடியோசைகள் கேட்காத வேறு ஒரு நெருக்கடி நிலைமையினை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறேன் என்பதைத் திடமாகப் புரிந்துகொண்டேன்.

நள்ளிரவு நெருங்கிய நேரத்தில், எங்களைக் கொண்டுசென்ற வாகனம் கொழும்பு சி.ஐ.டியின் பிரம்மாண்டமான நாலாம் மாடிக் கட்டடத்தை அடைந்திருந்தது.



‘**சிறப்பு விசாரணைப் பிரிவு**’ என்ற பெயர்ப் பலகையைக் கண்டதுமே எனக்கு உள்ளங்கை காலெல்லாம் விறைத்துக் குளிரத் தொடங்கியது.
நாலாம் மாடியைப் பற்றிய பல பயங்கரமான கதைகளை நான் இயக்கத்திலிருந்தபோது கேள்விப்பட்டிருந்தேன்.

எனது கை, கால் நகங்களையெல்லாம் பிடுங்கப் போகிறார்களோ, தலைகீழாகக் கட்டித் தொங்க விடுவார்களோ என நினைக்கும்போதே தலைச்சுற்றி மயக்கம் வருவதுபோல இருந்தது.

என்னைக் கூட்டிச்சென்ற அதிகாரிகள் சி.ஐ.டி உயர் பதவியிலிருப்பவர்கள் போலத் தென்பட்டார்கள்.
அலுவலகத்தில் பதிவுகளை முடித்துப் பெண் கைதிகளை அடைத்து வைத்திருக்கும் ஆறாம் மாடிக்கு என்னைக் கொண்டு சென்றனர்.

அங்கே இரவுக் கடமையில் இருந்த பெண் சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டேன்.

அவர்கள் என்னை முழுமையாக உடற் பரிசோதனை செய்தபின் அங்கிருந்த சிறிய கம்பிக் கூட்டினுள் தனியாக அடைத்து வெளிப் பக்கமாகப் பூட்டினார்கள்.

பக்கத்தில் வேறு சில கூடுகளும் இருந்தன. அவற்றிலே படுத்திருந்த பெண்கள் தூக்கம் கலைந்து விழித்துப் பார்ப்பது தெரிந்தது.

என்னுடன் எவரும் கதைக்கக்கூடாது என அவர்களுக்குக் கண்டிப்பாகச் சொல்லப்பட்டது.

மறுநாள் காலை அங்கிருந்த பிள்ளைகள் குளித்து முழுகித் தங்களைச் சுத்தப்படுத்திக்கொண்டார்கள்.

நீண்ட நாட்களின் பின் நானும் தலைக்கு முழுகினேன். எனது கூந்தலிலிருந்து முள்ளிவாய்க்கால் மண்ணும் புழுதியும் கறுப்பு நிறமாக வெளியேறியது. குளியலறைக் கதவருகே பெண் சி.ஐ.டியினர் நின்றுகொண்டிருந்தார்கள்.

அன்று காலை ஒன்பது மணியளவில் என்னை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று என்னை முதலில் விசாரணைக்கு உட்படுத்தியது.

எனக்கு ஒரு வார்த்தையேனும் சிங்களமொழி தெரியாத நிலையில் ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனது பிறப்பு தொடக்கம் முதல் இயக்கத்தில் இணைந்து இறுதியாக வெளியேறியது வரை அந்த விசாரணையறிக்கையில் பதிவுசெய்யப்பட்டது.

என்னை அடைத்து வைத்திருந்த பகுதியிலே பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்த வேறு பல பெண்களும் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.




**பின்னர் அவர்களைப் பூஸா தடுப்பு முகாமுக்குக் கொண்டு சென்றனர். பூஸா தடுப்பு முகாமிலிருந்தும் பல பெண்களைக் கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவுக்குக் கொண்டுவந்து அவர்கள் வெலிக்கடை விளக்கமறியல் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.**

இயக்கத்திலிருந்த பல நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் மேலதிக விசாரணைகளுக்காகப் பூஸா தடுப்பு முகாமிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினார்கள்.

தினசரி ஏதாவது ஒரு தலைப்பில் எனக்கான விசாரணைகள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. விசாரணைகளின் போது தமக்கு அடிகள் விழுந்ததாக வேறு சில பெண்கள் கூறியிருந்தார்கள்.

ஆனால் அவ்வாறான உடல்ரீதியான தாக்குதல்கள் எவையும் விசாரணை இறுதிவரை என் மீது மேற்கொள்ளப்படவில்லை.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மாதமொரு தடவை அங்கு வந்து கைதிகளைச் சந்தித்ததுடன், அத்தியாவசியப் பாவனைப் பொருட்களையும் விநியோகித்தார்கள்.

வீட்டுத் தொடர்புகளே இல்லாதிருந்த என் போன்றவர்களுக்கு அந்த உதவி மிகப்பெரும் வரமாக இருந்தது.

அவர்கள் எமக்கு ஒரு பதிவு அட்டையைத் தந்து சிறையிலிருந்து வெளியேறும்வரை அதனை எம்முடன் வைத்திருக்கும்படி கூறியிருந்தார்கள்.

சி.ஐ.டியினரால் நான் சட்ட வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டேன். என்னைப் பரிசோதனைக்குட்படுத்திய இளம் பெண் மருத்துவர் தனக்குத் தெரிந்த தமிழில் என்னுடன் கதைத்தார்.

“உயிர்களைக் கொல்லுறது பாவம். இந்த உலகம் எவ்வளவு அழகானது. நீ ஏன் இவ்வளவு நாளும் ஒரு பயங்கரவாதியாக இருந்தாய். இனியெண்டாலும் உயிர்களை நேசித்து வாழப் பழகு” என்ற அவரது அறிவுரை எனது உள்ளத்தை மிகவும் பாதித்தது.

நான் போராளியா? பயங்கரவாதியா? என்னைப் போராளியாக்கியதும், பயங்கரவாதியாக்கியதும் அடிப்படையில் எது என யோசித்தேன். அரசியல்தான்.

ஆயுதமே விடுதலையைப் பெற்றுத் தரும் என எமக்குப் பாடம் புகட்டியதும் அரசியல்தான்.

ஆயுதமேந்தியதால் நீ ஒரு பயங்கரவாதி என முத்திரை குத்துவதும் அரசியல்தான். எனக்கும் இளவயதில் எத்தனை

கனவுகள், கற்பனைகள், ஆசைகள் இருந்தன? இன்னொரு உயிரை நேசிப்பவளாகவே சிறு வயதிலிருந்து நானும் வளர்க்கப்பட்டேன்.

எனது உயிரைக் கொடுத்து மக்களது எதிர்காலத்தைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கைதானே என்னைப் போராட்டத்தில் இணையச் செய்தது?

ஆனால் விடுதலையின் பேரால் ஏற்பட்ட அழிவுகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் நானும் ஒரு காரணமாகவே இருந்திருக்கிறேன். அதனை மறுப்பதோ மறைப்பதோ எனது மனச்சாட்சிக்கே நான் இழைக்கும் துரோகமாக இருக்கும் என எண்ணிக்கொண்டேன்.

விசாரணைக் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் மாதமொரு தடவை நீதிபதியின் முன் நிறுத்தப்பட்டேன். வாரந்தோறும் குடும்பத்தவர்களில் ஓரிருவரைப் பார்க்கும் அனுமதியிருந்தது.

வவுனியா இடம்பெயர் முகாமில் அம்மா எந்த முகாமில் இருக்கிறார் என்ற விபரம் எனக்குத் தெரியாத காரணத்தால் என்னால் எந்தத் தகவலையும் அனுப்பி அம்மாவுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை.

அதனால் கொழும்பு சி.ஐ.டி விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு மாத காலமும் எனது குடும்பத்தவர்களுடன் எனக்கு எந்தத் தொடர்பையும் ஏற்படுத்த முடியவில்லை.

அவர்களுக்கும் நான் எங்கே இருக்கிறேன் எனக்கு என்ன ஆனது என்ற விபரம் தெரியவில்லை.

நான் இதுபற்றி அங்கு வரும் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் தெரிவித்தபோது தமக்கு வவுனியா நலன்புரி முகாம்களுக்குச் செல்வதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்திருந்தனர்.

எனது சரணடைவானது விடுதலைப் புலி இயக்க ஆதரவாளர்கள் எனத் தம்மைக் காட்டிக்கொண்ட சிலருக்கு உடன்பாடில்லாத விடயமாக இருந்திருக்க வேண்டும்.

**என்னுடனிருந்த சக விடுதலைப் புலிக் கைதிகளைப் பார்க்க வரும் பெற்றோர் மூலம் என்னைப் பற்றிய பல விஷமத்தனமான பொய்கள் அதீத கற்பனை கலந்து வெளியே பரப்பப்பட்டிருந்ததையும் அறியக்கூடியதாக இருந்தது.**

கோடிக்கணக்கான பணத்துடன் நான் சரணடைந்ததாகவும், வவுனியா மக்கள் நலன்புரி முகாம்களுக்கு இராணுவத்தினருடன் சென்று பலரையும் காட்டிக் கொடுத்ததாகவும் பரப்பப்பட்ட அவதூறான செய்திகளை அறிந்தபோது, நான் மிகுந்த மனப் பாதிப்படைந்தேன்.

யுத்தத்தின் இறுதி நேரத்தில் இறந்து போகாமல் உயிருடன் வந்த ஒரே காரணத்திற்காக எனது உறவுகளே என்னைப் பழி தீர்த்துக்கொள்வதைத் தாங்கிக்கொள்வது ஆரம்பத்தில் மிகவும் கடினமாகவே இருந்தது.

எனது மனச்சாட்சிக்கு விரோதமான எந்தக் காரியத்திலும் நான் ஈடுபட்டிருக்கவில்லை என்பதுடன், இன்னொரு போராளியைக் காட்டிக்கொடுத்து நான் என்னைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சி செய்யவுமில்லை என்பதை இயக்க நடவடிக்கைகளில் என்னுடன் ஈடுபட்டிருந்த பலரது உள் மனது அறியும்.

ஆனாலும் இப்படியான அவதூறுகளும் அவமானங்களும் நான் கடக்கவேண்டிய ஒரு கட்டம்தான் என்பதை எனது புத்தியில் எடுத்துக்கொண்டு மௌனமாக இருந்தேன்.

அடுத்தவரின் இரத்தச் சூட்டில் குளிர்காய்ந்து வாழத் துடிக்கும் ஒருகூட்டம் எப்படியான பட்டத்தை என்னைப்போல உயிர் மீண்டுவந்த போராளிகளுக்குச் சூட்டும் என்பதைப் புரிந்துகொண்டேன்.

**விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நான் இருந்தேன் என்ற உண்மையை மறைத்து**, வவுனியா நலன்புரி முகாமில் எனது தாயாருடன் மறைந்திருந்ததாகவும், அங்கே வைத்து சி.ஐ.டியினர் என்னைக் கைது செய்ததாகவும் ஊடகங்களில்

வெளியாகியிருந்த செய்திகளைக் காலம் தாழ்த்தியே என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.

அதற்காக நான் கவலைப்படவில்லை.

ஓமந்தையில் நான் சரணடைந்தமைக்கான பதிவுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆகவே சரணடைந்த ஒருவருக்கு மேற்கொள்ளப்படும் சட்டரீதியான நடவடிக்கை எதுவோ அதுவே எனக்கும் மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தேன்.

கொழும்பு சி.ஐ.டி.இல் 20.05.2009 தொடக்கம் 29.09.2009வரை நான் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் பல்வேறுபட்ட விசாரணைகளுக்காகக் கொண்டுவரப்பட்டிருந்தவர்களோடும் தங்கியிருந்தேன். போலி வெளிநாட்டு முகவர்கள், பணமோசடி புரிந்தோர், புலிச் சந்தேக நபர்கள் என இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்தும் பல ஆண் பெண்கள் அங்கிருந்தனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில்.. சராசரி எட்டு அடி அகலம் கொண்ட அறையில் ஆறு பெண்களுடன் தள்ளப்படடேன்: இரவுகள் மிகவும் பயங்கரமாக அச்சுறுத்தின...

• புகையிலை மணமும் கஞ்சா வெறியுமாகக் கண்கள் சொருகிய நிலையிலிருந்த ஆண்கள் ஒவ்வொருவருக்கும் விலங்குபோட்டுப் பெரிய இரும்புச் சங்கிலியில் பிணைத்து இழுத்துக்கொண்டு வந்தார்கள்.

• போராட்டத்தில் பங்குபெற்று உயிர் மீண்ட பெண்கள் அனைவருமே மானமிழந்துபோய்த்தான் வந்திருக்கிறார்கள் என்ற கருத்துகளைப் பரப்புவதும் எத்தனை மோசமான இழிச்செயல்?

• விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல தமிழ்ப் பெண்கள் அங்கு விசாரணைக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

**தொடர்ந்து....**



கொழும்பு சி.ஐ.டி.இல் 20.05.2009 தொடக்கம் 29.09.2009வரை நான் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் பல்வேறுபட்ட விசாரணைகளுக்காகக் கொண்டுவரப்பட்டிருந்தவர்களோடும் தங்கியிருந்தேன். போலி வெளிநாட்டு முகவர்கள், பணமோசடி புரிந்தோர், புலிச் சந்தேக நபர்கள் என இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்தும் பல ஆண் பெண்கள் அங்கிருந்தனர்.

எனது குடும்பம், விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழ் மக்கள் என்ற வட்டத்திற்கு வெளியே பலதரப்பட்ட மக்களுடனும்

பழகுவதற்கான சந்தர்ப்பம் அங்குதான் எனக்கு ஏற்படத் தொடங்கியது.

அப்பாவித்தனமான பல பெண்கள் சூழ்நிலை காரணமாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்கள்.

இன்னும் சில பெண்கள் எந்தப் பயமும் இன்றிக் குற்றங்களைச் செய்வதில் கை தேர்ந்தவர்களாக இருந்தனர்.

அப்படியானவர்களோடு ஒரு நாளைக் கழிப்பதே ஒரு யுகமாக இருந்தது.

இருபத்து நான்கு மணி நேரமும் எம்மை அடைத்து வைத்திருந்த கூட்டிற்கு வெளியே சி.ஐ.டி. பெண்கள் தொடர்ந்து காவலிருந்தனர். மலசலக் கூடத்திற்கும் குளிப்பதற்கும் அவர்கள் எங்களுடனே கூட வந்து அருகிலே நிற்பார்கள்.

பெண்களைத் தடுத்து வைப்பதற்கான இடம் ஆறாம் மாடியிலிருந்து நாலாம் மாடிக்குத் திடீரென மாற்றப்பட்டது.

ஆண்களைத் தடுத்து வைத்திருந்த இடத்தில் ஒரு கம்பிக்கூடு எமக்கும் ஒதுக்கப்பட்டு அங்கே தங்கிக்கொள்ளும்படி விடப்பட்டோம்.

எந்த மறைப்புகளும் இல்லாத இடத்தில் எப்படித் தங்குவது எனச் சிந்தித்த பெண் பிள்ளைகள் நாங்களாகவே எம்மிடமிருந்த போர்வைகள், பாய்கள் என்பனவற்றைக் கொண்டு மறைப்புக் கட்டிக்கொண்டோம்.

அதனை அவதானித்த அதிகாரிகள் மறுநாள் பெரிய 'சிப்போட்' பலகைகளைக்கொண்டு நேர்த்தியான மறைப்பை உருவாக்கியிருந்தனர். இதை எதற்காக இங்கே நான் எழுதுகிறேன் என்றால், ஒருபெண் சிறை சென்று மீள்வது என்பது எமது சமூகத்தில் மிகவும் அவமானத்தை ஏற்படுத்தும் விஷயமாகவே பார்க்கப்படுகிறது.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டாலே அந்தப் பெண்களை மானமிழந்து போனவர்களாகக் கருதி ஒதுக்கி வைக்கும் மோசமான மனப்பாங்குகொண்ட மனிதர்கள் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

போர்க்களத்திலே பெண்கள் ஆயதமேந்திப் போராடுவதை ஏற்றுக்கொண்ட சமூகம், அவர்கள் ஆயிரக்கணக்கில் களமுனைகளில் உயிரிழந்தபோது வீராங்கனைகள் எனப் போற்றிய சமூகம், அதே பெண்கள் சிறைகளுக்கும் புனர்வாழ்வு முகாம்களுக்கும் சென்றுவரும்போது மட்டும் அவர்களைத் தரம் தாழ்ந்துவிட்டவர்களாகக் கருதுவது மிகவும் கொடூரமானது.

இத்தனைக்கும் மேலாகத் தமிழ்ப் பெண்களின் மானத்தைக் காற்றிலே பறக்கவிட்டு அரசியல் நலன் தேடும் சுயநலமிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இறுதிப் போரில் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட சகோதரிகள் மட்டுமல்ல, போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்தே எண்ணுக் கணக்கற்ற பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டே வந்துள்ளனர்.

விடுதலைக்காகப் போராடப் புறப்பட்ட இயக்கங்களில் இருந்தவர்களும்கூட இப்படியான பாலியல் அத்துமீறல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலும் பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஆண் உறுப்பினர்களுக்குப் பல போராளிகள் முன்னிலையில் மரண தண்டனைத் தீர்ப்புகள் நிறைவேற்றப்பட்ட சில சந்தர்ப்பங்களும் இருந்தன.

போராட்டங்களுக்கும் யுத்தங்களுக்கும் முகம் கொடுக்கும் சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு உயிரழிவுகள் மாத்திரமல்ல, இப்படியான பாலியல் வதைகளும் காலங்காலமாக நடந்தே வந்திருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் ஒரு பெண் போராடப் புறப்படுகின்றபோது தன்னுடைய தன்மானத்தைக் காத்துக்கொள்ளும் வல்லமையையும் தனக்குள்ளே ஒரு நெருப்பாகப் பற்றவைத்துக்கொள்கிறாள்.

**களமுனையிலே ஒரு பெண் போராளி நிற்கும்போது தன்னுடைய உயிர் மட்டுமல்ல, தன்மானமும் இழக்கப்படலாம் என்கிற ஆபத்து அவளுக்குத் தெரிந்தே உள்ளது.**

இருந்தும் இனத்தின் ஒரு பொது இலட்சியத்திற்காக அவள் துணிந்து களத்தில் நின்றிருக்கிறாள். அந்த அர்ப்பணிப்பின் நன்மைகளை அனுபவிக்கச் சித்தமாயிருந்த சமூகம் அவளின் போராட்டத்திற்குப் பின்னரான வாழ்வைக் கொச்சைப்படுத்தியே பார்க்கிறது.

பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் உடல்களை விளம்பரப்படுத்தி அரசியல் பிழைப்பு நடத்துகிறது.

**போராட்டத்தில் பங்குபெற்று உயிர் மீண்ட பெண்கள் அனைவருமே மானமிழந்துபோய்த்தான் வந்திருக்கிறார்கள் என்ற கருத்துகளைப் பரப்புவதும் எத்தனை மோசமான இழிச்செயல்?**

விடுதலைப் போராட்ட வாழ்க்கையிலும் கொடுமையான சிறை வாழ்க்கையிலும் நெருப்பாய்க் கனன்று, தமது மானத்தைப் பாதுகாத்துக்கொண்ட ஆயிரக்கணக்கான சக போராளிகளை நானறிவேன்.

கொழும்பு சி.ஐ.டி விசாரணையில் நான்கு மாதங்களாக நீடித்த எனது விசாரணைகள் முற்றுப் பெற்றதன் பின்பு, என்னிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது.

மீண்டும் சட்ட வைத்திய அதிகாரியிடம் மருத்துவப் பரிசோதனை அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் 29.09.2009

அன்று கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதிமுன் ஆஜர்படுத்தப்பட்டேன்.

அவரது உத்தரவின் பேரில் **வெலிக்கடை சிறைச்சாலையின் விளக்க மறியலுக்கு அனுப்பப்பட்டேன். வெலிக்கடை சிறையின் பெண்கள் பகுதியில் எனது சிறைவாழ்வு நீளத் தொடங்கியது.**

நான் வெலிக்கடை சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது இரவு ஏழு மணி கடந்துவிட்டிருந்தது. அன்றைய நாள் வழக்குக்காக நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டவர்களும் புதிதாக விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுமாகப் பத்துக்கும் மேற்பட்டவர்கள் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்திலிருந்து வெலிக்கடை சிறைக்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்தோம்.

சி.ஐ.டியில் இருந்த நான்கு மாதங்களில் சிங்கள மொழியில் சில வார்த்தைகள் எனக்குப் பரிச்சயமாகியிருந்தனவே தவிர இன்னொருவருடன் பேசுகிற அளவுக்குச் சிங்களம் தெரியாது.

அன்றைய நாள் நீதிமன்றத்திலிருந்து சிறைக்கு என்னுடன் கொண்டுவரப்பட்ட அனைவருமே சிங்களப் பெண்களாக இருந்தனர்.




"சிறைச்சாலை எனப் பெயர் பொறிக்கப்பட்டதும் ஜன்னல்களுக்குக் கம்பிவலை பொருத்தப்பட்டதுமான நீல நிறப் பேருந்து வெலிக்கடை சிறை மதில்களுக்குள் நுழைந்தது.

அங்கே முதலாவதாக இருப்பது வெலிக்கடை சிறையின் பிரதான பகுதி.

அந்த இடத்தில்தான் அனைவரும் பதிவுசெய்யப்படுவது வழக்கம். ஆண்களின் சிறைப்பகுதியில் ஆயிரக்கணக்கானவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ள இடம் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

தண்டனை வழங்கப்பட்ட கைதிகள் வெள்ளை நிற உடைகளுடன் காணப்பட்டனர். எங்களை ஏற்றிவந்த பேருந்திலும் சில ஆண்களைக் கொண்டு வந்திருந்தனர்.

**புகையிலை மணமும் கஞ்சா வெறியுமாகக் கண்கள் சொருகிய நிலையிலிருந்த ஆண்கள் ஒவ்வொருவருக்கும் விலங்குபோட்டுப் பெரிய இரும்புச் சங்கிலியில் பிணைத்து இழுத்துக்கொண்டு வந்தார்கள்.**

பெண்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் அதே பேருந்தில் ஏற்றப்பட்டு அருகிலேயே அமைந்திருக்கும் பெண்கள் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டோம். இரு

பெரிய இரும்புக் கதவுகளுக்குப் பின்னால் இன்னொரு உலகம் விரிந்து கிடந்தது.

இரவு நேரமாகிவிட்டபடியால் கைதிகள் அனைவரும் அடைக்கப்பட்டிருந்தனர். உள்ளே கொண்டு வரப்படும் கைதிகளை உடற்பரிசோதனை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த பெண் கடற்படை அலுவலர்கள் எனது உடைமைகளையும் என்னையும் பரிசோதனை செய்தனர்.

**வெறுப்படையச் செய்யும் சிறையின் கொடுமைகளில் ஒன்றான உடற்பரிசோதனை என்ற அருவருப்பை அன்றே அனுபவிக்கத் தொடங்கினேன். சிறைச்சாலையில் தங்குமிடத்தின் கதவுகளைத் திறந்து உள்ளே அனுப்பப்பட்டோம்.**

கால் வைக்க இடமிருக்கவில்லை. அவ்வளவு சன நெருக்கடியாக இருந்தது. உட்கார்ந்துகொண்டும் படுத்துக்கொண்டும் சலசலவென்று கதைத்துக்கொண்டும் பெண்கள் நிறைந்துபோயிருந்தனர்.

என்னை உள்ளே தள்ளிக் கதவைப் பூட்டிவிட்டுச் சிறை அதிகாரி போய்விட்டார். நான் என்ன செய்வது எனத் தெரியாமல் விழித்துக்கொண்டு நின்றேன். ஒரே இரைச்சலாக இருந்தது.

ஏற்கனவே என்னை அறிந்திருந்த ஒரு பெண் எனது பையை வாங்கிக்கொண்டு, தனது இடத்திற்குக் கூட்டிக்கொண்டு சென்றார்.

சற்று நேரத்திற்கு இந்த இடத்தில் இருங்கள். நான் போய் லீடரைக் கூட்டிக்கொண்டு வருகிறேன். எனக் கூறிச் சென்றார்.

கொழும்பு சி.ஐ.டியில் நானிருந்தபோது பழகிய சில தமிழ்ப் பெண்களும் அங்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் ஓடிவந்து என்னுடன் கதைத்தார்கள்.

உண்பதற்காகத் தம்மிடமிருந்த பிஸ்கட்டுக்களையும் ஒரு போத்திலில் தண்ணீரையும் தந்தார்கள். காலையிலிருந்து

எதுவுமே உண்ணாத காரணத்தால் வயிறு பசியில் எரிந்துகொண்டிருந்தது.

வேகமாகச் சாப்பிட்டு முடித்தேன். லீடரைக் கூட்டிக் கொண்டு வந்து புதிதாக வந்த கைதிக்குப் படுக்க ஒரு இடம் ஒதுக்கிக் கொடுக்கும்படி அந்தப் பெண்கள் கூறினார்கள்.

**ஒரு குள்ளமான தோற்றத்துடன் இருந்த சிங்களப் பெண்தான் லீடர் ஆவர்.**

போதை மருந்து விற்ற காரணத்திற்காகப் பல வருடக்கணக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகப் பின்னர் அறிந்தேன்.

அவர் எனக்காக ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுக்கும்படி அங்கிருந்த ஒரு பெண்ணிடம் கூறினார். தனக்குப் பக்கத்தில் இடம் இல்லை என அவர் மறுத்துச் சத்தம் போட்டு ஏசத் தொடங்கினார்.

லீடரும் பதிலுக்கு ஏசினார்.

அதன்பின் என்னை அந்த இடத்திலே இருக்கவிடுவது என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.

“உங்களது உடுப்புகளை மடித்து ஒரு தலையணையாக செய்துகொள்ளுங்கள்.

இங்கே ஒரு சிறிய தலையணை வைக்க மட்டும்தான் இடம் தருவார்கள். அதிலேதான் நீங்கள் படுத்துறங்குவது தொடக்கம் உங்களது பொருட்களையும் வைத்துக்கொள்ள வேண்டும்” என அங்கிருந்த தமிழ்ப் பெண்கள் எனக்குக் கூறினார்கள்.

மேலும் சிறைச்சாலையில் நான் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளையும் எடுத்துச் சொன்னார்கள்.

“இங்கிருக்கும் நடைமுறைகளை சரிவரக் கடைபிடிக்காவிட்டால் கிடைக்கும் ஏச்சுப் பேச்சுக்களைத் தாங்கிக்கொள்ள முடியாது. பார்த்து நடந்துகொள்ளுங்கள்” என வற்புறுத்தினார்கள்.

நான் கவலையுடன் சுற்றுமுற்றும் பார்த்தேன். இன்னும் எத்தனைக் காலத்திற்கு இப்படியிருக்க வேண்டிவருமோ என நினைத்துக்கொண்டேன்.

ஆனால் இரண்டு வருடமும் ஒன்பது மாதங்களும் அந்தச் சிறைச்சாலை ஒரு பல்கலைக்கழகம் போல மனித வாழ்வின் இன்னொரு பக்கத்தை எனக்குக் கற்றுத் தந்தது.

ஒரு மனிதனை மகா ஞானியாக்கவும், மகா கெட்டவனாக்கவும் சிறைச்சாலையினால் முடியும் என்ற உண்மையை அங்கேதான் அறிந்துகொண்டேன்.

பொதுவாகவே பெரும்பாலான சமூகங்கள் சிறை மனிதர்களை அவமானச் சின்னங்களாகக் கருதிப் புறக்கணிப்பதன் காரணமாக அவர்களுடைய மனவுணர்வு களைப் புரிந்துகொள்வதற்கான சந்தர்ப்பங்கள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

அதனால்தான் அவர்கள் தாங்களே ஒரு தனிச் சமூகமாகித் தமது நியாய அநியாய சிந்தனைகளோடு சிறையுலகைத்

தமது ஆளுகைக்குட்படுத்தி தமக்கான வாழ்வின் எல்லையை நிர்ணயித்துக் கொள்கிறார்கள்.

“**சிறைக் கைதிகளும் மனிதர்களே**” என்ற அந்தச் சிறைவாசகத்தினுள் பொதிந்திருக்கும் அர்த்தங்கள் மிகவும் ஆழமானவை.

நான் வெலிக்கடை சிறைக்குச் சென்ற முதல் நாள் எனக்கு முப்பத்திரண்டாவது இலக்கமுடைய கொட்டுவையில் படுக்க இடம் கிடைத்தது.

அது நான் அமர்ந்திருந்த கொட்டுவைக்கு அடுத்த கொட்டுவைதான்.

**ஒரு கோடுதான் எல்லை. அதாவது கட்டடம் கட்டும்போது நிலம் வெடிக்காமலிருப்பதற்காக இடப்படும் சிமெண்ட் இடைவெளி, அதுதான் கொட்டுவைகளாகப் பிரிக்கும் அடையாளம்.**

நான் நகர்ந்து அடுத்த கொட்டுவைக்குச் சென்றுவிட்டேன். ஆனால் படுக்க இடம் எடுப்பதுதான் பெரிய பிரச்சனையாக இருந்தது.

ஏற்கனவே அங்கிருந்த கைதிகளுக்கே இடம் பெரிய பிரச்சனையாக இருக்கும்போது என்னையும் சேர்த்துக்கொள்ள அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு முஸ்லிம் பெண், தமிழ்ப் பேசக்கூடியவர். மிகுதி அனைவரும் சிங்களப் பெண்கள்.

புதிதாக வந்த கைதியான என்னைத் தங்களுடன் சேர்த்துத் தங்கவைத்துக்கொள்ள அவர்கள் எவருக்குமே விருப்பமில்லாத காரணத்தால் அவர்களுடன் என்னைத் தங்கிக்கொள்ளும்படி கூறிவிட்டுச் சென்ற லீடர் பெண்ணை ஆளுக்காள் ஏசத் தொடங்கினார்கள்.

அந்தக் கொட்டுவையில் இருந்த பெண்களுக்கும் ஒரு லீடர் இருந்தார். ஒரு சொல்கூடத் தமிழ்த் தெரியாது; கை அசைவுகளின் மூலம் என்னுடன் பேசினார்.

தன்னருகே எனக்குப் படுத்துக்கொள்ளும்படி ஒரு சிறிய இடத்தை ஒதுக்கித் தந்தார்.

**ஒரு கொட்டுவையின் அளவு சராசரி எட்டு அடி அகலம் தான் இருக்கும். அங்கே ஆறு பெண்கள் படுத்துக்கொள்ள வேண்டும்.**

சிறிது உயரமானவர்கள் கால் நீட்டிக்கொண்டு படுக்க முடியாது. நிமிர்ந்து படுப்பதற்கு இடம் போதாது.

இரு கைகளையும் பக்கவாட்டில் வைத்துக்கொண்டு படுக்க முடியாது. எப்படித்தான் சமாளித்துக்கொண்டு படுத்தாலும் பக்கத்தில் படுத்திருப்பவருடன் தட்டாமல் முட்டாமல் படுக்கவே முடியாது.

**திரும்பிப் படுக்க முடியாது. நுளம்பு கடித்துவிட்டால் அவசரமாகத் தட்டிவிட முடியாது.**



இத்தகைய நெருக்கடிகளுக்கிடையே உறங்குவதே ஒரு பெரிய சாதனையாக இருந்தது. தினசரி படுக்கை விரிக்கும் நேரத்தில் அருகருகே இருப்பவர்கள் சண்டை போட்டுக்கொள்வது வழக்கமென்பதை அடுத்த நாளே தெரிந்துகொண்டேன்.

உண்மையில் சிறை வாழ்வின் நுட்பங்களை அறிந்து என்னை அதற்கேற்ப சரிப்படுத்திக்கொள்வது சாதாரண விடயமாக இருக்கவில்லை.

அந்த நேரத்தில் எனக்குள்ளே இருந்த பொறுமை பற்றி நானே வியந்துகொண்டேன். யார் என்னதான் பேசினாலும் நான் பேசாமலே இருக்கக் கற்றுக் கொண்டேன்.

**என் தலையணையைத் தலைக்கு வைத்து ஒரு கட்டையைப் போல் நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொள்வேன்.** இரவைப் பகலாக்கும் சக்திவாய்ந்த மின்விளக்குகள் விடியும்வரை ஒளிர்ந்துகொண்டேயிருக்கும். கண்ணைக் கூசவைக்கும் அந்த வெளிச்சத்திலிருந்து விடுபடுவதற்கு முகத்தினைச் சிறிய துணி யொன்றினால் மூடிக்கொள்ளுவேன்.

எனையறியாமலே கண்ணயர்ந்துகொண்டு செல்லும்போது, பக்கத்திலிருப்பவர்கள் எவராவது மெதுவாகச் சுரண்டுவார்கள்.

“**சரிந்து** படு, **இடம் போதாது**” அவள் சொல்வதைக் கேட்காவிட்டால் ஏச்சுவாங்க வேண்டி வரும் என்ற பயத்துடன் மெதுவாகச் சரிந்து படுக்கும்போது, “சரியாதே சரியாதே நிமிர்ந்து படு” என இன்னொருத்தி சத்தம் போடத் தொடங்கிவிடுவாள்.

ஆரம்பத்தில் எனக்குப் பயமாகவே இருந்தது. நான் பதற்றத்துடன் பெரும்பாலும் எழுந்து அமர்ந்துகொள்வேன். சில நேரங்களில் நடுச் சாமத்திலும்கூட உரத்துக் கத்திச் சண்டை போடுவார்கள்.

நான் முகத்தை மூடிக்கொண்டு சுவரருகே ஒண்டிக்கொண்டிருப்பேன். எத்தனையோ இரவுகள் விடியும்வரை ஒரு பொட்டு உறக்கம் கொள்ளாது விழித்தபடியே கழித்திருக்கிறேன்.

நான் சிறைக்குச் சென்ற மறுநாள் காலை அலுவலகத்திற்குக் கூப்பிட்டு ஒரு சிறிய கடதாசி மட்டையில் எனது றிமாண்ட் இலக்கமும் வாட் இலக்கமும் கொட்டுவ இலக்கமும் எழுதித் தந்தார்கள்.

அலுவலகத்திலும் நீண்டகாலத் தண்டனை பெற்ற கைதிகளின் ஆதிக்கம்தான் மேலோங்கியிருந்தது. பெண் சிறைக் காவலர்களை ‘நோனா’ என அழைக்க வேண்டும்.

அந்த நோனாக்களுக்கு நல்லவிதமாக நடந்துகொள்கிறோமோ இல்லையோ 'சீனியர் கைதி'களுக்கு நல்லவிதமாக நடந்துகொள்ள வேண்டும்.

**அப்படியில்லாத புதிய கைதிகளின் பாடு அதோ கதிதான். சிறையின் முழுக் கட்டுப்பாட்டு அதிகாரங்களும் நடைமுறையில் சீனியர் கைதிகளிடம்தான் இருப்பது வழக்கம்.**

**ஒரு சிறிய கம்பிக் கூட்டுக்குள் மாதக்கணக்காக அடைந்து கிடந்த காரணத்தால் விறைத்துப்போன கை கால்கள், சிறை வளாகத்திற்குள் கொஞ்சம் உலவித் திரிந்ததும், இரண்டு நாட்களுக்கும் மேலாகப் பயங்கர நோவும் உளைவுமாக இருந்தது.**

மழையும் வெயிலும் தெரியாத கட்டடக் குகைக்குள்ளிருந்து வெலிக்கடைக்குப் போனதன் பின்பு உயரமான மதில்களைத் தாண்டி வரும் வெளிக்காற்றைச் சுவாசித்தேன்.

சிறு வயதிலிருந்தே இரவு வானத்தை நீண்டநேரம் பார்த்துக்கொண்டிருப்பது மிகவும் பிடித்தமான

பொழுதுபோக்கு. மாலை நேரத்தில் சிறைக் கதவுகள் பூட்டப்படும் வரை மாலைநேர வானத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பது மனதிற்கு மிகவும் இதமாக இருந்தது.

உயிரைப் பிழியும் கடந்தகால நினைவுகள் கரும்மேகங்களாக எப்பொழுதும் என்னைச் சுற்றி மிதந்துகொண்டேயிருப்பதுபோல உணர்ந்தேன்.

அதிகம் தனிமை தேடி அமர்ந்துகொண்டேன். உறக்கம் வராத இரவுகள் மிகவும் பயங்கரமாக அச்சுறுத்தின.

இடைவிடாத தலைவலியும் மனப் பாரங்களுமாகக் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு மன நோயாளியாகிக் கொண்டிருக்கிறேனோ என்ற சந்தேகம் எனக்கே வர ஆரம்பித்திருந்தது.



**விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல தமிழ்ப் பெண்கள் அங்கு விசாரணைக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.**

அவர்களில் பல வயதான பெண்மணிகளும் இருந்தார்கள். காலையில் சிறைக் கதவு திறந்ததுமே நெருக்கடி மிகுந்த குளியலிடத்திற்குச் சென்று குளித்து முழுகித் திருநீறு, சந்தனம், குங்குமம் அணிந்துகொண்டு கோவில் வாசலிலே நிற்பார்கள்.

விடுதலைப் புலிப் போராளிகளைத் தமது சொந்தப் பிள்ளைகளாகக் கருதி உதவிசெய்த பல தாய்மார் அந்தப் போராளிகளால் இனங்காட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

திருமணம் முடித்த இளம் தாய்மார் சந்தேக நபர்களாகச் சிறைவைக்கப் பட்டிருந்தனர். நான் போயிருந்த காலத்தில் இரண்டு பெண்கள் தமது குழந்தைகளுடன் இருந்தனர்.

மூன்று வயது ஆண் குழந்தையும், இரண்டு வயது பெண் குழந்தையும் தமது தாய்மாருடன் சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருந்தனர்.

இதனைவிட விடுதலைப் புலி உறுப்பினர்கள் அல்லாத பல இளம் பெண்கள் திருமண வயதில் அங்கிருந்தனர்.

“இவ ஏன் உயிரோட வந்தவ, இதுகள் செத்திருக்கவேணும், இதுகளை நம்பி நாங்கள் உதவி செய்து போட்டு இங்க வந்திருக்கிறம்” என திட்டிய சிறையிலிருந்த பெண்கள் ...




விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கடலிலும், தரையிலும் பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் உயிருடன் பிடிபட்ட பெண் போராளிகளும், கரும்புலி நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் வவுனியா மற்றும் கொழும்பு போன்ற நகரங்களில் கைது செய்யப்பட்டவர்களான பெண் கரும்புலி உறுப்பினர்களும் அங்கிருந்தனர்.

நான் அங்குப் போயிருந்தபோது விடுதலைப் புலி வழக்கிலிருந்த ஒரு சில பெண்கள் மட்டுமே என்னுடன் இயல்பாகக் கதைத்துப் பழகினார்கள்.

பெரும்பாலானவர்கள் விலகி நின்றதுடன் என்னைக் கோபமாக விமர்சித்தும் திட்டியும் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தினார்கள்.

**“இவ ஏன் உயிரோட வந்தவ, இதுகள் செத்திருக்கவேணும், இதுகளை நம்பி நாங்கள் உதவி செய்து போட்டு இங்க வந்திருக்கிறம்” இவ்வாறாக ஏசுவதன் மூலம் இயக்கத்தின் மீதிருந்த கோபத்தினையும் வெறுப்பையும் என்மீது காட்டியவர்கள் அநேகம் பேர்.**

எனது காதிற்குக் கேட்க வேண்டும் என்பதற்காகவே மிகமோசமான வார்த்தைகளால் திட்டிய ஒருசிலரும் இருந்தனர்.

என்னைப் பற்றி வெளியாகியிருந்த அவதூறான செய்திகளை அறிந்திருந்தபடியினால், அதனை உண்மை என்று நம்பிக்கொண்டு என்னை மிகவும் மோசமாக

விமர்சித்தவர்களுடன் நான் ஒரு வார்த்தையேனும் திருப்பிக் கதைக்காமல் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருக்கப் பழகிக்கொண்டேன்.

அங்கிருந்தவர்களில் எவருடைய சிறையிருப்புக்கும். தனிப்பட்ட ரீதியாக நான் பொறுப்பாளியாக இல்லாவிட்டாலும், நான் சார்ந்திருந்த இயக்கம் முழுப் பொறுப்பாக இருந்தது.

என்னைப் போலவே அவர்களும் நாட்டுக்காகச் சேவைசெய்யும் நோக்கத்துடன் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்திருந்த காரணத்தால் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்கள் எவ்வளவுதான் என்னை விமர்சித்தாலும் கோபமோ வருத்தமோ ஏற்படுவதற்கு மாறாக அவர்களுடைய நிலையைக் கண்டு வேதனையடைந்தேன்.

இத்தனைக்கும் மத்தியில் கலங்கிய கண்களுடன் பெற்ற தாயைப்போல என்னை அணைத்துக்கொண்ட தாய்மாரும் சகோதரிகளும் அங்கிருந்தனர்.

**விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவினரால் ஆதரவாளர்களாகப் பயன்படுத்தப்பட்ட பலர் 2007-09 காலப் பகுதிகளில் பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப் பிரிவினராலும், சி.ஐ.டீயினராலும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த தமிழ்ப் பிரதேசங்களிலும், கொழும்பிலும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.**

இவர்களில் பலர் பூசா தடுப்பு முகாமில் இரண்டு வருடங்களுக்கும் மேலாக விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டதன் பின்னர் வெலிக்கடை விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

தமது வழக்குகளுக்கு என்ன நடக்கும் எனத் தெரியாத நிலைமையில் விரக்தியடைந்தவர்களாக நீதிமன்றத்திற்குப் போய்வந்து கொண்டிருந்தனர்.

இவர்களுக்கான அடுத்தடுத்த வழக்குத் திகதிகள் அறிவிக்கப்பட்டதே தவிர வேறு எவ்விதமான முன்னேற்றங்களும் ஏற்பட்டிருக்கவில்லை.

பொருளாதார வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு சிலர் அதிகமான பணம் கேட்ட திறமையான சட்டத் தரணிகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

பெரும்பான்மையானவர்களுடைய குடும்பத்தவர்கள் சிறைக்கு வந்து பார்த்துச் செல்லவே வசதியற்றவர்கள். மனித உரிமைச் சட்டத் தரணிகள் விடுதலைப் புலி வழக்கில் கைதுசெய்யப்பட்டிருந்தவர்களுக்கான சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள்.

**நெல்லியடியில் பிறந்து வளர்ந்த ஒரு பிராமணக் குடும்பத்துப் பெண்ணான வசந்தி சர்மாவை நான் சிறையில் சந்தித்தபோது, அவருடைய நிலைமை மிகவும் மோசமாக இருந்தது.**

அவரது கணவர் மகசீன் சிறையிலும் அவர் வெலிக்கடை சிறையிலுமாக இருந்துவரும் நிலையில் இவர்களது

பிள்ளைகள் பராமரிப்பு இல்லமொன்றில் வளர்க்கப்பட்டு வந்தார்கள்.

நடுத்தர வயதைக் கடந்துகொண்டிருக்கும் இவர் சிறைக்கு வந்த காலத்திலிருந்து அனுபவித்துவரும் துன்பங்களை நேரடியாகக் கண்ட பல சிங்களப் பெண்கள் எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவருக்கு உதவியாக இருந்திருக்கிறார்கள்.

அவருக்காகப் பல சிறையதிகாரிகளும் வருத்தப்படுவார்கள். அனைவராலும் ஐயரம்மா என அழைப்படும் இவர் என்னுடன் மிக அன்பாகப் பழகுவார். மனம் திறந்து பேசுவார்.

“**பிள்ளை, நான் ஒரு இயக்கப் பெண் போராளியையும் நேரடியாகக் கண்டதே கிடையாது**” என அடிக்கடி கூறும் அவர்மீது சாட்டப்பட்டிருந்த குற்றமும் அதற்கான காரணங்களும் ஜீரணிக்க முடியாதவை.

அந்தத் தாயின் கண்ணீருக்கு நம்பிக்கை மிகுந்த ஒரு ஆறுதல் வார்த்தையைக்கூட என்னால் கூற முடிந்ததில்லை. தொடர்ச்சியான தலைவலி காரணமாக அவர் பாவிக்கும் மாத்திரைகள் வீரியம் கூடியவை.

நாளாந்தம் பருப்பும் சோறும் கிடைக்கிற சைவ உணவுகளையும் மாத்திரமே உட்கொள்ளும் அவரது உடல்நிலை மோசமாகப் பாதிப்படைந்த நிலையில் பல நோய்களையும் உடலிலே சுமந்தபடி அவர் அனுபவிக்கும் துன்பத்திற்கு யாரால் பொறுப்புக் கூற முடியும்?

**குழந்தைகளோடு இருந்த தாய்மார் அனுபவித்த துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல.**

ஒரு பெண் ஓமந்தை சோதனைச் சாவடியில் தனது கைக்குழந்தையுடன் கைது செய்யப்பட்டிருந்தார். இன்னொருவர் அனுராதபுரம் பஸ்நிலையத்தில் தனது கைக்குழந்தையுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இருவருமே மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவரது கணவர் யுத்தத்தில் காணாமல் போயிருந்தார். இவர்களது ஏனைய பிள்ளைகள் உறவினர்களது பொறுப்பில் வளர்ந்துவந்தனர்.

குழந்தைகளது வளர்ப்புக்குக் கொஞ்சம்கூடப் பொருத்தமேயில்லாத அந்தச் சூழ்நிலையில் பல

தொற்றுநோய்களுக்கு உள்ளாகி அந்தக் குழந்தைகள் பல துன்பங்களை அனுபவித்தனர்.

மனிதாபிமானம் கொண்ட சிங்களக் கைதிகள் பலர் அந்தக் குழந்தைகளுக்கான உணவு, உடை, விளையாட்டுப் பொருட்களை வெளியிலிருந்து பெற்றுக்கொடுத்து நிறைய உதவிகள் செய்திருந்தார்கள்.

விடுதலைப் புலிகள் வழக்கில் கைதாகியிருந்த பல இளம் பெண்களுக்கு ஏற்கனவே அவர்களுடைய பெற்றோரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திருமண ஒழுங்குகள் குழம்பிப் போயிருந்தன.

பல இளம்பெண்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதும், அவர்களுடைய காதல் உறவுகளாலும் கைவிடப்பட்டிருந்த நிலையில் பலவிதமான மன உளைச்சல்களுக்கும் உள்ளாகியிருந்தனர்.

இயக்கத்தில் போராளிகளாக இருந்து தாக்குதல் நடவடிக்கைகளில் இராணுவத்தினரால் உயிருடன்

பிடிக்கப்பட்டவர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தவர்களும் நீண்டகாலமாகத் தமது உறவுகளுடைய தொடர்புகளும் இல்லாமல் சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள்.



**மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு இளம்பெண் புலிச் சந்தேக நபர் வழக்கில் சிறைக்கு வந்து முழுமையான மனப் பாதிப்புக்குள்ளாகிப் பைத்தியமாகவே மாறியிருந்தார்.**

மலசலகூட வாசற்பகுதியில் சக கைதிகளிடம் அடியும் உதையும் வாங்கிக்கொண்டு கழிந்தது அவருடைய வாழ்க்கை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இன்னொரு பெண் முகமாலையில் 2001இல் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையே நடந்த மோதலில்

காயமடைந்த நிலையில் இராணுவத்தினரால் உயிருடன் பிடிக்கப்பட்டிருந்தார்.

சிறைக்கு வரும்போது மிக நல்ல மனநிலையில் இருந்த இவருக்கு உறவினர்களுடைய தொடர்புகள் எதுவுமே கிடைக்காத நிலையில் அதிக மன அழுத்தத்திற்கு ஆளாகிக் கொஞ்சம் கொஞ்சமாக....மனநிலை பாதிப்படையத் தொடங்கியதுடன், ஏனைய கைதிகளுடன் மிகவும் வன்முறையாக நடந்துகொண்டார்.

இறுதியில் கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் தனியறையில் அடைத்துவைக்கப்பட்டு, அங்கொடை மனநோயாளர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இப்படியாக நான் வெலிக்கடையில் இருந்த காலத்தில் எழுபதிற்கும் மேற்பட்ட பெண்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட வழக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதன் பின்னரான காலப் பகுதியில் அதிகமானவர்களுக்கான முடிவுகள் நீதிமன்றத்தினூடாக வரத் தொடங்கின. சிலர் விடுதலை செய்யப்பட்டனர்.

இன்னும் சிலரது வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. எந்த மாவட்டத்தில் கைது செய்யப்பட்டார்களோ அந்த மாவட்ட நீதிமன்றத்திற்கு அவர்களது வழக்குகள் மாற்றப்பட்டன.

தொடர்ந்தும் விளக்கமறியலில் இருந்து தமது காலம் கடந்துபோவதை விரும்பாத சில பெண்கள் தம்மீது சாட்டப்பட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனையைப் பெறுவதன் மூலம் தமக்கான தண்டனைக் காலம் முடித்து விடுதலையாகிச் செல்லமுடியும் என்ற முடிவுடன் குற்றத்தைப் பொறுப்பெடுக்கத் தொடங்கினர்.

**இதேவேளை மட்டக்களப்பைச் சேர்ந்த புவனேஸ்வரி**, காத்தாயி ஆகிய இரண்டு பெண்களுக்குப் பதின்மூன்று வருடங்களாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததன்

பின்னர் இருவருக்கும் தலா ஐந்து வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்குப் பிணை வழங்கப்படுவதில்லை என்ற அடிப்படையில் இந்தப் பெண்கள் இருவரும் வழக்கு நடந்த காலங்களிலும் விளக்கமறியலிலேயே வைக்கப்பட்டிருந்தார்கள்.

அதில் ஒருவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுத் தனது தண்டனையை முடித்து வீடு செல்வதற்கு முன்பதாகவே 2013 வெலிக்கடைச் சிறையிலேயே உயிரிழந்துபோனார் என அறிய முடிந்தது.

2010க்குப் பின்னர் இறுதி யுத்தத்தில் சரணடைந்த புலி உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கில் பூசா தடுப்பு முகாமிலிருந்து வெலிக்கடை சிறைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

அவர்களில் பலர் குறிப்பிட்ட சில நாட்களில் நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா புனர்வாழ்வு முகாமுக்கு

அனுப்பப்பட்டார்கள். வேறுசிலர் என்னைப் போலவே நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப் பட்டிருந்தனர்.




தைப்பொங்கல், தீபாவளி ஆகிய தினங்களில் கொழும்பு இந்து மாமன்றத்தினரின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு உடுபுடைவைகளும் சில பாவனைப் பொருள்கள் அடங்கிய பொதிகளும் வழங்கப்படுவது வழக்கம்.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் சிலரின் உதவியுடன் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் நானிருந்த

காலப் பகுதியில் இரு தடவைகள் உடுபுடவைகளையும், இதர பாவனைப் பொருட்களையும் கொண்டுவந்து வழங்கியிருந்தனர்.

அவர்கள் வரும்போது அங்கிருந்த பிள்ளைகள் அவர்களுடன் கோபமாகச் சண்டையிடுவார்கள். எங்களது விடுதலைக்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள் எனக் கேட்டு முரண்படுவார்கள்.

இறுக்கமான சட்டவிதிகளுக்கமைவாக அவர்களுடைய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிலைமையில் அரசியல் ரீதியான அணுகுமுறைகளைக் கையாள்வதன் மூலமாகவேனும் தமக்கு விடுதலை கிட்டாதா என்ற நப்பாசையுடன் இப்போதும் வசந்தி சர்மா, சத்தியா போன்றோர் சிறையில் வாடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவினரால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடத்தப்படும் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட பல பொதுமக்களுடைய வாழ்க்கை அனைவராலும் மறக்கப்பட்டுவிட்டது.

தேர்தல் காலங்களில் பேசப்படும் விடயமாக மட்டுமே தமிழ்க் கைதிகளின் விடுதலை ஆகியிருக்கிறது. ஆண்கள் சிறையில் நூற்றுக்கணக்கானவர்கள் பாரிய குற்றங்கள் சுமத்தப்பட்டுத் தமது குடும்பங்களையும் எதிர்கால வாழ்க்கையையும் இழந்து வருந்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதற்குப் பொறுப்புச் சொல்லவேண்டிய கடமை இன்று எவருக்குமே இல்லாமல் போய்விட்டது.

## சரணடைவும் சிறைச்சாலையும்

**கைவிடப்பட்ட சிறை மனிதர்களின் கண்களில்**

**தேங்கியிருக்கும் ஏக்கத்தின் வலி மகா கொடுமையானது**



சிறைச்சாலையில் பெரும்பான்மையானவர்கள் போதைப் பொருள் தொடர்பான வழக்குகளுக்காகவே அடைக்கப்பட்டிருந்தனர்.

கிலோ கணக்கில் போதைப் பொருட்களை விற்பனை செய்யும் பெரு முதலாளிகள் தொடக்கம், கிராம் கணக்கில் விற்பனை செய்யும் சிறிய வியாபாரிகள், வெளிநாடுகளிலிருந்து போதை மருந்து கடத்தியவர்கள் என நூற்றுக்கணக்கான பெண்கள் அங்கிருந்தனர்.

இவர்களில் பெரும்பான்மையானவர்கள் சிங்களப் பெண்களாக இருந்தபோதும், முஸ்லிம் மற்றும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த தமிழ்ப் பெண்களும் இருந்தனர்.

போதை மருந்தைத் தமிழில் '**தூள்**' எனவும் சிங்களத்தில் '**குடு**' எனவும் குறிப்பிட்டு அழைப்பார்கள். சிறைச்சாலையில் நான் நேரடியாகக் கண்ட அனுபவத்தின்படி இந்தத் தூள் வியாபாரம் செய்யும் முதலாளிகள் தூள் குடிப்பதில்லை.
அவர்களுக்குத் தினசரி கொண்டுவரப்படும் வீட்டுச் சாப்பாடு மிகச் சிறப்பானதாக இருக்கும்.

ஒருவரைப் பார்த்த உடனேயே இவர் தூள் முதலாளி என்று குறிப்பிடக்கூடிய விதத்தில் கொழுத்த தோற்றத்துடன், நேரத்திற்கொரு உடையை அணிந்துகொண்டு எந்த நேரமும் மினுமினுப்பமாக ஒருவிதமான தலைக்கனத்துடன் நடந்துகொள்வார்கள்.

இவர்களுக்குத்தான் சிறைச்சாலையில் அதிக செல்வாக்கு காணப்படும்.

சிறைக்காவலர்கள்கூட இப்படியான பெண் முதலாளிகளுடன் இணக்கமாகவே நடந்துகொள்வார்கள். ஒவ்வொருவரும் ஒன்றிற்கும் மேற்பட்ட வழக்குகளுடன் இருப்பார்கள்.

ஒரு வழக்கிற்காகப் பிணையில் சென்ற சில மாதங்களில் அடுத்த வழக்கிற்காக உள்ளே வந்துவிடுவார்கள். சிறைச்சாலைக்குள்ளேயும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் பெண்கள் பலர் இருந்தனர்.

மிகவும் நுட்பமான முறைகளைப் பின்பற்றித் தமக்குத் தேவையான போதைப் பொருள், தொலைபேசி, அதற்குரிய பாகங்கள் என்பனவற்றைச் சிறைச்சாலைக்குள்ளே கொண்டுவந்து விடுவார்கள்.

**ஒரு நாள் மாலை நாலு மணியளவில் நான் உடலைக் கழுவிக்கொள்வதற்காகக் குளிக்கும் இடத்திற்குச் சென்றுகொண்டிருந்தேன். எனது தலைக்கு மேலாக என்னவோ பறந்து வந்து எனதருகில் தொப்பென விழுந்தது.**

சட்டெனச் சுதாகரித்துக்கொண்டு சீக்கிரமாக அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றுவிட்டேன்.

யுத்தகளத்தில்தான் இப்படியான திடீர் தாக்குதல்கள் நடப்பது வழக்கம். இதென்னவாக இருக்கும் என்ற உணர்வுடன் சற்று தொலைவில் நின்று பார்த்தேன்.

ஒரு பொலித்தீன் பையினுள் பொதி செய்யப்பட்ட ஒரு இறாத்தல் பாண் எனக்கு முன்பாக விழுந்து கிடந்தது; கண்மூடித் திறப்பதற்குள் அதனை ஒரு பெண் தூக்கிக்கொண்டோடிவிட்டாள்.

அவள் ஒரு முக்கியத் தூள் வியாபாரப் புள்ளியின் உதவியாள்.

அந்தப் பாணுக்குள்ளே பல பெறுமதியான பொருட்கள் வந்து சேர்ந்திருக்கும் என்பதைப் புரிந்துகொண்டேன்.

ஏற்கனவே திட்டமிட்ட முறையில் அங்குப் பார்வையாளர்கள் வெளியிலிருந்து கொண்டுவரும் பொருட்களை உணவுப் பொருட்களுடன் சேர்த்து எடுத்து மிகவும் சாமர்த்தியமாகத்

தமது உடலின் அந்தரங்கப் பகுதிகளில் மறைத்துக்கொள்வார்கள்.

வழக்குக்காக நீதிமன்றத்திற்குச் சென்று வருபவர்களில் இப்படியான பொருட்கள் கொண்டுவருவதற்கான திறமைசாலிகள் பலர் இருந்தனர்.

உடற் தோலையே உரித்தெடுப்பதுபோல மேற்கொள்ளப்படும் உடற் பரிசோதனைகளுக்கும் அகப்படாமல் மிகவும் சாதுரியமாகக் கொண்டுவந்து சேர்த்துவிடுவார்கள்.

எதிர்பாராத விதமாகப் பிடிபடும்

“**சுனாமி வரப்போகுது**” இருந்தாற்போல இப்படியான செய்தி காட்டுத் தீ போலச் சிறைக்குள்ளே பரவிவிடும்.
அந்த நேரத்தில் ஒவ்வொரு பெண்களின் கண்விழிகளும் வெளியே விழுந்துவிடுமளவுக்குப் பிதுங்கிக் கிடக்கும்.

சிறைச்சாலைக்குள் அடிக்கடி பாரிய சோதனைகள் நடத்தப்பட்டுச் சட்டவிரோத பொருட்கள் கைப்பற்றப்படும்.

சிறையில் அனுமதி மறுக்கப்பட்ட பொருட்களைப் பதுக்கி வைப்பதற்குப் பெண்கள் மிகவேகமாக ஓடித் திரிவார்கள்.

அந்தநேரத்தில் அனைவருமே ஒற்றுமையின் சிகரங்களாகிவிடுவார்கள். கைத்தொலைபேசி, தூள் என அனைத்துப் பொருட்களும் பதுக்கப்பட்டுவிடும்.

**இருக்கிறவனுக்கு ஒரு பாடு இல்லாதவனுக்குப் பல பாடு என்று சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.** அதுபோல எங்களைப் போன்றவர்களுக்கும் பிரச்சனைதான்.
இரண்டு மாதத்துக்கு ஒரு தடவையோ அதற்கும் கூடுதலான இடைவெளிகளிலோ சிலபேருக்கு ஊரிலிருந்து தம்மைப் பார்வையிடவரும் உறவினர்கள் கொண்டுவந்து தரும் பொருட்களை அடுத்தமுறை அவர்கள் வரும்வரை கட்டிக் காப்பாற்றி வைத்துக்கொள்ள வேண்டும்.

தவறான பொருட்கள் இருக்கிறதோ இல்லையோ அனைவரது இடங்களும் ஒரே மாதிரிதான் சோதனையிடப்படும். மா, சீனி எல்லாம் கிண்டிக் கிளறப்பட்டு,

தண்ணி வாளியின் அடிப்பகுதி தொடக்கம் தண்ணிப் போத்தில் மூடி வரை சுரண்டிப் பார்க்கப்படும்.

உடுப்புகளின் தையல் மடிப்புகளெல்லாம் தடவப்படும். சுருண்டு படுக்கவும் போதாத ஒன்றரை அடி இடத்தில், ஒரு தலையணி உறைக்குள்ளேயும், பொலித்தின் பையிலும் பொத்திப் பாதுகாத்து வைத்திருக்கும் பொருட்களைக் கவிழ்த்துக் கொட்டிவிடுவார்கள்.

ஒருநாள் இரவு ஏழு மணி கடந்துவிட்டிருந்தது. வழக்கம் போல நாம் எமது துணிமணிகளை விரித்துப் படுத்துவிட்டோம்.

இரவு நேரத்தில் இரகசியமாகப் போனுக்குச் 'சார்ச்' ஏற்றுபவர்களும் விடியவிடிய போன் கதைக்கும் பெண்களும் தவிர அனைவரும் உறக்கத்திற்கு ஆயத்தமாகிவிட்டனர்.

நானும் படுத்துக்கொண்டு தான் இருந்தேன். திடீரென எனது கால் சப்பாத்துக் கால்களால் மிதிக்கப்பட்டது. உடனடியாகத் துள்ளியெழுந்தேன்.

**“பந்த பொலீஸ்” என அழைக்கப்படும் சிறைச்சாலை பொலிஸார் ஆண்களும் பெண்களுமாகக் கைதிகளின் தங்குமிடத்தைச் சுற்றிவளைத்து நின்றனர்.**

பொருட்களைப் பதுக்குவதற்கு அவகாசம் கிடைக்காத காரணத்தால் அடுத்த மூன்று நான்கு மணி நேரம் நடத்தப்பட்ட சோதனையில் நூற்றுக்கணக்கான தொலைபேசிகளும் போதைப்பொருள் பக்கற்றுகளும் பணமும் கைப்பற்றப்பட்டது.

இரவு நேரத்தில் ஆண்கள் சோதனைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டது, பெண்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது.

அடுத்த நாள் இரவு மீண்டும் அதே நேரத்தில் பரிசோதனை செய்வதற்காக வந்த பொலிஸாரை எதிர்த்துப் பெண் கைதிகள் கலகம் செய்யத் தொடங்கினார்கள்.

உள்ளே வந்தவர்களை வெளியே செல்லவிடாமல் கதவைச் சாத்திவிட்டு, கையில் கிடைத்த தும்புத் தடி, போத்தில் என்பனவற்றால் சரமாரியாகத் தாக்கினார்கள்.

சோதனை செய்வதற்காக வந்தவர்களான சிறை போலிஸார் வெளியே ஓடிப்போக முடியாத நிலையில் மலசல கூடங்களுக்குள் புகுந்து ஒளிந்துக்கொண்டார்கள்.

சற்று நேரத்தில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

அடுத்த இரண்டு நாட்களும் பெரும் பதற்றமாகவேயிருந்தது. ஆனால் அதன்பின் இரவு நேரத்தில் சோதனை செய்வதற்கு ஆண் பொலிஸார் வருவது இல்லை.



சிறைச்சாலையின் கட்டுப்பாடுகள் மேலும் இறுக்கமாகத்

தொடங்கின. எனது மன அழுத்தங்களும் சிறைவாழ்வின் கொடுமையும் அடுத்தக் கட்டம் என்னவென்பது தெரியாத நிலைமையும் ஒரு நடைப்பிணம் போல என்னை மாற்றியது. எல்லாவற்றையும் விட எனக்கு மனஅமைதியைப் பெறுவது பெரிய விஷயமாகப் பட்டது. ஏதாவது ஒரு விஷயத்திற்குள் மனதைச் செலுத்துவதுதான் மன அழுத்தத்திலிருந்து வெளியே வருவதற்கான ஒரே வழி என்பதைப் புரிந்துகொண்டேன்.

சிறையுள்ளேயிருந்த கோயிலுக்குச் செல்லத் தொடங்கினேன். விரதம் பிடிக்கத் தொடங்கினேன். அப்போதுதான் ஒரு உண்மையை ஆழமாகப் புரிந்துகொண்டேன்.

சாதாரணமாகவே பசியிருப்பது எனக்கு மிகவும் கடினமான காரியம். போராட்டக் காலங்களில் உணவு கிடைக்காத சந்தர்ப்பங்களிலும், உணவிருந்தும் உண்பதற்கு நேரம் கிடைக்காத காரணத்தாலும் பசி கிடந்திருக்கிறேனே தவிர, சாதாரணமாகச் சிறுவயதிலிருந்தே எனக்குப் பசியிருப்பது முடியாத காரியமாகும்.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் எனச் சும்மாவா சொல்லியிருக்கிறார்கள். வெலிக்கடைச் சிறையில் நாள் முழுவதும் உண்ணாமல் இருப்பதிலே சுகம் காணத் தொடங்கினேன்.

**வயிறு எரிய எரிய பசியிருக்கும்போது மனதின் இறுக்கங்கள் சுகப்படுவது போல ஒரு உணர்வேற்படத் தொடங்கியது.** எவருடனும் பேசாமல், சாப்பிடாமல், வெறித்த மனத்தோடு ஒரு மூலையில் சுருண்டுகொள்ளும்போது மனம் அளவற்ற நிம்மதியடைவது போலிருந்தது.

எத்தனையோ நாட்கள், என்னுடன் அன்பாகப் பழகும் தாய்மார், சகோதரிகள் எனக்குரிய இடத்தில் என்னைக் காணக் கிடைக்காமல் சிறையின் வளாகம் முழுவதும் தேடியலைந்த பின்னர் கோவிலின் பின்புறத்தில் அல்லது தனிமையானவொரு இடத்தில் என்னைக் கண்டுபிடித்துள்ளனர்.

மனித முகங்களைப் பார்ப்பதும் மனிதர்களோடு பேசுவதும் கொஞ்சமேனும் பிடிப்பில்லாத விடயமாகச் சிறிது காலம் இருந்தது.

இந்த நேரத்தில்தான் தமிழ்க் கைதிகள் அதிகமாயிருந்த 29ஆவது கொட்டுவைக்கு மாற்றப்பட்டேன். அங்கேயிருந்த இரண்டு கைதிகள் கரும்புலி அணியிலிருந்து தாக்குதலுக்காக அனுப்பப்பட்டிருந்தபோது, 2007இல் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவரான பவளம் என்கிற பெண் போராளி யாழ்ப்பாணத்தில் தாக்குதலுக்காகச் சென்றுகொண்டிருந்தபோது இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் சயனைட் அருந்திய நிலையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவருக்கு மருத்துவ சிகிச்சையளித்த பயங்கரவாதத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றம் மூலமாக அவர் வெலிக்கடைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

இன்னொரு கடற்கரும்புலிப் போராளியான அன்புவதனி திருகோணமலையில் தாக்குதல் நடவடிக்கைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்.

இதன்பின் பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, புசா தடுப்பு முகாமில் நடைபெற்ற தீவிர விசாரணைகளின்பின் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார்.

இந்தப் பிள்ளைகளுடன் நானும் கிறிஸ்தவ வழிபாடுகளுக்கும் பைபிள் வார்த்தைகளைப் படிப்பதற்கும் சென்றேன். உண்மையில் எனது மனக் காயத்திற்கு அந்த இடம் மருந்து போடுவதாக இருந்தது.

**தொலைபேசி வைத்திருந்த ஒரு தமிழ்ப் பிள்ளையின் உதவியுடன் எனது சகோதரியிடம் பேசி அவர்மூலம் அம்மாவின் தொடர்பை எடுத்தேன்.**

ஓமந்தையில் வைத்து அம்மாவைப் பிரிந்துசென்ற எனக்கு என்ன நடந்தது, எங்கே வைக்கப்பட்டிருந்தேன் என எனது குடும்பத்தவர்கள் எவருக்கும் தெரியாத நிலைமையில்

ஊடகங்களின் பொய்ப் பிரச்சாரங்களினால் அவர்கள் மிகவும் மனம் தளர்ந்துபோயிருந்தார்கள்.

2009, 10ஆம் மாத அளவில் எனது தாயார் என்னைப் பார்ப்பதற்காக வெலிக்கடைச் சிறைக்கு வந்திருந்தார். சிறைச்சாலையில் உறவினர்களைச் சந்திப்பது மிகக் கடினமான காரியம்.

மிகவும் தூரத்திலிருந்து ஒரு முழுநாள் பயணம் செய்து, கொழும்பில் வந்திறங்கி எமக்குத் தேவையான பொருட்களையும் சுமந்துகொண்டு மத்தியான நேரத்தின் கடுமையான வெயிலில் காய்ந்தபடி வெலிக்கடை உள் தார்வீதியில் நடந்துவந்து, நீண்ட வரிசையில் காத்திருந்து கொண்டு வந்த எல்லாப் பொருட்களையும், (சாப்பாட்டுப் பார்சல் உட்பட) அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்துப் பிடுங்கிப் பரிசோதனை செய்தபின், உள்ளே அழைக்கப்படுவார்கள்.



**அந்தச் சிறிய அறையில் அரைச்சுவருக்கும் மேலாக ஒரு சிறிய விரல்கூட நுழையமுடியாதபடி இறுக்கமாக அடிக்கப்பட்டிருக்கும் கம்பிவலைக்கூடாகத்தான் பார்க்க முடியும். வெளிச்சமேயில்லாத அந்த இருண்ட அறையில் எந்த நேரமும் சனக் கூட்டமாகவே இருக்கும்.**

ஐந்து நிமிடங்கள்தான் அதிகமான நேரம். பார்வையாளர்களின் தொகையைப் பொறுத்து இந்த நேரம் இன்னும் குறைக்கப்படும்.

இப்படிக் கிடைக்கிற அவகாசத்திற்குள் எமக்குத் தரப்படும் பொருட்களை மீண்டும் கிண்டிக் கிளறிப் பரிசோதித்த பின்பே தருவார்கள். சில சந்தர்ப்பங்களில் நீண்ட தூரத்திலிருந்து செய்து கொண்டுவரப்படும் பலகாரங்களைக்கூட உள்ளே கொடுக்க முடியாதெனத் திருப்பி அனுப்பிவிடுவார்கள்.

ஒருவர் கதைப்பது இன்னொருவருக்குக் கேட்காத அளவு மிகவும் இரைச்சலாக இருக்கும். அதையும் மீறி உரத்துக் கத்திக் கதைக்க வேண்டும். கம்பி வலைக்கூடாக இருண்ட அறைக்குள் உற்று உற்றுப் பார்த்தால்தான் கொஞ்சமென்றாலும் முகங்களைக் காண முடியும்.

தினசரி வீட்டுச் சாப்பாடு எடுக்கும் கைதிகளுக்கும் இதே நடைமுறைதான். மாதத்தில், வருடத்தில் ஒருதடவை உறவுகளைச் சந்திக்கும் கைதிகளுக்கும் இதே நிலைமைதான்.

எந்த உறவுகளும் சந்திக்கவே வராத நிலையில், ஒரு பிடி வீட்டு உணவுக்காக ஏங்கும் மனித மனங்கள் சிறைச்சாலையில் ஏராளமாக உண்டு.

தன்னைப் பார்ப்பதற்காக எவருமே வரப்போவதில்லை என்பது தெரிந்திருந்தும், காலை முதல் மாலை பார்வையாளர் நேரம் முடியும் வரைக்கும், தினமும் பார்வையாளர் சந்திப்பு இடத்தையே ஏக்கத்துடன் பார்த்தபடியிருக்கும் மனிதர்களின் எதிர்பார்ப்புக்களை என்னால் புரிந்துகொள்ள முடிவதில்லை.

**கைவிடப்பட்ட சிறை மனிதர்களின் கண்களில் தேங்கியிருக்கும் ஏக்கத்தின் வலி மகா கொடுமையானது.** வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனப்பெண்களுடன் நெருக்கமாக வாழும் அனுபவம் எனக்கு வித்தியாசமான அனுபவங்களைத் தந்தது. என் சிறிய வயதில் வேறு இன மக்களுடன் சேர்ந்து பழகும் சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கவில்லை.

சமாதான காலத்தில் ஒருதடவை காணாமல்போன இராணுவத்தினரின் பெற்றோர்களும் உறவினர்களும் கிளிநொச்சிக்கு வந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்திருந்தனர்.

அவர்களுடன் வந்திருந்த வயதான சிங்களத் தாய்மார் வடித்த கண்ணீர் எனது மனதை உருக்கியது. எனது கண்ணிலிருந்தும் கண்ணீர் கொட்டியது. அதற்காக நான் வெட்கப்படவில்லை.

தமது பிள்ளைகளைப் போரில் இழந்த தமிழ்த் தாய்மார்களின் கண்ணீரும் கதறல்களும் எனது நினைவுக்கு வந்தன.

மனிதர்கள் இனம், மொழி, மதம், அரசியல் என வேறுபட்டு நிற்கலாம், ஆனால் உலகெங்கனும் தாய்மையின் பொதுமையான இயல்புகள் வேறுபடுவதில்லையே.

என்னோடு பழகிய பல சிங்களத் தாய்மார்களின் அன்பை என் வாழ்நாள் உள்ளவரை மறந்துபோக முடியாது. இப்படியான உறவுகளின் நெருக்கத்தினால்தான் சிங்கள மொழியை நான் பேசப் பழகினேன்.

தமது துக்கங்களையும் சந்தோசங்களையும் உணர்வோடு பகிர்ந்துகொள்வார்கள். தமிழ் மக்களைப் பற்றி அவர்களிடம் மிக நல்ல அபிப்பிராயங்கள் இருந்தன.

**ஆனால் புலிகள் சிங்கள மக்களைக் கொலை செய்பவர்கள் என்ற கருத்து சாதாரண பெண்களிடையே பரவலாக இருந்தது.**அவர்கள் அன்புடன் பழகத் தொடங்கிவிட்டால் எந்த நெருக்கடியிலும் தமது நலன்களையும் பாராது உதவி செய்வதற்கு முன் நிற்பார்கள். **மனதிற்குள் வஞ்சனைகளைச் சேர்த்து வைக்கும் பண்பு அந்த மக்களிடம் மிகவும் குறைவாகவே இருந்தது**. தமக்காகச் சேர்த்துவைப்பதைவிட இன்னொருவரின் பசி தீர்ப்பதே அதிக புண்ணியம் எனக் கருதும் அவர்களின் பல நல்ல குணங்களை அருகிலிருந்து அனுபவத்தில் உணர்ந்துகொள்ள முடிந்தது.

புனர்வாழ்வு: எனக்காக எந்தச் சட்டத் தரணியும் வரவில்லை.. எனக்காக ஒரு சட்டத் தரணியை ஏற்பாடு செய்வதற்காக எனது ஏழை அம்மா மிகவும் கஷ்டப் பட்டார்



எனது வழக்குக்காகப் பதினாலு நாட்களுக்கு ஒருதடவை கொழும்பு அளுத்கடையிலுள்ள நிதிவான் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டேன்.

எனக்காக ஒரு சட்டத் தரணியை ஏற்பாடு செய்வதற்காக எனது ஏழை அம்மா மிகவும் கஷ்டப் பட்டார்.

மனித உரிமை அமைப்பு ஒன்றிடம் அம்மா பல தடவை சென்று கேட்டபோதும் அவர்கள் என்ன காரணத்தாலோ எனது வழக்கை எடுத்துக்கொள்ள முடியாது என மறுத்துவிட்டனர்.

நான் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஒரு வருடமளவும் எனக்காக எந்தச் சட்டத் தரணியும் நீதிமன்றத்திற்கு வரவில்லை.

எனது வழக்கைக் கையாண்ட நீதிபதி பலதடவைகள் என்னிடம் “**உங்களுக்குச் சட்டவாளர் இல்லையா**?” எனக் கேட்டபோது“**இல்லை**“ என்றே பதிலளித்தேன்.
ஒரு பலம் பொருந்திய இயக்கத்தின் போராளியாக இருந்த நான் சரணடைந்த காரணத்தால் கைவிடப்பட்டிருந்தேன்.

எனக்கு மட்டுமல்ல என் போன்ற பல ஆயிரக்கணக்கான முன்னாள் போராளிகளின் நிலைமையும் அதுவாகத்தான் இருந்தது.

எனது சகோதரியின் உதவியுடன் எனக்காக ஒரு சட்டத் தரணியை அம்மா ஏற்பாடு செய்திருந்தார். அவர் மிகவும் மனிதாபிமானம் கொண்ட ஒரு நல்ல மனிதர்.

நாங்கள் அவருக்கு எந்தப் பணமும் கொடுக்காதபோதும் அவரும் அவரது சக சட்டத் தரணியான மஞ்சுளபத்திரான

என்ற சிங்கள சட்டத் தரணியும் எனக்காகப் பல தடவை நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்கள்.

அவர்களால் எனது வழக்கில் ஒரு உடனடியான மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பது எனக்குத் தெரியும்.

இருந்தாலும் அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கொரு நம்பிக்கையைத் தருபவர்களாக இருந்தனர். எவருமே எதிர்பாராதபடி எனது வழக்கில் ஒரு அதிசயமான மாற்றம் ஏற்பட்டிருந்தது.

**என்னை விசாரணை செய்த சி.ஐ.டி.யினர் எனக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான ஒப்புதலை வழங்கியிருந்தனர்.** சரணடைந்தவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கி அவர்களைச் சமூகத்துடன் இணைந்து வாழச் செய்யும் இலங்கை அரசின் திட்டம் ஆயிரக்கணக்கான போராளிகளின் உயிர்களைப் பாதுகாத்ததுடன், சட்டத்தின் இறுக்கப் பிடியிலிருந்தும் அவர்களைப் பாதுகாத்தது.

2012.06.22 அன்று கொழும்பு புதுக்கடை நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கம்புலி அவர்கள் வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் ஒரு வருடப் புனர்வாழ்வுப் பயிற்சிகளின் பின் என்னை விடுதலை செய்யும்படியான உத்தரவைப் பிறப்பித்தார்.

நீதிமன்ற உத்தரவின்பேரில் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து 2012.06.26 அன்று வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டேன்.

**எனது வாழ்வின் திசைதெரியாத ஒரு இருண்ட கட்டம் முடிவுக்கு வந்திருந்தது.**

2012.06.26 அன்று வுவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்குக் கொண்டு செல்லப் பட்டேன்.

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் கீழ் இலங்கை இராணுவத்தினரது பொறுப்பிலே புனர்வாழ்வு நிலையம் செயற்படுத்தப் படுவதாக அறிந்திருந்தேன்.

மனதுக்குள் பெரும் குழப்பமாக இருந்தது. நான் அங்கு எப்படி நடத்தப்படப் போகிறேனோ எனப் பயந்தேன்.



சிறைச்சாலையில் நான் பேசக் கற்றுக்கொண்ட சிங்களம் ஓரளவுக்கு உதவிசெய்யும் என்றாலும், நேரடியான யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் துவேசமாகவும் பழிவாங்கும் விதமாகவும் நடந்துகொள்வார்களோ என்ற எண்ணம் இருந்துகொண்டேயிருந்தது.

வெலிக்கடைச் சிறையதிகாரிகளிடமிருந்து என் தொடர்பான சகல ஆவணங்களும் சரிபார்க்கப் பட்டதன் பின்பு புனர்வாழ்வு நிர்வாகம் என்னைப் பொறுப்பெடுத்துக்கொண்டது.

வவுனியா புனர்வாழ்வு முகாமின் இணைப்பதிகாரியாக இருந்த இராணுவ உயர் அதிகாரியின் அலுவலகத்திற்குக் கூட்டிச் செல்லப் பட்டேன்.

புனர்வாழ்வு நிலையத்தின் நடைமுறைகள் பற்றிய விளக்கங்களை அந்த அதிகாரி எனக்குத் தெரியப்படுத்தினார். “நீங்கள் வீட்டிலிருப்பதுபோல இங்கு ஏனைய பிள்ளைகளுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

இங்கிருப்பவர்களுடைய கடந்த காலத்தைப் பற்றிக் கதைப்பது இனித் தேவையில்லாத ஒரு விடயம்.

நீங்கள் நல்லவிதமாகப் புனர்வாழ்வுப் பயிற்சிகளை நிறைவுசெய்து சமூகத்துடன் கலந்து வாழ வேண்டும் என்பதுவே எங்களது விருப்பம் எனத் தெரிவித்தார்.

நான் ஏதாவது தெரிவிக்க விரும்புகிறேனா எனக் கேட்டார். “இங்கிருக்கும் காலப் பகுதியில் எந்தக் கட்டத்திலும் ஊடகங்களில் எனது செய்தி வருவதோ, ஊடகவியலாளர்களைச் சந்திப்பதோ எனக்கு மிகவும்

சங்கடங்களை உருவாக்கும்" என்ற எனது கருத்தை தெரிவித்தேன்.

"உங்களது சம்மதமின்றி எந்த ஊடகங்களும் உங்களைச் சந்திக்க முடியாது" எனக் குறிப்பிட்டார். எனக்கு அதுவே மிகவும் நிம்மதியாக இருந்தது.



**பிபிஸி நிருபர் ஃபிரான்ஸிஸ் ஹாரிசனுடன் வன்னியில்**

கூட்டுறவுக் கல்லூரிக்குச் சொந்தமான வளாகத்தில்தான் புனர்வாழ்வு நிலையம் இயங்கிவந்தது.

ஒரு பெரிய மண்டபத்தில் பதினாறு பெண்பிள்ளைகள் தங்கியிருந்தனர்.

வெலிக்கடையின் மனித நெருசலுக்குள் சிக்கிக் கிடந்த எனக்கு இந்த இடத்திற்கு வந்தது பெரிய ஆறுதலாக இருந்தது.

இன்னும் சரியாக ஒரு வருடத்தில் நான் வெளியே போகமுடியும் என்ற உணர்வுடன் எனது புனர்வாழ்வுப் பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தேன்.

ஏற்கனவே அங்கிருந்த பிள்ளைகள் பலவிதங்களிலும் என்னுடன் அன்பாகவும் உரிமையுடனும் பழகினார்கள். அவர்களில் அதிகமானவர்கள் என்னைவிட வயது குறைந்தவர்கள்.

எனக்கு அவர்களுடன் இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எப்போதுமே என்னைவிடச் சிறியவர்களுடன் பழகும்போது மிகவும் உற்சாகமாக உணர்வேன்.

அங்கிருந்த பலர் தமக்கு வயது போய்விட்டதாகக் கூறி விரக்தியுடன் வருத்தப்பட்டுக் கொள்வார்கள். எனக்கு அப்படியான வருத்தங்கள் ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

எப்போதும் மனதைப் பலப்படுத்திக்கொள்வதும், புத்துணர்ச்சியோடு இருக்கக் கற்றுக்கொள்வதும் இளமையைத் தக்கவைக்கும் என்பதே எனது கருத்தாகும்.

புனர்வாழ்வு முகாமில் காலையிலிருந்து மாலை வரையும் இறுக்கமான நாளாந்த நிகழ்ச்சி நிரல் இருந்தது.

வார நாட்களில் பயிற்சி வகுப்புகள், வேலைகள், வெள்ளிக்கிழமை காலையில் '**ஓம் சக்தி**' அமைப்பினரின் தியானப் பயிற்சி, ஞாயிற்றுக் கிழமை களில் கிறிஸ்தவ ஆராதனை என எமக்கு ஓய்ந்திருக்க நேரம் கிடைப்பதில்லை. நான் அங்கிருந்த காலப் பகுதியில் ஆறு மாத காலத் தையல் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

மூன்று மாத கால கணனிப் பயிற்சியும், நான்கு மாத கால அழகுக்கலை பயிற்சியும், ஆங்கில சிங்கள வகுப்புகளும் நடாத்தப்பட்டன.

இவற்றைவிட வணிக முகாமைத்துவம், பால் பொருட்கள் உற்பத்தி, உளவளத் துணைப் பயிற்சி என்பன போன்ற பயிற்சிப் பட்டறைகளும் மேற்கொள்ளப்பட்டன.



பல பிள்ளைகள் மிகவும் விருப்பத்துடன் இந்தப் பயிற்சிகளில் கலந்துகொண்டனர்.

ஒருசிலர் வேண்டா வெறுப்பாகக் கட்டாயத்தின் பேரில் கலந்துகொண்டனர். வாரந்தோறும் உறவினர்களைச் சந்திக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

காலை ஒன்பது மணிக்கு வந்து மாலை நான்கு மணிவரை கதைத்துக்கொண்டிருந்து விட்டுச் செல்ல முடியும்.

தொலைபேசியைத் தவிர உணவு, உடைகள் எனத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

வாசலில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுப் பொருட்கள் அனைத்தும் பரிசோதனை செய்யப்பட்டதன் பின்பே உள்ளே அனுமதிக்கப்பட்டது. எனது தாயார் மாதத்தில் இரண்டு தடவை என்னை வந்து பார்ப்பதை வழமையாக்கி இருந்தார்.

எனக்குப் புனர்வாழ்வளிக்கப்பட உள்ளதாகச் செய்திகள் வெளியானதுமே பல தரப்பட்ட விமர்சனங்கள் எழத் தொடங்கின.

சரணடைந்த காலப் பகுதியின் தொடக்கத்தில் விமர்சனங்களைக் கண்டு நான் மனவேதனைப் பட்டதுபோல இப்போது வேதனைப்படவில்லை.

அந்த விமர்சனம் எங்கிருந்து வருகிறது, என்ன அடிப்படையில் விமர்சிக்கப்படுகிறது என்பதைக் கொண்டு மனித மனங்களை எடைபோடக் கற்றுக் கொண்டேன்.

ராஜ பறவை எனக் குறிப்பிடப்படும் கழுகைப் பற்றிப் பைபிளில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் எனது மனதை மிகவும் வலுப்படுத்தியது என்று சொல்லலாம்.

காற்று எதிராக வீசும்போதும் பறக்கக்கூடிய வல்லமையை அதன் சிறகுகள் பெற்றிருந்தன. தன்னை முழுவதுமாகப் புதுப்பித்துக் கொண்டு புதுப் பலத்துடன் எழும்பிப் பறக்கும் கழுகைப் போல நானும் என்னைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதிபெறத் தொடங்கினேன்.

புனர்வாழ்வு முகாமில் நான் எதிர்பார்த்ததைவிட இராணுவத்தினரும் பெண்களின் பகுதிக்குப் பொறுப்பாக

இருந்த மேஜர் தர அதிகாரி உட்பட பலரும் கண்ணியமான அணுகுமுறைகளைக் கையாண்டனர்.

பெண் அதிகாரியான கேப்டன் ஜயானி ஹேரத் அங்கிருந்த பிள்ளைகளுடன் ஒரு தாய் போலப் பழகினார் என்பதை மறக்க முடியாது. அதேவேளை புனர்வாழ்வு நடைமுறைகளை இறுக்கமாகக் கடைபிடிப்பதில் மிகவும் கண்டிப்பாகவும் இருந்தார்.

அவர் ஒரு ஆசிரியராக இருந்து பின்னர் இராணுவத்தில் இணைந்து பணியாற்றியிருந்ததால் அந்த ஆசிரியக் குணத்தை அவரிடம் காணக்கூடியதாக இருந்தது.

அவர் எல்லோரிடமும் பழகுவதைப் போலவே என்னுடனும் மிகவும் நட்பாகப் பழகினார். தங்குமிடங்களில் தத்தமது பொருட்களை ஒழுங்கான முறையில் அடுக்கி வைத்துக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவார்.

ஓரிரு பிள்ளைகள் அப்படியல்லாது அங்குமிங்குமாகப் பொருட்களை வீசியெறிந்திருப்பதைக் கண்டால் அந்தப்

பொருட்களை மேலும் தூக்கியெறிந்துவிடுவது அவரது வழக்கம்.

ஒருநாள் வாசலில் செருப்புகள் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை என்பதற்காக அவற்றைத் தூக்கித் தூரத்தில் எறிந்துவிட்டுப் போய்விட்டாராம்.

இந்தச் சம்பவம் நான் அங்குப் போவதற்கு முதல் நடந்திருந்தது. இதனால் அங்கிருந்த பிள்ளைகள் அவர் தூரத்தில் வரும்போதே‘சுனாமி வருகிது’ எனக் கூறுவார்கள்.

ஒருநாள் இரவு எமது தங்குமிடத்தில் பக்கத்திலிருந்த சில பிள்ளைகள் வட்டமாக அமர்ந்து இரவு உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

திடீரெனத் திறந்திருந்த ஜன்னலூடாக ஒரு குரல் ஒலித்தது. “பிள்ளைகள் சுனாமி வருகிது ஆ . . .” அந்த உச்சரிப்பு வித்தியாசமானதாக இருக்கவே உற்று அவதானித்துவிட்டு அனைவரும் சிரிக்கத் தொடங்கினார்கள்.

தன்னைத்தானே சுனாமி எனக் கூறி அனைவரையும் சிரிக்கப் பண்ணியிருந்தார். ஏனைய பெண் இராணுவத்தினரும் நெருங்கிய நண்பிகளைப் போலப் பழகினார்கள்.

வீசு கத்திகளைப் பாவித்துப் புல்லு வெட்டுதல் உட்பட எந்த வேலைகளையும் புனர்வாழ்வு பெற்றுவந்த பெண் பிள்ளைகளுடன் சேர்ந்து பெண் இராணுவத்தினரும் மேற்கொண்டனர்.

உண்மையில் புனர்வாழ்வு செயற்றிட்டத்திற்கமைய இராணுவத்தினருக்குத் தொடர்பாடல் மற்றும் உளவியல் பயிற்சிகள் சிறந்த முறையில் வழங்கப்பட்டிருந்ததைப் புரிந்துகொள்ள முடிந்தது.

**வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெற்ற தோழி பிரியாவின் திருமணத்தில் கலந்துகொண்ட தமிழினி!!**



ஆண்களுக்கான புனர்வாழ்வுப் பயிற்சி நிலையங்கள் வவுனியாவிலும் வெலிக்கந்தையிலும் அமைக்கப்பட்டிருந்தது. புனர்வாழ்வு பெறுபவர்களின் தொகை குறைந்துசென்ற காரணத் தால் வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்கு ஆண்களும் மாற்றப்பட்டிருந்தனர்.

ஒரு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமானவர்கள் புனர்வாழ்வு காலத்தை நிறைவுசெய்யும்போது அவர்களைப் பெற்றோரிடம் கையளிக்கும் நிகழ்வு பெரிய வைபவமாக முன்னெடுக்கப்படுவது வழக்கம்.

நானிருந்த காலப்பகுதியில் இப்படியான இரண்டு '**விடுவிப்பு வைபவங்கள்**' இடம்பெற்றன. ஒவ்வொரு நிகழ்விலும் நூற்றுக்கும் அதிகமான முன்னாள் போராளிகள் குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்கப் பட்டனர்.
2013 தமிழ்ச் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வவுனியா நகரசபை மண்டபத்தில் விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்குச் சிறைச் சாலைகள் மற்றும் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சரும் அவருடைய ஏற்பாட்டில் காலி, மாத்தறை பகுதிகளைச் சேர்ந்த பலகலைக்கழக மாணவர்களும் சில அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் 'இங்குப் பயிற்சிபெறும் தமிழினியுடன் கதைக்க வேண்டும், அவரை எங்களுக்கு இனங்காட்ட முடியுமா' என என்னிடமே வந்து கேட்டனர்.



என்னருகில் நின்ற ஒரு பிள்ளை ‘**இவாதான் தமிழினியக்கா**‘ என எந்தவிதமான யோசனையும் இல்லாமல் இயல்பாகக் கூறிவிட்டார்.

என்னைச் சுற்றிவளைத்துக்கொண்ட மாணவர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட கேள்விகளால் என்னைத் துளைத்தெடுக்கத் தொடங்கினார்கள். என்ன செய்வது எனப் புரியாத நிலையில் தடுமாறிக்கொண்டிருந்தேன்.

இதனை அவதானித்தவர்களாக எமக்குப் பொறுப்பாக இருந்த ஆண் பெண் இராணுவ அதிகாரிகள் உடனடியாக அந்த இடத்திற்கு வந்துவிட்டனர்.

தலைவரைப் பற்றியும் இயக்கத்தின் கடந்த காலச் செயற் பாடுகள் பற்றியும் பல கேள்விகளை அவர்கள் அடுக்கிக்கொண் டிருந்தார்கள். கூட்டத்தின் நடுவிலே நான் மௌனமாக நின்று கொண்டிருந்தேன்.

எனது இக்கட்டான நிலைமையைப் புரிந்துகொண்ட இராணுவ அதிகாரிகள் "**இவர் இப்போது புனர்வாழ்வு பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்.**

அதனைப் பற்றிய கேள்விகளை இந்தப் பிள்ளையிடம் நீங்கள் தாராளமாகக் கேட்க முடியும். இவருடைய கடந்த காலத்தைப் பற்றிய கேள்விகளைக் கேட்டு அவருடைய மனதைக் குழப்புவதற்கு அனுமதிக்க முடியாது" எனக் கூறியவுடன் கேள்விகள் கேட்பது நின்றுபோனது. "எங்களுக்கு இவருடைய கடந்த காலத்தைப் பற்றி அறிந்துகொள்வதுதான் இன்ரஸ்ட்டானது" எனக் கூறினார்கள்.

“அதற்காக புனர்வாழ்வு பெறுபவர்களுக்குக் கடந்த கால நினைவுகளை மீட்கும்படியான கேள்விகளைக் கேட்டுத் தொந்தரவுபடுத்த முடியாது” எனக் கூறினார்கள் அந்த இராணுவ அதிகாரிகள்.

“நேற்றுவரையிலும் போர்க்களத்தில் யுத்தம் செய்தவர்கள் இன்று நிறைய மாற்றங்களுடன் சிந்திக் கிறார்கள். நாம்தான் இன்னும் பழைய விடயங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோம்” என அவர்கள் கூறியதை நான் மௌனமாக கேட்டுக்கொண்டிருந்தேன்.

**இந்த திருமண வைபவத்தில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கலந்துக்கொண்டனர்.**

2012.10.23 வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் ஒரு திருமண வைபவம் நடாத்தப்பட்டது.

புனர்வாழ்வு நிலையத்தில் பயிற்சி பெற்று வந்த பிரியா என்கிற பிள்ளைக்கும் புனர்வாழ்வு பயிற்சி முடித்து வெளியேறிய மதி என்கிற இளைஞனுக்கும் இந்தத் திருமணம் நடாத்தப்பட்டது.

தாயில்லாத நிலைமையில் குழந்தைப் பருவத்திலேயே தகப்பனால் புறக்கணிக்கப்பட்ட பெண்பிள்ளையான பிரியா உறவினர்களின் பராமரிப்பில் வளர்ந்து வந்தவர்.

பின்பு இவர் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டார். இதயத்தில் அவருக்கிருந்த நோய் காரணமாக இயக்கத்திலிருந்து விலகி ஒரு பணியாளராக இயக்கத்தின் உணவு தயாரிப்புத் தொழிலகத்தில் பணிபுரிந்து வந்தார்.

2009க்குப்பின் இராணுவெத்திடம் சரணடைந்து புசா தடுப்பு முகாமில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருந்து, நிதிமன்ற உத்தரவின்படி புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்டார்.

இவரது விடுதலைக் காலம் நெருங்கி வந்துகொண்டிருந்த நிலையில் இவரை யாரிடம் ஒப்படைப்பது என்ற குழப்பம் ஏற்பட்டது.

ஒருவர் புனர்வாழ்வுப் பயிற்சியை நிறைவு செய்தபின் அவரைப் பெற்றோர் அல்லது நெருங்கிய உரித்துடையவர்களிடமே ஒப்படைப்பது வழக்கமானது.

முன்னாள் புலிகள் புனர்வாழ்வுப் பயிற்சி முடித்து வெளியேறியதன் பின்பு சட்டத்திற்கு மாறான செயல்களில் ஈடுபடுவார்களேயானால் அவர்களைப் பொறுப்பெடுத்தவர் களே வகை சொல்ல வேண்டியவர்களாக இருந்தனர்.

பிரியா காதலித்திருந்த மதி என்ற இளைஞனின் தாயார் மனமுவந்து இவரைத் தனது பொறுப்பில் எடுப்பதற்கு முன்வந்த போதும், அவர்களுக்குத் திருமணம் ஆகியிருக்காத காரணத்தால், சட்டப்படி அது முடியாமல் போனது.

ஆகவே அவர்களுக்கான திருமணத்தைப் புனர்வாழ்வு நிலையத்தின் ஏற்பாட்டில் நடத்துவதற்குத் தீர்மானித்தனர்.

பிரியா என்னைவிட வயது குறைவானவராக இருந்தாலும் எனக்கு மிகவும் நெருக்கமான தோழியாக இருந்தார்.

அவரைத் திருமணம் செய்த மதி மிகவும் நற்பண்புகளைக் கொண்ட ஒரு இளைஞன். போராட்டத்தில் தனது காலொன்றை இழந்திருந்தார்.

அவர் பிரியாவை மிகவும் நேசித்தார். அவரது குடும்பத்தவர்களும் பிரியாவுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த விருப்பத்தோடு இருந்தனர்.

இந்தத் திருமண நிகழ்வு புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெற்ற காரணத்தால் புனர்வாழ்வு பெற்றுவந்த பெண்கள் அனைவரும் கலந்துகொண்ட நிகழ்வாக அமைந்திருந்தது.



**பிரியாவுக்கு நான் மணப்பெண் தோழியாக நின்றதாகப் படத்தோடு செய்திகள் வந்ததாக அறிந்தேன். உண்மையில் மணமகனின் தங்கையே மணப்பெண் தோழியாக இருந்தார்**.

அந்தச் செய்தி எனக்குச் சிரிப்பை வரவழைத்திருந்தது.

2013.04.25,26,27 திகதிகளில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சினால் “**சமாதானத்தின் நண்பர்கள்**“என்ற தொனிப்பொருளில் சுற்றலா நிகழ்ச்சியொன்று புனர்வாழ்வு பெற்று வருபவர்களுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இருபதிற்கும் மேற்பட்ட பேருந்துகளில் தொடரணியாக அந்தப் பயணம் ஆரம்பமானது.

முதன்முதலாகக் கொழும்பு பாராளுமன்ற கட்டடம் பார்வையிடப்பட்டது.

அங்கு வருகை தந்திருந்த அமைச்சர் சந்திரசிறி "தமிழினி! நீங்கள் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இந்த இடத்திற்கு வரவேண்டும்" எனக் கூறினார்.

நான் சிரித்துக்கொண்டே எனது வரிசையில் நகர்ந்து கொண்டிருந்தேன். நான் புனர்வாழ்வு பெற்றுவந்த காலப் பகுதியில் என்னைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களிளெல்லாம் "நீங்கள் அரசியலுக்கு வரவேண்டும், தமிழினி" என்ற தனது கருத்தை அமைச்சர் சந்திரசிறி வலியுறுத்திக்கொண்டேயிருந்தார்.

அவர் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர். புனர்வாழ்வு பெற்றுவந்த முன்னாள் போராளிகளுடன் மிகவும் அன்னியோன்யமாகப் பழகுவார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியின்போதும் ஜே.வி.பி. இயக்கத்தினர் பலர் ஆயுத வழிமுறைகளை விட்டு ஜனநாயக அரசியலுக்குத் திரும்பியதை என்னிடம் சுட்டிக் காட்டியிருந்தார்.

நான் சம்மதித்திருந்தால் அவர்களுடைய இடதுசாரிக் கட்சியில் என்னால் இணைந்து செயற்பட்டிருக்க முடியும். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில்

எனக்கு அத்தகைய அரசியல் ஈடுபாடு இருக்கவில்லை.

எமக்கான சுற்றுலா நிகழ்ச்சியில் முதல்நாள் காலை பாராளுமன்றம் பார்வையிடப்பட்டதுடன் மாலையில் கொழும்பு சத்தியபாபா மண்டபத்தில் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பஜனை நிகழ்வில் அனைவரும் கலந்துகொள்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மிகவும் சுவையான சைவ உணவும் சில அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டிருந்தன.

அன்றிரவு பனாகொடை இராணுவ முகாமுக்கு அண்மையில் அமைந்திருக்கும் புத்த விகாரையின் பயணிகள் விடுதியில் ஆண்கள் ஒருபுறமும் பெண்கள் வேறொரு புறமுமாகத் தங்க வைக்கப்பட்டோம்.

எங்களுடன் பெண் இராணுவத்தினரும் பெண் இராணுவ அதிகாரிகளும் தங்கியிருந்தார்கள்.

மறுநாள் காலையில் புதிதாக அமைக்கப்பட்ட நெடுஞ்சாலை ஊடாகக் காலி மாநகரசபையைச் சென்றடைந்தோம்.

பெண்கள் குறைவான தொகையினராக இருந்த காரணத்தால் ‘ஏ’ எழுத்துப் பொறிக்கப்பட்ட முதலாவது பேருந்து எமக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

காலி மாநகரசபையினரால் ‘முன்னாள் போராளிகளைச் சமூகத்திற்கு உள்வாங்குவது’ என்ற அடிப்படையில் ஒரு வரவேற்பு நிகழ்வை நடாத்தினார்கள்.

அதன்பின்பு காலி கோட்டையைப் பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். 2009க்குப்பின் முதன்முறையாகக் கடலையும் அலைகளையும் பார்த்தேன்.

முல்லைத்தீவுக் கடலும் நினைவழியாப் பல முகங்களும் நெஞ்சிலே ஊர்வலம் போகத் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து 'தெணியாய' பிரதேசத்திற்குக் கூட்டிச்செல்லப்பட்டோம். அது தேயிலை, இரப்பர் போன்ற தோட்டங்களைக்கொண்ட அழகான ஒரு மலைப்பிரதேசமாக இருந்தது.





புனர்வாழ்வு முகாமில் இருந்தபோது (2013) காலி நகருக்குத் தமிழினி அழைத்துச் ச

பச்சைப் பசேலென்ற அதன் குளிர்மையைத் தாங்கியபடி இதமாக வருடிச்செல்லும் மலைக்காற்றும், சலசலத்து ஓடிக்

கொண்டிருக்கும் களுகங்கையும் எந்த மனக் காயங்களையும் ஆற்றவல்ல இயற்கையின் ஔடதங்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அங்கேயிருந்த ஒரு சிங்கள கிராமத்தில் மக்களின் வரவேற்பு நிகழ்வு நடத்தப்பட்டது. வயது முதிர்ந்த அன்னையர்கள் சிங்களப் பண்பாட்டின்படி வெற்றிலையையும் குழந்தைகள் மலர்ச் செண்டுகளையும் தந்து வரவேற்றனர்.

உண்மையாகவே அந்த நிகழ்வு அரசியல் நோக்கங்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், எம்மைச் சுற்றிலும் நின்றபடி புன்னகையுடன் அரவணைத்து வரவேற்ற அந்த மக்களினதும் எங்களினதும் மனங்களில் ஏற்பட்டிருந்த நெகிழ்ச்சியும், இமையோரங்களில் கசிந்த நீர்த் துளிகளும் திரையிட்டு மறைக்க முடியாத மனித மனங்களின் உண்மையான உணர்வு வெளிப்பாடுகள் என்றே சொல்ல வேண்டும்.

நூற்றாண்டு கால அரசியல் பகைமைகளை இப்படியான ஓரிரண்டு உறவாடல்களால் சீர்ப்படுத்திவிட முடியாதுதான்.

ஆனாலும் இனம், மொழி, மதம் கடந்து மனித உணர்வுகளின் நேசங்கள் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு விரிந்த மனப் பக்குவம் மனிதர்களுக்கு ஏற்பட்டுவிட்டால் உலகம் அமைதியும் சமாதானமும் நிறைந்த சொர்க்கமாகிவிடும்.

ஆனாலும் என்ன செய்வது? உலகத்தின் ஆயுத முதலாளிகள் வெள்ளைப் புறாக்களைப் பறக்கவிடும்போது சமாதானமும் சேர்ந்தே பறந்து காணாமல் போய்விடுகிறது.

அந்தச் சுற்றுலாவின் முழுமையான நிகழ்ச்சி நிரலிலும் எனது மனதில் நிறைந்துபோனது அந்தக் கிராமத்து மக்களின் அன்பு மட்டுமே.

அன்று தொடர்ந்த இந்து, பௌத்த, கிறிஸ்தவ மத வழிபாட்டு நிகழ்வுகள், இரவு கலை நிகழ்வுகள் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு அன்றிரவு தெணியாய தமிழ்ப் பாடசாலையில் தங்கினோம்.

அங்கு அதிகமான தமிழ் மக்களும் வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் எங்களோடு மிகவும் அன்போடு பழகினார்கள்.

மறுநாள் அந்தப் பாடசாலை மைதானத்தில் புனர்வாழ்வு பெற்றுவருபவர்களின் கிறிக்கெட் மற்றும் கரப்பந்தாட்ட விளையாட்டு அணிகளுக்கும் அந்தப் பாடசாலை மாணவர்களினதும், அந்தப் பிரதேச இளைஞர்களி னதும் விளையாட்டு அணிகளுக்கும் போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதன் பின்னர் கதிர்காமம் 94 நோக்கிய பயணம் ஆரம்பமானது.

இரவு பெரிய கதிர்காமத்தையும் அங்கிருக்கும் பௌத்த ஆலயத்தையும் தரிசித்தோம். அன்றிரவு கதிர்காமம் பயணிகள் விடுதியில் தங்கியிருந்துவிட்டு மறுநாள் காலை செல்லக்கதிர்காமம் 95 கூட்டிச் செல்லப்பட்டோம்.

எனது சிறிய வயதில் அம்மம்மாவுடன் கதிர்காமத்தில் சுற்றித் திரிந்த நினைவுகளும், மாணிக்க கங்கை 96 யின் நீராடலும் மங்கலான நினைவுகளாகச் சுழன்றன.

அதன் பின்பு மத்தலயில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த, மகிந்த ராஜபக்ஷ விமான நிலையத்திற்குக் கூட்டிச்செல்லப்பட்டோம்.

இந்தச் சுற்றுலாவில் புனர்வாழ்வு ஆணையாளர் தர்ஷன ஹெட்டியாராய்ச்சியும் அமைச்சர் சந்திரசிறியும் முழுமையாகக் கலந்து கொண்டிருந்தார்.

## தமிழினியின் திருமணமும் மரணமும்



நான் சிறையிலும் புனர்வாழ்விலும் இருந்த காலப் பகுதிகளில் எனது தங்கை குடும்பமும் எனக்கு நெருக்கமான சில அன்புள்ளங்களும் எனது தாயாருக்கு அவ்வப்போது சில பொருளாதார உதவிகள் செய்திருந்ததை மறக்க முடியாது.

வவுனியா தடுப்பு முகாமிலிருந்து மீண்டும் பரந்தனுக்குச் சென்ற எனது தாயார் குறைந்த செலவில் ஒரு தற்காலிக இருப்பிடத்தை ஏற்படுத்தி வசிக்கத் தொடங்கினார்.

எனது சகோதர சகோதரிகள் திருமணமாகி, குடும்பங்களுடன் வாழ்ந்துவரும் நிலையில் நானும் ஒரு திருமணம்

செய்துகொள்ள வேண்டுமென எனது தாயார் வற்புறுத்தத் தொடங்கினார்.

எனது கடந்தகால வாழ்வில் திருமணத்திற்கு அதிக அளவு முக்கியத்துவம் கொடுத்து நான் சிந்தித்தது கிடையாது. அதற்காகத் திருமணமே செய்துகொள்ளக்கூடாது என்ற வைராக்கியமும் இருக்கவில்லை. என்னையும் எனது கடந்தகாலத்தையும் ஆழமாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு ஆண் துணை அமைந்தால் திருமணம் செய்துகொள்வதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபங்களும் இருக்கவில்லை.

ஜெர்மனியிலிருக்கும் எனது நண்பியொருவரும் தங்கையும் எனக்காக மாப்பிள்ளை தேடத் தொடங்கியிருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மிகவும் குழப்பமடைந்திருந்தேன்.

தமிழ்ச் சமூகம் ஒரு பெண்ணைச் சிறிய வயதிலிருந்தே திருமணத்திற்கு ஏற்றவகையில்தான் வளர்த்தெடுப்பது வழக்கமானது.

எதற்கெடுத் தாலும் "நீ ஒரு பொம்பிளைப்பிள்ளை, இப்படித்தான் இருக்க வேணும்" என்கிற திணிப்புகள் எனது குடும்பத்தவர்களால் என்மீது மேற்கொள்ளப்படவில்லை.

மாறாக நிறைந்த அன்பும் சுதந்திரமுமாக வளர்க்கப்பட்டிருந்தேன். நாட்டுக்கான விடுதலையைப் பெற்றெடுக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் போராட்டத்தில் இணைந்துகொண்டேனே தவிர எனது சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்திப் பெரியவர்களை என்றுமே மனம்நோகப் பண்ணியது கிடையாது.

இயக்கத்தில் இருந்த காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்களுடன் பழகும் சந்தர்ப்பங்கள் அமைந்திருந்தன.

எனக்குத் தரப்பட்டிருந்த கடமைகளுக்கு அப்பால் தேவையற்ற உணர்ச்சிகள் என்னை ஆட்கொள்ளாதவண்ணம் எனக்கு நானே சில வரையறைகளை ஏற்படுத்தியிருந்தேன்.

என்னுடைய சீருடைத் தோற்றத்தைப் பார்த்த பலர் என்னை அகங்காரம் கொண்ட, திமிர் பிடித்த பெண்ணாகக் கருதி விமர்சித்ததும் உண்டு.

**“இதுகள் பதவிப் பொறுப்பு ஆசையில கலியாணம் கட்டாமல் இருக்குதுகள்”, “இதுகளை பாத்தால் ஆரும் கலியாணம் கட்டுவாங்களே”** என எமது தோழிகளிடமே எம்மைப் பற்றிக் கூறியவர்களும் இருந்தனர்.

வேறு சிலர் இரகசியமாகப் புத்திமதி சொல்லுவார்கள். **“பொடியங்களை ஓவர்டேக் பண்ணி**

**மோட்டார் சைக்கிள் ஓட்டுறது சரியில்லை**", "இப்பிடி மேடையில ஏறி நிண்டு கையை ஆட்டிஆட்டிப் பேசுறது சரியில்லை." எனக்கு மட்டுமல்ல என்னைப் போன்ற பல பெண் போராளிகளுக்கும் இப்படியான அனுபவங்கள் நிச்சயமாக உண்டு.

இயக்கத்தின் வேலைச் சுமைகளுக்கு மத்தியில் காதோடு வரும் வார்த்தைகளைக் காற்றோடு விட்டுவிட்டுப் போய்க்கொண்டேயிருந்தோம்.



**திருமணத்தின்போது கணவர் ஜெயக்குமரனுடன்**

இப்போது சமூக வாழ்வில் எனது எதிர்பார்ப்புகளுக்கேற்ற ஒரு துணை அமையும் என நான் பெருத்த எதிர்பார்ப்புகளுடன் இருக்கவில்லை.

நிர்ப்பந்தத்திற்காக மனைவி என்ற பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு, வீடுவாசல் பெருக்கி, விதவிதமாகச் சமைத்து, துணிமணிகள் துவைத்து, கோவிலுக்குப் போய் விரதம் பிடித்து, ஒரு பொம்மையாக என்னால் வாழ முடியுமா எனத் தெரியவில்லை.

அதற்காக வாழ்வின் பாதியாகக் கருதும் கணவனுடன் எடுத்ததற்கெல்லாம் ஈகோ போட்டி போட்டு எஞ்சியிருக்கிற எனது மனநிம்மதியை இழந்துபோகிற சக்தியும் என்னிடம் கிடையாது.

சீதனம் கொடுத்து ஒரு கணவனை வாங்கிக்கொள்ளும் அளவுக்கு எனது குடும்பத்தில் வசதியில்லை.

ஆழமான புரிந்துணர்வு கொண்ட ஒரு நட்புள்ளத்துடன் அளவற்ற அன்பைப் பகிர்ந்துகொண்டு, இறுதிவரை சேர்ந்து

வாழ முடிந்தால் அதுவே பெருத்த நிம்மதி எனக் கருதினேன்.

எனது புனர்வாழ்வுப் பயிற்சிகள் நிறைவடையும் காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. எல்லோரையும் போலவே நானும் விடுலையை எண்ணி மகிழ்ச்சியுடனும் சமூக வாழ்வு பற்றிய பயத்துடனும் நாட்களை எண்ணிக்கொண்டிருந்தேன்.

2013ஆம் ஆண்டு ஜனவரி இருபத்தியாறாம் திகதி எனது கணவரான திரு. ஜெயக்குமரன் என்னுடன் முதன்முதலாகத் தொலைபேசியில் பேசத் தொடங்கினார்.

உண்மையில் அன்று அவர் என்னுடன் பேசுவார் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை. நாங்கள் தொடர்ந்து பேசினோம். கடிதங்கள் எழுதிக்கொண்டோம்.

ஒளிவு மறைவில்லாத அவருடைய இயல்பான, எளிமையான குணமும், எனது கடந்த காலம் பற்றியதும், எதிர்காலம் பற்றியதுமான அவரின் புரிதல்களும் நான் அவரை ஆழமாக நேசிக்கக் காரணமானது.




திரு. ஜெயக்குமரனுடன் நான் பழகத் தொடங்கியதும் எனது தனிப்பட்ட உணர்வுகளில் காதல், குடும்ப வாழ்வு என்பன பற்றிய பல புரிதல்கள் ஏற்பட்டன.

2013.06.26ஆம் திகதி வவுனியா புனர்வாழ்வு நிலையத்தின் பொறுப்பதிகாரி மேஜர் நாமல் அவர்கள் என்னை எனது தாயாரிடம் ஒப்படைத்தார். நீண்ட வருடங்களுக்குப் பின்பு சமூகத்தில் சுதந்திரமாக விடப்பட்டிருந்தேன்.

ஆனால் அந்தச் சுதந்திரத்தை என்னால் அனுபவிக்க முடியவில்லை. 2013இல் நடந்த வட மாகாணசபைத் தேர்தலில் பங்கெடுப்பதற்காகவே நான் விடுதலை செய்யப்பட்டதாக ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டன.

சிறிதுகாலம் எந்த வேலைப் பளுவும் மனதை அழுத்தாமல் அமைதியாக ஒதுங்கியிருக்க வேண்டும் போல் இருந்தது. என்னால் எனது நண்பர்களுக்கும் நேச உள்ளங்களுக்கும் எவ்விதமான இடைஞ்சல்களோ பாதுகாப்பு அச்சுறுத்தல்களோ ஏற்படுவதை நான் விரும்பவில்லை.

2013.09.28ஆம் திகதி எனது பதிவுத் திருமணம் மிகவும் எளிமையாகச் சொற்ப எண்ணிக்கையான உறவுகளுடன் இனிதே நடந்தேறியது.

நான் எதிர்பார்த்ததை விடவும் எனக்கு ஆத்மார்த்தமான அன்பான துணையாக அமைந்த எனது கணவர் பலவழிகளிலும் எனக்குப் பக்கபலமாக இருந்தார்.

என்னைக் கட்டிப்போட்டிருந்த குற்றவுணர்ச்சிகளிலிருந்து வெளியே வரவும், சுற்றியிருக்கும் உலகத்தைச் சவாலோடு எதிர்கொள்ளும் துணிச்சலையும் எனது வாழ்க்கையில் மீண்டும் வரச்செய்தார்.

*****************************